

மதுரா தாமிர பரணிக்காரர். திருநெல்வேலி சீமையில் முளைத்த பரப்பாடி என்ற கிராமத்து மண்ணுக்குச் சொந்தக்காரர்.

இவருடைய முதல் சிறுகதை ' பௌர்ணமிக்கு வராத நிலவு ' (ஆனந்தவிகடன்) இரண்டாவது சிறுகதை ' பாருக்குள்ளே நல்ல நாடு ' ராணி வார இதழ் நடத்திய அமரர் ஆதித்தனார் நினைவு சிறுகதைப் போட்டியில் முதல் பரிசு பெற்றது. இந்த மூன்றெழுத்துக் காரர் வரலாற்று சிறுகதைகளை விரும்பி எழுதுகிறவர். இவர் எழுதிய முதல் வரலாற்று சிறுகதை ' ஒரு விடிகாலை ஜனனம் ' குமுதம் வார இதழ் நடத்திய அமரர் சாண்டில்யன் நினைவு சரித்திர சிறுகதைப் போட்டியில் முதல் பரிசு பெற்றது. இவருடைய முதல் சரித்திர குறுநாவல் ' மஞ்சள் மல்லிகை ' ஆனந்தவிகடனில் ஐம்பதாயிரம் ரூபாய் பரிசு பெற்றது.

மதுராவின் 'மஞ்சள் புறா' கலைமகள் சரித்திர நாவல் போட்டியில் முதல் இடம் பிடித்தது. ராணி வார இதழும் பாண்டி சங்கப் பலகையும் இணைந்து நடத்திய பாவேந்தர் பாரதிதாசன் நூற்றாண்டு விழா சிறுகதைப் போட்டியில் முதல் பரிசு பெற்றது, மதுராவின் ' கானல் மான் ஓட்டங்கள். ' பரிசுகளை தொட்டு விட தொட்டு விட தொடர்கிறது பரிசு மழை அமுதசுரபி, தேவி. பாக்யா, இலக்கியப் பீடம், தமிழ்அரசி... என்று.

மதுராவின் எழுத்து மயக்கம் தரும் தமிழ் என்று வாசகர்கள் பாராட்டும் பாராட்டுக்கள் பொய்யில்லை என்பதற்கு மதுராவின் எழுத்தே சாட்சி சொல்லும் மீண்டும் மீண்டும்.

தனலெட்சுமி பதிப்பகம்



காகித நிலவு
மதுரா

முதற் பதிப்பு : டிசம்பர், 2010

விலை : ₹ 110/-

KAAKITHA NILAVU
by MATHURA
First Edition : December, 2010
Pages : 256
Published by:
DHANALAKSHMI PATHIPPAGAM
S-17, Arvind Narain Enclave,
8, Masilamani Street,
Pondy Bazaar,
T. Nagar, Chennai - 600 017.

Price : ₹ 110/-

D.T.P. at : S. Asokkumar

Printed at : NOVENA OFFSET PRINTING CO., Chennai - 5 Ø 28446166, 28446891

## முன்னுரை

தாமிரபரணிக் கரையிலிருந்து....

மதுரா எழுதுகிறேன்.

கதைக்கு முன்னால் கதை சொல்ல வந்திருக்கிறேன்.

கதை இரண்டெழுத்து வசீகரம்.

ம்...

இந்தக் கதைகள் என் பேனா எழுதியதுதானா... நான்தானா... ஞாபக அடுக்குகளில் தடவிப் பார்க்கிறேன். காகித முற்றங்களில் எழுத்துக் கோலமிட்டது எந்த பௌர்ணமியில்... என் கற்பனைக் குதிரைக்குச் சிறகு முளைத்தது எந்த மழை நாளில்... கேள்வி கடலலையாய் மோதுகிற மனக்கரையில். ம்... நினைவில்லை. நினைவில் நிற்பது ஒன்பது வயதில் எழுதிய நாடகம், பதின்மூன்று வயதில் எழுதிய கதை, பதினான்கு வயதில் எழுதிய கவிதை... இப்பொழுது எதுவும் என்னிடம் இல்லை. நினைவுகள் மட்டும்தான்.

இது என் பேனாவை அசையச் செய்தது...? என் தாத்தா மடியில் அமர்ந்து பார்த்த பாவைக் கூத்து இரவுகளா...? வில்லிசைக் கதைப் பாடல்களா...? இல்லை... இல்லை... என் தாத்தா... அம்மாவைப் பெற்ற தாத்தா பால் பாண்டிய நாடார் சொன்ன திண்ணைக் கதைகள்.

என் தாத்தா கதை சொல்கிற அழகே தனி.

திண்ணையில் அமர்ந்து அவர் கதை சொல்ல - ஓடை மணலில் அமர்ந்து கோயில் தெருவே கதை கேட்கும், விழித்திருந்து. நானும் சின்னக் குழந்தையாய் என் அம்மாவின் மடியில் அமர்ந்து கதை கேட்டிருக்கிறேன். வானம் நிலா சுமந்த இரவுகளில்.

ராஜாராணி, மர்மத்தீவு இளவரசி, குதிரை மோகினி, கறுப்புக் குதிரை, மாய மோதிரம், கடல் கோட்டை என்று கதை நான்கு திசைக்கும் சுழன்றடித்து மயக்கும். வாய் திறந்து ரசிக்க வைக்கும். அடுத்து என்ன, என்று ஏங்க வைக்கிற இடத்தில் கதை சட்டென்று நிற்கும். தாத்தா பொய்யாய் ஒரு கொட்டாவியை வெளிப்படுத்துவார். "மீதிக் கதையை நாளைக்கு வைத்துக் கொள்வோம்" - மேல் துண்டு உதறி எடுத்துக் கொள்வார். அன்றே எனக்கு கதை எழுத சொல்லித் தந்து விட்டார்.

இன்னொரு தூண்டு சக்தி என் பெரியம்மா மகன் பா.து. தனபால். தன் கதை ஏட்டுக்கு 'கரும்பு' என்று பெயரிட்டிருந்தான். நான் போய் அவனிடம் நின்றேன் - கதை எழுதப் போகிறேன் என்று. என் கதை ஏட்டுக்கு 'சர்க்கரை' என்று பெயரிட்டான். அவன் கல்லூரி விடுதியில் 'தேன் மலர்' என்ற பெயரில் கையெழுத்துப் பிரதி கொண்டு வந்தான். நான் பள்ளியில் 'பொன் மலர்' என்ற பெயரில் கையெழுத்துப் பிரதி சுமந்து திரிந்தேன்.

என்னிடம் கதை சொல்ல முதன் முதலாய் என் கிராமம் தேடி வந்தது ராணி வார இதழ்தான். அந்த ராணியைத் தேடி நானும் ராஜாராணி கதை படிக்க நாலு கிலோ மீட்டர் நடந்து போயிருக்கிறேன் பால்ய சிநேகிதனுடன்.



தொடர்ந்து நான் படித்த வார இதழ்கள் என்னைக் கதை சொல்ல இழுத்துப் போயின. முதல் கதையே காதல் சொல்லிற்று.

தலைப்பு வைத்தேன்.

'பௌர்ணமிக்கு வராத நிலவு'

'இது என்னல... முதல் கதைக்கு இந்த தலைப்பா... கதை அச்சில வர வேண்டாமா... தலைப்பை மாத்தி தொலை... பௌர்ணமிக்கு வராத நிலவாம்...' உபதேசித்தார்கள் என் வயசு இளவட்டங்கள்.

தலைப்பை மாற்றாமல் அனுப்பி வைத்தேன் ஆனந்த விகடனுக்கு.

கடிதம் வந்தது தோள் தட்டலுடன்.

வானத்துக்கும் பூமிக்கும் குதித்தேன்.

தொடர்ந்து விகடனில் கதை வந்தது.

நிலவுக்கே போயிருந்தேன்.

இரண்டாவது சிறுகதை 'பாருக்குள்ளே நல்ல நாடு'.

ராணி வார இதழ் நடத்திய அமரர் ஆதித்தனார் நினைவு சிறுகதைப் போட்டியில் முதற் பரிசு பெற்று தந்தது.

சில மாதங்களில் குமுதம் வார இதழ் அழைத்தது சரித்திரக் கதை எழுத. ஆயிரத்துத் தொள்ளாயிரத்து எண்பத்தேழாம் ஆண்டு. அமரர் சாண்டில்யன் நினைவு சரித்திர சிறுகதைப் போட்டி.

ஒன்பது வயதில் என் வகுப்பு ஆசிரியர் திரு. ஞானையா அவர்கள் தூண்டுதலில் சரித்திர நாடகம் எழுதி அரங்கேற்றியது நினைவில் மிதந்தது. பக்கத்து வீட்டு ராணியக்காவுக்கு ராணி

முத்து வாங்க பிரேமா அக்கா வீட்டுக்கு நாலு தெரு கடந்து போவேன். சாண்டில்யன் அங்குதான் எனக்கு அறிமுகமானார். என் கால் சட்டைப் பருவத்தில் - என் அண்ணன் பா.து. தனபால் என்னைச் சுமந்து கொண்டு குமுதம், ஆனந்தவிகடன், தினமணிக் கதிர் வாங்க நாங்குநேரிக்கு பனிரெண்டு கிலோ மீட்டர் சைக்கிள் மிதிப்பான். வரும் வழியில் கேரியரில் அமர்ந்து சாண்டில்யனை படித்துக் கொண்டே வருவேன். கொஞ்சம் கொஞ்சமாய் சரித்திரக் கதைகள் படிக்கிற ஆர்வம் என்னை இறுக்கிப் பிடித்துக் கொண்டது அந்த நாட்களில்தான். அந்த ஆர்வமே என்னை பி.ஏ. சரித்திர மாணவனாக்கியது.

எங்கள் பேராசிரியர் நடேசன் அவர்கள் சரித்திரப் பாடம் நடத்திய அழகு என்னுள் இருந்த சரித்திரக் கதை எழுதும் ஆர்வத்தை தூண்டியிருந்தது. குமுதம் அழைக்கவே - முதன் முதலாய் சரித்திரம் தொட்டேன். பெண் அடிமை, சிசுக் கொலை, உடன்கட்டை முதலிய சமுதாயக் கேடுகளை சரித்திரச் சிறுகதையில் கொண்டு வர தீர்மானித்தேன்.

ஆங்கிலேயர்களின் மமதை, இந்திய அடிவருடிகளின் அடிமை புத்தி ஆகியவற்றை அன்றைய சரித்திரப் பின்னணியுடன் சிறுகதையாக்கினேன். அதுவே 'ஒரு விடிகாலை ஜனனம்' - போட்டி நடுவர்கள் எழுத்தாளர் விக்கிரமன் அவர்களும், கவிஞர் மு. மேத்தா அவர்களும் ஏகமனதாய் முதற் பரிசுக்குத் தேர்வு செய்தார்கள். குமுதம் பால்யூ அவர்கள் அந்த சந்தோஷச் செய்தியை என்னிடம் கொண்டு சேர்த்தார்கள்.

தொடர்ந்து சரித்திரச் சிறுகதைகள் எழுத ஆரம்பித்தேன். கணவன் இறந்ததும் மனைவி உடன்கட்டை ஏறும் கொடிய வழக்கமான 'ஸதி'யை உடன்கட்டை ஏற்றிட துணிச்சலுடன்



துப்பாக்கி ஏந்திய - வீரப் பெண்ணின் கதைதான் 'இந்துவதனா' தேவி சிறுகதைப் போட்டியில் பரிசு பெற்ற கதை இது.

இத்தொகுப்பில் எவர் மனதையும் தொடப் போகிற 'ஒரு கட்டைப் புளியமரத்தின் கதை' குறித்து நான் சொல்லியாக வேண்டும். திருநெல்வேலியிலிருந்து மதுரை செல்லும் நெடுஞ்சாலையில் கயத்தாறை கடந்து செல்கிற நிமிடங்களில் கயத்தாறு கட்டைப் புளியமரம் கண்முன் வந்து நிற்கும். கண்ணீருடன். மனதுக்குள் அந்த கட்டைப் புளியமரத்தின் கண்ணீரைச் சொல்ல வேண்டும் என்ற எண்ணம் ஊறிக்கிடந்தது. வரலாற்று ஆய்வாளர் செ. திவான் அவர்கள் எழுதிய 'கட்ட பொம்மனின் கடைசி நாட்கள்' என்ற நூல் என்னைக் கதை எழுத அவசரப்படுத்திற்று. கட்டைப் புளிய மரத்தின் கண்ணீரே கதையாயிற்று. எழுதும் போதே என்னைக் கலங்க வைத்த எழுத்து 'கடைசி இரவு' தினமலர் - வாரமலர் முன் அட்டையில் என் முகத்தை போட்டு கதை படிக்க வாசகர்களை அழைத்திருந்தார்கள். அமரர் டி.வி. ஆர். நினைவு சிறுகதைப் போட்டியில் பரிசு பெற்ற கதை அது.

சுடுகாடு வரை விரட்டி வருகிற சாதிப் பேயை குறித்து 'பொய் கால் குதிரைகள்' கதையில் சொல்லியிருக்கிறேன். அமுதசுரபி இலக்கிய மாத இதழ் நடத்திய சிறுகதைப் போட்டியில் பரிசு கொண்டு வந்தது.

பால் கூலி - முகத்தில் அறையும் தலைப்பு.

என் நண்பனின் இதயம் பேசியதைக் கதையாக்கினேன். சுமை - எதாவது ஒரு ஊரில், எதாவது ஒரு தெருவில், எதாவது ஒரு வீட்டில், யாராவது ஒரு தாய் மட்டுமே காயப்படுகிற நிகழ்வல்ல, சுமந்து திரிந்தவனை சுமை என்று தள்ளி விடுகிற

நிஜம் இதயம் சுடுகிறது. என் இதயச் சுமையை இறக்கி வைத்திருக்கிறேன் இந்தக் கதையில்.

பொன்வேலி - இயல்பாக ஆணின் ஆணவத்துக்கு அடங்கிய பெண். அதுவே எல்லை மீறும் போது எப்படி தன்னை விடுவித்துக் கொண்டு வெளியே வருகிறாள் என்பதை அற்புதமாக சித்திரிக்கும் சிறுகதை என்று விமர்சகர் அனந்த பத்மநாபன் எழுதிய எழுத்து என் எழுத்தை உற்சாகப் படுத்தியது.

பூ முத்தங்கள் - தமிழ் அரசி வார இதழ் நடத்திய சிறுகதைப் போட்டியில் தங்கப் பதக்கம் பரிசு பெற்ற சிறுகதை. 'இந்தக் கதையைப் படிக்கின்ற நேரம் கடலோரக் கிராமத்தை மையமாகக் கொண்ட திரைப்படம் ஒன்றை பார்க்கின்ற உணர்வு ஏற்பட்டது' என்று இயக்குநர் கே. பாலசந்தர் அவர்கள் விழா மேடையில் பாராட்டினார்கள்.

'மதுராவின் பூ முத்தங்கள் சிறுகதை கிராமத்தைக் காட்டினாலும் ஆசிரியரின் உயர் தொனி விலகலைத் தருகிறது' என்று எழுத்தாளர் பாலகுமாரன் அவர்கள் தலையில் குட்டி விட்டு 'ஆனால் சுவாரஸ்யம் குன்றாத கதை' என்று கன்னத்தில் தட்டுகிறார்.

கானல் மான் ஓட்டங்கள் - புதுவை சங்கப் பலகையும், ராணி வார இதழும் இணைந்து நடத்திய பாவேந்தர் பாரதிதாசன் நூற்றாண்டு விழா சிறுகதைப் போட்டியில் முதற் பரிசு பெற்ற சிறுகதை. பாவேந்தரின் கவிதையை கதையாக்கியிருந்தேன். இக் கதையை தேர்வு செய்தது வேறு யாருமல்ல பாவேந்தரின் மகன் கவிஞர் மன்னர் மன்னன் அவர்கள்.

'மழை இரவு' எழுதி முடித்து விட்டு வானம் பார்த்து அழுதிருக்கிறேன். கதை எழுதி அழுதவனுக்கு வாசித்து



இமைகள் நனைத்திட்ட கடிதம் திரு. வைகோ அவர்களிட மிருந்து வந்தது.

'அண்மையில் ஒரு மோனமான நள்ளிரவில் 'மழை இரவு' கதையைப் படித்தேன். இந்தக் கதையை வாசிக்கும் போது அழுகையைக் கட்டுப்படுத்த முடியவில்லை.... இவர்களின் வாழ்வு கரை சேருமா..? என்றாவது இருள் விலகுமா..? என்கிற துயரப் பெருமூச்சே வெளிப்பட்டது கதையை படித்து முடித்த போது.'

கடித வரிகள் என்னை எழுத வேண்டியதை எழுது எழுது என்கிறது. தோள் தட்டுகிற கடிதங்கள்தான் என் எழுதுகோலை தூங்கி விடாமல் பார்த்துக் கொள்கிறது. இதைச் சொல்லியாக வேண்டும்.

குமுதம் நடத்திய நெல்லை மாவட்டச் சிறுகதைப் போட்டி. எழுத்தாளர் தி.க. சி அவர்களால் தேர்வு செய்யப்பட்ட ஐம்பத்தொரு எழுத்தாளர்கள் களம் கண்ட நேரடிப் போட்டி அது.

பாரதியும், வ.உ.சி.யும், புதுமைப் பித்தனும் உலாவிய திருநெல்வேலி சந்திப்பு இந்துக் கல்லூரி மேல் நிலைப் பள்ளியில் கதை எழுதும் போட்டி.

முறுக்கிய மீசையுடன் ஜமீன் குட்டி என்ற சண்முக சிதம்பரம் வந்திருந்தார் குமுதத்துக்கு உதவ. குமுதம் தலைமை நிருபர் பால்யூ அவர்கள் அங்கும் இங்கும் ஓடிக் கொண்டிருந்தார் எறும்பாய்.

19.7.1992 அன்று ஞாயிறு காலை ஒன்பது மணிக்கே எழுத்தாளர்கள் வந்து குவிந்து விட்டனர் உறவுகளுடன். ஒரு பெண் எழுத்தாளர் கைக் குழந்தையுடன் வந்திருந்தார். இன்னொரு பெண் எழுத்தாளர் 'இங்க்' புட்டியே கொண்டு

வந்திருந்தார். போட்டி நடுவர்களில் ஒருவரான எழுத்தாளர் தோப்பில் முகமது மீரான் போட்டி போட்டு எழுத்தாளர்கள் எழுதுவதை ஆர்வமாய் ரசித்தார். எழுத்தாளர்களின் புழுக்கத்துக்கு பனை ஓலை விசிறி தரப்பட்டது.

அந்த போட்டியில் -

எனக்கும் எழுத்தாளர் தமயந்திக்கும் பரிசு கிடைத்தது.

'போக்குவரத்து வசதியில்லாத பட்டிக்காடுகளில் மழையும் ஆறும் சேர்ந்து கொண்டு வஞ்சனை செய்கிற அந்த நாளில் உயிருக்கு மன்றாடும் குழந்தைக்கு மருத்துவ உதவி கிடைக்காதா என்று ஏங்கித் தவிக்கும் ஒரு தாயின் உள்ளம் கதையில் ஜீவனுடன் அகக் கண் முன் கொண்டுவரப்படுகிறது. கதையின் சோக முடிவு கதைக்கு மேலும் வலுவூட்டுகிறது' என்று நடுவர்களில் ஒருவரான 'நண்பர் வட்டம்' சரோஜினி பாக்கிய முத்து அவர்கள் குமுதத்தில் பதிவு செய்த வார்த்தைகளையே நான் பரிசாகக் கருதுகிறேன்.

நீண்ட நாட்களுக்கு பின் - முன் எழுதிய கதைகள் மீண்டும் கண் முன் வரும் போது ஒருவித சந்தோஷம் வருகிறது. ஐப்பசி மாத மழையைப் பார்த்த பரவசம் தெரிகிறது.

அலை அடிக்கும் குளத்தை ரசிக்கும் ஆனந்தம் கிடைக்கிறது.

பழைய புகைப்படங்களை எடுத்து வைத்துக் கொண்டு மனதுக்குள் வியந்து போவது போல இச்சிறுகதைகள் என்னை வியப்படையச் செய்கின்றன.

.....இப்படிச் சொல்லிக் கொண்டே போகலாம். நான் சொல்வதை விட நீங்கள் சொல்வதே நல்லது.

இத் தொகுப்பில் உள்ள சிறுகதைகளை வாசகர் முன் வைத்த இதழ் ஆசிரியர்களுக்கு நன்றி.



என்னை 'எழுது... எழுது' என்று உற்சாகப்படுத்துகிற நெஞ்சிலே பாசம் வைத்து விழி வழி நேசம் காட்டுகிற அண்ணன் வைகோ அவர்கட்கும், எழுத்தும் தெய்வம் எழுதுகோலும் தெய்வம் என்று வாழ்ந்து வருகிற எழுத்தாளர் விக்கிரமன் அவர்கட்கும் இதய நன்றி.

என் எழுத்துக்களை இதயத்தால் தொட்டு, எழுது கோலால் முத்தமிட்டு கதைகளுக்கு முன்னால் வார்த்தைகள் தந்திருக்கிற என் இனிய இலக்கிய நண்பர்களுக்கும், சக எழுத்தாளர்களுக்கும் நன்றி.

தொட்டில் காலத்திலும், பேனா தொட்ட காலத்திலும், தொலைத்த காலத்திலும் பாசம் காட்டிய என் அப்பாவுக்கும், பாசம் காட்டுகிற என் அம்மாவுக்கும் என்னை எழுத வைக்கிற என்னில் பாதியான தமிழ் செல்விக்கும், என்னுள் உற்சாகம் விதைக்கிற லீபனோனுக்கும் இதய நன்றி.

காகித நிலவை உங்கள் வானத்தில் மிதக்க விட்டிருக்கிற - சேதமில்லாத அன்புக்குச் சொந்தக்காரர் சேது சொக்கலிங்கம் அவர்கட்கும், மாரியாய் அன்பை பொழிகிற நண்பர் மாரிமுத்து அவர்கட்கும் இதய நன்றி.

வயல் தாண்டி... ஆறு தாண்டி... கடல் தாண்டி தமிழர்கள் இருக்கும் இடத்தில் இருந்தெல்லாம் - என்னை எழுத வைக்கிற வாசகர்களிடமிருந்து எழுத்து சுமந்த காகிதங்களை எதிர்பார்த்து வழி மீது விழி வைத்து காத்திருப்பேன் என்று கூறி இந்த இமை மூடு பொழுது விடை பெறுகிறேன்.

12.12.2010 *இதய அன்புடன்*

பரப்பாடி மதுரா

பொருளடக்கம்

பக்கம்

1. ஒரு விடிகாலை ஜனனம் .......... 13
2. கானல் மான் ஒட்டங்கள் .......... 27
3. வெள்ளை காக்கைகளும் கறுப்புப் பருத்தியும் .......... 36
4. இந்துவதனா .......... 53
5. ஒரு கட்டை புளிய மரத்தின் கதை .......... 67
6. பொய்க்கால் குதிரைகள் .......... 84
7. கடைசி இரவு .......... 94
8. பூ முத்தங்கள் .......... 103
9. மழை இரவு .......... 117
10. தீயிடை மொட்டுகள் .......... 129
11. கானல் மான்! .......... 140
12. சுமை .......... 149
13. ஒட்டு விளையாட்டு பாப்பா .......... 159
14. பொய் மான்கள் .......... 169
15. முற்றுகையிடப்பட்ட இரவுகளும் உடைந்த நிலாக்களும் .......... 178
16. முடி மன்னர்கள் .......... 189
17. பால் கூலி .......... 199
18. சஞ்சீவிச் சிறகுகள்! .......... 209
19. காகித நிலவு .......... 219
20. பாருக்குள்ளே நல்ல நாடு .......... 228
21. இந்நாட்டு மன்னர்கள் .......... 236
22. பொன்வேலி .......... 248

# 1

# ஒரு விடிகாலை ஜனனம்

(*குமுதம் வார இதழ் நடத்திய அமரர் சாண்டில்யன் நினைவு சரித்திர சிறுகதைப் போட்டியில் முதற் பரிசு பெற்ற சிறுகதை)

(இன்றும் நம் தோள்மீது அமர்ந்துகொண்டு நம் கண்களையே ரணமாக்கும் மூடப் பழக்க வழக்கங்களுக்கு, அன்று சரித்திர நாயகன் ராஜாராம் மோகன்ராயால் முதல் சாவுமணி ஓங்கி அடிக்கப்பட்டது. அந்த ஓசைகளின் சரித்திரப் பின்னணிதான் இந்தச் சிறுகதையின் வித்து.)

*கடந்து சென்ற நூற்றாண்டின் அந்திப் பொழுதில் தான் படைத்த முத்திரைக் கதைகள் மூலம் இந்த நூற்றாண்டின் வைகறையில் எல்லாத் திசைகளும் திரும்பத் திரும்ப உச்சரிக்கும் எழுத்தான நண்பர் மதுராவின் 'ஒரு விடிகாலை ஜனனம்' என்னை பதினெட்டாம் நூற்றாண்டின் உச்சிப் பொழுதிற்கு கொண்டு போய் நிறுத்தி விட்டது.*

*பழைமையின் மடியிலும், பத்தாம் பசலித்தனத்தின் பிடியிலும் சிக்கிக் கொண்ட மக்கள் பெண் குழந்தை பிறந்து*

விட்டால் அதைக் கொன்று விடுகிற கொடுமை அன்று பிரம்மபுத்திரா நதிக்கரையில் அரங்கேற்றப்பட்டதை தெம்மாங்கு நடையில் தேன் தமிழில் சொல்லுகிற மதுராவின் எழுத்து என்னை ஒரு நிமிடம் உலுக்கி உட்கார வைத்து விட்டது.

மூச்சோடும் அழகோடும் முத்துப் போல் பிறந்த பெண் மலரை பெண்ணாகச் சித்திரிக்கப்படும் பிரம்ம புத்திரா நதியில் வீசச் சொன்ன மாமனை பிரம்ம புத்திராவில் தூக்கி வீசிய ரூப்மல்லாக்களை இன்று பார்க்க முடியவில்லையே என்ற ஏக்கம் என்னோடு இப்போது கூட்டணி அமைத்து விட்டது. புல்லின் நுனியிலும் புதுமை சிலிர்க்க எழுதுகிற மதுரா பூ ஒன்று புயலானதை அழகாக சித்திரித்துள்ளார் ஒரு விடிகாலை ஜனனத்தில். நூற்றாண்டுகளின் வரப்புகளைக் கடந்த பின்னும் ரூப்மல்லாக்கள் வரலாறு படைத்த தேசத்தில் இன்னும் விடிகாலையைத் தரிசிக்க முடிய வில்லை, என்பது கசப்பாக இருந்தாலும் அதுதானே உண்மை.

சாகாவரம் பெற்ற சரித்திர சம்பவத்தைச் சின்னஞ் சிறிய சிறுகதை சிமிழுக்குள் அடைத்த மதுராவின்– மாணிக்க விரல்களுக்கு எனது முத்தங்கள்.

– சொற்பொழிவாளர் நாஞ்சில் சம்பத்

ஆயிரத்து எண்ணூற்று எழுபதாம் வருஷத்தின் கடைசிப் பௌர்ணமி நிலவு என்னவோ அன்று இரத்தம் கலந்த மஞ்சளாய் இருந்தது – வானம் மேகத் துணுக்குகளைச் சுமந்து கொண்டு கவலையுடன் காத்திருப்பது போலிருந்தது. விண் மீன்கள்கூடக் கண் இமைக்க மறந்ததுபோல் கீழேயே பார்த்துக் கொண்டிருந்தன. கீழ்வானில் 'சுதிர்' நட்சத்திரம் கண் சிமிட்டிய நேரத்தில்தான் 'வீல்' என்ற சத்தத்துடன் அந்தப் பெண் குழந்தை



இந்திய மண்ணில் காலை மிதித்தது. அந்தக் குழந்தையின் குரல் ஏதோ கடைசி நேர சங்கு ஒலிப்பது போல்தான் இருந்தது.

கூடத்தின் நடு மையமாய்க் கிடந்த, அந்தப் பெரிய மர ஆசனத்தில் சரிந்திருந்த அறுபது வயது சத்தியானந்தா, குழந்தையின் அழுகுரலில் சற்றே திடுக்கிட்டு, நிமிர்ந்து உட்கார்ந்தார். கூடத்தின் ஒரு மூலையில் தொங்கிய தூங்கா விளக்கின் வெளிச்சம், அவருடைய காதில் கிடந்த வைரத் துணுக்குகளில் பட்டுப் பிரதிபலித்ததே தவிர, அவருடைய முகம் எந்த உணர்ச்சியையும் பிரதிபலித்ததாகத் தெரியவில்லை. பட்டுத் திரைச் சீலைகளால் மூடிக் கிடந்த அந்த அறைக் கதவையே கண் அசையாமல் பார்த்துக் கொண்டிருந்தார். அந்தக் கூடம் சற்றே அகலமானதாகவும், நேர்த்தியான வேலைப்பாடமைந்ததாகவும், காணப்பட்டது. அதற்கு வயது நூறுக்கு மேலிருக்க வேண்டும். எட்டு பெரிய தூண்கள், எந்த வேலைப்பாடும் இல்லாமல் மழுமழுப்பாய் நின்றது. ஒரு குறுகிய படிக்கட்டு மேலே ஏறி, வளைந்து மறைந்தது. தூங்கா விளக்கின் வெளிச்சம் போதாததால் கூடம் மூடனின் மனசு போல் இருண்டுதான் கிடந்தது. தூண்களின் நிழல்கள் இன்னும் அதிகமாய்க் கரிய இருட்டைத் தோற்றுவித்திருந்தன.

அந்த அறைக் கதவு சற்று யோசித்து, பின் மெல்லத் திறந்தது. பயம் கலந்த வருத்தத்துடன் வந்த மருத்துவச்சியின் முகத்தைக் கண்டதுமே புரிந்துவிட்டது சத்தியானந்தருக்கு, பிறந்திருப்பது பெண் குழந்தையென்று. மெல்ல நடந்து வந்து, அவருடைய பக்கத்துத் தூணில் நின்றவளுக்கு, பாதி இருட்டும், பாதி வெளிச்சமுமாய்த் தெரிந்த அவருடைய முகம், மெலிதான பயத்தைத் தோற்றுவிக்க, வாயிலிருந்து வார்த்தைகள் வராமல் தொண்டையிலேயே திணறின.

"பெண்... குழ...ந்தை... பிறந்திருக்கிறது."

அவளையே ஒரு கணம் உற்றுப் பார்த்துவிட்டு, இடுப்பைத் துழாவி, ஒரு துணிப்பைய எடுத்து, குனிந்து தரையில் கவிழ்த்தார். மிடுக்கான விலையுயர்ந்த உடையுடன், மகுடம் தரித்த விக்டோரியா மகாராணியின் இடப்புறத்தில் 'Victoria' என்றும், வலப்புறத்தில் 'Queen' என்றும் பொறிக்கப்பட்டிருந்த வெள்ளி நாணயங்கள் சிலிங், சிலிங் சத்தத்துடன் ஒன்றுடன் ஒன்று மோதி, தரையில் விழுந்து படுத்துக் கொண்டன. அந்த நாணயங்கள் கலகலத்து, மௌனித்ததும் இருக்கையை விட்டு எழுந்தார்.

ஒருமுறை மருத்துவச்சியை தீர்க்கமாய்ப் பார்த்தார். அந்தக் கண்கள் மனிதத் தன்மையற்று, ஏதோ கொடூரமான மிருகத்தின் கண்களைப் போல் பளபளத்தன. அவர் கண்களை இரண்டு இமை மூடு பொழுதுகூடச் சந்திக்கத் திராணியில்லாமல், குனிந்து தரையைப் பார்த்தாள். அந்த முரட்டு உருவத்திடமிருந்து, கிசுகிசுப்பான குரலில் வார்த்தைகள் வந்து வெளியே விழுந்தன. ஒவ்வொன்றும் நெருப்புத் துண்டங்களாய் வந்து விழுந்தது போலிருந்தது மருத்துவச்சிக்கு.

"உனக்கு நாலு நாணயம்தான் தரணும்னு நினைச்சேன். ஆனா கடவுள் வேற மாதிரி நினைச்சிட்டான். காரியத்தை முடிச்சிட்டு, இதில கொட்டிக் கிடக்கிற மொத்தத்தையும் எடுத்துட்டுப் போ."

கூடத்து மூலையில் இருட்டை வெறித்தபடி, அவள் பேசத் தோன்றாது நின்றாள்.

"ம்... போ."



ஓங்கிக் கருங்கல்லை விட்டெறிந்தது போல், கனமாக வந்தடித்தது அந்த வார்த்தை. ஒரு கணம் தடுமாறினாலும் அவள் முகத்தில் உறுதி தெரிந்தது. ஆவேசமாய் வார்த்தைகளை உதிர்த்தாள்.

"முடியாது. என்னால் முடியாது."

-ஏதோ ஒரு வேகத்தில் சொல்லிவிட்டாலும் உடம்பு என்னவோ நடுங்கத்தான் செய்தது. அவர் பற்களை நறநறவென்று கடித்தது மெலிதாகக் கேட்டது.

"என்னைப் பற்றி உனக்குத் தெரியுமில்ல. பாணாத்து கதை உனக்கு மறந்திருக்காதுன்னு நினைக்கிறேன். ம்... போய் வேலையை கவனி."

"வெள்ளைக்காரங்களோட சித்திரவதையை நினைக்கும் போதே பயமா இருக்குதுங்க. [1]மேயோ பிரபு அந்தச் [2]சட்டம் போட்ட பிறகு எங்க ஆட்கள் யாருமே இதைச் செய்யலீங்க. நான் மட்டும் எப்படி...?"

'உள்ளூர் வெள்ளைக்காரனைப் பற்றிக் கவலையே படாதே! சத்தியானந்தர் எது சொன்னாலும் அங்க சரிதான். அந்தச் செவலைப் பசு மாட்டை உனக்கு எடுத்துக்க. ஆக வேண்டியதைப் பாரு."

-பேசாமல் நின்றாள்.

"கடைசியா கேட்கிறேன் முடியுமா... முடியாதா...?"

"என்னால முடியாது. பொண்ணா பிறந்திட்டு, பெண் குழந்தைகளை, பாரத மாதாவைத் தொட்ட சில நிமிஷங்கள்ல,

*1. கவர்னர் ஜெனரல் மேயோ பிரபு (1869-1872)*

*2. 1870 பெண் சிசு கொலை தடைச் சட்டம்*

அந்த இளம் மொட்டுகளைக் கசக்கி எறியற பாவத்தை இனிமேலும் செய்ய நான் தயாராயில்லை."

"என்னடி சொன்னே?"

-கோபத்தின் உச்சியில், வலது கையால் அவள் தலை முடியை இறுக்கிப் பிடித்தவர், அந்தச் சத்தத்தில் பிடித்த பிடியைக் கொஞ்சம் தளரவிட்டார்.

"தட... தட்... தட தட்..."

-யாரோ முகப்பு வாயில் கதவை பலமாகத் தட்டினார்கள். 'யாராயிருக்கும். சீர்திருத்த பரதேசிகளுக்கு யாராவது துப்புக் கொடுத்து விட்டார்களா... பெண் குழந்தை பிறந்திருப்பது அவர்களுக்குத் தெரிந்திருக்க நியாமில்லையே... வெள்ளைக்காரச் சிப்பாய்களாய் இருக்குமோ... சமாளித்து அனுப்பி விடலாம்.

-வலது கையால் பிடித்திருந்த பிடியுடன், அவள் முகத்தை தன் முகத்துக்குத் திருப்பி -

"வாயைத் திறந்தே எமலோகத்துக்கு அனுப்பிடுவேன்!'

-என்று எச்சரிக்கும் குரலில் சொல்லிவிட்டு, தூண் ஓரமாய்த் தள்ளி விட்டார்.

"தட்... தட்... தட்... தட்... தட்... தட்... தட்..."

-இந்த முறை கதவு பலமாக இடிபடவே, வேகமாய்ச் சென்று, அந்தப் பெரிய கதவின் தாழ்ப்பாள்களை, முழு பலத்தைப் பிரயோகித்துத் திறந்தார். திறந்த கதவின் வழியே, தெருவில் தூணின் தலையில் உட்கார்ந்திருந்த, கண்ணாடிச் சிறை தெரு விளக்கின் ஒளி உள்ளே வந்து விழுந்தது. அவரசமாய் வெளியே வந்தார் சத்தியானந்தர். கதவைத் தட்டிய சிப்பாய் ஒதுங்கி பயபக்தியாய் நின்றான். அது இந்திய முகம்.



ஏழெட்டுப் பெரிய அராபியக் குதிரைகள் வரிசையாய் நின்றன. குதிரைகள் கால்களை மாற்றி மாற்றிப் பரதநாட்டிய முத்திரைகளைப் பதித்துக் கொண்டிருந்தன. அவற்றின் முதுகுகளில் இந்திய முகத்துடன் பிரிட்டிஷ் சிப்பாய்கள். முன்னணியில் நின்ற இரண்டு கறுப்புக் குதிரைகளின் முதுகில் வெள்ளைத் தோலுடன் இரண்டு வெள்ளையர்கள். அவர்களின் சிறிய நீலக் கண்கள் தெரு விளக்கு வெளிச்சம் பட்டு மினுங்கின. இன்னும் உடையில் எது ஏதோ மினுக்கங்கள்.

"சக்தி... அனந்தம்..."

"தொரை."

"வொரு இந்திய நாயீ இந்த சைட் வந்திச்சா...?"

"யாரும் வர்லீங்களே தொரை..."

"வில்லியம்சை அடிச்சுப் போட்டுட்டு ஜெயில்லே இருந்து ஓடி வந்துட்டான். அவனை யாராவது ஒள்ச்சு வைச்சிருந்தா இந்த டவுனையே கொளுத்திப் பூடுவேன். அவன் மட்டும் என் கைய்லே அகப்பட்டா."

-அப்பொழுதுதான் சத்தியானந்தர் கவனித்தார். பக்கத்தில் நின்றவனின் இடது பக்க தலையிலிருந்து இரத்தம் கழுத்துவரை வழிந்திருந்தது. இன்னும் ஈர மினுமினுப்பு இருந்தது. சம்பிரதாயம் போல் ஒரு சின்ன மஞ்சள் துணியில் அவசரக் கட்டுப் போட்டிருந்தார்கள். சிவப்பும் மஞ்சளும் கலந்து அஸ்தமன சூரியனை ஞாபகப்படுத்தின.

"உள்ளே போய்ப் பாரு மேன்."

-தலையில் கட்டுப் போட்டிருந்தவன் கோபமாய்க் கத்தினான். வாசலில் நின்றவன் உள்ளே நுழைய எத்தனித்தான். சத்தியானந்தம் பதறிப் போனார். "தொரை... என் மேல

சந்தேகமா... உங்க காலையே சுற்றி வர்றவன் நான். உங்களுக்கு வேண்டாதவனுக்கு வீட்டில இடம் கொடுப்பேனா. நீங்க வீட்டுக்குள்ளே போயி தேடினா நம்ம ப்ரண்ட் ஷிப்பையே கேவலப்படுத்தற மாதிரி.''

"வர்றேன்."

ஒற்றைச் சொல்லை உதிர்த்துவிட்டு, குதிரையின் வயிற்றுப் பிரதேசத்தில் காலை வைத்து அழுத்த, குதிரை வேகம் பிடித்துக் கொண்டது. முன்னால் ஓடும் குதிரையைப் பிடிக்க வேண்டும் என்றோ, தனியாய் நிற்கிறோம் என்று பயந்தோ, மற்றக் குதிரைகளும் வேகமாய்ப் பின்னால் ஓடியதால் ஏற்பட்ட புழுதி, அந்த விளக்கைச் சுற்றி ஒரு படலத்தை ஏற்படுத்தி விட்டது.

சத்தியானந்தர் வேகமாய் வீட்டுக்குள் நுழைந்து இரண்டு தாழ்ப்பாளையும் போட்டுவிட்டுத்தான் மெல்ல மூச்சுவிட்டார். கதவில் சாய்ந்தபடியே கூடத்தைப் பார்த்தவருக்கு, மூளையில் ஒரு சின்ன மின்னலடித்தது. நெஞ்சில் இடி இடித்தது. 'மருத்துவச்சியைக் காணவில்லை'. வேகமாய் உள்ளறைக்குச் சென்று பார்த்தார். வெள்ளை உடையில் ரூப்மல்லா அமைதியாய்த் தூங்கிக் கொண்டிருந்தாள். பக்கத்தில் அந்தப் பிஞ்சுக் குழந்தை. 'இங்கேயும் இல்லை.' இன்னும் வேகமாய்ப் பின்பக்கம் ஓடினார். புழக்கடைக் கதவு திறந்து கிடந்தது. 'சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டாள். கோபம் புசுபுசுவென்று தலைக்கு ஏறியது. ஓங்கிக் கதவை அறைந்து சாத்தினார். பனி நேரமாதலால் மாம் பலகைக் கதவு 'பசக்' என்று போய் ஒட்டிக் கொண்டது. 'விடிவதற்கு இன்னும் எத்தனை நாழிகை இருக்கும்? அதற்குள் குழந்தையைக் கொன்றுவிட வேண்டுமே... மருத்துவச்சியும் ஓடிப்போய் விட்டாள். என்ன செய்வது?' ஏதோ யோசனை வந்தவர் போல் விடுவிடுவென்று நடந்து, குறுகிய மாடிப் படிகள் வழியே ஏறி, ஒரு சிறிய அறைக்கு வந்தார்.



சின்ன ஈக்களுக்கும், பூச்சிகளுக்கும் அறையெங்கும் வலை விரித்திருந்தன, எட்டுக்கால் பூச்சிகள். தொட்ட இடமெல்லாம் தூசி ஒட்டிக் கொண்டுவரும் போலிருந்தது. சாளரத்து வழியே வானத்தைப் பார்த்தார். விடிவதற்கு இன்னும் வெகு நேரமில்லை என்றன, கண் சிமிட்டும் விண் மீன்கள். மூலையில் தூசு படிந்து கிடந்த பெரிய மரப் பெட்டியைத் திறந்து, கட்டுக் கட்டாய் ஏடுகளையும், சின்னச் சின்ன விளக்குகளையும், ஏதேதோ பாத்திரங்களையும் மூலைக்கொன்றாய்த் தூக்கி எறிந்துவிட்டு, கடைசியில் அந்தக் குப்பியை எடுத்ததும் அவருடைய வதனத்தில் ஒரு சின்ன இளநகை அரும்பியது. மேல் துண்டால் முகத்தைக் துடைத்துக் கொண்டே தட்டுத் தடுமாறிக் கீழே வந்தார். அறைக்குள் எட்டிப் பார்த்தார். [1]கஜலட்சுமி விளக்கொளியில் குடும்ப விளக்கும் குல விளக்கும் படுத்திருப்பது தெரிந்தது. வெள்ளை உடையில் வானத்து வெண்மதியாய் ரூப்மல்லா அருகில் இன்று பிறந்த புதுமலர், தென்றலில் ஆடுவது போலக் கையசைத்து, காலசைத்து, கண் விழித்திருந்தது. வழுவழுப்பான மினுங்கும் கன்னங்கள், சிறிய செம்பவள உதடுகள், பளபளக்கும் கண்கள், சின்னச் சின்னக் கறுப்பு, சுருள் கேசங்கள். தெய்வக் குழந்தையைப் பார்ப்பது போல் இருந்தது.

"ரூப்மல்லா....."

-தடிமனான குரலில் திடுக்கிட்டு விழித்தவள், மாமனாரைப் பார்த்துவிட்டுக் குழந்தையைப் பார்த்தாள். பரவசப்பட்டாள். அடுத்த இமை மூடு பொழுதுக்குள் உடைந்து போனாள். பெண்

*1. தமிழ்நாட்டு திருவிளக்குகள். எழுதியவர்: ஆர். ராகவன்*

குழந்தை! ஏய் நீ சாவதற்காகவா என்னிடம் வந்து பிறந்தாய்... உன் அப்பா மாதிரியே இருக்கிறாயே, கண்ணே. இந்தக் கிழவன் உன்னை விட்டு வைக்க மாட்டானே பெண்ணே!

"ரூப்மல்லா, இந்தக் குப்பியில் விஷம் இருக்கிறது. மார் காம்பிலே தடவிக் குழந்தைக்குப் பால் கொடு. பிறகு என்னைக் கூப்பிடு."

–குப்பியைப் படுக்கையின் விளிம்பில் வைத்து விட்டு, வெளியே வந்து இருக்கையில் அமர்ந்தார். பத்து மணித் துளிகள் கரைந்ததும் அறைக்குள் நுழைந்தார். குப்பி இருந்த இடத்திலேயே இருந்தது. குழந்தை கனவில் 'தாமரைப் பூ' தெரியச் சிரித்துக் கொண்டிருந்தது.

"ரூப்மல்லா, பால் கொடுத்துட்டியா?"

"இல்லை. கொடுக்கப் போறது இல்லை."

"வம்சாவழி வழக்கத்தை மீறுவது குலத்துக்கு நல்லது இல்லை. கடவுள் நம்மைத் தண்டிச்சிடுவான்."

"மாமா, இந்தப் பிஞ்சுக் குழந்தை என்ன பாவம் செய்தது பெண்ணாகப் பிறந்ததைத் தவிர. பெத்தவளே புதைகுழிக்கு அனுப்புவது பாக்கியம்னு சொல்றிங்களா... அவங்கப்பா கூட வீட்டிலே இல்லை. அவரையே உரிச்சு வெச்சது மாதிரி பொறந்திருக்குது. இதைப் போயி..."

"அவன் உடம்பிலே ஓடறதும் என்னோட இரத்தம்தான். நான் எடுத்த முடிவைத்தான் அவனும் எடுப்பான்."

–குனிந்து குப்பியை எடுத்து, ரூப்மல்லா கையில் திணித்தார். குப்பியையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

"என் கையாலே என் மகளைச் சாகடிக்க முடியாது. நான் முன்னாலே போறேன். அவளைப் பின்னாலே அனுப்புங்க.



அங்க சந்திச்சிக்கிறோம்." – ரூப்மல்லா விஷக் குப்பியை வாய்க்குள் கொண்டு போக, அவசரமாய் சத்தியானந்தர் கையைத் தட்ட, குப்பி பக்கச் சுவரில் மோதி உடைந்து விழுந்தது. மஞ்சத்தில் முகம் புதைத்துக் குலுங்கிக் குலுங்கி அழுதாள். அவளையே பார்த்துக் கொண்டு நின்றவர் ஒரு முடிவுக்கு வந்தவராய்–

"குழந்தையை உன் கையாலே சாகடிக்க உனக்கு விருப்பமில்லேன்னா இன்னொரு பெண்ணுக்குத் தாரை வார்த்திடுவோம்."

"எந்தப் பொண்ணுக்கு?"

"அதை அப்புறம் சொல்றேன். இதை முதல்லே ஞாபகம் வெச்சுக்க. என் வார்த்தையை மீறினா கால் வினாடி கூட இந்த வீட்டிலே இருக்க முடியாது. தெரியுமில்லே? குழந்தையை எடுத்துக்கிட்டு என் பின்னாலே வா."

ரூப்மல்லா தட்டித் தடுமாறி எழுந்து, குழந்தையை எடுத்துக் கொண்டு, அவர் பின்னே நடந்தாள். புழக்கடைக் கதவு இழுத்த இழுப்புக்கு வர மாட்டேன் என்று அடம் பிடித்தது. வியர்வைத் துளிகள் தரையைத் தொட்ட பிறகுதான், வேண்டா வெறுப்பாக 'கிரீச்' என்று சத்தம் போட்டுக் கொண்டு திறந்தது. வெளிக்காற்று ஒருவித நறுமணத்துடன் முகத்தை வருடிக்கொண்டு உள்ளே நுழைந்தது. திரும்பிப் பார்த்தார். ரூப்மல்லா நிற்க முடியாமல், குழந்தையுடன் தரையில் அமர்ந்திருந்தாள். முகம் முழுவதும் கோபமாகி–

"ம், எழும்பு," என்று ஒற்றைச் சொல்லை உதிர்த்து விட்டு, வேகமாய் வீதியில் இறங்கி நடக்க, அவரைத் திடீரெனப் பார்த்த தெரு நாய் ஒன்று ஐம்பதடி தூரம் ஓடிப் பின் நின்று இரண்டு குரைப்புக் குரைத்துவிட்டு ஓடி மறைந்தது. இருபுறமும் வளர்ந்து

நின்ற கட்டடங்கள், அவற்றுக்குப் பின்னால் ஒளிந்து கொண்டிருந்தான் மஞ்சள் நிலவன். வீதி ஓர மரங்கள், நிலவன் மேற்றிசை சரிந்து விட்டதால், கரிய நிழலைத் தோற்றுவித்து பயமுறுத்தின. இருவரும் கட்டட நிழல்களில் மூச்சிரைக்க நடந்தார்கள்... நடந்தார்கள்... நடந்தார்கள். தூரத்தில் கேட்ட அந்த ஒலிக் கூட்டம் அவர்கள் கால்களை இழுத்த நிறுத்தியது. காதுகளைக் கூர்மையாக்கிய ரூப்மல்லாவை இழுத்துக் கொண்டு, பக்கத்து இருட்டான சந்துக்குள் நுழைந்தார்.

அடுத்த சில வினாடிகளில் சிப்பாய்களைச் சுமந்து கொண்டு குதிரைகள் ஓட, திடீரென குழந்தை பெருங்குர லெடுத்து அழத் தொடங்க, இறுக்கமாய் வாயைப் பொத்தினார்.

வரிசையாய்க் குதிரைகள் ஓட, குழந்தை மூச்சுவிடத் திணறியது. தொடர்ந்து குதிரைகள் மின்னல் வேகத்தில் பாய, அவள் அவருடைய கையை அகற்ற, தன்னுடைய முழு பலத்தையும் பிரயோகித்துத் தோற்றுப் போனாள். குதிரைகள் கிளப்பிச் சென்ற புழுதி மட்டுமே நின்றது. கையை எடுத்தார். குழந்தை காற்றுக்காய் அகலமாய் வாயைத் திறக்க, ரூப்மல்லா முகத்தோடு முகம் சேர்த்து விசும்பலாய் அழுதாள்.

"ம்... வா." சத்தியானந்தர் வேகமாய் முன்செல்ல, குழந்தையுடன் தட்டுத் தடுமாறிப் பின் சென்றாள். நகரத்தின் எல்லையைத் தாண்டியும் வேகம் குறையவில்லை. அவர் நடக்கப் பின்னால் அவள் ஓடினாள். 'ஏதோ பெண்ணிடம் குழந்தையைக் கொடுத்து விடுவோம் என்றாரே... நகரத்து எல்லையைத் தாண்டி எங்கே செல்கிறார். காட்டில் வசிக்கும் மலைவாசிப் பெண்ணாய் இருக்குமோ? ஏதாவது ஆசிரமத்தில்...' சிந்தனைகள் அவளுடைய வேகத்துக்கு ஈடு கொடுத்துப் பின்னால் வந்து கொண்டிருந்தன.



புதர்கள், செடி, கொடிகள், ஒற்றையடிப் பாதைகள், சதையைக் கொக்கிப் போட்டு இழுக்கும் முள் செடிகள், கடந்து வந்து கொண்டே இருந்தார்கள். ஏதோ இரைச்சல் சத்தம் மெலிதாகக் கேட்டது. முள் செடிகள் இழுத்துக் கோடு போட்டதால், ரூப்மல்லாவுக்குக் கை காலெல்லாம் எரிந்தது. தொட்டுப் பார்த்ததில் ரத்தம் பிசுபிசுப்பாய் ஒட்டியது. இப்பொழுது இரைச்சல் சத்தம் சற்று அதிகமாய்க் கேட்டது. ஒரு பாறையின் மேல் சத்தியானந்தர் ஏற, குழந்தையுடன் சிரமப்பட்டுப் பின்னால் ஏறி, பாறையின் உச்சிக்கு வந்து மறுபக்கம் பார்க்க, பிரம்மபுத்திரா நதி பிரவாகம் தெரிந்தது. தூரத்தில் நிலவு, ஓடிவரும் வெள்ளத்தில் தன் பாதி உடல் நனைத்து மீதியை விடிகலைக் குளிருக்குப் பயந்து நனைக்காதது போலிருந்தது. காலுக்குக் கீழே பொங்கும் ஆசை நுரையுடன், தடைகளைக் கண்டு அஞ்சாத வேகத்துடன், உற்சாகக் காதல் கீதம் பாடி, கடல் காதலனை நோக்கி ஓடிக் கொண்டிருந்தது, பிரம்மபுத்திரா.

சலசலக்கும் நதியையே பார்த்து நின்ற சத்தியானந்தர் திரும்பி இரு கரத்தையும் நீட்ட, ரூப்மல்லா தயக்கத்துடன் தந்த குழந்தையை வாங்கிப் பாறையில் கிடத்தினார். நிமிர்ந்து அவளைப் பார்க்க, அந்த அரைகுறை வெளிச்சத்திலும், அவருடைய பார்வையின் வேகம் தாங்காமல் தலை குனிந்தாள்.

"ரூப்மல்லா, நாம நிக்கிற பூமியைப் பொண்ணுன்னு தான் சொல்றோம். நீரைச் சுமந்துகிட்டு ஓடுகிற நதியையும் பொண்ணுன்னுதான் சொல்றோம். தெற்கே தமிழ் பேசுகிற மக்கள் மொழியையே பொண்ணுன்னுதான் சொல்றாங்க. நான் ஒரு பெண்ணுக்குக் குழந்தையை தாரை வார்க்கப் போறேன்னு சொன்னேனே, அது வேறே யாருமில்லை. இதோ இந்தப் பிரும்மபுத்திராதான்."

"........"

"ரூப்மல்லா, இறந்த கணவன் பாவங்கள் கரைஞ்சு சொர்க்கம் போகணுங்கறதுக்காகத், தீக்குளிக்கிற பெண்கள் வாழ்கிற புண்ணிய பூமி இது. இதைத் தடுக்கச் [1]சட்டம் போட்ட [2]பென்டிங் பிரபுவாலேயோ, அந்தக் கோடரிக் காம்பு [3]ராம் மோகனாலேயோ முடிஞ்சுதா? நாம கடவுள் கோபத்துக்கு ஆளாகிடக் கூடாதும்மா, பிரார்த்தனை பண்ணிக்க."

– என்று சொல்லிவிட்டு, ஓடும் பிரும்மபுத்திராவை நோக்கி நின்று, இருகரம் கூப்பி, உதடசையப் பிரார்த்தனை செய்யத் தொடங்கினார். பாறையில் மல்லாந்து கிடந்த குழந்தை நடக்கப் போகும் விபரீதம் தெரியாமல் சிரித்துக் கொண்டிருந்தது. 'முன்னூறு நாட்கள் என் உயிரோடு வளர்ந்த உன்னை இழப்பதா? சாவுக்குக் கொடுப்பதா?'

இன்னும் சத்தியானந்தர் உதடசையக் கண்மூடி நின்றார். ரூப்மல்லா ஆவேசம் வந்தவளாய் மூச்சை உள் இழுத்து, முழுப் பலத்தையும் பிரயோகித்து, சத்தியானந்தரைத் தள்ள, தலைகுப்புற பிரும்மபுத்திராவுக்குள் விழுந்து சில வினாடிகளிலேயே காணாமல் போனார். நதியையே வெறித்துப் பார்த்தாள். பிரும்மபுத்திரா எதுவும் நடக்காதது போல அதே சலசலப்புடன் ஓடிக் கொண்டிருந்தது. குழந்தையை வாரியெடுத்துக் கொண்டு, திரும்பி நடந்தாள் ரூப்மல்லா. வரப்போகும் விடியலுக்காக உற்சாகக் குரல் எழுப்பக் காத்திருந்தன பறவையினங்கள்.

*– குமுதம், பிப்ரவரி 1988*

---

*1. 1829 சதி ஒழிப்புச் சட்டம்*

*2. வில்லியம் கேவெண்டிஷ் பிரபு - பென்டிங்க் (1828-33)*

*3. ராஜாராம் மோகன் ராய் (1772-1833)*

**2**

# கானல் மான் ஓட்டங்கள்

(*புதுவை சங்கப் பலகை - ராணி வார இதழ் இணைந்து நடத்திய பாரதிதாசன் நூற்றாண்டு விழா சிறுகதைப் போட்டியில் முதல் பரிசு பெற்ற கதை.)

'ஆடவரின் காதலுக்கும் பெண்கள் கூட்டம்
அடைகின்ற காதலுக்கும் மாற்றமுண்டோ...?
பேடகன்ற அன்றிலைப் போல மனைவி செத்தால்
பெருங்கிழவன் காதல் செயப் பெண் கேட்கின்றான்!
வாடாத பூப்போன்ற மங்கை நல்லாள்
மணவாளன் இறந்தால் பின் மணத்தல் தீதோ...?
பாடாத தேனீக்கள் உலவாத தென்றல்
பசியாத நல் வயிறு பார்த்ததுண்டோ...?

*என்று கேட்கும் புரட்சிக் கவிஞர் பாரதிதாசனின் உணர்ச்சிப் பூர்வமான வினாக்களுக்கான விடையைக் கதைக் களனாக்கி மனைவி மாண்டதும் பதினெட்டு வயது இளம் பெண்ணை மறுமணம் செய்து கொண்ட தந்தை இளமாறனிடம், மறுமணம் செய்யும் உரிமை தனக்கும் உண்டு என்பதைத் துணிச்சலுடன் நிலைநாட்டிய இளம் விதவை முல்லையை கதையில் உலாவிட்டு தென்னு*

*தமிழ் நீரோட்ட நடையில் மதுரா இருபது ஆண்டுகளுக்கு முன் எழுதி முத்திரை பதித்த புரட்சிகரச் சிறுகதை 'கானல் மான் ஓட்டங்கள்'*

*வெறும் வார்த்தை ஜாலக் கதையாக இல்லாமல் சமுதாய அவலங்களை தகர்த்தெறியும் ஆயுதமாக —*

*மதுராவின் எழுதுகோல் சுழன்றிருக்கிறது.*

*ஆணாதிக்க வெறிக்கு அடிக்கப்பட்ட சாவு மணியாக, அறியாமை இருளில் சிக்கிக் கிடக்கும் பெண் இனத்தின் கலங்கரை விளக்காக திகழ்கிறது 'கானல் மான் ஓட்டங்கள்'*

**- எழுத்தாளர் செவல் குளம் ஆச்சா.**

துக்கம் அனுசரிப்பது போல கறுப்பு உடுத்தியிருந்தது நிலவுப் பொட்டில்லாத விதவை வானம். சோகமாய் கண் இமைத்துக் கொண்டிருந்தன நட்சத்திரக் குழந்தைகள். இளமாறனோ கோபத்தில் இருந்தார். அவர் கண்கள் சிவந்து போயிருந்தன.

"ஏய் பாட்டி நீ பார்த்தது என் மகளைத்தான..." அவசரமாய் கேட்டார்.

"நான் ஏன் சாமி பொய் சொல்லணும். அந்த அலங்கோலத்தை என் ரெண்டு கண்ணாலும் பார்த்தேன். தலை நிறைய பூவோட கடைவீதியில் நின்னுகிட்டிருந்தா..." என்றாள் பாட்டி.

இளமாறன் பற்களை கோபத்தில் கடித்தார்.

"பூவே வைச்சுட்டாளா... மதிவண்ணன் சொன்னது உண்மையாத்தான் இருந்திருக்கு. எல்லாத்துக்கும் அந்த ஆட்டோ ஓட்ற பயல்தான் காரணமாயிருக்கும்..." என்று முணுமுணுத்தவர் வேகமாய் வீட்டை நோக்கி நடந்தார்.



சுவரில் பூமாலைக்குப் பின்னால் அகல பொட்டு வைத்திருக்கும் 'சுமங்கலி' அம்மா. கீழே, கண்ணீர் மாலையுடன் மூன்று வருடத்துக்கு முன்னால் லாரியும் பஸ்சும் மோதிக் கொண்டதில் பொட்டைத் தொலைத்து விட்ட இருபத்தியொரு வயது 'விதவை' மகள். பெயர் முல்லை.

விதவை என்ற வார்த்தைக்கு பொட்டில்லையே என்று வருந்திய தமிழ்க் கவி ஒருவன் ஒரு பொட்டுக்கு, இரண்டு பொட்டாய் வைத்தான் 'கைம்பெண்' என்று. இளமாறனோ பொட்டு வைக்க ஆசைப்பட்ட தன் மகள் மீது அனல் அள்ளி வீசினார்.

"தாலி அறுத்தவள் பூக்காரிக்கு எதிரில் போனாலே அன்னிக்கு அவள் வீட்ல அடுப்பு எரியாது. நீ என்னடான்னா பூக்காரியை நிறுத்தி நாலு முழம் பூ வாங்கியிருக்க. பூ வைச்சிக்கிடணுங்கிற ஆசை மட்டும் தானா, இல்லை..."

கோபமாய் நிமிர்ந்தாள் முல்லை.

"என்ன முறைக்கிறே... நீயாதான் பூவைச்சிக்கிட்டியா இல்லை எவனாவது வைச்சி விட்டானா..."

"வைச்சிதான் விட்டான். எவனோ இல்லை. சந்திரன். எனக்குத் தாலி கட்டப் போற நல்லவர்."

"ஒரு பொம்பளைக்கு எத்தனை தடவை தாலி கட்டறது.. ஒரு ஆம்பளை இரண்டு பொண்டாட்டி கட்டிக்கிட்டா ஊரு பாராட்டும். ஒரு பொம்பளை இரண்டு தாலி கட்டிக்கிட்டா என்ன பேசும் தெரியுமா?"

"அழுகிப் போற நாக்கு ஆயிரம் பேசும். இந்த ஊரா எனக்கு வாழ்க்கை தரப்போவுது... எனக்கு நானே ஒரு நல்ல வாழ்க்கை அமைச்சிக்கிட முடிவு செய்து விட்டேன். அப்பா என்கிற இடத்தில் இருந்து ஆசீர்வாதம் பண்ண மனசில்லா

விட்டாலும், செத்த எலியா கிணத்துத் தண்ணிக்குள்ள விழாமல் இருந்தால் சரி'' என்றாள் தீர்மானமான குரலில்.

''ஏண்டி பெத்தவனை பார்த்தா, செத்த எலி மாதிரி தெரியுதா உனக்கு. எல்லாம் அந்த ஆட்டோ ஓட்டுற பயல் கொடுக்கிற தைரியம்... ஏதோ நாலு மேடையில ஏறி பாரதி பாட்டை சொல்லிவிட்டால் பெரிய மனிதன் ஆயிடுவானா... என் கையில் சிக்கட்டும்... அவனை...''

''தூக்கணாங்குருவிக்கிட்ட சிக்கறதுக்கு அவர் ஒண்ணும் மினுக்காட்டான் பூச்சி இல்லை, சந்திரன்.''

''சந்திரனுக்கு கிரகணம் பிடிச்சாச்சி. இனி அமாவாசைதான். நீ பூ, பொட்டுன்னு பேச்செடுத்தே, உனக்கும் அந்த சந்திரனுக்கும் ஒரே நேரத்தில பாடைகட்டி நெருப்பு வைக்க தயங்க மாட்டேன். உன் முடிவை மாத்திக்க. அதுதான் உனக்கும் நல்லது. அவனுக்கும் நல்லது.''

''முடிவை அந்த ஆண்டவனே வந்தாலும் மாற்ற முடியாது.''

''என்னடி சொன்னே...'' - கோபமாய் நெருங்கி முல்லையின் தலைமுடியைப் பிடித்துத் தூக்கி, கன்னத்தில் ஓங்கி அறைந்தார். அடி தாங்காமல் சுவரில் சரிந்தாள்.

''நரிக்கு இடம் கொடுத்தா கிடைக்கு ரெண்டு ஆடு கேட்குமாம். அப்படியிருக்குது உன் கதை. வாசப்படியை தாண்ட விட்டதுதாண்டி தப்பாப் போச்சி. பிறந்த அன்னிக்கே உனக்கு கள்ளிப்பாலோ, பச்சை நெல்லோ தந்திருந்தால் ஒரு நாள் அழுகையோட முடிஞ்சி போயிருக்கும். இப்படி தலைகுனிவு வந்திருக்காது. எச்சிக்கல முண்ட, இனி வாசப்படியை தாண்டினே வெட்டி எலுமிச்ச மரத்துக்கு உரமா வைச்சிப்புடு வேன். சொல்லிப்புட்டேன். ஏய் முத்து, வீட்டுக்கு வெளியே



இவள் காலெடுத்து வைச்சா உன் முதுகுத் தோலை உரிச்சி கொடி கட்டிடுவேன். ஞாபகம் வைச்சுக்க'' என்று எச்சரிக்கும் குரலில் சொன்னார், தனது இரண்டாவது மனைவி முத்தழகியை நோக்கி.

அந்த பதினெட்டு வயது பெண்ணோ முகத்தில் எந்த வித உணர்ச்சியும் இல்லாமல் மெழுகு சிலை போல் நின்று கொண்டிருந்தாள். எரிச்சலாய் திரும்பினார் இளமாறன். இடியாய் நெஞ்சில் தாக்கியது அதிர்ச்சி. முல்லையைக் காணவில்லை.

''எங்கே போய்விட்டாள்'' வேகமாய் உள்ளறைக்குள் நுழைந்தார்.

கையில் பெட்டியுடன் வெளியே வந்தாள் முல்லை.

''எதை அள்ளி பெட்டிக்குள் அடைச்சிட்டு கிளம்பிட்டே?''

''என்னோட சந்தோசம், என்னோட துக்கம், என்னோட வலி சகலத்தையும் அள்ளி அடைச்சிட்டேன். இதயத்தை தொலைச்சிட்டு நிக்கிறவங்க வீட்டுல என்னையும் தொலைக்க நான் தயாராயில்லை. போறேன். இனி வர மாட்டேன்'' என்று சொல்லிவிட்டு வெளியே நடந்தவளின் கையிலிருந்து பெட்டியை வேகமாய் பிடுங்கி உள்ளே எறிந்தார்.

''இந்த வீட்டை விட்டு நீ வெளிய போகணும்னா ஒண்ணு நான் செத்துப் போயிடணும், இல்லை நீ செத்துப் போயிருக் கணும். ம்... உள்ளே போ'' என்று பிடரியைப் பிடித்து முல்லையை உள்ளே தள்ளினார் இளமாறன்.

தள்ளிய வேகத்தில் காலடியில் கிடந்த பெட்டியில் கால் இடறி சுவரில் மோதினாள், முல்லை. நெற்றியில் இருந்து வழிந்த இரத்தம் வெள்ளைச் சேலையை சிவப்பாக்க மயங்கிச் சரிந்தாள்.

**வா**ன மங்கையின் நெற்றியில் தங்கப் பொட்டாய் முழு நிலா. கருங்கூந்தலில் முல்லை விரிப்பாய் நட்சத்திரப் பூக்கள்.

கண்களை அகல திறந்தபடி கட்டிலில் படுத்திருந்தாள் முல்லை. அவள் காதுகள் காத்திருந்தன கடிகார ஒலிக்காக.

காத்திருந்த அந்த நேரம் வந்தது. சுவர்க்கடிகாரம் இனிமையாய் ஒலித்தது. 'ஒன்று... இரண்டு... மூன்று... பனிரெண்டு' எண்ணி முடித்தவள் பயத்துடன் எழுந்தாள். கட்டிலுக்கு அடியில் இருந்து பெட்டியை எடுத்துக்கொண்டு வெளியே வந்தாள்.

பூனை போல் நடந்து கூடத்தைக் கடந்தாள். வெளிக் கதவின் தாழ்ப்பாளை நீக்கி அகலமாய் திறந்தவள், அதிர்ந்தாள். வாசலில் நின்றுகொண்டிருந்தது ஓர் உருவம்.

அது... அது... முத்தழகி.

"பயப்படாத முல்லை. இதில் ஆயிரம் ரூபாய் இருக்கு. வைச்சுக்க... நீயாவது சந்தோசமா வாழணும்" உறை ஒன்றை நீட்டினாள் முத்தழகி.

திகைத்துப்போய் நின்றாள் முல்லை.

"காம்பவுண்டு கேட்டை திறந்து வைச்சிருக்கேன். அந்த மனிதர் விழிக்கிறதுக்குள்ள சீக்கிரமா போயிடு. இதை வாங்கிக்க. எப்பமாவது உனக்கு உதவும்." பணத்தைத் தயக்கமாய் வாங்கிக் கொண்டாள் முல்லை. கண்களில் கண்ணீர் துளிர்த்தது.

"ம்... போ. நேரமாயிடிச்சி."

தெருவில் இறங்கி வேகமாய் நடந்தாள். நான்கு தெருக்கள் சந்திக்கும் இடம் வந்ததும் நின்றாள். அதிர்ச்சி காத்திருந்தது.

வாடகைக் காரோடு தயாராய் நிற்பேன் என்று சொன்ன சந்திரனை காணவில்லை. 'இனி என்ன செய்வது' திகைத்துப் போய் நின்றவளை உரசியபடி வந்து நின்றது ஒரு வாடகை கார். கையிலும், தலையிலும் கட்டுடன் ஓட்டுநர் இருக்கையில் அமர்ந்திருந்தான் சந்திரன்.



"என்னடி வாயே திறக்க மாட்டேங்கிறே... இரு... இரு... வந்து உன்னை நிரந்தர ஊமையாக்கிடுறேன்" என்று உறுமி விட்டு, கைத்துப்பாக்கியை எடுத்து இடுப்பில் செருகிக் கொண்டு, வெளியேறினார் இளமாறன்.

அவர் போவதையே கண் இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தாள் முத்தழகி. அவள் உதட்டோரம் இரத்தம் கசிந்து உறைந்து போயிருந்தது.

நகர் எங்கும் வேட்டை நாயாய் அலைந்தார். முல்லையையும் சந்திரனையும் கண்டுபிடிக்க முடியவில்லை. கோபமாய் காவல் நிலையத்தை நோக்கி நடந்தார்.

காவல் நிலையம். எதோ எழுதிக் கொண்டிருந்த இன்ஸ்பெக்டர் அறிவழகன், காலடி ஓசையில் நிமிர்ந்தார்.

"வாங்க... உட்காருங்க... என்ன விஷயமா வந்தீங்க?"

"வணக்கம் சார். நீங்க புதுசா வந்திருக்கீங்கன்னு கேள்விப்பட்டேன். நான் இந்த ஊரில் பெரும்புள்ளி. என் பேரு இளமாறன். ஒரு புகார் கொடுக்கிறதுக்காக வந்தேன்."

"ம்... சொல்லுங்க."

"நேத்து ராத்திரி என் வீட்ல அம்பது பவுன் நகை, இருபதாயிரம் ரூபாயையும் கொள்ளையடிச்சிட்டு, என் மகள் முல்லையையும் கடத்திட்டு போயிட்டான் ஆட்டோ ஓட்ற சந்திரன். நீங்கதான் எப்படியாவது அவனை..."

"பிடிச்சிக் கொடுக்கணும்னு கேட்கிறீங்க. நான் நேத்து ராத்திரியே அவனை மடக்கிப் பிடிச்சிட்டேன்."

"எங்கே இருக்கான் அவன்?" கோபமாய் எழுந்தார் இளமாறன்.

"கோபப்படாதீங்க. உட்காருங்க. அவன் என் பாதுகாப்பில தான் இருக்கான். அவன் கை காலை உடைச்சி நடக்க விடாமல் செய்ய வேண்டியது என் பொறுப்பு. அதுக்கு முன்னால எனக்கு சில உண்மைகள் தெரிஞ்சாகணும்."

"ம்... கேளுங்க சொல்றேன்"

"உங்க மகளும் அந்த சந்திரனும் ஒருத்தரை ஒருத்தர் நேசிச்சாங்க. கல்யாணம் செய்துக்க முடிவு செய்தாங்க. அதுக்கு நீங்கள தடையா இருந்தீங்க. தடையை மீறி ஓடிப் போனவங்க என் கையில் சிக்கிக்கிட்டாங்க. சரிதானா."

"உண்மை அதுதான் சார். ஆனால் கடத்திட்டு போயிட்டா ன்னு புகாரில் குறிச்சாதானே அவன் எலும்பை முறிக்க வசதி."

"நகையும் பணமும் காணாமல் போனது?"

"அதுவும் பொய்தான். ஆயிரம் பொய் சொல்லியாவது ஒரு கல்யாணத்தை நடத்தணும்பாங்க. ஆயிரத்தொரு பொய் சொல்லியாவது இந்த கல்யாணத்தை நிறுத்தியாகணும். நீங்கதான் சார் இதுக்கு உதவி செய்யணும்" பல்லைக் காட்டினார் இளமாறன்.

"நீங்க கொடுக்க வந்த புகார் உண்மை இல்லைன்னு நீங்களே சொல்லிட்டீங்க. இனி கவலையில்லை. நானே முல்லை-சந்திரன் கல்யாணத்தை ஜாம் ஜாம்னு நடத்தி வைப்பேன்."

"இன்ஸ்பெக்டர்...யோசிச்சிதான் பேசுறீங்களா? நான் இந்த ஊரில்..."

"பெரும்புள்ளி இல்லை, கரும்புள்ளி. எழுந்திருய்யா. சாதி சம்பிரதாயம்னு நீங்கள்லாம் ஓடற ஓட்டம், கானல் மான் ஓட்டம்தான். பொண்டாட்டி செத்தா ஆம்பிளை இன்னொருத்தியை கட்டிக்கலாம். கணவன் செத்தா பொண்ணு



மட்டும் காலம் முழுசும் உட்கார்ந்து அழணும் அப்படித்தானே! தேனீக்கள் பாடறதும்; தென்றல் உலாத்துறதும்; நல்ல வயிறு பசிக்கிறதும் எப்படி இயல்போ, அப்படித் தான்யா சின்ன வயசுப் பொண்ணுக்கு ஆண் துணை தேவைங்கிறதும். நான் சொல்றது புரியுதாய்யா?" இளமாறன் மவுனமாக இருந்தார்.

"இருக்கிற முடியில் பாதி முடி நரைச்சி போயாச்சி. நீ பதினெட்டு வயசு பொண்ணை இரண்டாவது கல்யாணம் பண்ணியிருக்கே. சாகப் போற வயசில நீ இரண்டாம் கல்யாணம் பண்ணிக்கலாம். வாழப் போற வயசில் அந்த சின்னப் பொண்ணு திருமணம் செய்ய முடிவு செய்தால் அது தப்பா?"- இன்ஸ்பெக்டர் அறிவழகன் ஆத்திரமாய் கேட்டார்.

இளமாறன் கண்கள் தரை பார்த்தன.

"உன்னை மாதிரி மனிதர்களுக்கு நல்லது கெட்டது தெரியாது. இன்னிக்கு நம்ம ஊரு திருமணப் பதிவு அலுவலகத்தில் வைச்சி சந்திரனுக்கும் முல்லைக்கும் திருமணம் நடக்கப் போவுது. நீ அந்தப் பக்கம் வர வேண்டாம்" என்றார் அறிவழகன் புன்னகையுடன்.

"அதையும் பார்த்திடறேன்" என்று சொல்லிவிட்டு ஆத்திரத்துடன் வாசலை நோக்கி நடந்தார் இளமாறன்.

"அதை உன்னால பார்க்க முடியாது. ஏன்னா நேத்து முன்தினம் சந்திரனை அடியாட்களை வைச்சி அடிச்சி காயப்படுத்தியிருக்கீங்க. அவர் புகார் கொடுத்திருக்காரு. சந்திரனை கொலை செய்ய முயற்சி செய்ததற்காக உன்னை கைது செய்றேன்" என்றார் இன்ஸ்பெக்டர் அறிவழகன்.

வெளியே ஓட முயன்றார் இளமாறன்.

அசையவிடாமல் பிடித்துக் கொண்டனர் இரண்டு காவலர்கள்.

***– ராணி, அக்டோபர் 1990***

# 3

# வெள்ளை காக்கைகளும் கறுப்புப் பருத்தியும்

*(இலக்கியப் பீடம் சிறுகதைப் போட்டியில் பரிசு பெற்ற கதை.)

*இச் சிறுகதை ஒரு பருத்தி விவசாயி படுகின்ற பாடுகளைத் தத்ரூபமாக படம் பிடித்துக் காட்டுகின்ற ஓர் அற்புதமான — படைப்பு. இக்கதையின் நாயகன் வெயிலான் அதிகம் பேசவில்லை.*

*கதை தெளிவாக பேசுகின்றது.*

*வீடு முழுவதும் பருத்தி உதறி போடப்பட்டிருப்பதை, 'வெண் மேகங்களைத் துண்டு துண்டாய் பிய்த்து மண் குடிசைக்குள் போட்டு வைத்திருப்பது போலிருந்தது' என்றும்; 'நெறை மாசப் புள்ளைதாச்சி போல பஞ்சு பொதி சுமந்த லாரி' என்றும் கூறியிருப்பவை அருமையான உவமைகள்.*

*தாட்டு வாங்குவதில் தொடங்கி பருத்தியை கமிஷன் கடையில் விற்பது வரையில் வெயிலான் ஏமாற்றப்படுகின்றான். மகமை, கூலி, வரி, லாரி வாடகை — இப்படி ஏகப்பட்ட சுரண்டல்கள். இதற்கிடையில் வெயிலான் உள்ளத்தில் எத்தனையோ கனவுகள். பருத்தி விற்ற பணத்தில் சின்னவனுக்கு மொட்டை போட சித்தூருக்குப் போகணும்; மனைவியின் தாலியை சொசைட்டியிலிருந்து திருப்பணும்; மனைவிக்கு ஒரு சேலை எடுக்கணும்... ஆனால் இறுதியில் அவையனைத்தும் கனவுகளாய் கரைந்து கருவழிகின்றன. இக்கதையில் வெயிலான் உட்பட அத்தனை பாத்திரங்களும் யதார்த்தமானவை. இது வெறும் கதை அல்ல; உழைப்பாளர் வாழ்வின் நிஜம்.*

*- கவிஞர் தியாகு.*



மண் சுவரில் தொங்கிக் கொண்டிருந்த சிம்னி விளக்கு அணைந்து போயிற்று.

வெயிலான் விழித்துக் கொண்டான். குடிசைக்குள் இருட்டு இறுக்கமாய் இருந்தது.

கைக்கு எட்டும் தூரத்தில் மனைவியும் குழந்தைகளும் படுத்திருந்தனர். குறட்டை ஒலி மட்டும்தான் கேட்டது. உருவம் தெரியவில்லை. காசு இல்லையென்றால் விளக்குக்குகூட மண்எண்ணெய் இல்லை என்று கையை விரித்துவிட்டார் தங்கவேல் நாடார்.

பனங்கம்பு கதவின் இடைவெளியை மறைத்திருந்த கிழிந்த சாக்கையும் மீறி வடகிழக்கு பருவக்காற்று உள்ளே நுழைந்து இம்சித்தது. லுங்கியை இழுத்து போர்த்தினான். நீளமாய் கிழிந்தது கிழிந்த இடத்திலேயே. இருந்த ஒரே ஒரு லுங்கியும் கிழிய ஆரம்பித்து விட்டது. எழுந்து அமர்ந்தான் உறக்கத்துடன்.

'இன்று எப்படியாவது பருத்தியை ராஜபாளையத்துக்கு அனுப்பிவிட வேண்டும். சின்னவனுக்கு மொட்டை போட சித்தூருக்குப் போவதற்கு முன்னால் தங்கமாரியின் தங்கத் தாலியை சொசைட்டியிலிருந்து திருப்ப வேண்டும்... பருத்தி விற்ற பணத்தில் தங்கமாரிக்கு ஒரு சேலை எடுக்க வேண்டும்.'

-பனங்கதவை கட்டியிருந்த நாரை அவிழ்த்தான்.

வெளியேயிருந்து ஓடி வந்த காற்று முகத்தைத் தாக்கியது. தெருவுக்கு வந்து கிழக்கே பார்த்தான்.

வானம் இரக்கம் இல்லாமல் வெளுத்துக் கொண்டிருந்தது.

'இப்பொழுது வயலுக்கு போனால் மதியத்துக்கு திரும்பி விடலாம்'

-வேகமாய் குடிசைக்குள் நுழைந்து குப்புற படுத்திருந்த தங்கமாரியை அசைத்தான்.

"ம்"

"பருத்தி எடுக்கப் போறேன். கஞ்சி கொண்டு வந்திடு."

"ம்"

-புரண்டு படுத்தாள் நேற்று வயல்வேலை செய்த களைப்பில்.

வெளியே வந்து வேக நடை நடந்தான் பருத்தி வயலை நோக்கி. முதுகுக்கு பின்னாலிருந்து 'கொக்கரக்கோ' என்றது சேவல் ஒன்று.

வெயிலான் பருத்தி வயலை தொட்டபோது-

பனை மரங்களுக்கிடையிலிருந்து எட்டிப் பார்த்தான் காலை சூரியன். வயல் வெளியில் வெள்ளைப் பூக்களாய் சிரித்தன வெடித்த பருத்திக்காய்கள்.



'மஞ்சக்குளிச்சி மாக்குளிச்சி மலத்திகிட்டு நிக்கும்போது மாட்டேன்னு சொன்னீரே... புள்ளை பெத்து பொளந்து கெடக்கும்போது புடுங்க வந்தீரே'

-நாச்சியார் பாட்டி பருத்திக்கு சொன்ன விடுகதை நினைவில் மோதியது.

உதடுகளை புன்னகை அசைத்தது. பாட்டி செத்து இருபத்தேழு வருடங்கள் ஓடி...

"இப்படி மசமசன்னு நின்னுக்கிட்டிருந்தா பருத்தி எப்படி எடுக்கிறது..."

-வாய்க்குள் முணுமுணுத்துக் கொண்டே வயலுக்குள் இறங்கினான். வேகவேகமாய் பருத்தியைப் பிடுங்கி கோணியில் சேகரித்தான். வெயிலான் வேகத்துக்கு ஈடு கொடுக்க முடியாமல் விரல்கள் தடுமாறின. நகக்கண்கள் வலியில் விண் விண் என்று தெறித்தன. பருத்திப் பூச்சிகள் கடித்த இடத்தில் 'பொசு... பொசு' என்று அரித்தது. உதடுகள் உலர்ந்து போயிருந்தன. வயிறு பசி பசி என்றது. சூரியன் உயரத்துக்கு வந்திருந்தான்.

கழுத்து வியர்வையை துடைத்தபடி 'மஞ்சனத்தி' மரத்தைப் பார்த்தான். கையில் தூக்குச்சட்டியுடன் தங்க மாரியம்மாள் நின்று கொண்டிருப்பது தெரிந்தது. கோணியை வரப்பில் போட்டுவிட்டு மரத்தை நோக்கி நடந்தான்.

கையில் வாழை இலை வைத்திருந்தாள். முகம் வாடிக் கிடந்தது.

"என்ன புள்ள?"

"பூதத்தான் குளத்து பருத்தியாவாரி இன்னிக்கு நடு வீட்டுக்குள்ள வந்து நிக்கிறான். அவனுக்கு குடுக்க வேண்டிய ஆயிரம் ரூபாயை குடுத்திடுங்க."

"ராஜபாளையத்துக்கு போயிட்டு வந்து கொடுத்திடலாம்"

-இருவரும் வேறு எதுவும் பேசவில்லை.

பழைய சோற்றை அவசர அவசரமாய் விழுங்கினான் வான்கோழி போல.

"பருத்தி அக்க நானும் நிக்கட்டுமா..."

"நீ போயி வீட்டை பெருக்கி கிருக்கி வை. நா சொன்னேன்னு பூங்குளத்தா பேரனை பருத்தி தாட்டு அமுக்கிறதுக்கு மத்தியானம் வரச்சொல்லு"

-கை உதறி எழுந்து கொண்டான் வெயிலான்.

மீண்டும் வேகவேகமாய் வெடித்த பருத்தியை சேகரிக்கத் தொடங்கினான்.

'இன்னும் பருத்தி எடுக்காம அஞ்சி பாத்தி கிடக்குதே... எப்படியும்... சூரியன் தலைக்கு மேல் வந்திருந்தான்.'

'வெடிச்ச பருத்தியை போட்டுட்டுப் போனா மேக்காத்து அடிச்சிட்டு போயிடுமே...'

-பருத்தி எடுத்து முடித்து நிமிரும்போது மணி ஒன்றை தாண்டியிருந்தது.

தலையில் பருத்தி சாக்கை தூக்கி வைத்துக் கொண்டு நடக்க ஆரம்பித்தான். தகதகத்த சூரியனின் வெப்பம் தாக்கியது. குளத்தின் குறுக்கே இறங்கினான். செருப்பு இல்லாத கால்கள் சிரமப்பட்டது.

மேடுபள்ளமாய் வெடித்துக் கிடந்த குளம் காலை பதம் பார்த்தது. வியர்வை முதுகை நனைத்தது. நடையில் வேகம் காட்டினான். வீட்டைத் தொட்டபோது வியர்வையில் நனைந்து



போயிருந்தான். பருத்தி மூட்டையை திண்ணையில் போட்டான் நீண்ட பெருமூச்சுடன்.

"பூங்குளத்தா பேரன் வந்து காத்திருந்துவிட்டு போயிட்டான்."

-சமையலறையிலிருந்து தங்கமாரி குரல் மட்டும் கேட்டது.

வீட்டுக்குள் நுழைந்து அடுக்கி வைத்திருந்த பருத்தி மூடைகளை எண்ணினான்.

"ஆறு குவிண்டால் இருக்கும். ஆறு 'தாட்டு' வாங்க வேண்டும்... பூங்குளத்தா பேரனை கூட்டிட்டு வரணும். ராஜபாளையம் செலவுக்கு வேணும்..."

-தங்கவேல் நாடாரின் நினைவு வந்தது.

அடுத்த ஐந்தாவது நிமிடம் கரைந்த பின் தங்கவேல் நாடார் வாசலுக்கு வந்தார்.

"இதில ஐநூறு ரூபாய் இருக்குது. பருத்தி வித்து திருப்பித் தரும்போது ஐநூற்று ஐம்பதாய் திருப்பித் தந்திடணும்... புரிஞ்சுதா"

கோயில் மாடாய் தலையாட்டி வைத்தான் வெயிலான்.

தெருவில் இறங்கி 'தாட்டு' கடையை நோக்கி நடந்தான் ரூபாயை இடுப்பில் செருகியபடி எதிரில் வந்தார் லாரி புரோக்கர் நல்லையா சீமான்.

"என்ன வெயிலான்.. உன் பருத்தியை இன்னிக்கு ஏத்திடலாமா?"

"ஏத்திடலாங்க."

"எத்தனை தாட்டு சேரும்?"

"ஆறு தாட்டு இருக்கலாம்."

"ம். லாரி சாயங்காலம் வந்திடும். அதுக்குள்ள தாட்டை போட்டு வைச்சிடு. லாரி வந்த பெறவு தாட்டை அடுக்கிட்டு கிடக்கக் கூடாது... சொல்லிபுட்டேன்..." - என்றவர் சைக்கிள் ப்ரேக்கிட்டு நின்றது எதிரில் வந்த பெண்ணைப் பார்த்ததும்.

வேகமாய் நடந்து தாட்டுக்கடைக்குள் நுழைந்தான். தாட்டுக்கடை முதலாளி முத்தையாபிள்ளை சாக்குகளை தூக்கி விசிறிக் கொண்டிருந்தார். ஒன்றுக்கும் உதவாத சாக்குகள். நைந்து போன கந்தல் சாக்குகள். ரைஸ்மில் காரர்கள் ஆகாதென்று கழித்துப்போட்ட சாக்குகள். ஒரு சாக்கு மூன்று ரூபாய் இருக்கும். இரண்டு சாக்குகளை கிழித்து ஒன்றாய் தைத்து பையாக்கினால் 'தாட்டு' உருவம் வரும். நான்கைந்து பேர் கவனமாய் தாட்டு தைத்துக் கொண்டிருந்தார்கள்.

"வெயிலானுக்கு என்ன வேணும்..?"

"நூறு தாட்டு வேணும்"

-வெயிலானுக்கு பின்னாலிருந்து குரல் வந்தது.

திரும்பிப் பார்த்தான்.

பூதத்தான் குளத்து பருத்தி வியாபாரி நின்று கொண்டிருந்தார் பெரிய தொப்பையுடன். வெயிலான் அருகில் வந்தார் கோபமாய் நடந்து.

"தாட்டு வாங்க வந்தியா... பருத்தியை ராஜபாளையத்துக்கு அனுப்பப் போறியா... என்னதும் செய்து தொலை. பொதன் கிழமை ரூபாய் என் கைக்கு வந்திருக்கணும். இல்லை சந்தி



சிரிக்க வைச்சிப்புடுவேன். ராஜபாண்டி ரூபா மட்டும் இனிக்குதாக்கும்..."

-பதில் பேச முடியாமல் நின்று கொண்டிருந்தான் வெயிலான் வேப்பங்காயை கடித்தவன் போல. அவசர அவரசமாய் நூறு தாட்டை சுருட்டி தைத்து பூதத்தான் குளத்து பருத்தி வியாபாரியிடம் கொடுத்து அனுப்பினார் கடைக்காரர் பணம் எதுவும் வாங்காமல்.

"பதினெட்டுதானா?"

"பதினெட்டுதான்"

-வியாபாரி நகர்ந்ததும் வெயிலான் அருகில் வந்தார் தாட்டுக்கடைக்காரர்.

"யாவாரிகிட்டே பணம் வாங்கிட்டு எதுக்காக பருத்தியை ராஜபாளையத்துக்கு அனுப்புறே..."

"தவுடன் வீட்ல நாலு தாட்டு பருத்தியை மூணு தாட்டுன்னு எடையில ஏமாத்தி அள்ளி போயிட்டாராம்."

"நீ பாத்தியா...?"

"பேசிகிட்டாங்க"

"கூறுகெட்டத்தனமா பேசாத. எதாவது சவுத்து மூதிங்க சொல்றதை நம்பிகிட்டு. உனக்கு எத்தனை தாட்டு வேணும்..."

"ஆறு"

-என்றான் தயக்கத்துடன்.

"ஆறா... ஆறு இருபத்தைஞ்சி நூற்று ஐம்பது எடு"

"நூற்று ஐம்பதா..." -வாய் பிளந்தான் சங்கடத்துடன்.

"ஒரு தாட்டு இருபத்தைஞ்சினா... ஆறு தாட்டுக்கு."

"என்னங்க... யாவாரிகிட்ட பதினெட்டுதான சொன்னீங்க..."

"ம்... பதினெட்டுதான். மூவாயிரம் தாட்டு வாங்குவறனும் நீயும் ஒன்னா... விவசாயிக்கு இருபத்தைஞ்சி ரூபாதான். இஷ்டமிருந்தா வாங்கு... இல்லை போய்கிட்டேயிரு."

-மௌனமாய் நூற்று ஐம்பது ரூபாயை எண்ணிக் கொடுத்துவிட்டு ஆறு தாட்டை வாங்கி தோளில் வைத்தபடி வீட்டை நோக்கி நடந்தான் கவலையுடன்.

வீடு முழுவதும் பருத்தியை சாக்குகளிலிருந்து உதறி போட்டிருந்தாள் தங்கமாரி. வெள்ளை பூக்குவியலாய் பார்க்க அழகாய் இருந்தது. வெண் மேகங்களை துண்டு துண்டாய் பிய்த்து மண் குடிசைக்குள் போட்டு வைத்திருப்பது போலிருந்தது வெயிலானுக்கு. தங்கமாரி, வெயிலான், மகன்கள், மகள், பூங்குளத்தா பேரன் - ஆறு பேரும் சேர்ந்து ஆறு தட்டுகளில் பருத்தியை அள்ளி அடுக்கி உருண்டையாக்கி, தாட்டுகளின் வாயை மூடி சணலால் தைத்தனர். பருத்தி ஆறு உருண்டைகளாய் மாறி போயிருந்தது. பந்து போல உருட்டி வீட்டுக்கு வெளியே தள்ளினான் வெயிலான்.

அதற்குள் இருட்டாகியிருந்தது.

அந்த நிமிடம்தான் மத்தியானம் சாப்பிடாதது நினைவில் வந்தது. முன்னால் வந்து நின்றான் பூங்குளத்தா பேரன்.

"நூறு ரூபாய் குடுங்க."

"என்னது... நூறு ரூபாயா..."

"நூறு ரூபாய்தான். ஒரு தாட்டு பருத்தி அமுக்கினாலும் நூறு ரூபாய்தான். நாப்பது தட்டு பருத்தி அடுக்கினாலும் நூறுரூபாய்தான்"



-மனதுக்குள் முனகியபடி பத்து பத்து ரூபாய் தாள்களை எண்ணிக் கொடுத்தான். வாசலில் வந்து நின்றது லாரி. முகப்பு 'செல்வ விநாயகர்' என்றது.

நெறைமாச புள்ளைதாச்சிபோல பஞ்சுபொதி சுமந்த லாரி நின்று கொண்டிருந்தது.

"லாரியில் நம்ம பருத்தியை ஏத்த இடம் எங்க இருக்குது..."

-லாரியிலிருந்து குதித்து இறங்கினர் தாட்டு சுமக்கும் இளவட்டங்கள்.

ஆறு தாட்டுகளையும் பந்துபோல உருட்டி லாரியின் கடைசி அட்டியில் ஏற்றி கயிற்றால் வரிந்து கட்டினார்கள் நிதானமாய்.

'போகிற வழியில் பின்னாலிருந்து விழுந்து விட்டால்...'

-எங்கிருந்தோ வந்து சேர்ந்திருந்தார் லாரி புரோக்கர் நல்லையா சீமான்.

"எலேய்... ஆக்கங்கெட்ட மூதிகளா... விலாசம் எழுதாம வெயிலான் பருத்தியை மேல ஏத்தி வைச்சிருக்கீங்க... தாட்டு தொலைஞ்சு போனா எந்த கூமுட்டை வந்து தெண்டம் கட்டும்...சொல்லுங்க. அந்த பாட்டியை எடுங்கல... வெயிலான் என்ன விலாசம் போடணும்..."

"என் மொவன் சுப்பிரமணியன் பேரை போடுங்க... ராசிகார பயமவன்... பச்சைத் தண்ணி பாட்டி தட்டு சீட்டுல அவன் பேரு முதல்ல விழுந்துரும்"

-ஒரு இளவட்டம் மை பாட்டிலை தூக்கிக் கொண்டு ஓடி வந்தான்.

"வென்னா சுனா ஆறுன்னு எழுது"

-வெ.சு. ஆறு என்று ஆறு தாட்டிலும் எழுதப்பட்டது அவசர அவசரமாய். தயங்கி தயங்கி லாரி புரோக்கர் அருகில் சென்றான்.

"லாரி வாடகை... ஏத்து கூலி..."

-குரலை சிறிதாக்கி கேட்டான்.

"புதுசா என்னத்தை சொல்லப் போறேன். தாட்டுக்கு வாடகை நாப்பது ரூபா. ஏத்துகூலி இருபது ரூபா."

"ஏத்து கூலி பதினைஞ்சி ரூபாதானே..."

"மொத்தமா ஏத்துற யாவாரிக்கு பதினைஞ்சி ரூபா. சில்லறையா ஏத்துற விவசாயிக்கு இருபது ரூபா. வெயிலான் இங்க பக்கத்தில வா."

-காரணம் புரியாமல் அருகில் சென்றான்.

"ராஜபாளையத்துக்கு பஸ்ஸில போனா ஐம்பது ரூபா ஆகும். லாரியில போனா ஐம்பது ரூபா மிச்சம்... போறியா..."

"போயிட்றேங்க." - என்றான் அவசர அவசரமாய்.

"போயி வேட்டியை மாத்திட்டு வா"

-வேகமாய் வீட்டுக்குள் நுழைந்து தகர பெட்டியை உருட்டி போன அம்மன் கொடைக்கு திசையன் விளை தங்கச்சி எடுத்துக் கொடுத்த வேட்டியை எடுத்துக் கட்டிக் கொண்டான். முதுகுக்கு பின்னால் வந்து நின்றாள் தங்கமாரி.

"ஒரு வாய் சாப்பிட்டுட்டு போங்களேன்... மத்தியானமும் சாப்பிடல..."



"நமக்காக லாரி காத்து கிடக்குமா... போற வழியில பாத்துக்கலாம்"

-மேல் துண்டை மடித்து மஞ்சள் பைக்குள் வைத்து கையில் எடுத்துக் கொண்டான்.

"வெயிலான் வீட்டுக்குள்ள என்ன செய்றே..."

"இதோ வந்துட்டேங்க.

-வேட்டி தடுக்க ஓடிப்போய் லாரியில் ஏறிக் கொண்டான் வெயிலான். சந்தோஷ முகங்களுடன் லாரியை பார்த்தபடி நின்றனர் தங்கமாரியும் குழந்தைகளும்.

பஞ்சுபொதி சுமந்த லாரி தன் வெளிச்ச கத்திகளை வீசி இருட்டை கிழித்துக் கொண்டு வேகமாய் ஓடியது. டிரைவரும் கிளீனரும் சினேகா காதல் குறித்து தீவிரமாய் பேசிக் கொண்டிருந்தார்கள். பசியுடன் தூங்கிப் போனான் வெயிலான்.

விழித்துப் பார்த்தபோது லாரி நின்று கொண்டிருந்தது. டிரைவரையும் கிளீனரையும் காணவில்லை. வெளியே எட்டிப் பார்த்தான். லாரிக்கு பின்னாலிருந்து இருவரும் வந்து கொண்டிருந்தனர்.

"கடைசி அட்டியிலிருந்த மூணு தாட்டை வெட்டி பருத்தியை அள்ளி சின்னராசு கடையில போட்டிருக்கேன். இருபது கிலோ இருக்கும்"

-கிளீனர் டிரைவரிடம் சொன்னது வெயிலான் காதில் விழவில்லை.

ஆயாசத்துடன் மீண்டும் கண்களை மூடிக்கொண்டான். லாரி புறப்பட்டது உறுமியபடி. அரைமணி நேரத்தில் ஓரங்கட்டி நிறுத்தப்பட்டது.

"அண்ணாச்சி இறங்குங்க. சங்கரன்கோவில் பிரியாணி நல்லாயிருக்கும். சாப்பிட்டுட்டு போயிடலாம். பசி சிறுகுடலை பெருங்குடல் திங்குது.. ம்.. இறங்குங்க."

-வெயிலானை உலுக்கி லாரியிலிருந்து இறக்கி விட்டார் டிரைவர்.

எதிரில் வண்ண விளக்குகளுடன் மினுக்கியது அந்த ஹோட்டல். வெயிலானை ஏறக்குறைய இழுத்துக் கொண்டு செல்வதுபோல அந்த ஹோட்டலுக்குள் அழைத்துச் சென்றனர் டிரைவரும் கிளீனரும்.

"அண்ணாச்சி உங்களுக்கு என்ன வேணும்...?"

"ஒரே ஒரு தோசை போதும்"

-என்றான் வெயிலான் வயிற்றுப் பசியுடன்.

வெயிலான் ஒரே ஒரு தோசையை தின்று முடிப்பதற்குள் ஒரு தட்டு மட்டன் பிரியாணியும் சிக்கன் வறுவலும் இரண்டு சப்பாத்தியும் சாப்பிட்டு முடித்திருந்தனர்.

"அண்ணாச்சி சாப்பிட்டத்துக்கு பணத்தை கொடுத்திட்டு லாரிக்கு வந்திடுங்க" -பதிலை எதிர்பார்க்காமல் எழுந்து வெளியே சென்றிருந்தார் டிரைவர். ஒரு நிமிடம் திகைத்து போனான் வெயிலான்.

"நூற்றி முப்பத்தேழு ரூபா"

"பஸ்ஸில வந்திருந்தா ஐம்பது ரூபாதான் ஆகியிருக்கும்.. லாரியில வந்தது.."

-காசை கொடுத்துவிட்டு மௌனமாய் நடந்தான் வெயிலான் லாரியை நோக்கி.



லாரி ராஜபாளையத்தைத் தொட்டபோது நள்ளிரவாகியிருந்தது. அந்த பருத்தி கமிஷன் கடை விளக்குகள் அவசரமாய் விழித்துக் கொண்டன.

'ஆடாத்து' ஆட்கள் லாரியிலிருந்து தாட்டுக்களை அலுப்புடன் இறக்கி கடைக்குள் கொண்டு போய் 'அட்டி' போட்டனர். அவர்கள் கை கொக்கி இழுத்த இழுப்பில் தாட்டு கிழிந்து பருத்தி வழியெங்கும் சிந்தியது.

மண்ணில் கிடந்த பருத்தியை ஒன்றுவிடாமல் பொறுக்கி ஒரு கூடையில் சேகரித்து கடையின் ஒரு மூலையில் கொண்டு போய் கொட்டினான் கடைப்பையன்.

வெயிலானுக்கு பாய் ஒன்று கொடுக்கப்பட்டது. விவசாயிகள் வரிசையாய் படுத்துக் கிடந்தார்கள் கொசு கடிப்பது தெரியாமல். அவர்கள் சுவாசத்தில் சாராய நெடி வீசிற்று.

வெயிலான் பாயை விரித்து, மஞ்சள் பையை தலைக்கு வைத்து படுத்துக் கொண்டான். கொசு உறங்க விடாமல் இம்சித்தது. அப்படியும் தூங்கிப் போனான். விழித்தபோது விடிந்து போயிருந்தது.

எங்கோ தேடிப் போய் இட்லி சாப்பிட்டு விட்டு வந்தான். ஒன்பது மணிக்கு கணக்குப் பிள்ளை வந்தார்.

வெயிலான் அருகில் போய் ஊர் பேர் சொன்னான்.

தலையசைத்துக் கொண்டார்.

பணம் வருவதும் போவதுமாய் இருந்தது.

சக விவசாயிகள் சொல்லி தெரிந்து கொண்டான் மாலையில் பருத்தியை வாங்க மில் முதலாளிகள் வருவார்களென்று.

மத்தியானம் சாப்பிட்டுவிட்டு வந்து அமர்ந்து கொண்டான்.

கடையைத்தேடி சுக்கு காபி, வேர்க்கடலை, பணியாரம், அச்சு முறுக்கு என்று வந்து கொண்டேயிருந்தது. பொழுது போக வாங்கி சாப்பிட்டான்.

தங்கவேல் நாடார் தந்த ரூபாயில் நாப்பத்தேழு ரூபாய்தான் மீதமிருந்தது.

மாலையில் கமிஷன் கடை முதலாளி வந்தார், வெள்ளையும் சொள்ளையுமாய். அவருடைய உதடுகளில் புன்னகை தொங்கிக் கொண்டிருந்தது. வெயிலானுக்கு 'வணக்கம்' போட்டார்.

அதே நேரம் –

எங்கிருந்தோ பூதத்தான் குளத்து பருத்தி யாவாரியும் அங்கு சேர்ந்திருந்தார். அவருக்கு வரவேற்பு பலமாயிருந்தது.

நீல நிற காரில் மில் முதலாளி வந்து இறங்கினார். இரண்டு முதலாளிகளும் பாயில் அமர்ந்து கொண்டனர் எதிர் எதிரே. இருவருக்கும் இடையில் இரண்டு கிலோ அளவில் ஒவ்வொரு தாட்டியிலிருந்தும் வெட்டி பருத்தி எடுக்கப்பட்டு வைக்கப் பட்டது. மில் முதலாளி பருத்தியை ஆராய்ந்தார். இறுதியில் மாட்டுச் சந்தையில் மாடுகளுக்கு விலை பேசுவது போல - டர்க்கி டவலுக்கு அடியில் விரல்களால் பேசப்பட்டது பருத்தி விலை.

பூதத்தான் குளத்து பருத்தி வியாபாரி பருத்தி ஒரு குவிண்டால் விலை இரண்டாயிரத்து பதினாறு ரூபாய் என்று எழுதப்பட்டது. மில் முதலாளி எழுந்து கொண்டார்.

"இன்னிக்கு போதும் விலை அதிகமாயிடுச்சி."



-அவரை இழுத்துக் கொண்டு அடுக்கியிருந்த தாட்டுக்கு பின்னால் சென்றார் கடைக்காரர்.

"இடையில எழுந்து போனா எப்பிடி... இனி விவசாயி பருத்திதான். நூறு ரூபாய் குறைச்சி எழுதிக்குவோம். எடையில ஒரு கிலோ அடிச்சி தர்றேன்."

-பேரம் முடிந்ததும் மீண்டும் தொடர்ந்து மாட்டு வியாபாரம்.

வரிசையில் வெயிலான் பருத்தியும் வந்தது.

ஆயிரத்து தொள்ளாயிரத்து முப்பது ரூபாய் என்று எழுதப்பட்டது. விலை குறைவுக்குக் காரணம் எம் சி பைவ் பருத்தியில் எல் ஆர் இ கலந்து பயிர் செய்யப்பட்டிருக்கிறது. கவலையுடன் சுவரில் சரிந்து அமர்ந்து விட்டான் வெயிலான்.

அந்த இடைவெளியில் வெயிலான் தாட்டில் இருந்து எடுத்துவரப்பட்ட 'வெட்டு' பருத்தி மீண்டும் தாட்டில் திணிக்கப் படாமல் கடை ஆட்களால் களவு போனது. அறுபத்தேழு நிமிடம் கரைந்ததும்-

ஆறு தாட்டையும் எடை போட்டு, ஐந்து தாட்டு நாப்பத்தி மூணு கிலோ - பத்தாயிரத்து எண்பது ரூபாய் என்று கையில் கொடுத்தார்கள்.

மகமை என்று பணம் எடுத்திருந்தார்கள்.

கூலி என்று பணம் எடுத்திருந்தார்கள்.

வரிக்கு என்று பணம் எடுத்திருந்தார்கள்.

"லாரி வாடகை எவ்வளவு போட்டிருக்குது..?"

"தாட்டுக்கு அறுபது ரூபாய்"

''பாவி மனுஷன் நாப்பது ரூபாய் சொன்னாரே...''

-பணத்தை 'அண்டர் டிராயரில்' பத்திரப்படுத்திக் கொண்டு வெளியே வந்தான். சேர்ந்த விவசாயிகளுடன் ஓட்டமும் நடையுமாய் - ராஜபாளையம் பஸ் ஸ்டாண்ட் வந்து சேர்ந்தான்.

அன்று திருவில்லிப்புத்தூர் கோயிலில் ஏதோ விசேஷம் இருந்ததால் திருநெல்வேலிக்கு திரும்பிச் செல்கிற பஸ்களில் கூட்டம் நிரம்பி வழிந்தது.

இரண்டு பஸ்களை தவறவிட்டு-

மூன்றாவது வந்த பஸ்ஸில்தான் இடம் கிடைத்தது.

முண்டியடித்து இடித்து தள்ளி ஒரு வழியாய் உட்கார இடம் கிடைத்துவிட்டது. தங்கவேல் நாடார் தந்த ஐநூறு ரூபாயில் - டிக்கெட் எடுத்தது போக வெறும் பத்தொன்பது ரூபாய்தான் கையில் இருந்தது. வண்டி புறப்பட்டது.

கவலை வந்து உட்கார்ந்து கொண்டது.

'பருத்தி யாவாரிக்கு ஆயிரம் கொடுக்கணும்... தங்கவேல் நாடாருக்கு ஐநூற்று ஐம்பது. சொசைட்டியில் அடகு வைச்ச தங்கமாரி தாலியைத் திருப்பணும்... தீபாவளிக்கு தங்கமாரிக்கும் புள்ளைங்களுக்கும் துணி எடுக்கணும்... என்ன செய்வது...'

-அப்படியே சரிந்து தூங்கிப் போனான் வெயிலான்.

விழித்துப் பார்த்தபோது திருநெல்வேலி வந்திருந்தது.

இறங்கும்போதும் இடித்துக் கொண்டுதான் இறங்க வேண்டியிருந்தது. உள் கால் சட்டையை தடவிப் பார்த்தான். பணத்தைக் காணவில்லை.

# 4

# இந்துவதனா

(*தேவி வார இதழ் நடத்திய சிறுகதைப் போட்டியில் பரிசு பெற்ற கதை.)

*பெண்களுக்கு எதிராக உலகம் பல்வேறு விதமான கொடுமைகளை இழைத்திருக்கிறது. பெண்ணடிமைத் தனம் மகா மோசமானது.*

*'பெண்ணிற் பெருந்தக்க யாவுள...?' என்று வினாக் கணை தொடுத்தார் வள்ளுவப் பேராசான். மூட மனிதர்கள் நல்லோர் கருத்துகளை உள்வாங்காமல், மூளை மழுங்கிப் போய், எண்ணற்ற வன்கொடுமைகளைச் செய்து, நமை ஈன்ற தாய் குலத்திற்கு பெருங்கேடு விளைவித்த வெட்கக் கேடினை யாருமே மறுக்க முடியாவண்ணம் வரலாறு பதிவு செய்து வைத்திருக்கிறது. அவற்றில் மிக மோசமான பதிவு 'ஸதி மாதா' என்னும் பெயரில், கணவனை இழந்த பெண்களைக் கணவனின் எரி சிதையில் தள்ளிச் சாம்பலாக்குவது. வெந்து துடிக்கும் அந்த பெண்ணின் மனம் இந்த மானுடத்தை - எப்படியெல்லாம் சபிக்கும் என்கிற பிரக்ஞையற்ற ஈனச் செயலே இது. ரூப் கன்வர் என்கிற வட இந்தியப் பெண்ணுக்கு ஒரு சில ஆண்டுகள்*

*முன்பு இக்கொடுமை நிகழ்ந்த போது, இந்திய சமுதாயமே துடித்தெழுந்து எதிர்க்குரல் எழுப்பியது. இது போன்ற ஒரு கொடிய சம்பவத்தை மையமாக்கி, இக்கதை எழுதப் பட்டுள்ளது. 'இந்துவதனா' என்கிற இளம்பெண் தன் அண்ணியை உடன் கட்டை ஏறும் கொடுமையிலிருந்து எப்படி மீட்கிறாள் என்பதை அரிய வரலாற்று ஆவணம் போல் விவரிக்கிறார் மதுரா.*

*துணிச்சலான எழுத்து.*

*பாராட்டப்பட வேண்டிய சிறுகதை இது.*

*- எழுத்தாளர் கௌதம நீலாம்பரன்.*

ஆயிரத்து எண்ணூற்று ஐம்பத்தொன்பதாம் வருடத்து மார்கழி மாத கடைசி இரவு சின்ன தூறலுடன் ஆரம்பமானது.

பிரம்மபுத்ரா கரையோர மரத்துப் பறவைகள் 'காச் மூச்' சென்று தங்களுக்குள் சோகமாய் ஏதோ பேசிக் கொள்வது போலிருந்தது. மேகத் துணுக்குகள் ஒன்றுக் கொன்று நெருங்கி 'தூரதேசம்' போகலாமா என்று யோசிப்பது போலிருந்தது. வானத்து துண்டு நிலவு 'இன்று அமாவாசையாய் இருந்திருக்கக் கூடாதா' என்று கவலைப்பட்டுக் கொண்டிருந்தது.

வரப்போகும் விபரீதம் தெரியாமல் அமைதியாய் சலசலத்துக் கொண்டிருந்தது பிரம்மபுத்ரா நதி.

நதியின் கரையோரமாய் பகல் இரவாக மாறும் பொழுது ஏற்படும் இயற்கை மாற்றத்தை ரசித்துக் கொண்டிருந்த இந்துவதனாவை சுமந்து கொண்டு நின்ற அந்த வெண்குதிரை, அவள் அதன் கழுத்தில் தட்டியதுமே ஓட ஆரம்பித்தது. சற்று தூரம் ஓடி ஒரு மரப்பாலத்தை கடந்ததும் பெரிய பெரிய வீடுகள் நிழலுருவமாய் தெரிய ஆரம்பித்தன.



குதிரை ஓடுவதை நிறுத்தி நடக்க ஆரம்பித்தது. வீதியில் வரிசையாய் நின்ற கல்தூண்களின் தலைகளில் சோகமாய் தவமிருந்தன கண்ணாடிச் சிறை விளக்குகள். விளக்குகள் மீது கொண்ட தீரா காதலால் சுற்றி சுற்றி வந்தன விட்டில் பூச்சிகள்.

தெருவில் யாருமே இல்லை. குதிரை ஒரு குறிப்பிட்ட வீட்டை நோக்கி நடந்தது. அந்த வீட்டைச் சுற்றி நிறைய பேர் மங்கலாய் தெரிந்தார்கள். வீட்டுக்குள்ளிருந்து வெளியே வந்தன நிறைய அழுகைச் சத்தங்கள்.

'அப்பாவுக்கு ஏதாவது ஆகிவிட்டதா?' பரபரப்புடன் குதிரையில் இருந்து குதித்து வீட்டுக்குள் நுழைந்தாள். நின்றவர்கள் விலகிக் கொண்டார்கள். கண்ட காட்சி அவளை அசையாமல் நிற்க வைத்தது.

அந்த பெரிய கூடத்தின் நடுநாயகமாக இந்துவதனாவின் அண்ணன் ஜெயந்தனை படுக்க வைத்திருந்தார்கள். சற்று நேரத்துக்கு முன்னால் தான் இறந்து போயிருக்க வேண்டும். உதடுகளில் கடைசி புன்னகை இன்னும் மீதமிருந்தது. மேலே போர்த்தியிருந்த வெள்ளைத் துணி பாதி சிவப்பாகி இருந்தது இரத்தத்தால்.

அண்ணன் மனைவி கன்வர் தலையில் அடித்து அழுது கொண்டிருந்தாள். காரணம் தெரியாமல் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தது மூன்று வயது பெண் குழந்தை சுதர்னா.

இந்துவதனாவின் கண்களில் இருந்து வழிந்த கண்ணீர் தரை தொட்டது. உதடுகள் 'ஜெயந்தண்ணா ஜெயந்தண்ணா' என்று மெல்ல முணுமுணுத்தது.

"சுதந்திரம் வாங்கப் போறேன். சுதந்திரம் வாங்கப் போறேன்னு அலைஞ்சான். கடைசியில் என்ன ஆச்சி...?

உயிர்தான் போச்சி... வெள்ளைக்காரன் பொட்டுனு சுட்டு போட்டுட்டான். இரண்டு வருஷத்துக்கு முன்னால நம்ம சிப்பாய் பயல்க துப்பாக்கியை திருப்பி பிடிச்சானுக. இப்ப என்ன செய் றானுக... உள்ளே சிறையில கம்பிக்கு தூசி துடைக்கிறானுக."

- சத்தமாய் பேசிக் கொண்டிருந்த கிராமத் தலைவரின் குரலும், கன்வரின் புலம்பலும் எங்கோ தூரத்தில் கேட்பது போலிருந்தது, இந்துவதனாவுக்கு.

அசையாமல் நின்று கொண்டிருந்த தந்தை சத்தியா னந்தரின் உணர்ச்சியற்ற முகமும், கூடத்தின் மையத்தில் தொங்கிக் கொண்டிருந்த தூண்டாமணி விளக்கின் சுடரும், கண் முன் தெரிந்த காட்சிகளும் மங்கலாகி, பின் இருட்டடிக்க, மயங்கி தரையில் விழுந்தாள்.

மீண்டும் அவள் கண் விழித்த போது அறைக்கதவு பூட்டப்பட்டிருந்தது. அவளருகில் கன்வரின் குழந்தை. சாளரத்து வழியே வானத்தைப் பார்த்தாள். விண்மீன்கள் இடம் மாறியிருந்தன.

'நள்ளிரவு தாண்டிவிட்டது.'

அறுந்த நினைவுகள் தொடர்ந்து வர, வேகமாய் கதவை நெருங்கி, கையை ஓங்கி தட்டப் போனவளை சத்தியானந்தரின் ஆவேசமான குரல் தடுத்து நிறுத்தியது.

"நாளைக்கு விடியிறதுக்குள்ள நீ உடன்கட்டை ஏறுறே. இது கடவுளோட கட்டளை."

- அவருடைய கூச்சலுக்கு பதிலாக கன்வரின் விசும்பல் சத்தம் கேட்டது. இந்துவதனா கதவு இடுக்கு வழியாகப் பார்த்தாள். நான்கைந்து பேர் சுற்றி நின்று கொண்டிருந்தார்கள். கன்வர் தரையில் அமர்ந்து அழுது கொண்டிருந்தாள்.



சத்தியானந்தர் இரத்தச் சிவப்பேறிய கண்களுடன் அங்கும் இங்கும் நடந்து கொண்டிருந்தார். ஏதோ முடிவுக்கு வந்தவராக நின்று, சுற்றி நின்றவர்களை ஒரு நோட்டம் விட்டு -

"ஸதிக்கு வேண்டிய ஏற்பாடுகளை அவசரமாய் செய்ங்க. கன்வர் நீ நீராடி விட்டு, கடவுளை கடைசி முறையா வணங்கிட்டு ஸதிக்கு தயாரா இரு... என்ன புரியுதா?"

- என்று சொல்லிவிட்டு நகர்ந்தவரை இறுகப் பிடித்துக் கொண்டாள் கன்வர். 'என்ன?' என்பது போல் குனிந்து பார்த்தார்.

"விதிதான் என் கணவரை எங்கிட்டேயிருந்து பிரித்து விட்டது. நீங்களாவது என் குழந்தைக்கிட்டே இருந்து என்னை பிரிச்சிடாதீங்க மாமா... என்னை விட்டுடுங்க மாமா... என்னை சாகடிச்சிடாதீங்க மாமா!"

- கன்வரின் கதறலுக்கு அவர் மனம் இளகியதாகத் தெரியவில்லை. கோபத்தில் கண்கள் இன்னும் அதிகமாய் சிவந்து விளக்கொளியில் கொடூரமான மிருகத்தின் கண்கள் போல் மினுக்கியது. வாயிலிருந்து கருங்கல்லை விட்டெறிந்தது போல் வந்து விழுந்தன வார்த்தைகள்.

"காலை விடு. சந்தனக் கட்டைகளுக்கு ஏற்பாடு செய்ய வேண்டும்."

- கால்களை இன்னும் இறுகப் பற்றிக் கொண்டாள். கண்ணீர் வழிந்து சத்தியானந்தரின் பாதம் தொட்டது.

"என் குழந்தையிடமிருந்து என்னை பிரிக்கிறதில்லைன்னு சொன்னாதான் காலை விடுவேன்."

"காலை விடப் போறியா... இல்லையா?"

– கண்களை அகலமாக்கி மிரட்ட, அவள் அழுகையால் மறுக்க, கோபத்தில் காலை ஓங்கி உதறினார். உதறிய உதறலில் கூடத்து பெரிய தூண் ஒன்றில் தலை சரிந்தாள் கன்வர். நிமிர்ந்தவள் நெற்றியில் இரத்தத் துளிகள் அரும்பியிருந்தன.

“தட்... தட்... தட்... தட்...”

உள்ளறைக் கதவு பலமாகத் தட்டப்பட்டது.

தாமதித்தால் பெயர்ந்து விழுந்துவிடுமோ என்பது போல் இருந்தது கதவைத் தட்டிய வேகம். எரிச்சல் கலந்து கோபத்துடன் கதவைத் திறந்தார்.

இந்துவதனா கையில் கன்வரின் குழந்தையுடனும், கண்களில் கோபத்துடனும் நின்றாள். ‘என்ன?’ என்பது போல் பார்த்தார். அவர் கண்களின் தீட்சண்யம் தாங்காதவளாய் தரை பார்த்தாள். கன்வர் ஓடி வந்து குழந்தையை கையில் வாங்கி மார்போடு இறுக அணைத்துக் கொண்டாள்.

“இந்து... நாலு பெரியவங்க பேசுற இடத்துக்கு பெண் பிள்ளை நீ வரக்கூடாதுன்னு தெரியாதா? இப்படித் தான் வழக்கத்தை மீறி கதவைத் தட்டி அசிங்கம் பண்றதா... அண்ணனோட தகனத்துக்கு ஏற்பாடு செய்யணும். அவனோட ஆத்மா பரம்பொருளை அடையட்டும்னு பிரார்த்தனை செய்துட்டு அமைதியாய் படுத்து தூங்கு.”

– எதுவும் நடக்காதது போல் அமைதியாக இனிப்பு தடவிய குரலில் பேசினார்.

“அண்ணி கன்வரையும் எங்கூட வந்து படுக்கச் சொல்லுங்கப்பா.”

– முகம் பார்த்து கேட்டாள்.



“இனி உன்னோட பேசவோ, சிரிக்கவோ, படுக்கவோ கன்வர் வரமாட்டாம்மா... அவ கணவனோட சொர்க்கம் போக தயாராயிட்டா. அடுத்த திங்களுக்குள் கன்வருக்கு ஸதிமாதா மண்டபம் ஒன்று கட்டப் போகிறேன். கன்வரின் பெருமை பாரத தேசமெங்கும் பரவப் போகிறது. நீயே பாரேன்.

– கன்வரின் கண்களில் திகிலும், நடுக்கமும் மெல்ல பரவத் தொடங்கியது. இந்துவதனா தைரியமாக நிமிர்ந்து சத்தியானந்த ரின் கண்களைப் பார்த்து பேசத் தொடங்கினாள். வாயிலிருந்து அக்கினிச் சாரலாய் வந்து விழுந்தன வார்த்தைகள்.

“நீங்க கட்டப் போறது மண்டபம் இல்ல. உங்களுடைய சுய நலத்துக்காக எங்களுக்கு கட்ற பலிபீடம். கணவன் இறந்திட்டா, குழந்தைகளை விட்டுட்டு மனைவியும் இறந்திடணுமா? ஒரு உயிரை எடுக்கிறதுக்கு நீங்க என்ன கடவுளா... உங்க மகளுக்கு இந்த கதி வந்தா என்ன செய்வீங்கப்பா?”

“மகள், மருமகள் பேதம் பார்க்கிற காரியமா இது? கடவுளால நியமிக்கப்பட்ட செயல் இது. இறந்த கணவன் பாவங்கள் கரைஞ்சி சொர்க்கம் போகணுங்கிறதுக்காக உத்தம ஜாதிப் பெண்கள் உடன் உயிர் துறப்பது இன்று நேற்று ஏற்படுத்தப்பட்ட சம்பிரதாயம் இல்லை. என்றோ இறைவனால் ஏற்படுத்தப்பட்டது. அதை நிந்திப்பதும், மீறுவதும் பெரிய பாவமம்மா. அதை மீறி நாம கடவுள் கோபத்துக்கு ஆளாகிட கூடாதும்மா. உனக்கு இந்த வயதில் இதெல்லாம் புரியாதம்மா... போய் படு... பேசிக் கொள்ளலாம் விடியட்டும்.”

“என்றைக்கு விடியும்? எங்களுக்கு விடிவே கிடையாது. நாங்களா விழிக்கிற வரைக்கும் விடியப் போறதில்லை. எங்களோட கழுத்துக்கு வைக்கிற கண்ணி தெரியக் கூடாதுன்னு

பெரு விரலை பார்த்து நடக்கச் சொல்றீங்க. இந்த முட்டாள் தனமான காரியம் நடக்க நான் சம்மதிக்க மாட்டேன்.''

– சுற்றி நின்றவர்கள் கண் அசையாமல் பார்த்துக் கொண்டு நின்றனர்.

“உன் சம்மதம் எனக்குத் தேவையில்லை. உள்ளே போ.''

வார்த்தைகளில் உஷ்ணம் ஏறி இருந்தது. கோபத்தில் உதடு மெலிதாக துடித்தது. கூடத்தின் மூலையில் குழந்தையுடன் ஒடுங்கிப் போய் நின்று கொண்டிருந்த கன்வரை நோக்கி நடந்தார். குறுக்கே போய் நின்றாள் இந்துவதனா.

“நான் உயிரோடு இருக்கும் வரை 'ஸதி' நடக்க விடமாட்டேன்.''

– கண்களில் உறுதி தெரிந்தது.

“ஸதியை தடுக்க [1]சட்டம் போட்டானே [2]பெண்டிங் பிரபு. அவனே நேரில வந்தாலும் தடுக்க முடியாது. இல்லை அந்தக் துரோகி [3]ராம் மோகனே உயிரோடு வந்தாலும் நிறுத்த முடியாது இந்த சத்தியானந்தரை. எனக்குப் பிறந்த பொட்டச்சி நீயா ஸதியை நிறுத்தப் போறே?''

– என்று சொல்லிவிட்டு கடகடவென்று சிரித்தவர், ஆவேசம் வந்தவராய் திமிற திமிற இந்துவதனாவின் தலைமுடியை பிடித்து இழுத்துக் கொண்டு போய், தன் முழு பலத்தையும் திரட்டி அந்த சிறிய அறைக்குள் தள்ளினார். கால் இடறி சுவரில் போய் மோதினாள். சுவரில் இரத்தக் கோடு

*1. 1829 - சதி ஒழிப்புச் சட்டம்*

*2. வில்லியம் பெண்டிங் பிரபு பெண்டின்க் (1828-33)*

*3. ராஜாராம் மோகன் ராய் (1772-1833)*



இழுத்துக் கொண்டே, சுவரோடு சரிந்து மயங்கி விழுந்தாள் இந்துவதனா. கதவை இழுத்துப் பூட்டி பெரிய பூட்டொன்றை தொங்கவிட்டார் திருப்தியான புன்னகையுடன்!

“காந்தர்வெட்டி.''

– அழைத்த மாத்திரத்தில் ஆறடி உயரத்தில் ஆஜானு பாகு தோற்றத்தில் கறுப்பாய் நின்றவன் பணிவாய் முன்னால் வந்து நின்றான்.

“காந்தர்வெட்டி! ஆதவன் கீழ்வானம் வரும் முன் காரியத்தை முடித்து விட வேண்டும். நெய் குடங்களுக்கு ஏற்பாடு செய்து விடு. போகும் வழியில் கிராமத் தலைவரிடம் சொல்லி விட்டுப் போ.''

– தயக்கமாய் நின்றான்.

“என்ன தயக்கம் காந்தர்..?''

“வெள்ளைக்கார சிப்பாய்கள் திடீர் திடீரென்று நகர் வலம் வருகிறார்களாம். ஸதி எங்கு நடந்தாலும் தடுக்க வேண்டுமென்று கானிங் பிரபு கடுமையாய் உத்தரவிட்டிருக்கிறாராம்.''

– சற்று பயத்துடன் சொன்னான்.

“பேடி போல் பேசாதே. சிரிக்க வேண்டிய இடத்தில் சிரித்து மண்டியிட வேண்டிய இடத்தில் மண்டியிட்டால் கேனிங் பிரபு என்ன.. அவன் அப்பனையும் ஏமாற்றி விடலாம். சிப்பாய் கலகம் தொடங்கியதும் பயந்து, மூட்டை முடிச்சுகளுடன் கப்பல் ஏற ஓடியவன் அந்த கேனிங். நான் பார்த்துக் கொள்கிறேன். நீ போய் வேலைகளைக் கவனி.''

– என்று கட்டளையிடும் தொனியில் கூறிவிட்டு பிரதான கதவின் பெரிய தாழ்ப்பாள்களை தன் முழு பலத்தையும் பிரயோகித்து திறந்தார்.

கதவை முழுதாக திறக்காமல் சற்று திறந்து இடைவெளி வழியே வெளியே எட்டிப் பார்த்தார். தெருவில் யாரும் இல்லை. விளக்குத் தூண்கள் மட்டும் பொறுப்பாய் நின்று கொண்டிருந்தன. வெளியே வந்தார்கள்.

திடீரென தூரத்தில் ஏதோ சத்தம் கேட்பது போலிருந்தது. காதுகளை கூர்மையாக்கினார். குதிரைகளின் குளம்பொலி அவர்களை நோக்கி வருவதை உணர முடிந்தது. வெளியே வந்தவர்களை அவசரமாய் உள்ளே தள்ளி கதவை மூடினார்.

நான்கைந்து இமை மூடு பொழுதுகள் கழிந்த பின் குதிரைகளின் குளம்பொலிகள் மிக அருகில் கேட்டது. சற்று நேரத்தில் வீட்டைக் கடந்து ஒலிக்கூட்டம் தொலை தூரம் சென்று, தேய்ந்து காணாமல் போனது. சத்தியானந்தருக்கு நிம்மதி பெருமூச்சு வந்தது.

அவசரமாய் கதவு திறந்து 'போங்கள்' என்று சைகை செய்ய, நான்கு பேர் நெஞ்சில் பயத்துடன் கிராமத் தலைவர் வீட்டை நோக்கி நடந்தார்கள். கதவுக்கு தாழ்ப்பாள் போட்டு விட்டு திரும்பியவருக்கு நெஞ்சில் இடி இடித்தது போல் இருந்தது.

கூடத்தின் மூலையில் நின்று கொண்டிருந்த கன்வரை காணவில்லை. கூடம் வெறுமையாய் கிடந்தது. 'எங்கே போயிருப்பாள். வெளியே ஓடி இருப்பாளோ...' வேகமாய் பின்புறம் ஓடினார். பின்பக்க கதவு பூட்டியிருந்தது. ஏமாற்றம் தான் மிஞ்சியது.

இந்துவதனாவை அடைத்து வைத்திருந்த அறையின் பூட்டு அமைதியாய் தொங்கியது. அவருக்கு மண்டை வெடித்து விடும் போல் இருந்தது. 'எங்கே போயிருப்பாள்' மூளையில்



மின்னல் ஒன்று வெட்ட, குறுகிய மாடிப்படிகளில் இருபது வயது இளைஞனின் வேகத்துடன் தாவி ஏறி மாடியறைக் கதவை திறந்து பார்க்க–

கவனிப்பாராற்று, புழுதி படிந்து கிடக்கும் அந்த அறையின் மூலையில் கன்வர் கண்களில் பயத்துடன் அமர்ந்திருந்தாள். அருகில் குழந்தை படுத்து உறங்கிக் கொண்டிருந்தது.

**கோ**ட்டை போல் சுற்றுச் சுவர் கொண்டிருந்த பரந்த புல்வெளி. நிறைய இடங்களில் சுற்றுச்சுவர் காணாமல் போயிருந்தது. நடு நாயகமாய் கரும்பச்சையில் கல்மேடை ஒன்று தெரிந்தது. மேடையைச் சுற்றி பிணம் தின்னி கழுகுகள் போல் மரண ஓலம் கேட்கும் ஆவலில் ஒரு கூட்டம் இருந்தது. கிசுகிசுப்பாய் தங்களுக்குள் ஏதோ பேசிக் கொண்டார்கள். அந்த கிசுகிசுப்புக்களையும் மீறி வெளியே கேட்டது குருக்களின் மந்திர உச்சரிப்புகள்.

சத்தியானந்தர் இறுகிப்போன முகத்துடன் கற்பூரக் கட்டிகள் மீது சந்தனச் சுருளை போட்டு, நெய் ஊற்றி எரிந்து கொண்டிருந்த ஹோமத்தையே கண் அசையாமல் பார்த்துக் கொண்டிருந்தார். கண்ணீர் ஓடி உப்புக்கோடு விழுந்த கன்னங்களுடன் குனிந்த தலை நிமிராமல் நின்று கொண்டிருந்தாள் கன்வர்.

ஹோமத்திலிருந்து எழுந்த புகை, மேகமோ என்று சந்தேகப்படும் அளவுக்கு தனியே கூட்டம் போட்டது. பயத்தில் தூரம் சென்றன மின்மினிப் பூச்சிகள். 'விடிவதற்கு அதிக நேரம் இல்லை' என்று சொல்லிக் கொண்டிருந்தன அடிவானத்தில் புதிதாக முளைத்திருந்த விண்மீன்கள்.

மழை மேகங்கள் 'அழுது விடுவேன்' என்று நட்சத்திரங்களிடம் சொல்வது போல் இருந்தது. துண்டு நிலவு

'அழுதாவது தீயை அணைத்து விடு' என்று மேகங்களிடம் ஓடி ஓடி சொல்லிக் கொண்டிருந்தன.

மஞ்சள் தலைப்பாகை, மஞ்சள் அங்கியுடன் நரைத்த நீண்ட தாடி காற்றில் அசைவதை பொருட்படுத்தாமல் மந்திர உச்சரிப்பிலேயே கவனமாய் இருந்தார்கள் குருமார்கள்.

சந்தனக் கட்டைகள் வேகமாய் அடுக்கப்பட்டன. நெய்க் குடங்கள் வரிசையாய் காத்திருந்தன.

"ம்." - என்று தலைமை குரு கையசைக்க ஜெயந்தன் உடல் மீது ஏதோ நீர் தெளித்து மந்திரம் உச்சரிக்கப்பட்டது. பல நிற காட்டுப் பூக்கள் உடல் மீது பரப்பப்பட்டது. கண்களில் பயத்துடன் நம்பிக்கையின்றி கடவுளை துணைக்கு அழைத்துக் கொண்டிருந்தாள் கன்வர்.

பல சம்பிரதாயங்கள் நடந்து முடிந்த பின் தலைமை குரு எழுந்து கல்மேடையில் ஏறினார். எழுபது வயதை தாண்டி விட்டதால் படிகளில் ஏற சிரமப்பட்டார். சத்தியானந்தர் அவரை கைத்தாங்கலாக மேடைக்கு அழைத்துச் சென்றார். இருவரும் மேடை மேல் நின்றார்கள்.

மேடைக்கு நேர் கீழே சிதை வைக்கப்பட்டிருந்தது. தலைமை குரு சுற்றி நின்ற கூட்டத்தை ஒருமுறை உற்றுப் பார்த்துவிட்டு கையை உயர்த்த அடுத்த இமை மூடு பொழுதுக்குள் அந்த பிராந்தியமே அமைதியில் ஆழ்ந்து போய்விட்டது.

கண்களை உயர்த்தினாள் கன்வர். தலைமை குரு சமஸ்கிருதத்தில் ஏதோ சொல்ல, சிதையில் நெய்க் குடங்கள் கவிழ்ந்து வெற்றுக்குடங்கள் ஆயின.



"கன்வர், மேலே வா."

- சத்தியானந்தரின் குரல் அம்பு போல் வந்தது. கன்வர் தயக்கமாய் இரண்டு படி ஏறினாள். காந்தர் வெட்டியான் தீப்பந்தத்தை குறி வைத்து சிதையின் மேல் எறிய குபீரென்று பற்றிக் கொண்டது. மஞ்சள் கலந்த சிவப்பில் உயரமாய் எரிய ஆரம்பித்தது நெருப்பு.

அடுத்த வினாடி-

"டொமீல்"

- என்று துப்பாக்கி வெடித்த சத்தத்தில் கூட்டம் முழுவதும் திரும்பிப் பார்த்தது. அராபிய வெண் குதிரையில் முகத்தில் கோபம் சுடர்விட, கையில் துப்பாக்கியுடன் கம்பீரமாய் அமர்ந்திருந்தாள் இந்துவதனா. நெற்றியில் உறைந்து போயிருந்த சிவப்பு இரத்தத் திட்டு அவளுக்கு அழகாக இருப்பது போலிருந்தது. அவளுக்கு முன்னால் குதிரையில் மூன்று வயது பெண் குழந்தை சுதர்னா.

"யாராவது கிட்ட வந்தீங்க... என் துப்பாக்கியில இருக்கிற தோட்டா உங்க நெஞ்சில இருக்கும்."

- எச்சரித்த குரலில் கூட்டம் அசையாமல் நின்றது. கன்வர் வேகமாய் குதிரை அருகில் ஓடி வர -

"ம்... ஏறு."

- என்று இந்துவதனா அவசரப்படுத்த பதற்றமாய் ஏறினாள்.

கோபத்தில் சத்தியானந்தர் இடுப்பிலிருந்த குறுவாளை எடுத்து வீச எத்தனிக்க-

அதை கவனித்த இந்துவதனாவின் துப்பாக்கி தோட்டாவை உமிழ்ந்தது. துப்பாக்கியின் சீறலுக்கு தப்ப, சத்தியானந்தர் அவசரமாய் பின்வாங்க தலைமை குரு மீது மோதி, தடுமாறி, கல்மேடையில் இருந்து சரிந்து திபுதிபு வென்று எரிந்து கொண்டிருந்த சிதையின் மீது இருவரும் விழுந்தனர். அவர்களை நெருப்பு தன் கோபக்கரங்களால் அணைத்துக் கொண்டது.

அடுத்த இமை மூடு பொழுதுக்குள் மூன்று பேரையும் சுமந்து கொண்டு ஓட ஆரம்பித்தது அந்த வெண்குதிரை... பத்து, இருபது பேர் பின்னால் விரட்டினார்கள்.

"ம்... வேகம்."

– என்று இந்துவதனா உதிர்த்த ஒற்றைச் சொல்லுக்கு மின்னல் வேகம் காட்டியது அந்த வெண் குதிரை.

பின்னாலிருந்து வீசப்பட்ட ஈட்டிகளையும், கற்களையும் பொருட்படுத்தாமல் ஓடி, சுற்றுச் சுவரின் இடிபாடுகளை லாகவமாய் தாண்டி கீழ்த்திசை நோக்கி ஓடியது.

பின்னால் கேட்ட கூக்குரல்கள் தேய்ந்து கரைந்தது. கீழ்வானம் இரத்தக் கம்பளம் விரித்து விடியலுக்காய் காத்திருந்தது.

**– தேவி வார இதழ்**

5

# ஒரு கட்டை புளிய மரத்தின் கதை

*தேமதுரத் தமிழை – சிறுகதை இலக்கியத்தால் சிறப்பிப்பவர் தென் பாண்டிச் சீமை தந்த "மதுரா!"*

*கல்கியின் சரித்திர நாவல்களை வாசிக்கையில் – பல நூறு வருடங்களுக்கு முந்திய காலச் சம்பவங்களை நேரில் காணும் உணர்ச்சியே உள்ளத்தில் பூக்கும். அதைப் போன்றே மதுராவின் சரித்திரச் சிறுகதையைப் படிக்கையில் மெய் சிலிர்க்க வைக்கும் நிகழ்ச்சியை அருகிருந்து பார்க்கும் உணர்ச்சியே எழுகிறது.*

*'ஒரு கட்டைப் புளியமரத்தின் கதை' மதுராவின் அற்புதமான சிந்தனையின் விளைச்சல். பாஞ்சைப் பாளையத்து வேந்தன் வீரபாண்டிய கட்டபொம்மனை கயத்தாற்றில் ஒரு கட்டைப் புளியமரத்தில் தூக்கிலிட்டனர். தியாக சரித்திரமான அந்த இடத்தை நினைவு கூர்ந்திட எண்ணியே, கற்களை அம்மரத்தின் எதிரே குவித்தனர் தமிழர்கள். தன் கிளையில் கட்டப்பட்ட தூக்கு கயிற்றுக்கு ஆவியைத் தந்த வேந்தனை எண்ணி வேதனையில்*

*துடிக்கிறது – கட்டைப் புளியமரம். அதன் மீது கல்லால் எறிகின்றனர். உடல் வலிக்கிறது. அதைவிட மரத்தின் மனம் வலியால் துன்புற்று அழுகிறது – என்ன நேர்த்தியான கற்பனை.*

*'காலடியிலிருந்த ஏணியைத் தானே உதைத்துத் தள்ளினார்.*

*தூக்கு கயிறு கழுத்தை இறுக்கியது. மேனி துடித்தது.*

*அந்த கிளையைத் துண்டித்து விடலாமா என்று மனம் பரபரத்தது.*

*இயலாமையால் இதயம் அரற்றியது.*

*இன்று வரை என் வேதனை தொடர்கிறது.*

*இறந்து போகவே நினைக்கிறேன்.*

*கல்லடியும் சொல்லடியும் என்னை வதைக்கிறது.*

*யாராவது சொல்லுங்கள்.*

*கட்டபொம்மன் மரணத்துக்கு நான் காரணமில்லை'*

*– இந்த வரிகளை படிக்கையில் நம்மை அறியாமலே மனம் கனக்கிறது. தமிழ் இலக்கியப் பாசறையில் –*

*என்றும் ஜொலிக்கும் இச் சிறுகதை.*

***- வைகோ.***

'அம்மா...'

- இதயம் அலறுகிறது வலியில்.

என் மேனியை காயப்படுத்திய அந்த கருங்கல் என் காலடியில் விழுகிறது. கல் எறிந்த சிறுவன் என்னையே



இமைக்காமல் பார்த்துக்கொண்டு நிற்கிறான். அவனருகில் முப்பது வயது பெண். அவன் தாயாய் இருக்க வேண்டும்.

என் பார்வை மீண்டும் அந்த சிறுவனை தொடுகிறது.

நான்கு வயது இருக்கும் மிஞ்சிப் போனால்.

பால் மணம் மாறாத முகம். பிஞ்சு குட்டி.

அந்த இளம் பெண் என்னை ஏறிட்டுப் பார்த்தாள்.

முகத்தில் கோபம் இருந்தது.

குனிந்து, கீழே கிடந்த கருங்கல் ஒன்றை எடுத்து மகன் கையில் திணித்தாள்.

"ம், எறி."

- கட்டளையிட்டது அந்த பெண்குரல்.

அந்தக் குரலில் கொலை வெறி மிதந்தது.

"எதுக்கும்மா எறியணும்...?"

- கேள்வி கேட்டது பிஞ்சு குழந்தை கையில் கருங்கல்லுடன்.

"நம்ம ராசாவை கொன்ன பாவி... ம்... எறி..."

- அந்தக் குழந்தை அம்மாவின் பதில் புரியாமல் கல்லை விட்டெறிந்தான்.

என் இதயம் நடுங்கிற்று பயத்தில்.

கருங்கல் குறிதவறாமல் என்னைக் காயப்படுத்தி விட்டு தரையில் விழுந்தது.

'அம்மா...'

- மனதுக்குள் அழுதேன் மௌனமாய்.

அந்த இளம்பெண் குனிந்து இன்னொரு கல்லெடுத்து தானும் வீசினாள். வலி பொறுத்துக் கொண்டேன்.

"செத்துப் போ!"

- என்றாள் முணுமுணுப்பாய்.

அந்த வார்த்தைகள் மீண்டும் மீண்டும் என் இதயத்தில் மோதியது விட்டெறிந்த கருங்கல்லாய். என் இதயம் கதறியது கூட்டிலிருந்து தவறி விழுந்த குயில் குஞ்சாய்.

அந்தப் பெண் குழந்தையைத் தூக்கி இடுப்பில் வைத்துக் கொண்டு நடந்தாள் ஐக்கடா வண்டி சென்ற கரிசல் மண் பாதையில். குழந்தை என்னை திரும்பித் திரும்பிப் பார்த்தது.

அதே பாதையில் ஐம்பதடி தூரத்தில் முதியவர் ஒருவர் நடந்து வந்து கொண்டிருந்தார். நாட்டு உடை. மரத்தின் கம்பு ஒன்றை ஊன்றுகோலாய் கையில் வைத்திருந்தார். போகிற வழியிலேயே எமன் வந்து அழைத்துப் போய்விடுவானோ என்று நாம் ஐயப்படுகிற அளவுக்கு தள்ளாமை. நடையில் சிரமம் தெரிந்தது. இடுப்பு வேட்டியில் ஏதோ ஒரு பொருளை முடிச்சிட்டு வைத்திருந்தார்.

பாதையிலிருந்து விலகி என்னை நோக்கி நடந்து வந்தார்.

எனக்குத் தெரிந்து விட்டது, எதற்காக அந்த கிழவர் என்னை நோக்கி நடந்து வருகிறார் என்று. என்னருகில் - எட்டிப் பிடிக்கும் தூரத்தில் வந்து நின்று கொண்டார்.

தடுமாறி, தரையில் விழுந்து இறந்து விடுவாரோ என்று எனக்குள் எண்ணம் வந்தது.



தரையில் கம்பை ஊன்றி, தன்னை, ஸ்திரப்படுத்திக் கொண்டு, இடுப்பு வேட்டியின் முடிச்சை அவிழ்த்தார். பெரிய கருங்கல் ஒன்று இருந்தது.

நடுங்கும் கரங்களில் எடுத்து என்னைக் குறி வைத்து வீசினார்.

அந்த வீச்சில் கோபம் இருந்தது. வேகம் இல்லை.

கருங்கல் என்னை காயப்படுத்தி விட்டு காலடியில் விழுந்தது சொத்தென்று.

வலியை விட வேதனையே அதிகமிருந்தது.

அந்த முதியவர் திருப்தியுடன் திரும்பி நடந்தார் மண் பாதையில்.

இது என்ன கூத்து... குழந்தையும் குமரியும் கல்லெடுத்து அடிக்கிற வேடிக்கை... உங்கள் கேள்வி காதில் விழுகிறது. இது தினம் நடக்கிற அவஸ்தை... வருகிறவன் போகிறவன் எல்லாம் கல்லெடுத்து அடிக்கிறான். வலி தாங்கி நிற்கிறேன். வேதனை சுமந்து கிடக்கிறேன். வீசிய கற்கள் என் காலடியில் மூன்றடி உயரத்தில் குவிந்து கிடக்கிறது.

'எதற்கு இந்த கல்வீச்சு... என்ன தவறு செய்தாய்... ஏன் இந்த தண்டனை... எதற்காக கண்ணீர்... எல்லாவற்றையும் உதறிவிட்டு ஓடிப்போய்விட வேண்டியது தானே...' என்னால் ஓட முடியாது. நிற்கின்ற இடத்தை விட்டு ஓரடி கூட எடுத்து வைக்க முடியாது. எந்த தவறும் செய்யாமல் தண்டனை அனுபவிக்கிறவன் நான்.

நான் - புளிய மரம்.

அதுவும் கட்டை புளியமரம்.

எவருக்கும் தீங்கு செய்யாமல் பழிபாபம் சுமந்து நிற்கிற கட்டை புளியமரம்.

என் வேதனையை அதிகப்படுத்துவது போல் காற்றில் மிதந்து வருகிறது அந்த பாடல். வெள்ளைக்காரன் காதில் விழுந்தால் முகம் சிவந்து போவான். பாடலை பாடியவருக்கோ முதுகு போகும். சவுக்கை கையில் எடுத்து விடுவான்.

குழந்தையை இடுப்பில் சுமந்து கொண்டு, மண் பாதையில் நடந்து செல்கிற அந்த இளம்பெண்தான் அந்தப் பாடலை பாடிக்கொண்டு போகிறாள் என்று நினைக்கிறேன்.

"* காகம் பறக்காது; கரிக் குருவியும் லாந்தாது
கட்டபொம்மு துரை பேரு சொன்னால்;
கறந்த பாலையுங் காகங் குடியாது
கட்டபொம்மு துரை பேரு சொன்னால்;
வேப்பெண்ணெயுந்தான் பாலாகிடுமே..."

-வடகிழக்கு பருவகாற்று வேகமாய் இழுத்து வந்தது அந்த இளம் பெண் ணின் பாடலை. அந்தப் பாடல் வரிகளோ - இரண்டு பௌர்ணமிக்கு முன்னால் நடந்த, என்னுள் பதிந்து கிடக்கின்ற கறுப்பு நாளை மீண்டும் வெளியே இழுத்து வந்தது.

என் வேதனை மிகுந்த நினைவுகளில்... வாழ்வில் மறக்க முடியாத அந்த நாளில்...

**ஆ**யிரத்து எழுநூற்று தொண்ணூற்றி ஒன்பதாம் வருஷத்து, அக்டோபர் மாதம், பதினாறாம் நாளின் காலை கதிரவன் என்னவோ அன்று இரத்தம் கலந்த மஞ்சளாய் இருந்தது. வானம் கறுப்பு மேகத்துணுக்குகளை சுமந்து கொண்டு கவலையுடன்

* வீரபாண்டியக் கட்டபொம்மு கதைப்பாடல், பதிப்பாசிரியர் நா.வானமாமலை.



காத்திருப்பது போலிருந்தது. பனி இன்னும் விலகாமல் காற்றில் மிச்சமிருந்தது. பூவும் பிஞ்சுமாய் இருந்த நான், அந்த அதி காலைப் பொழுதில் பனியில் நனைந்து போய் நின்று கொண்டிருந்தேன். ஈரம் சுமந்த இலைகளில் மஞ்சள் ஒளிபட்டு அழகாய் இருந்தேன். குள்ளமாய், குண்டாயிருந்தாலும் நான் அழகாயிருந்தேன்.

"டக்... டக்... டக்... டக்..."

- குதிரைகளின் குளம்பொலி கேட்டது.

சற்று தொலைவிலிருக்கும் மதுரை செல்லும் சாலையில் குதிரைகளை பார்த்திருக்கிறேன். அருகில், அதுவும் மிக அருகில் கேட்டதும் எனக்கு ஆச்சர்யமாய் இருந்தது. குதிரைகள் ஏன் இங்கு வருகின்றன... என்ன தேவையிருக்கிறது இந்த கரிசல் மண் பூமியில்... ஆம், என்னை குறிவைத்துதான் அந்த கறுப்பு குதிரைகள் நடந்து வந்தன. அவற்றின் முதுகில் இந்திய முகத்துடன் பிரிட்டிஷ் சிப்பாய்கள். என்னருகில் வந்ததும் குதிரைகள் நின்று கொண்டன. தலைதூக்கி ஏறிட்டுப் பார்த்த ஒரு குதிரை வீரன் என்னை கைகாட்டி ஏதோ சொன்னான்.

மூன்று குதிரைகளும் என்னைச் சுற்றி ஒருமுறை வலம் வந்தன. அவர்கள் பார்வை என்னைத் துளைப்பது போல் உணர்ந்தேன்.

மீண்டும் வேகமாய் ஓடிவரும் குதிரையின் குளம்பொலி சத்தம் கேட்டது.

குதிரை வீரர்கள் மூன்று பேரும் திரும்பிப் பார்த்தனர்.

வேகமாய் ஓடிவந்து கொண்டிருக்கும் குதிரை ஏற்படுத்திய புழுதிப் படலம் காற்றில் மிதந்தது.

அந்த அரேபிய வெண்குதிரை அவர்கள் அருகில் வந்து நின்றது மூச்சிறைக்க. குதிரையின் முதுகில் வெள்ளைத் தோலுடன் வெள்ளைச் சிப்பாய். அவனுடைய சிறிய நீல கண்கள் ஒருமுறை என்னை சுற்றி வந்தது.

"முடிவு செய்திட்டீங்களா...?"

- கேள்வி கேட்டான் இந்திய முகங்களைப் பார்த்து.

"இந்த கட்டைப் புளிதான் சரி... அந்த கொம்பில கயித்தை கட்டிடலாம்.

- பதில் சொன்னான் குதிரை வீரன் ஒருவன்.

"எதுக்கும் ஏறிப்பாரு..."

- குதிரையிலிருந்து குதித்து இறங்கினான் சிப்பாய் ஒருவன்.

நான் யோசிப்பதற்குள் மளமளவென்று என்மேல் ஏறினான்.

"இந்த கொப்புதான்."

- என் கிளைக்கரம் ஒன்றைப் பிடித்து வேகமாய் ஆட்டினான் முழுப்பலத்தையும் பிரயோகித்து. கொத்து கொத்தாய் புளியம்பழங்களும், காய்களும் மண்ணில் உதிர்ந்தன. என்னுள் வலி உணர்ந்தேன்.

கதிரவனின் மஞ்சள் ஒளிபட்டு மினுக்கிய நீல கண்களில் திருப்தி தெரிந்தது.

"ம்... இறங்கு..."

- குதித்து இறங்கினான் இந்திய முக பிரிட்டிஷ் சிப்பாய்.

அடுத்த நிமிடத்தின் ஆரம்பத்தில் நான்கு குதிரைகளும் எதிர்த்திசை நோக்கி ஓடின அவசரமாய். எனக்கு அவர்கள்



வந்து போனது வியப்பை ஏற்படுத்தியிருந்தது. எதற்காக என்னை வந்து பார்த்தார்கள்...? முடிவு செய்திட்டீங்களா என்று கேட்டானே வெள்ளைச் சிப்பாய்... என்ன முடிவு... இந்த கட்டைப் புளிதான் சரி என்றானே என்ன சரி...? அந்த கொப்பில கயித்தை கட்டிடலாம் என்று சொன்னானே... எதுக்காக கயிறை கட்ட வேண்டும்...? என் கிளைக்கரத்தை பிடித்து ஆட்டி பலம் பார்த்தானே... என்ன நடக்கப் போகிறது...? விசித்திரமாய் இருக்கிறதே...

எனக்குள் குழப்ப மேகங்கள் மிதந்தன.

விடை சொல்வது போல தொடர்ந்து நிகழ்ச்சிகள் நடக்க ஆரம்பித்தன.

பிரிட்டிஷ் சிப்பாய்கள் மர ஆசனங்களை சுமந்து வந்து வரிசையாய் போட்டனர் கூப்பிடு தூரத்தில். கொஞ்ச நேரத்தில் திருநெல்வேலி சீமையிலுள்ள பாளையக்காரர்கள் ஒவ்வொருவராய் வர ஆரம்பித்தனர். கொஞ்சம் கொஞ்சமாய் கூட்டம் சேர ஆரம்பித்தது. எங்கிருந்தோ காலாட்படையினரும், குதிரைப் படையினரும் வந்து சேர்ந்தனர் புழுதியை கிளப்பிக் கொண்டு. ஐந்து நிமிட அமைதி இழப்புக்குப் பின் டர்னர், டல்லாசு தலைமையில் அணிவகுத்து நின்றன காலாட்படையும், குதிரைப் படையும்.

நிதான வேகத்தில் நான்கைந்து குதிரைகள் வந்து நின்றன வெள்ளையர்களை சுமந்து கொண்டு. குதிரையிலிருந்து குதித்து இறங்கிய, தலை நரைத்த வெள்ளை அதிகாரிதான், அங்கு நடக்கப் போகும் நாடகத்தின் கதாநாயகன் மேஜர் பானர்மென் என்பதை கொஞ்ச நேரத்தில் அறிந்து கொண்டேன். அவன் முகத்தில் ஏதோ ஒருவித திட்டமிடல் தெரிந்தது. முடிவுரையை

தயாராய் கையில் வைத்துக் கொண்டு முன்னுரை எழுத அமர்ந்திருப்பது போல் காணப்பட்டது அவன் முகம்.

*நடுநாயகமாய் கிடந்த மர ஆசனத்தில் அமர்ந்திருந்தான் மேஜர் பானர்மென். அவனுடைய இருபக்கமும் ராபர்ட் ட்யூரிங், ஜார்ஜ் ஹுயஸ், பிர்கட்டு, பிரெளன் என்ற நான்கு படை தளபதிகள் அமர்ந்திருந்தனர் இறுகிய முகத்துடன்.

சூரியன் உதயமாகி நாழிகை ஏழாகியிருந்தது.

திடீரென சலசலப்புச் சத்தம் கேட்டது.

அங்கு கூடியிருந்த அத்தனை கண்களும் திரும்பி பார்த்தன நடுக்கத்துடன்.

'கட்டபொம்மன்... கட்டபொம்மன்...''

– உதடுகள் முணுமுணுத்தன எதிர்பார்ப்புடன்.

கும்பெனி படைகளின் நெருக்குதலான பாதுகாப்புக்கு மத்தியில் கட்டபொம்மன் நடந்து வந்தார். முகத்தில் களைப்பும் நடையில் கம்பீரமும் தெரிந்தது.

அந்த நிமிடம்தான் எனக்குத் தெரிந்தது நடக்கப் போகும் விபரீதம்.

கடந்த சில நாட்களாய் கட்டபொம்மனைப் பற்றி மக்கள் கதை கதையாய் பேசுவதை கேட்டிருக்கிறேன். என் நிழலில் இளைப்பாறி விட்டுச் செல்கிற வழிப்போக்கர்கள் ஓரிரு வார்த்தைகளாவது கட்டபொம்மன் குறித்து போசமல் சென்றதில்லை.

* கட்டபொம்மனின் கடைசி நாட்கள்.... பக்கம் 23. - எழுதியவர் செ.திவான் எம்.ஏ., எம்ஃபில்.



நடந்தது. நடந்து கொண்டிருப்பது எல்லாவற்றையும் பார்க்கும்போது இனி நடக்கப் போவது கட்டபொம்மனின் கடைசி அத்தியாயம் என்பதை என்னால் உணர முடிந்தது.

சரியாக பத்து மணிக்கு விசாரணை தொடங்கியது.

முதல் முதலில் சாட்சியாக மேஜர் பானர்மெனின் துபாஷி* இராமலிங்க முதலியார் அழைக்கப்பட்டார். கும்பெனியாரின் அந்தரங்க ஊழியக்காரர். தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், பிரெஞ்சு, ஆங்கிலம் ஆகிய மொழிகள் அறிந்தவர்.

பாஞ்சாலங்குறிச்சி கோட்டைக்குள் சென்று கட்ட பொம்மனை சந்தித்த விபரங்களைத் தெரிவித்தார்.

தொடர்ந்து அவரோடு கோட்டைக்குள் சென்ற ஹவுல்தார் இபுராகீம்கானும், ஹரிக்கார் சாமி அய்யரும் சாட்சியளித்தனர். கட்டபொம்மனின் மாமன் கெடி வேட்டூர் நாயக்கரும் அழைத்து வரப்பட்டு ஒரு சாட்சியாக விசாரிக்கப்பட்டார்.

கடைசியில் குற்றச்சாட்டுக்கள் வாசிக்கப்பட்டன.

கும்பெனிக்கு கிஸ்தி செலுத்தாது முதல் குற்றம் என்றான் பானர்மென்.

எவருக்கும், எப்பொழுதும் கிஸ்தி செலுத்த வேண்டும் என்று நினைக்கவே இயலாது என்றான் கட்டபொம்மன் உறுதியான குரலில்.

'கலெக்டரின் உத்தரவுக்கு கீழ்ப்படியவில்லை.' - இது அடுத்த குற்றச்சாட்டு.

'நான் கலெக்டரின் வேலை ஆள் அல்லன்.' - இது பதில்.

* துபாஷி - மொழிபெயர்ப்பாளர்.

கும்பெனியாரின் ஸ்ரீ வைகுண்டம் தானிய கிடங்கை கொள்ளையடித்த தானாதிபதி பிள்ளையை பிரிட்டிஷ் அதிகாரிகளிடம் ஒப்படைக்க மறுத்தது மூன்றாவது குற்றம் என்றான் மேஜர்.

'தன்னிடம் அடைக்கலம் புகுந்த ஒரு மனிதனைக் காட்டிக் கொடுப்பது கட்டபொம்மு நாயக்கரால் ஆகக் கூடிய காரியமல்ல.' – முடிவாக பதில் சொன்னான் பாஞ்சை அதிபதி.

– கேள்வி தொடர்ந்தது. தீர்க்கமான பதிலில் வாயடைத்துப் போனான் பானர்மென்.

'... என்னை உயிருடன் பிடிப்பதற்கு என் தலைக்கு ஒரு விலையை நிர்ணயம் செய்தீர்கள். அந்த ஆசை காட்டுதலே போதுமானதாக இருந்தது... பாஞ்சாலங்குறிச்சி கோட்டையை கொள்ளையிட்ட கும்பலுக்கு தலைமை தாங்கிய நீங்கள் நீதிபதி இடத்தில். ம்... நீங்கள் என்னை வாதாடச் சொல்கிறீர்கள்... இதில் வாதாட என்ன இருக்கிறது... இதுதான் என் தலைவிதி. நான் இதனை ஒத்துக் கொள்கிறேன். நீங்கள் இஷ்டப்படுவது போல் என்னை என்ன வேண்டுமானாலும் செய்து கொள்ளுங்கள்.'

– அந்த பதிலில் மேஜர் முகம் சோர்ந்து போனது. சூரியனின் கோப வெயில் களைப்படையவும் செய்திருந்தது. முகம் பார்க்கத் திராணியற்று மீண்டும் ஒரு கேள்வி கேட்டான்.

'வேறு ஏதாவது சொல்ல விரும்புகிறீர்களா?''

– மௌனமே பதிலாய் வந்தது கட்டபொம்மனிடமிருந்து.

விசாரணை நடத்திய வெள்ளைத் தோல் குழு ஒருவர் முகத்தை ஒருவர் 'என்ன செய்வது' என்பது போல பார்த்துக் கொண்டது களைப்புடன்.



அவர்களுக்குள் ஓரிரு வார்த்தைகள் பேசிக் கொண்டனர் சங்கடத்துடன்.

கோப சூரியன் உச்சிக்கு வந்திருந்தான். குதிரைகள் திமிரத் தொடங்கின.

மேஜர் பானர்மென் நிசப்த நிலையில் மௌனப் படமாய் தோற்றம் தந்தான். சில மணிநேரத்தில் தலை நரைத்து ஒய்ந்து போன உருவமாய் காணப்பட்டான் களைப்புடன்.

நிதானமாய் குனிந்து, ஏற்கனவே திட்டமிட்டிருந்த தீர்ப்பை – திருத்தாமல் எழுதினான் மேஜர் பானர்மென்.

'கட்டபொம்மனுக்கு தூக்கு. அதுவும் இன்றே.'

– சட்டென்று எழுந்து கொண்டான். உடனிருந்த வெள்ளை அதிகாரிகளும் எழுந்து நழுவத் தொடங்கினர் அவசர அவசரமாய். கும்பெனி படை வீரர்களும், கும்பெனியின் விசுவாச ஊழியர்களும் கட்டபொம்மனை சூழ்ந்து கொண்டனர்.

அதுவரை கிஞ்சித்தும் பயப்படாமல், எவருக்கும் தலை வணங்கிடாத பாஞ்சாலங்குறிச்சி அதிபதியாய் நிமிர்ந்து நின்று கொண்டிருந்த கட்டபொம்மன், அமர்ந்திருந்த எட்டயபுரத்து பாளையக்காரனையும், சிவகிரி பாளையக்காரனையும் சுட்டெரிப்பது போல பார்வையை வீசிவிட்டு என்னை நோக்கி நடந்து வர ஆரம்பித்தார் பலத்த பாதுகாப்புடன்.

என் மனது திக் திக்கென்று அடித்துக் கொண்டது.

தன்னுடைய வலது பக்கத்திலும், இடது பக்கத்திலும், திக்பிரமை பிடித்தவர்கள்போல் அமர்ந்திருந்த பாளையக்காரர் களைப் பார்த்துக் கொண்டே நடந்தார். பார்வையில் அலட்சியம் இருந்தது. நடையில் துணிவும், தீவிரமும், திடமும் தெரிந்தன.

"என் தம்பி ஊமைத்துரை..."

- வார்த்தைகள் மட்டும் கலக்கமாய் வந்தன.

ஒரு கும்பெனிப்படை வீரன் வேகமாய் ஓடிவந்து, என் மீது ஏறினான் வேகமாய் அதிவேகமாய்... அந்த குறிப்பிட்ட கிளையில் கயிற்றைக் கட்டி முடிச்சிட்டான்.

கயிற்று முடிச்சை கீழே தொங்கவிட்டான்.

அதற்குள் இன்னொருவீரன், ஒரு சிறிய ஏணிப் படியை தொங்கும் கயிற்றுக்கு நேர் கீழே கொண்டு வைத்தான். அந்த ஏணி தற்காலிகமாக செய்யப்பட்டது. ஐந்து படிகளை மட்டும் கொண்டிருந்தது. என் மனதுக்குள் உதறல் எடுத்தது.

கட்டபொம்மன் என்னை நெருங்கி வந்திருந்தார்.

அந்த வீரத் திருமுகத்தை பார்த்துக் கொண்டே இருக்கலாம் போலிருந்தது.

தொங்கிக் கொண்டிருந்த கயிற்றை ஏறிட்டுப் பார்த்தார்.

உதடுகள் முணுமுணுத்தன அனிச்சை செயலாய்.

"போரில் நான் மரணமடைந்திருந்தால் நலமாயிருந் திருக்கும்" - கட்டபொம்மன் கம்பீரமாய் நடந்து ஏணியை தொட்டார்.

என்னைச் சுற்றி ஆண்களும் பெண்களுமாய் கூட்டம் கூடியிருந்தது.

அந்த ஏணியின் ஐந்து படிகளில் ஏறி மேலே வந்தார் கட்டபொம்மன்.

ஏதோ சிந்தனையில் ஆழ்ந்திருப்பது போலிருந்தது முகம்.



தொண்டையை ஒரு முறை கனைத்துக் கொண்டார்.

தன்னைச் சுற்றி நின்று கொண்டிருந்த கூட்டத்தை கண்களால் வலம் வந்தார் கடைசியாய். உதட்டோரம் புன்னகை நெளிந்தது.

தூக்கு கயிற்றின் வளையத்துக்குள் தலையைச் செருகினார்.

என் மேனி பயத்தில் நடுங்குவதை உணர்ந்தேன்.

சுற்றி நின்று கொண்டிருந்த வெள்ளைச் சிப்பாய்களும், இந்திய முக பிரிட்டிஷ் சிப்பாய்களும் பேச மறுக்கும் ஓவியங்களாய், நின்று கொண்டிருந்தனர் நிசப்த நிலையில்.

அடுத்த விநாடி நான் நடுங்கிப் போனேன்.

சுற்றி நின்றவர்கள் உடம்பும் ஒருமுறை பயத்தில் உதறி யிருக்க வேண்டும். ஓங்கிய குரலில் சப்தமிட்டார் கடைசியாய்:

'ஓ... முருகக் கடவுளே...'

- காலடியிலிருந்த ஏணியை தானே உதைத்து தள்ளினார். தூக்கு கயிறு கழுத்தை இறுக்கியது. மேனி துடித்தது. அந்த கிளையை துண்டித்து விடலாமா என்று மனம் பரபரத்தது. இயலாமையில் இதயம் அரற்றியது.

அந்தக் கூட்டத்திலிருந்த பெண்கள் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தது.

கட்டபொம்மனின் சுமையில் தள்ளாடினேன்.

அது வேதனைச் சுமை.

அறுபது நிமிடம் கட்டபொம்மன் உடல் வேடிக்கை பொருளாய் தொங்கிக் கொண்டிருந்தது.

அந்த இரண்டு மணிநேரம் நெருப்பில் நிற்பது போல் துடித்தேன்.

என் வாழ்க்கையின் வேதனை நிமிடங்கள்...

கட்டபொம்மனின் உடல் தூக்கு கயிற்றிலிருந்து இறக்கப் பட்டு, இறுதி சடங்குகளுக்காய் அருகிலிருந்த இடிந்த கோயிலை நோக்கி எடுத்துச் செல்லப்பட்டது.

இரவு வந்திருந்தது.

சற்று தொலைவில் கட்டபொம்மன் உடலை எரிக்கும் நெருப்பு ஆடிக்கொண்டிருந்தது.

அந்த இரவில் வடகிழக்கு பருவகாற்றுக் கூட என்னை இம்சைப் படுத்தியது.

கரிய இருட்டில் ஓர் உருவம் நடந்து வந்து கொண்டிருந்தது என்னை நோக்கி.

அந்த உருவம் - பெண்.

என் காலடியில் வந்து அமர்ந்தாள்.

விம்மி விம்மி அழ ஆரம்பித்தாள்.

'யார் இவள்... ஏன் அழுகிறாள்...'

- நான் யோசித்துக் கொண்டிருக்கும் பொழுதே கண்ணீரை துடைத்தபடி எழுந்தாள். இடிந்த கோயிலை நோக்கி நடந்தவள் நின்றாள்.

திரும்பி என்னைப் பார்த்தாள். குனிந்து ஏதோ எடுத்தாள். என்னைக் குறிவைத்து வீசினாள்.

'அம்மா'



- வலியில் துடித்துப் போனேன்.

என் மேனியைக் காயப்படுத்திய கருங்கல் என் காலடியில் விழுகிறது.'

இன்று வரை என் வேதனை தொடர்கிறது.

இனியும் உனக்கு உயிர் வாழ விருப்பமில்லை.

இறந்து போகவே நினைக்கிறேன்.

கல்லடியும் சொல்லடியும் என்னை வதைக்கிறது.

பூவும் இன்றி... பிஞ்சும் இன்றி... கண்ணீரோடு நிற்கிறேன்.

கட்டை புளிய மரம் பட்ட மரமாகும் நாள் வெகு தொலைவில் இல்லை.

ஒரு சொட்டு தண்ணீர் கூட அருந்தாமல்... இறந்து போகும் இறுதி முடிவுக்கு வந்து விட்டேன்.

'யாராவது சொல்லுங்கள்.

கட்டபொம்மன் மரணத்துக்கு நான் காரணமில்லை.'

***- தேவி வார இதழ்***

## 6

# பொய்க்கால் குதிரைகள்

(*அமுரசுரபி மாத இதழ் நடத்திய சிறுகதைப் போட்டியில் இரண்டாம் பரிசுபெற்ற கதை)

*பதினெட்டு ஆண்டுகளுக்கு முன்பு மதுரா எழுதிய கதையை இப்போது படிக்கும் போது புதிய கதையைப் போலவே பொய்க்கால் குதிரைகளைப் படித்தேன். 'இலக் கியத்தரம்' என்று கூறுகிறார்களே அதற்கு இலக்கணம் இது போன்று எப்போது எடுத்துப் படித்தாலும் அந்தக் கதை மாந்தர்கள் நம்முடன் பேச வேண்டும். இந்தக் கதை கிறித்துவ சமயத்தில் வாழும் பாத்திரங்களின் கிராம வாழ்க்கையைச் சித்திரிக்கிறது. எந்தச் சமயமானாலும், மார்க்கமானாலும், புரட்சி இயக்கமென்றாலும் சாதிப் பேய் ஆட்கொள்ளாமலிருப்பதில்லை.*

*'பொய்க்கால் குதிரைகள்' சின்னஞ் சிறுகதை,*

*கதை விறுவிறுப்பாகச் சென்று மனித அவலங்களை வெளிப்படுத்துகிறது. பாண்டி என்ற கதைப் பாத்திரம் பலமுறை சிறைக்குள் போய் வந்தாலும் அவன் உள்ளத்தில் நேர்மை, மனித நேயம நிறைந்திருக்கிறது.*



*இந்தக் சிறுகதை இன்றைய சமுதாயத்தில் சமயம் மாறினாலும் சாதி வேற்றுமை மாறாத சூழ்நிலையைச் சுட்டிக் காட்டுகிறது. அரிவாள் வெட்டு, குத்து இப்படியே குற்றங்கள் செய்த பாண்டியின் மனித நேயம், உயர் இலட்சியம் மிக எளிய நடையில் சின்னத் திரைப்படம் போல் வெளிச்சமிடுகிறது. குறும் படம் எடுப்பவர்கள் இந்த 'பொய்க்கால் குதிரைகள்' போன்ற பயனுள்ள சிறு கற்பனை – பெரிய தத்துவம் கொண்ட சிறுகதைகளைத் தேர்ந் தெடுக்க வேண்டும்.*

*சிறுகதை இலக்கியத்துக்கு நல்ல இலக்கணம் இந்த 'பொய்க்கால் குதிரைகள்.'*

*மதுராவின் எழுதுகோல் இது போன்ற பல கதைகளை படைக்கட்டும். அகிலன், கோவி. மணிசேகரன், ஜெயகாந்தன் போன்று 'பரிசு' மழையில் மதுரா நன்றாக நனையட்டும்.*

**- எழுத்தாளர் விக்கிரமன்**

**தி**டுக்கிட்டு விழித்துக் கொண்டான் பாண்டி. அவன் கேட்ட சத்தம் நிஜந்தானா என்ற சந்தேகம் வந்தது. என்னவோ சின்ன வயதில் இருந்தே, அந்த முதல் சத்தத்தில் ஒருகணம் உடம்பு ஆடிப்போகும். காதுகளைக் கூர்மையாக்கிக் கொண்டு காத்திருந்தான். "ட்டணங்..." நிஜம்தான். யாரோ இறந்து போய்விட்டார்கள். "ட்டணங்..." அந்த ஒலியின் அதிர்வுகள் காற்றில் தொலைந்து போனாலும், அடுத்த அடி... அடுத்த அடி என்று துக்க மணி சோகமாய்த் தொடர்ந்தது.

பாண்டி படுத்திருக்க முடியாமல் எழுந்து அமர்ந்தான். அவன் இருந்த ஒட்டுத் திண்ணை தெருவைப் பார்த்திருந்தது. மடியிலிருந்த ஒரு பீடியை எடுத்துப் பற்ற வைத்தான். புகையை நெஞ்சு முழுவதும் நிரப்பிக் கொஞ்சம் கொஞ்சமாக வெளியே விட்டான்.

சாமுவேல் பாட்டி இறந்திருக்குமோ...? நேத்து நாகர்கோயில் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போன ஈசாக்கு தாத்தா செத்துப் போயி ராத்திரியோட ராத்திரியா திரும்பக் கொண்டு வந்துட்டாங்களா...? புகையும், அவன் சிந்தனைக்குப் போட்டியாக அவனைச் சுற்றியே வட்டமிட்டது.

யாராயிருக்கும்...? எழுந்து தெருவுக்கு வந்தான். தெரு யாருமில்லாமல் அமைதி காத்தது. இருட்டு, அரை மனதுடன் விலகிக் கொண்டிருந்தது. கிழக்கு கிறிஸ்தவக் கோயில் நிமிர்ந்து நின்றது.

மடித்துக் கட்டிய வேட்டியும், திறந்த மார்புமாக மோசண்ணன் வெளியே வருவதை கவனித்தான் பாண்டி.

"மோசண்ணே.மண்டையைப் போட்டது யாரு...?"

துக்க மணிச் சத்தத்திலதான் எழும்பி வெளியே வாரேன். அன்னா கோயில் குட்டி வாராரு. அவரு கிட்ட கேட்டா தெரிஞ்சிட்டுப் போவுது."

கிழக்கேயிருந்து வெள்ளை வேட்டி, வெள்ளை சட்டையில் கோயில் ஊழியர் வந்தார்.

"கோயில் குட்டியாரே, செத்துப் போனது யாரு?"

"ஜேசையா வாத்தியாரு."

"ஜேசையா வாத்தியாரா...?" இரண்டு பேரும் ஒரே நேரத்தில் கேட்டார்கள். நேத்து... நேத்து கூட நல்லாதானே இருந்தாரு? இந்த வருஷம் திருவிழாவுக்கு டிராமா உண்டா சார்ன்னு கேட்டேன். எஸ்தர் சரித்திரத்தைப் போட்டுடுவோம். நீங்களும் நடிக்கணும்னு சொன்னாரே... எப்படி... எப்படிச் செத்தாரு...?"

"ராத்திரி ஒரு மணிக்கு நெஞ்சை வலிக்குதுன்னு சொன்னாராம். பிச்சைமுத்து டாக்டரைக் கூப்பிட்டு வறதுக்குள்ள செத்துப் போயிட்டாராம்... ம்... நல்ல மனுஷன்... நல்ல சாக்காலம்."



"எப்படி மனுஷன்... சாக வேண்டிய மனுஷனா அவரு? வேத்து சாதிக்கார மனுஷன்னு யாராவது ஊர்ல நினைச்சதுண்டா? இல்லாட்டி வாத்தியார்தான் அந்த எண்ணத்தில நடந்திருக்காரா? ஊர்ல என்ன காரியம் நடந்தாலும் முன்னால நிப்பாரு... ம்... எத்தனை பேரு வாழ்க்கையில விளக்கேத்தி வைச்சிருக்காரு."

மோசண்ணனின் பெரிய உடம்புக்கும், அவருடைய புலம்பலுக்கும் பொருத்தமில்லாதது போல் இருந்தது.

"நல்ல சாக்காலம்" ஒற்றைச் சொல்லை உதிர்த்துவிட்டு, ஞானையா ஓட்டல் காபிக்காக வேக நடை நடந்தார் கோயில் ஊழியர். பாண்டி, ஜேசையா வாத்தியார் வீட்டை நோக்கி நடந்தான்.

ஜேசையா வாத்தியார் வீட்டு முன் பள்ளிக்கூடத்துப் பெஞ்சுகள் நிறையப் போட்டிருந்தார்கள். பெஞ்சுகளை சட்டை போடாதவர்கள் நிரப்பியிருந்தார்கள். உள்ளேயிருந்து அழுகைக் குரல்கள் தீனமாய்க் கேட்டன.

'மஞ்சி'க்கரையில் வயதாவனர்கள் குத்துக்காலிட்டு வெள்ளைக்காரன் காலத்தில் லயித்திருந்தார்கள். மெம்பர் டேவிட் ஓடியாடி வேலைகளைக் கவனித்துக் கொண்டிருந்தார்.

சற்றுத் தள்ளியிருந்த பூவரசு மரத்தடியில் துண்டை விரித்துக் கண் மூடி அமர்ந்திருந்தான் பாண்டி.

"பாண்டி! உனக்கு அப்பா இல்லை. அம்மா இல்லை. ஒரு கல்யாணத்தைப் பண்ணிக்கிட்டு ஒழுங்கா இருந்தா என்னப்பா?"

"வருஷத்தில பாதி நாள் ஜெயில்ல இருக்கிற எனக்கு யார் சார் பொண்ணு தருவாங்க?"

"உனக்கு நல்ல பொண்ணாப் பார்த்துக் கல்யாணம் செய்து வைக்க வேண்டியது என் பொறுப்பு. அதுக்கு முன்னால் எனக்கு ஒரு சத்தியம் பண்ணிக் குடு."

"சத்தியமா...?"

"சத்தியம்தான். இனிமே எந்தக் காரணத்தைக் கொண்டும் அரிவாளைத் தொட மாட்டேன்னு சத்தியம் பண்ணு."

-சிறிது நேரத் தயக்கத்துக்குப் பின், "கல்யாணத்துக்காக இல்லை. உங்களுக்காக," ஜேசையா வாத்தியார் கையில் அடித்துச் சத்தியம் செய்தான் பாண்டி. இரண்டு நாளில் சத்தியத்தை மீறியதால் ஆறுமாதம் 'ஜெயில் களி' சாப்பிட்டு விட்டு நேற்றுதான் வந்திருந்தான்.

தடுமாற்றத்துடன் அந்த சைக்கிள் வந்தது. பின்னால் நீளமாய் சவப்பெட்டி இருந்தது. நெருங்காமலே சாராய நெடி வீசியது. அவசரமாய் சவப்பெட்டி இறக்கப்பட்டது.

பூவரச மரத்தடியில் பாண்டி அமர்ந்திருந்த இரண்டு மணி நேரத்தில், ஐந்து பாட்டில் சாராயம் அவசரமாய்ச் சென்று சவக்குழி வெட்டியிருந்தது. உறவினர்களுக்குத் தகவல் சொல்லியிருந்தது. இப்பொழுது அழுகை கொஞ்சம் அதிகரித்திருந்தது. ஊர் மொத்தமும் வீட்டைச் சுற்றிக் கூடியிருந்தது.

அந்த நேரம்தான் பரபரப்பாய் மெம்பர் சாமுவேல் ஓடி வந்தார். அவர் முகத்தில் கலவரம். அவரைச் சூழ்ந்து கொண்டவர்கள் அவசரமாய் வாங்கிக் கொண்டார்கள். வந்த வேகத்தில் மெம்பர் சாமுவேல் திரும்பி விட்டார். இரண்டு பேர், மூன்று பேராய்-கிசுகிசுத்தார்கள்.

சாமுவேல் என்ன சொன்னார் என்றோ, என்ன பேசிக் கொள்கிறார்கள் என்றோ பாண்டிக்குப் புரியவில்லை. அவன் யோசித்துக் கொண்டிருக்கும்போதே கூட்டம் பாதியாய்க் கரைந்திருந்தது.



கொஞ்ச நேரத்தில் பாதிரியாரும், சின்னச் சின்ன தேவதைகளாய் வெள்ளை அங்கியில் பத்து சிறுவர்களும் வந்தனர். குளிப்பாட்டிப் புத்தாடை அணிந்த ஜேசையா வாத்தியாரின் உடல் சவப் பெட்டிக்குள் வைக்கப்பட்டது.

மரத்து நிழலில் இருந்த பாண்டி எழுந்து கொண்டான். நெருங்கிப் போய்ப் பார்த்தான். வாத்தியார் முகம் ஏதோ ஆழ்ந்த கவலையில் இருப்பது போலிருந்தது. சவப்பெட்டி மூடி வரிசையாய் ஆணி அடிக்கப்பட்டது. பெண்கள் சத்தமாய் அழுதார்கள்.

அந்தோணி புகை வழியும் மண்கலசத்தை எடுத்துக் கொண்டு முன்னால் நடக்க, வெள்ளை அங்கிச் சிறுவர்களும், பாதிரியாரும் பின் தொடர, நான்கு பேர் சவப்பெட்டியைத் தூக்கிக் கொண்டு நடந்தார்கள். அழுதபடி இரண்டு மகள்களும் பின்னால் ஓட, பெண்கள் கூட்டம் தடுத்து நிறுத்தியது. எழுபது, எண்பது பேர் பின்னால் நடந்தார்கள்.

"உச்சித மோட்ச பட்டணம் போக
ஓடி நடப்போமே - அங்கே
உன்னத இயேசு மன்னவருண்டு,
ஓயா இன்பமுண்டு."

-அங்கிச் சிறுவர்களின் பாடலைத் தொடர்ந்து மொத்தக் கூட்டமும் கிறிஸ்தவக் கோயிலை நோக்கி நடந்தது. பாண்டி குறுக்கு வழியில் கோயிலை அடைந்தான்.

தூரத்தில் கேட்ட பாடல் கொஞ்சம் கொஞ்சமாய் நெருங்கிக் கோயிலை சமீபித்தது. சவப்பெட்டி கோயில் முன் மண்டபத்தில் இறக்கி வைக்கப்பட்டது. திரும்பிப் பின்னால் பார்த்தவனுக்கு அதிர்ச்சி. கூட்டம் மண் கலசப் புகையாய்க் கரைந்து போயி ருந்தது. சுமார் முப்பது பேர் தான் நின்று கொண்டிருந்தார்கள்.

அவர்கள் முகத்தில் கலவரம். எதையோ எதிர்பார்த்துக் கொண்டிருப்பது போலிருந்தது.

ஜெபம் முடிந்து மீண்டும் சவப்பெட்டி தூக்கப்பட்டது. ஊர்வலம் கல்லறைத் தோட்டத்தை நோக்கி நடந்தது. கூட்டத்திலிருந்து ஒவ்வொருவராய்த் தயங்கி, பின்வாங்கி, சட்டென்று காணாமல் போனார்கள்.

பாண்டிக்கு ஆச்சரியமாயிருந்தது. எதற்காக ஒவ்வொருவரும் நழுவிப் போகிறார்கள்? மெம்பர் சாமுவேல் என்ன சொல்லியிருப்பார்? என்ன நடந்திருக்கும்? நூற்றம்பது பேர் கூடியிருந்த இடத்தில் கடைசியில் கல்லறைத் தோட்டத்துக்குச் செல்லும் மண் ரோட்டை அடைந்தபோது பதின்மூன்று பேர்தான் மீதமிருந்தார்கள். என்னவாயிருக்கும்..?

இதற்கு விடை சொல்வதற்காகப் பத்து, இருபது பேர் நடுரோட்டில் நின்று கொண்டிருந்தார்கள். அவர்கள் கையில் வேல் கம்பு, அரிவாள்.

“பெட்டியை கீழே வைங்கல...”

கூட்டம் ஸ்தம்பித்து நின்றது. பெட்டி சுமந்தவர்களுக்கு அவசரமாய் வியர்த்தது.

“காதில விழல? பெட்டியைக் கீழே இறக்கி வைக்கச் சொன்னேன்” – அரிவாள், கம்பு வைத்திருந்தவர்களின் முன் வரிசையில் நின்ற பிரசிடெண்ட் சிகாமணி குரல் சீற்றமாய் வந்தது. சவப்பெட்டி பயத்துடன் தரை இறங்கியது. பாதிரியார் முன்னால் வந்தார். சாந்தமான குரலில் –

“எதுக்காக சிகாமணி பெட்டியைக் கீழே இறக்கி வைக்கச் சொன்னீங்க..?”

“இந்தப் பெட்டி எங்கே போகுது...? சிகாமணி எதிர்க் கேள்வி கேட்டார்.



“கல்லறைத் தோட்டத்துக்கு.”

“வடக்கே இருக்கிற கல்லறைத் தோட்டம் நம்ம ஜாதிக்காரங்களுக்கு. ஜேசையா மாதிரி குறைஞ்ச சாதிக் காரங்களுக்கு இல்லை. தெக்க இருக்கிற புறம்போக்கு நிலத்தில கொண்டு போயிப் புதைங்க. பெட்டியை எடுத்துக் கிட்டுத் திரும்பி நடங்க.”

“சிகாமணி இயேசு...” ஏதோ சொல்ல வாய் திறந்த பாதிரியாரின் முன்நெற்றியில் கல் ஒன்று தாக்கியது.

“ஆ...” என்று முனகியபடி பாதிரியார் நெற்றியைப் பிடிக்க, இரத்தம் அவசரமாய் வழிந்தது. பாண்டி கோபமாய் முன்னால் வந்தான்.

“ஜெபம் பண்ண வந்த சாமியாரைக் கல்லால அடிக்கிறது பெரிய ஆம்பிளைத்தனமால...? எல்லாக் கல்லறையிலேயும் சிலுவைதானல வைச்சிருக்குது? நேத்து வரை நீங்களும் அவரும் ஒரே சாமியைத்தானல கும்பிட்டீங்க? அவரை ஏன்ல இன்னிக்குத் தனியாய் புதைக்கணும்?”

“பாண்டி, நீ இதில தலையிடாத... உனக்கு இது புரியாது.”

“எதுய்யா புரியாது...? நான் படிச்சது இரண்டாங் கிளாசுதான். ஆனா நாக்கு இரண்டு இல்ல. உசுரோட இருக்கும்போது மேடையிலே சேர் போட்டு வைச்சி, ஊருக்கு நன்மை செய்ற வாத்தியார் தெய்வம் மாதிரின்னு மைக்கைக் கையில பிடிச்சிக் கிட்டுச் சொன்னே... நாங்க கை தட்டினோம். இன்னிக்கிப் பிணமா பெட்டியில இருக்கும்போது, வழி மறிச்சி, கீழ் சாதிப் பொணம், திரும்பிப் போன்னு அரிவாளைக் கையில் பிடிச்சிக்கிட்டு சொல்றே... நாங்க கை கட்டி நிக்கணும், அப்பிடித்தானே..?”

–பாண்டியைக் கொஞ்சமும் இலட்சியம் செய்யாமல், சவப்பெட்டியைச் சுற்றி நின்றவர்களை, தம் சிவந்த கண்களால்

எரித்து விடுவது போல் பார்த்தார் சிகாமணி. பாதிரியார் கைக்குட்டையால் நெற்றியை அழுத்திப் பிடித்தபடி சற்று விலகி நின்றார்.

"எலே சொரணை கெட்ட பய புள்ளைகளா... பாண்டி தான் விவரங்கெட்டத்தனமா ஏதோ பேசுறான்னா, உங்களுக்கு புத்தி எங்கல போச்சி..? கீழ் சாதிக்காரப் பொணத்தைச் சுமக்கக் கூடிய அளவுக்கு, ஏழு தோல்லயும் உணர்கெட்டுப் போச்சால?"

-பெட்டியைச் சுற்றி நின்றவர்கள், தயக்கமாய் சற்று விலகினார்கள்.

"யோவ் சிகாமணி! உம்மை மாதிரி ஊருக்கு இரண்டு பேரு இருந்தா, இருக்கிற சாதி போதாதுன்னு புதுசா நாலு சாதி முளைச் சிடும். உம்ம பையன் கிணத்துல விழுந்து ஆஸ்பத்திரியில இருக்கும்போது வாத்தியார் இரத்தம் குடுத்தாரே ஞாபகம் இருக்குதா..? அந்த நேரம் கீழ் சாதிக்காரன் இரத்தம் உமக்கு ஒத்துக்கிடும். அவரு பிணத்தைப் புதைச்சா மட்டும், முன்னால புதைச்சவன் எல்லாம் எழுந்து ஊருக்குள்ள வந்துடுவானா?"

"ஏம்ப்பா பாண்டி, மேடையில பேச வேண்டியதை நடு ரோட்ல பேசுறே..?"

"ஆமாய்யா, நீங்கள்லாம் தேர்தல் நேரத்தில மேடையில சொல்றதுக்குத்தான், ஒரே சாதி ஒன்றே குலம்னு நினைச்சிக்கிட்டிருக்கீங்க... நான் அந்தச் சாதி இல்லை. இப்ப நான் இந்தப் பெட்டிக்குத் தோள் கொடுக்கப் போறேன்."

"தோள் குடுக்கிறது தப்பில்ல, தலை குடுத்திடாதே. பிணத்தை வேணும்னா தெற்கே எடுத்துட்டுப் போ"- என்றார் சிகாமணி விஷம் கலந்த நிதான குரலில்.

"வடக்கேதான் எடுத்துட்டுப் போகப் போறேன்."



-பெட்டியைச் சுற்றி நின்றவர்கள் தூரமாய் ஒதுங்கிக் கொள்ள, பெட்டி அனாதையானது. பாண்டி தனியனாய் நின்றான். சற்றுத் தள்ளி அமைதியாய் நின்றார் பாதிரியார்.

சிகாமணி கண் அசைக்க, பாண்டியைக் குறி வைத்து இருபது பேர் அரிவாள், வேல் கம்புடன் நகர்ந்தார்கள். அடுத்த இமை மூடு பொழுதுக்குள்-

-இடுப்பு வேட்டிக்குள் மறைந்து கிடந்த அரிவாள் பாண்டியின் கையில் மினுக்கியது.

"ஜேசையா வாத்தியார் பிணத்துகிட்ட நடந்துகிட்ட முறையில, நீங்கதான் தாழ்ந்த சாதிக்காரன். உங்க கூடப் புதைச்சா அவருக்குத்தான் கேவலம். நடு ஊருக்குள்ள, என் வீட்டு முன்னால புதைக்கப் போறேன். எவனாவது எதிர்த்துப் பேசினா, வெள்ளத்துரை கடையில பத்து வெள்ளை சேலை எடுக்க வேண்டியிருக்கும். சொல்லிப்புட்டேன்... மிக்கேல்! பெட்டியை ஒரு கை பிடி."

-மிக்கேல் ஓடிவந்து பெட்டியைப் பின்னால் பிடிக்க பாண்டி முன்னால் பிடித்துத் தூக்கினான். பிரசிடெண்ட் சிகாமணி வாய் பிளந்து நிற்க, கூட்டம் அசையாமல் நின்றது. சவப்பெட்டியைச் சுமந்து கொண்டு கம்பீரமாய்ப் பாண்டி ஊரை நோக்கி நடக்க, சிவப்பு இரத்தம் சிந்திய வெள்ளை அங்கியுடன் பாதிரியார் பின்னால் நடந்தார்.

*- அமுதசுரபி, ஜூன் 1990*

# 7

# கடைசி இரவு

(*தினமலர் - வாரமலர் நடத்திய சிறுகதைப் போட்டியில் பரிசு பெற்ற கதை.)

*வரலாற்றுப் புதின படைப்பாளியாக புகழ் பெற்றிருக்கிற எழுத்தாளர் மதுரா, தேர்ந்த சிறுகதைப் படைப்பாளியாகவும் இதில் வெளிப்படுகிறார். கதையின் உள்ளடகத்திற்கேற்ற மொழி நடை அவரது ஆளுமைக்குள் உயிர்ப்புடன் இயங்குகிறது.*

*'முதல் இரவு' பற்றி வண்டி வண்டியாக சிறுகதைகள் தமிழில் உண்டு. 'கடைசி இரவு' அரிதானது. நுட்பமானது.*

*முத்துவின் மனப் போராட்டத்தில் வாசக மனசு இழுபடுகிறது. தண்டனையின் இறுதிக் கணத்தில் கதையை துவக்குவதும், குற்றமும், மன ஊசலாட்டமும், ஒழுக்க உணர்வுடன் உரசுகிற பாச உணர்வு மோதிக் கொள்வதும் வெட்டி வெட்டி... விட்டு விட்டு சொல்லப்படுகிற கதையின் உத்தி, கதை உலகுக்குப் புதிது. நெஞ்சாரப் பாராட்டுகிறேன். உள்ளூர வியக்கிறேன்.*

*- எழுத்தாளர் மேலாண்மை பொன்னுசாமி.*



முத்து. நல்ல கறுப்பு. சுவரில் சரிந்திருந்தான். கண்கள் கலங்கியிருந்தன. விடிந்தால் சாகப் போகிறான். ஜெயில் விதிப்படி தூக்கு தண்டனை. கைதிக்கு இருபத்துநான்கு மணி நேரத்துக்கு முன்கூட்டியே தெரியப்படுத்தி விட வேண்டும்.

முத்துவுக்கும் தெரியப்படுத்தி இருந்தார்கள். தெரிவித்ததும் அவனுக்கு 'ஓ'வென்று கதறி அழ வேண்டும் என்று தோன்றியது. தரையில் விழுந்து புரண்டு துடிக்க வேண்டும் போலிருந்தது. ஆனால், இதில் எதையும் செய்யவில்லை. அப்படியே சுவரில் சரிந்திருக்கிறான் - உறைந்து போய்.

அவன் சிந்தனைகள் கழுத்தைச் சுற்றி இறுக்கப்போகும் கயிற்றை சுற்றியே வந்தது. 'தூக்கில் தொங்கும்போது கயிறு அறுந்து விட்டால்... நான் தப்பித்துக் கொள்வேனோ... சட்டப்படி ஒரு முறைதானே தூக்கில் போட வேண்டுமாமே...'

அதே நேரம் -

சிறையின் ஒரு மூலையில்-

தூக்குக் கயிற்றை பரிசோதித்துக் கொண்டிருந்தார்கள்!

முத்துவின் எடையைப் போல் ஒன்றரை மடங்கு எடையுள்ள மணல் மூட்டையை - முத்துவின் கழுத்தை இறுக்கப் போகிற கயிற்றில் தொங்கவிட்டிருந்தார்கள். மூன்று திரிகளாய், நன்றாய் முறுக்கப்பட்ட ஓரங்குல அகல மணிலா கயிறு மணல் மூட்டையை அலட்சியமாய் சுமந்தது.

சோதிக்கப்பட்ட கயிற்றை ஒரு பெட்டியில் வைத்துப் பூட்டி, சாவியைப் பத்திரப்படுத்திக் கொண்டார் ஜெயில் சூப்பரிண்டெண்டெண்ட்.

முத்து அப்படியே மல்லாந்து படுத்தான்.

நான் செய்தது தவறா...அவள் சாக வேண்டியவள்தான். பார்வதி... அவளை அப்படித்தான் அழைக்க வேண்டும்.

பார்வதியை அலற அலற வெட்டிக் கொன்றேன். அந்த நேரம் மனதுக்கு எத்தனை கோபம்... எத்தனை சந்தோஷம்... இந்த வினாடி எல்லாம் கரைந்து... கரைந்து... வெறுமை மட்டுமே எஞ்சி நிற்கிறது!

ஒருமுறை புரண்டு படுத்தான்.

வெளியே சூரியன் காணாமல் போயிருந்தான்.

வேகமாய் இருட்டு வந்திருந்தது. 'அடுத்த சூரிய உதயத்தை நான் பார்க்க போவதில்லை' என்று மனதுக்குள் ஒருமுறை சொல்லிக் கொண்டான். யாரோ நடந்து வரும் ஒலி கேட்டது.

கண்களைத் திருப்பினான். வெளிச்சம் வந்தது. அதைத் தொடர்ந்து பெட்ரோமாக்ஸ் விளக்கைச் சுமந்து கொண்டு காவலாளி ஒருவன் வந்தான். முத்துவின் அறையை ஒரு முறை பார்த்துவிட்டு, வெளிச்சம் அந்த அறைக்குள் விழுமாறு விளக்கைத் தரையில் வைத்தான்.

கரண்ட் திடீரென்று போய் விட்டால் கைதி அந்த நேரத்தைப் பயன்படுத்திக் கொண்டு தற்கொலை செய்து கொள்வார்களாம். அதைத் தடுக்கத்தான் பெட்ரோமாக்ஸ் விளக்கு.

முத்துவின் அறையில் கிடந்த முரட்டுப் போர்வையைக் கூட எடுத்துச் சென்று விட்டார்கள்.

'கைதியைத் தானாய் சாக விட மாட்டார்கள். தேதி குறித்து – நேரம் குறித்து – மனதளவில் சாகடித்து, பின் கயிற்றில் தொங்க விடுவார்களாம்.

கழுத்துச் சதையைப் பிய்த்து விடாமலிருக்க – தூக்கு கயிற்றுக்கு வெண்ணெய் தடவுவார்களாம்.

இது எந்த வகை இரக்கம்?



அமாவாசை, கரிநாள் இல்லாத நல்ல நாள் பார்த்துத்தான் தூக்குப் போடுவார்களாம்.

அமாவாசைக்குச் செத்தால் மட்டும் நரகமா... நல்ல நாளில் செத்தால் மட்டும் நேரே சொர்க்கமா... பெற்ற தாயை வெட்டிக் கொன்ற எனக்கு சொர்க்கம் உண்டா... அட... முட்டாள்... சொர்க்கம் என்ன அடி வானத்திலா இருக்கிறது... எவனோ பிழைப்புக்காகக் கட்டி விட்ட கதை. "டிங்... டிங்... டிங்... டிங்... டிங்... டிங்..."

ஜெயில் கடிகாரம் பன்னிரண்டு முறை அடித்துவிட்டு ஓய்ந்தது.

மனதுக்குள் மரண பயம் எட்டிப் பார்த்தது.

சர்ரக்... சர்ரக்... செருப்புச் சத்தம் கேட்டது.

பெட்ரோமாக்ஸ் விளக்கொளியில்–

நீளமாய் – பூதாகாரமாய் இரண்டு நிழல்கள் அறைக்குள் விழுந்து ஆடியது. அடுத்த நிமிடத்தின் ஆரம்பத்தில் சிறைக் கதவு திறக்கப்பட்டது.

இரண்டு காவலாளிகளுடன் டாக்டர் ஒருவர் உள்ளே நுழைந்தார். முத்து எழுந்து நின்றான். நிதானமாய் பரிசோதித்தார்.

"வாயைத் திற!" என்றார். திறக்கவில்லை. முகத்தை ஒரு முறை அனுதாபமாய் பார்த்துவிட்டு டாக்டர் வெளியேறினார்.

கம்பியைப் பிடித்துக் கொண்டே நின்றான்.

ஜெயில் கடிகாரம் ஒருமுறை அடித்தது.

'இன்னும் நான்கு மணி நேரம்தான். மூச்சுக் குழல் உடைந்து இறந்து போவதற்கு இன்னும் நான்கே நான்கு மணி நேரம்தான்... அதன் பிறகு... அதன் பிறகு எல்லாம் இருட்டுதான். நினைவுகள் எல்லாம் தொலைந்து போகும்... நான்... நான் என்று ஒன்று இருக்குமா...' எத்தனை நேரம் அப்படியே நின்றானோ தெரியாது.

கால்கள் மரத்துப் போனது போல் இருந்தது. அப்படியே உட்கார்ந்து தூரத்து இருட்டை வெறித்தான்.

முத்துவை உறக்கம் எட்டிப் பார்க்கவில்லை. உறக்கத்தை விரட்டிக் கொண்டிருந்தான் - வாசலில் காவல் நின்று கொண்டிருந்த சென்ட்ரி.

மறுபடியும் சிறைக் கதவைத் திறந்தார்கள். காவலர்களுடன் மாஜிஸ்ட்ரேட் உள்ளே நுழைந்தார்.

கையில் காகிதங்கள். பிடிவாதமாய் அமர்ந்திருந்தான். வலுக்கட்டாயமாய் தூக்கி நிறுத்தினார்கள் காவலர்கள்.

கையிலிருந்த காகிதங்களைக் கூர்ந்து பார்த்துவிட்டு முத்துவைப் பார்த்தார். மச்சம், தழும்பு என்று வெளிச்சத்தில் அடையாளம் பார்க்கப்பட்டான். 'நான்தாய்யா... தாயைக் கொன்ற முத்து நான்தான். விடியும் முன்னே தூக்குப் போடப்பட வேண்டிய ஆள் நான்தான்.' திருப்தியான தலையசைப்புடன் காகிதங்களில் கையெழுத்திட்டு விட்டு நிமிர்ந்தார்.

"ஏதாவது கடைசி ஆசை?"- உயிரில்லாமல் வந்து விழுந்தன வார்த்தைகள். அவரை ஏறிட்டுப் பார்த்தான். நான்கு கண்களும் சந்தித்துக் கொண்டன. 'இதென்ன அபத்தமான கேள்வி' என்பது போல முத்துவின் கண்கள் சிரித்தன. அவமானப்பட்டது போல் உணர்ந்தார். அவசரமாய் தலைகுனிந்து வேகமாய் வெளியேறினார்.

கதவு மீண்டும் பூட்டப்பட்டது.

வேகவேகமாய் தனிமை உணர்வு சூழ்ந்து கொண்டது.

'பார்வதிக்கு எத்தனை துணிச்சல்... பட்டப் பகலில் யாரோ ஒருவனுக்கு முந்தானை விரிக்க வேண்டும் என்றால் எந்த அளவுக்கு நெஞ்சழுத்தம் இருக்க வேண்டும்... அவளை அந்த இடத்திலேயே வெட்டிக் கொன்றது நியாயம்தான். அதில் தப்பேயில்லை. அவள் நல்ல தாயாக நடந்து கொள்ளவில்லை...'



'பொய்... பொய்' - என்றது மனதின் ஒரு மூலை.

'தந்தையின் முகமே பார்த்தறியாத உனக்கு பசித்த நேரமெல்லாம் உன் தாய் உணவளிக்கவில்லையா... நீ நாலு எழுத்து படிக்க வேண்டும் என்று அவள் துடிக்கவில்லையா... நீதானே உன் தலையில் மண் அள்ளிப் போட்டாய்... பத்து மாதம் உன்னைச் சுமந்தவளை... நீ வளர உதிரம் தந்தவளை... உதிரம் கொட்ட... உதிரம் கொட்ட நீ கொன்றது சரிதானா...' முத்துவுக்கு மயக்கம் வரும்போல் இருந்தது. தலையில் சம்மட்டியால் அடித்ததை போல் வலி.

'சரிதான்... சரிதான். அந்த பார்வதி... என் கண் எதிரே முகம் அறியா ஆடவனுடன்... நான் செய்தது சரிதான்' கையை ஓங்கித் தரையில் அடித்தான்.

வாசலில் நின்றிருந்த சென்ட்ரி திரும்பிப் பார்த்தான்.

சட்டென்று முகம் திருப்பிக் கொண்டான் முத்து.

ஜெயில் கடிகாரம் நான்கு என்றது. அறைக் கதவு திறந்து கொண்டது.

"ம்... வா, குளிக்கலாம்!' - காவலரின் அழைப்புக்கு மவுனமாய் எழுந்து நடந்தான். தண்ணீர் தயாராய் இருந்தது. தலையிலிருந்து வழியும் சீகைக்காய் தூளுடன், இறுக்கமாய் மூடிய கண்களுடன் பார்வதியின் கையைக் கெட்டியாய் பிடித்தபடி ஓடுகின்ற ஆற்று நீரில் மூழ்கியதும், அதன் ஜில்லிப்பும் நினைவில் வந்தது. வேகமாக சொம்பில் தண்ணீரை மொண்டு மடமடவென்று தலையில் ஊற்றி விட்டு வெளியே வந்தான்.

கண் முன்னே நீண்ட கரங்களில், புத்தம் புதிய ஜெயில் ஆடை.

ஒவ்வொரு தீபாவளிக்கும், பொங்கலுக்கும் கேட்காமலே புது ஆடை வாங்கித் தரும் பார்வதி ஞாபகம் வந்தது.

ஆடையை அணிந்து கொண்டு சிறை அறைக்கு வந்தான்.

காவலர்கள் விலக, தனித்து விடப்பட்டான்.

நேரம் நெருங்கி விட்டது. நமக்கு இஷ்ட தெய்வம் எது... யாரை வணங்குவது... யார் நம்மை காப்பாற்றப் போகிறார்கள். மனம் முழுவதும் குழப்ப மேகங்கள். ‘எதற்காக பார்வதி தவறு செய்தாள்... காமம் அவளை தள்ளி விட்டதா... தள்ளப்பட்டதற்கு யார் காரணம்... என் தந்தையா... ஐம்பது வயதில் இருபது வயது பார்வதியை சேர்த்துக் கொண்டது தவறா... அவளை பாதியிலேயே விட்டு விட்டு செத்துப் போனாரே அது தவறா...’ முகத்தில் வேதனையாய் சிரிப்பொன்று விரிந்தது.

நிறைய பூட்ஸ் கால்கள் தரையை உரசும் ஒலி கேட்க-எழுந்து நின்றான்.

கைகள் மெலிதாக நடுங்கின. கண்களில் பயம் வந்திருந்தது. கைகளைப் பின்னுக்கு இழுத்துக் கட்டினார்கள்.

விடிகாலை தூக்குப் போடச் சரியான நேரம் என்று ஜெயில் சட்டம் 555 சொல்கிறதாய் வார்டன் சொன்னது நினைவில் வந்தது.

மெலிதாகச் சிரித்தான்.

வரண்டாவிற்கு அழைத்துச் சென்றார்கள். கரையோர மீனின் அவசர சுவாசிப்பாய் அந்த இடத்தைக் கடைசியாய் பார்த்தான்.

‘அங்கே அறைகளில் தூங்கிக் கொண்டிருக்கும் கைதிகள் விடிந்ததும் தங்களில் ஒருவன் மாயமாய் போய் விட்டதை உணர்வார்கள்’ - துக்கமும், பயமும் கலந்தவனாய் நடந்தான்.

தூக்கு மேடைக்கு இன்னும் சிறிது தூரம்தான் இருந்தது. கால்கள் மெலிதாக நடுங்கின. கனவிலே கால் அசைக்கும் சிரமத்தை நிஜத்தில் உணர்ந்தான்.



பார்வதி முகம் முன் வந்தது.

‘கழுத்தை கயிறு பலமாய் இறுக்குமோ... தாங்க முடியாத அளவுக்கு வலி இருக்குமோ... குரல்வளை எலும்பு நொறுங்கிப் போகுமோ... தண்ணீருக்குள் அமிழ்ந்தவன் போல் மூச்சுத் திணறுமோ... நான் இறந்த பிறகு என்ன ஆவேன்... உயிர் என்று ஒன்று உண்டா..? அது எங்கே போகும்... பால்பாண்டித் தாத்தா சொன்னது போல நூல் ஏணி ஏறி எமனிடம் போகுமா...’

அவன் இப்பொழுது நடக்கவில்லை. நடத்தப்பட்டான்.

மேடைக்கு வந்திருந்தான்.

பிளாக் வாரண்ட் படித்துக் காண்பிக்கப்பட்டது.

“உன் தாயை ஈவு இரக்கமில்லாமல் கொன்றுவிட்ட காரணத்தால் இந்தியன் பீனல் கோர்ட் செக்சன் 302இன் படி உன்னைத் தூக்கிலேற்றுகிறோம்!” - காதில் விழாதவன் போல் நின்றான்.

“உனக்கு இறுதி ஆசை ஏதாவது இருந்தால் சொல்லு!”

‘பார்வதியைப் பார்க்கணும்’ என்றது மனது. வாய் திறக்கவில்லை.

கால்கள் கட்டப்பட்டன.

துரைச்சாமி நாடார் தோட்டத்தில் திருட்டு மாங்காய் பறித்ததற்குப் பார்வதி உரலில் கட்டிப்போட்டது நினைவில் வந்தது.

“அரசாங்கத்தின் கட்டளைப்படி இந்தத் தண்டனையை நான் நிறைவேற்றுகிறேன். உனக்கும் எனக்கும் எந்தப் பகையுமில்லை” - என்றான் தூக்கில் போடும் ஆள்.

மரக்கதவின் மேல் கால்களும், கைகளும் கட்டப்பட்ட நிலையில் நின்று கொண்டிருந்தான் முத்து.

சாகடிக்கப்பட வேண்டிய நேரத்தைச் சொல்ல மாஜிஸ்ட்ரேட்-

கைக்குட்டை அசைத்து சாகடிக்கச் சொல்ல ஜெயிலர்-

செத்து விட்டானா என்று சோதித்துச் சொல்ல டாக்டர்கள்-

செத்ததைப் பார்த்ததாய்ச் சொல்ல சாட்சிகள்-

சாவின் பிடியில் இருந்து தப்பி விடாமல் பார்த்துக் கொள்ளக் காவலர்கள்-

-'இவர்கள் எல்லாம் இன்னும் ஒரு மணி நேரத்தில் வரப்போகிற சூரியனைப் பார்க்கப் போகிறார்கள். நான் மட்டும்... நான் மட்டும்...' தூக்குப் போடும் ஆள் கறுப்புத் துணியால் முகத்தைப் போர்த்தினான்.

'இனி நான் வெளிச்சத்தை பார்க்க முடியாது. ஐயோ... நான்... நான்...'

-தூக்குக் கயிறு மாட்டப்பட்டது. உடம்பெல்லாம் வியர்த்துக் கொட்டியது.

'லீவர் சத்தம் கேட்கும். காலடி மரக்கதவு விலகும். கயிறு என் கழுத்தை... 'எம் புள்ளை சின்ன எறும்பு கடிச்சா கூட தாங்க மாட்டான்' பார்வதி... என் கழுத்தை முறிக்கப் போகிறார்கள்... கடைசியாய்... கடைசியாய்... உலகத்தில் இருக்கும் காற்றை எல்லாம் ஒரே மூச்சில் இழுத்து விடுவது போல் சுவாசித்தான். பார்வதி தாய்மைப் பூரிப்பில் சிரித்த முகமும், கடைசியாய் கெஞ்சிய முகமும் மாறி-மாறிக் கண்ணில் வந்தது.

லீவர் இழுக்கும் சத்தம் கேட்டது.

காலுக்கடியில் இருந்த மரக்கதவு விலகியது.

கடைசியாய்-

வேதனையாய் முனகியது வாய்.

"அம்மா!"

*- தினமலர் வாரமலர்*

# 8

# பூ முத்தங்கள்

(*தமிழ் அரசி வார இதழ் நடத்திய சிறுகதைப் போட்டியில் தங்கப் பதக்கம் பரிசு பெற்ற கதை.)

*மதுராவின் பல சிறுகதைகளில் கிராமத்து மக்களின் வாழ்வியல் சுவடுகள் மிக அழகாக பதிவாகியுள்ளன.*

*'பூ முத்தங்கள்' என்ற இந்த சிறுகதையில் மதுரா நெய்தல் நிலத்தில் வாழும் மக்களின் வாழ்வியல் பதிவுகளை மிக நுட்பமாகப் பதித்திருக்கிறார்.*

*'நான்கு விரல் அகலத்தில் இரண்டரை அடி நீளத்தில் இருந்தது மீன்முள். இரண்டு பக்கமும் கூர் முட்கள்?*

*'நானும் கடல் அம்மை பால் குடிச்சி வளந்தவன்தாம்ல'*

*'கடலம்மை சாட்சியா, கடலம்மை வயித்து முத்தை உனக்குத் தாலியா கட்றேன்"*

*– இப்படிப் பல நெய்தல் நிலக் காட்சிகள் மிக இயல்பாக கதையோட்டத்தில் பதிவாகியிருக்கிறது இக் கதையில்.*

*மொத்தத்தில் இச் சிறுகதை நல்ல பல நாட்டார் பதிவுகளைத் தாங்கிய மண் மணம் கமழும் கதையாகத் திகழ்கிறது. எதார்த்தமான பல வாழ்வியல் சுவடுகளை உள்ளடக்கியதாகத் திகழ்வதே இக் கதையின் சிறப்பம்ச மாகும்.*

*- எழுத்தாளர் கழனியூரன்.*

அனிச்சையாய் விழித்துக் கொண்டாள் லட்சுமி. மண் சுவரில் தொங்கியபடி சோகையாய் எரிந்து கொண்டிருந்த சிம்னி விளக்கு கலங்கலாய்த் தெரிந்தது.

வெளியே படுத்திருந்த மரிய சூசையின் குறட்டைச் சத்தம் மெலிதாகக் கேட்டது.

'ஊரே தப்பா நெனச்சிக்கிட்டிருக்குது!...'

மீண்டும் புரண்டு படுத்தாள்.

வெளியே எதோ ஓலையை 'கறுகுறுக்கும்' சத்தம் கேட்டது. "என்னதாயிருக்கும்? எதவாது மாடு கீடு 'செருவை'யில சொறி ராவுதா?..."

எழுந்து அமர்ந்தாள்.

'மிக்கேல் ஆட்டு மாடாத்தான் இருக்கும். அதுக்குத்தான் கெட்டு கிடையாது.'

உறக்கக் கலக்கத்துடன் தரையில் கை ஊன்றி எழுந்தாள்.

பனங்கம்புக் கதவு பிடிவாதமாய், திறக்க மாட்டேன் என்றது.

"இந்த கெட கடத்த கதவைப் பூட்டாமேயே இருக்கலாம். சொன்னா கேட்டாத்தானா?..."

கதவு சத்தமில்லாமல் திறந்து கொண்டது.



நார்க் கட்டிலில் மல்லாந்து படுத்திருந்த மரிய சூசை மங்கலாய்த் தெரிந்தான்.

குறட்டை ஒலி காதில் மோதியது.

திரும்பி வாசலைப் பார்த்தாள்.

அதிர்ந்தாள்.

'படலை' திறந்து கிடந்தது.

செருவை ஓரத்தில் நான்கைந்து பேர் நின்று கொண் டிருப்பது நிலவொளியில் மங்கலாய்த் தெரிந்தது.

இதயம் வேகமாய் அடித்துக் கொண்டது.

அவசரமாய் முகத்தில் பூத்தன வியர்வைப் பூக்கள்.

சட்டென்று வாசலில் இருந்து இறங்கி, தூங்கிக் கொண்டிருந்த மரிய சூசையின் கையைப் பிடித்து உலுக்கினாள். அவசரமாய் எழுந்து அமர்ந்தவன் கண்களில் அவர்கள் தெரிந்தார்கள். நிலைமையின் விபரீதம் புரிய இடுப்பை விட்டு விலகியிருந்த 'சாரத்தை' இறுக்கிக் கட்டிக் கொண்டு எழுந்தான்.

மின்னலாய் 'எரப்பில்' செருகியிருந்த மீன் முள்ளைக் கையில் எடுத்தான்.

நான்கு விரல் அகலத்தில் இரண்டரை அடி நீளத்தில் இருந்தது மீன் முள். இரண்டு பக்கமும் கூர் முட்கள்.

"ஏலேய்... எவம்ல அது? ஒரு அம்மைக்கும் ஒரு அப்பனுக்கும் பொறந்திருந்தா, கிட்ட வாங்கல... மரிய சூசையை வீடு மொளைஞ்சி அடிக்க வந்தியலாள?- நானும் கடல் அம்மை பால் குடிச்சி வளந்தவன்தாம்ல... நடத்தை கெட்டவளுக்குப் பொறந்த பயல்களா! வாங்கல முன்னால..."

-மரியசூசையை நோக்கி நகர்ந்தார்கள் அந்த நால்வரும்.

லட்சுமிக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை.

அவன் இடது கையை இறுக்கமாய்ப் பிடித்துக் கொண்டாள்.

“ஏம்ல பயந்து சாவுதிய? மூஞ்சை காட்டுங்கல எனக்கு.”

-வெளிச்சக் கோடு இரண்டு, இருட்டைக் கிழித்துக் கொண்டு வந்தது. அவர்கள் கையிலிருந்த அரிவாள் மினுக்கியது.

அத்தனை கண்களும் மின்னலாய் வெளிச்சம் வந்த திசையில் திரும்பின.

வேகமாய் வந்து கொண்டிருந்தது வாகனம் ஒன்று.

தன் வெளிச்சக் கண்களால் இருட்டை விழுங்கிக் கொண்டு வந்தது.

சட்டென்று ஒருவன் குனிந்து படலைக் கதவை அறுத்து மரியகூசையின் முகத்தைக் குறி வைத்து வீசினான் வேகமாய்.

முகத்துக்கு நேர் வந்த படலையை தன் கையிலிருந்த கூர்முள் ஆயுதத்தால் மின்னல் வேகத்தில் தடுத்துக் கீழே தள்ளினான்.

அதற்குள், நான்கு பேரும் தெருவுக்கு ஓடியிருந்தனர்.

வேகமாய் வந்து கொண்டிருந்த ‘ட்ரக்’ வெளிச்சத்தில்- அவர்கள் ஓடுவது தெளிவாய்த் தெரிந்தது.

அந்த வினாடிதான் உணர்ந்தாள் லட்சுமி - மரியகூசையின் இடது கை புஜத்தை இறுக்கிப் பிடித்தபடி தான் நின்றிருப்பதை.

வெட்கமாய் போய்விட்டது.

அவசரமாய், கையை எடுத்துக் கொண்டாள்.

உடம்பு மெலிதாக நடுங்கியதை அவளால் உணர முடிந்தது.



கையிலிருந்த முள் ஆயுதத்தைக் கோபமாய்த் தரையில் எறிந்தான்.

“இரு. இரு. பாத்துக்கிடுதேன்!” - என்றான், முணு முணுப்பான குரலில்.

லட்சுமி அசையாமல் நின்று கொண்டிருந்தாள் – சாபத்தால் மரமாகிப் போனது போல்.

“என்ன லட்சுமி... கொடி மரம் மாதிரி நின்னுட்டே? எனக்காக இல்லாட்டாலும், உனக்காக என் உயிரைப் பிடிச்சு வைச்சிருப்பா மரியம்மை!” என்று சொல்லிவிட்டு, அலை அடிக்கிற கடலை நோக்கி நடக்க ஆரம்பித்தான்.

கிழக்கு வெளுக்கத் தொடங்கியிருந்தது.

மண்ணில் கால் புதையப் புதைய, கடலை நோக்கி மரியகூசை நடந்து செல்வதைக் கண் இமைக்காமல் பார்த்துக் கொண்டு நின்றாள் லட்சுமி. மனத்துக்குள் ஊர்ந்தன கடலோர நண்டுகள்.

‘நான் எவ்வளவு நேரம் அவர் கையைப் பிடித்துக் கொண்டு நின்றிருக்கிறேன்! அவர் என்னைப் பற்றி என்ன நினைத்திருப்பார்? இவர் பின்னால் வந்து எட்டு மாதமாகிறது. ஒருமுறை கூட, அவர் உடம்பை நானோ - என் உடம்பை அவரோ தொட்டதில்லை. இன்று எப்படித் தொட்டேன்? எப்படி என்னால் தொட முடிந்தது? துணையை இழந்துவிடப் போகிறோம் என்ற பயம் அவர் கையை ஓடிப்போய்ப் பிடிக்க வைத்துவிட்டதா- இல்லை, ஒரு மனிதனின் உயிரைக் காப்பாற்ற வேண்டும் என்ற எண்ணத்தில் எழுந்த வேகத்தால், அவரது கையைப் பிடித்து விட்டேனா? எதுவும் இல்லை. எதுவும் இல்லை. எல்லாவற்றையும் மீறி, ஏதோ... ஏதோ... எதுவா யிருந்தாலும், அவர் என்ன நினைத்திருப்பார்?’

கரையை நோக்கி வேகமாய் வந்த அலை திரும்பிச் செல்வது போல், நினைவுகள் பின்னோக்கி வேகமாய்ச் சென்றன....

கயிற்றில் தொங்கிக் கொண்டிருந்த குழல் விளக்குகள் வெளிச்சத்தை வாரி இறைத்துக் கொண்டிருந்தன.

தவிலும் நாகசுரமும் கலந்து ராகராஜாங்கம் நடத்திக் கொண்டிருந்தது. ஜிகினா மினுமினுக்க, கரகாட்டம் ஆடிக் கொண்டிருந்தாள் லட்சுமி. குழல் விளக்கு வெளிச்சத்தில் தேவலோகத்து ஊர்வசியாய்த் தெரிந்தாள். கால்களைத் தழுவிக்கொண்டிருந்த சலங்கை 'ஜல்... ஜல்' என்று பேசியது; உடம்பெங்கும் மினுமினுத்தன வியர்வைப் பூக்கள்.

அவள் உடல் வளைத்து, துள்ளித் துடித்தாடும் ஆட்டத்தையும், அவள் தலையிலிருந்து சுழல்கிற கும்பத்தையும் வியப்பாய் மக்கள் பார்த்துக் கொண்டிருந்தனர். சில இளவட்டங்களின் கண்கள் அவள் உடலை மேய்ந்து கொண்டிருந்தன. குறுக்கே வந்தான் - தடிமனாய் ஒருவன். ஆட்டம் நிறுத்தப் பட்டது.

தவில் அடிப்பவர்கள் அடியை நிறுத்தினர்.

தடிமனாய் வந்தவன் முகத்தில் அசிங்க 'சிரிப்பானி!' சாராய வாடை குப்பென்று வீசியது.

நெருப்பின் மீது நிற்கும் தவிப்பு லட்சுமிக்கு.

தன் சில்க் சட்டைப் பைக்குள் இருந்து ஐம்பது ரூபாய் தாள் ஒன்றை எடுத்தான்.

''ம்... கிட்ட வா... அன்பளிப்பு குத்தனும்,'' என்றான் கரகரத்த குரலில்.



''கையில குடுத்துட்டுப் போங்க'' என்றாள் லட்சுமி, நடுங்கும் குரலில்.

''ஜாக்கெட்ல குத்துனாதான புள்ளை, ரூபா நோட்டுக்கு மதிப்பு'' என்று சொல்லிவிட்டுச் சிரித்தான், அகலமாக.

''வேண்டாம். கையில குடுக்கிறதா இருந்தாக் குடுங்க'' என்றள் மெல்லிய குரலில்.

அதற்குள், அருகில் வந்திருந்தான் லட்சுமியின் மாமன்.

''இந்த ஊருக்கு வர்ற கும்பாட்டகாரிக, என் கை ஜாக்கெட்ல படணும்னு காத்துக் கிடப்பாளுக, தெரியுமா,'' என்றான் அருவருப்பான குரலில். அதில் கோபமும் கலந்திருந்தது.

''ஏ புள்ள... பேசாம நில்லு. அவரு இந்த ஊரு பெரிய மனுஷன். அவரை முறைச்சா உசுரோட வூட்டுக்குப் போக முடியாது'' என்றான், கொஞ்சம் பாவனையில்.

லட்சுமியின் மாமன் கண்கள் ஐம்பது ரூபாய் நோட்டை வெறித்துப் பார்த்தன.

''நீங்க குத்துங்க மொதலாளி,'' என்றான் இளிப்புடன்.

அந்தத் தடியன் கண்களில் காமம் வழிய, லட்சுமியை நெருங்கினான்.

விளக்குக் கம்பம் போல அசையாமல் நின்றாள்.

அவன் நெருங்கி, ஜாக்கெட்டைத் தொட்டான்.

லட்சுமியின் உடல் நடுங்கியது.

கை இன்னும் கீழ் நோக்கி நகர-

கோபத்தில் பல் கடித்து, கன்னத்தில் ஓங்கி அறைந்தாள்.

''பளார்'' என்ற சத்தத்தில், சுற்றியிருந்த கூட்டம் அதிர்ந்தது.

சட்டென்று கைபிடித்து இழுத்தான். கையை உதறினாள் லட்சுமி.

சுற்றியிருந்த கூட்டம் எழுந்து கொண்டது.

ஐந்தாறு பேர் ஓடி வந்தார்கள்.

"ஆட்டக்கார நாயே...!"

லட்சுமியின் கூந்தலை எட்டிப் பிடித்தான் ஊர்த் தலைவன். குறுக்கே வந்த லட்சுமியின் மாமன் மிதித்துத் தரையில் தள்ளப்பட்டான்.

லட்சுமியுடன் வந்த கலைஞர்கள், துணைக்கு வந்த உறவுக்காரர்கள் உயிருக்குப் பயந்து நான்கு திசைக்கும் சிதறி ஓடினர்.

ஊர்த் தலைவன் கம்பீரமாய் முன்னால் நடக்க-

லட்சுமியை 'தரதரவென்று இழுத்துக் கொண்டு ஒருவன் பின்னால் நடந்தான்.

அவனுக்குப் பின்னால் நான்கு பேர் சென்றனர்.

சட்டென்று பிடித்திருந்தவன் கையை லட்சுமி கடிக்க-

"ஆ!"

-வலி பொறுக்காமல் கையை உதறினான்.

கால் முளைத்த மின்னலாய் ஓடத் தொடங்கினாள்.

ஓடிக் கொண்டிருந்தவள், கால் தடுமாறிக் குப்புற விழுந்தாள்.

விழுந்தவள், தலைதூக்கித் திரும்பிப் பார்த்தாள்.

கண்ணுக்கு எட்டிய தூரம்வரை இருட்டுத்தான தெரிந்தது.

நிம்மதிப் பெருமூச்சுடன் எழுந்தவள் அதிர்ந்தாள்.

உப்புக் கடல் நீர் கால்களில் மோத மோத, நடந்து வந்து கொண்டிருந்தது ஓர் உருவம். அந்த இடத்தைவிட்டு ஓடிவிட வேண்டும் போலிருந்தது. ஆனால், கால்களை அசைக்க முடியவில்லை.



அதற்குள், அந்தக் கறுப்பு உருவம் அவளைக் கவனித்து விட்டது. திரும்பி அவளை நோக்கி கால்கள் மண்ணில் புதையப் புதைய நடந்து வர ஆரம்பித்தது.

"யார் நீ? இந்த ரெண்டுங்கெட்ட நேரத்தில் இங்க ஒனக்கென்ன ஜோலி..." என்று அதட்டலில் கேட்டது.

லட்சுமியின் கண்களிலிருந்து கண்ணீர் மளமளவென்று வழிந்தது.

யாரோ 'தபதப'வென்று ஓடி வரும் சத்தம் கேட்டது.

நான்கு கண்களும் சத்தம் வந்த திசையில் திரும்பின. கையில் ஆள் உயரக் கம்புகள்.

நான்கைந்து பேர் மூச்சிறைக்க ஓடி வந்து இருவரையும் பார்த்து நின்றனர்.

"ஆரு... கருவாட்டு யாவாரி மரிய சூசையா?... இந்த ஆக்கங்கெட்ட கூவை, கீழுரு சின்னய்யாவைக் கைநீட்டி அடிச்சிட்டு ஓடி வந்திடிச்சி." என்றான் உயரமாய் இருந்த ஒருவன்.

"ஏம் புள்ள... ஆட வந்தா ஆடிட்டுப் போக வேண்டியதுதான்? எதுக்கு கை நீட்டி அடிச்சே...?" என்று கேட்டான் மரியசூசை.

"ரூபா குத்துறேன்னு..."

-அதற்கு மேல் பேச முடியாமல் குலுங்கிக் குலுங்கி அழுதாள். அவள் ஜாக்கெட்டில் குத்தப்பட்டிருந்த ஐம்பது ரூபாய் நோட்டு - கடல் காற்றில் படபடத்துக் கொண்டிருந்தது.

"ஏம்ல... ரூபா குத்தறத்துக்கு இந்த இடம்தான் உங்க தலைவருக்குக் கிடைச்சுதா? அவங்கம்மாகிட்ட பால் குடிச்ச இடம் இதுதான்னு மறந்து போச்சா? பொம்பளையை மதிக்கிற மண்ணுல இது! இருக்கிற மண்ணையும், நம்மை நோக்கி ஓடி வர்ற நதியையும், நம்மை வாழ வைக்கிற கடலையும், நாக்கில

புரள்ற மொழியையும் பெண்ணா நினைச்சி மதிக்கிற தமிழ் மண்ணு இது. நீங்கள் என்னடான்னா, பொம்பளையை ராத்திரி விரட்டிக்கிட்டு வர்றீங்க...'' என்றான் இகழ்ச்சி ததும்பும் குரலில்.

''மரியசூசை... செத்த மீன் யாவாராம் பாக்கிற நீ. வீணா செத்துப் போவாத. நாப்பது வயசுவரை தனிக்கட்டையா இருந்துட்டு, இப்ப போய் இந்தக் கும்பாட்டக்காரியைச் சேர்த்து வைச்சுக்கலான்னு பாக்கிறியா? பேசாம, வூட்ல போயிக் கவுந்து விழுந்து படுத்துத் தூங்கு. இங்க நடந்ததை சொப்பனமா நெனைச்சிக்க'' என்றான் குண்டாய் இருந்த ஒருவன்.

''கலையை தெய்வமா நினைச்சி வணங்கிற மனுஷங்க வாழ்ந்த பூமி இது. வயித்துப் பாட்டுக்காக அந்தக் கலையை நடுத்தெருவில ஆட வந்திருக்குது இந்தப் பொண்ணு. ஆட்டத்தை ஆட்டமா பாக்கிற கலையறிவு இல்லாவிட்டாலும், பொம்பளையை உடம்பா மட்டும் பாக்கிற புத்தியாவது இல்லாம இருக்கலாம். ம்... சொல்லிப்புடு, ஒந்தலைவர்கிட்ட. அந்தக் கும்பாட்டக்காரப் புள்ளையை அவ ஊருக்கு மரியசூசை வண்டி ஏத்தி விட்டுப்புடுவான்னு சொல்லு.''

''மரியாதையா சொல்லிப்புட்டேன். அந்தக் குட்டியை எங்ககூட அனுப்பிச்சிடு.''

''அதான் சொல்றேன் இல்ல... வண்டி ஏத்தி அனுப்பிட்றேன்னு..?''

''நீ அவளை ராசாத்தி மாதிரி வண்டியேத்தி அனுப்புறதுக்குதான், நாய் மாதிரி பின்னால விரட்டிட்டு வந்தோமா?''

-ஒரு முரடன் கையிலிருந்த கழியைச் சுழற்றி வீசினான். கழியின் வீச்சு மரியசூசையின் தலையைக் குறி வைத்துவர - சற்றும் அசையாமல், தலையைக் கொஞ்சம் பின்னால் நகர்த்தி, இடது கையை முன்னால் நீட்ட-



அடுத்த இமை மூடு பொழுதுக்குள்-

கம்பு மந்திரத்துக்குக் கண்டதுபோல, மரியசூசையின் கைக்கு வந்திருந்தது. கையில் கம்பு வந்ததும், 'வீடு' மிதிச்சு, சிலம்பத்தில் 'பாணா' சுழற்ற, கம்பு அதிசய வேகத்தில் லாகவமாய்ச் சுழன்றது.

அடுத்த நிமிடத்தின் ஆரம்பத்தில் முரடர்கள் காணாமல் போயிருந்தனர்.

இருவர் மட்டுமே தனித்து நின்றனர்.

''ம்... என் வூட்டுக்குப் போவோமா?'' என்று கேட்டான் மரியசூசை.

வலது காலைத் தூக்கி வைத்தாள். ''ஜல்'' என்றது.....

**தூ**ரத்துக் கட்டுமரங்களை எந்தவித இலக்குமின்றி கண் அசையாமல் பார்த்தபடி நின்று கொண்டிருந்தான் மரியசூசை. கடல் அலைகள் அவன் காலில் மோதி மோதி, தோல்வியுடன் பின்வாங்கிக் கொண்டிருந்ன.

காலில் எதோ விழ, திடுக்கிட்டுச் சுயநினைவுக்கு வந்தான். காலைப் பிடித்தபடி விழுந்து கிடந்தாள் லட்சுமி.

பதற்றமாய்க் குனிந்து அவளைத் தூக்கினான்.

''என்ன லட்சுமி... என்ன இது?...''

-லட்சுமியின் கண்களில் இருந்து கண்ணீர் மளமளவென்று வழிந்தது.

''நான் திருநெல்வேலிக்குப் போயிட்றேன்'' என்றாள், கண்களைத் துடைத்துக் கொண்டே.

"என்ன புள்ள... ஒனக்கு என்ன கோட்டியா புடிச்சிருக்குது? அவசர வெட்டில என்னன்னமோ சொல்றே... 'எனக்கு அம்மையும் இல்லை. அப்பனும் இல்லை. இருக்கிற மாமனும் என்னை வித்துத் திங்கிறத்துக்கு அலையுறான். ஒரு வாய் கஞ்சித் தண்ணி தந்தாலும் குடிச்சிட்டு இங்கேயே விழுந்து கெடக்கிறேன்னு சொன்னே... இப்ப என்னடான்னா, ஊரைப் பாத்து போறேங்கிறே... ஏம்ல... இந்த கருவாட்டு நாத்தம் புடிக்கலியா? இல்லை, என்னையே..."

"வேண்டாங்க... நான் போயிட்றேன்."

"மாமன்கிட்டயா? கரகத்தைச் சுமக்கச் சொன்னா சுமக்கலாம். களங்கத்தை சுமக்கச் சொல்ற ஆளு அவன்."

"தமிழ்ப் பொண்ணுக்கு மானம்தான் பெரிசு. என் மானத்தைக் காப்பாத்தின உங்களை உயிருள்ளவரை மறக்க மாட்டேன். என் நெஞ்சில நீங்க இருப்பீங்க. நீங்க வேற சாதி, மதம். நான் வேற சாதி, மதம்னு இந்த ஊரே பேசுது.

உறவில்லாத ஆணும், ஆணும் ஒரே வீட்ல இருக்கலாம். பெண்ணும் பெண்ணும் சேர்ந்திருக்கலாம். ஆனா உறவில்லாத ஒரு ஆணும் பெண்ணும் சேர்ந்திருக்கிறதை இந்தச் சமுதாயம் ஏத்துக்கிட்றதில்லை, இனியும் நான் உங்களுக்குச் சுமையா இருக்க விரும்பல."

"படகுக்குத் துடுப்பு சுமை இல்லை. பறவைக்குச் சிறகு சுமையில்லை. கொடிக்கு மலர் சுமையில்லை. எனக்கு நீ சுமை இல்லை!" என்றான் கண்களில் கனிவுடன்.

"நான் துடுப்பா இருக்கலாம் நீங்க படகா... நான் சிறகாயிருக்கலாம் நீங்க பறவையா... நான் மலரா இருக்கலாம் நீங்க கொடியா... நீங்க கொடியா இருக்கணும்னா, எனக்கு உறவா இருக்கணும். அந்த உறவை ஏற்படுத்தத் தாலியாலதான் முடியும். நீங்க எனக்குத் தரப் போறது தாலியா, இல்லை, சலங்கையா?"



மெல்லிய குரலில் கேட்டாள் லட்சுமி.

"அந்தக் கேள்வியை கடலம்மைகிட்டே கேளு. நான் வீடுவரை போயிட்டு வர்றேன்." என்று சொல்லிவிட்டுத் துண்டை உதறித் தோளில் போட்டுக் கொண்டு, பனை ஓலை சுமந்த குடிசையை நோக்கி நடந்தான்.

லட்சுமி கடலையே கண் அசையாமல் பார்த்துக் கொண்டு நின்றாள்.

அலைகள் கரையில் மோதிச் சத்தமிட்டன.

கடலம்மை தன்னிடம் பேசுவதாய் உணர்ந்தாள். விழிநீர் சுரக்க நின்று கொண்டிருந்தாள் அசையாமல். காலடி ஓசையில் திரும்பினாள்.

உணர்ச்சியற்ற முகத்துடன் நின்று கொண்டிருந்தான் மரியசூசை. அவன் வலது கையில் இருந்தது சலங்கை. குனிந்து அவள் காலைப் பிடித்து சலங்கையைக் கட்டினான்.

பொங்கிவரும் கடலையே பார்த்துக்கொண்டு நின்றாள்.

பொங்கி வந்தது கண்ணீர்.

சலங்கையைக் கட்டி விட்டு எழுந்தான்.

"கரகம் தமிழ் மண்ணுக்கே உரிய புனிதக்கலை. இப்போ நடுத்தெருவில ஆட்ற விரசக் கலையா ஆகிப் போச்சி. அதை உன்னால மாத்த முடியும்னு நம்புறேன். வாத்தி வீட்டுக்கு பத்துச் சின்னப் பொண்ணுங்களை 'வரச் சொல்லி ஏற்பாடு

பண்ணியிருக்கிறார் கரகம் கத்துக்க.'' என்றான் மரியசூசை.

மொழி புரியாதவள்போல திகைத்துப் போய் நின்றாள்.

''இந்த மனுஷ பயல்கிட்ட ஒடம்பு அழுக்கு மட்டும் இல்ல. சாதிங்கிற 'ஒட்டுவாரொட்டி' சீக்கும் இருக்குது. மதங்கிற பேர்ல அடுத்தவன் கழுத்தை நெறிக்கிற கயிறும் இருக்குது. ஆனா, இந்தக் கடலம்மைகிட்ட எந்த அழுக்கும் கிடையாது. கடலம்மைதான் எனக்கு மாதா - பிதா - குரு - தெய்வம். கடலமை சாட்சியா, கடலம்மை வயித்து முத்தை உனக்குத் தாலியாக் கட்றேன்...'' என்றவன் இடுப்பில் செருகியிருந்த மஞ்சள் கயிற்றை எடுத்தான்.

கயிற்றின் நடுப்பகுதியில் ஒரு பெரிய முத்து தொங்கிக் கொண்டிருந்தது. மஞ்சள் கயிற்றை லட்சுமியின் கழுத்தில் கட்டினான். அப்படியே அவன் மார்பில் சாய்ந்தாள்.

கண்களிலிருந்து வழிந்த கண்ணீர் அவன் மார்பை நனைத்தது.

''வா... வாத்தி வீட்டுக்குப் போயிட்டு வருவோம்.''

-கடல் அலைகளுக்கிடையில், கடற்கரையில் லட்சுமியின் கைபிடித்து நடந்தான். கடலம்மை, அவர்கள் காலடியில் சிதறினாள் நுரை பூ முத்தங்கள்...!

*- தமிழ் அரசி, ஜூன், 1993*

# 9

# மழை இரவு

(*இலக்கியப் பீடம் மாத இதழ் நடத்திய சிறுகதைப் போட்டியில் பரிசு பெற்ற கதை.)

***அண்மையில் ஒரு மோனமான நள்ளிரவில் 'மழை இரவு' கதையைப் படித்தேன். இந்தக் கதையை வாசிக்கும் போது அழுகையைக் கட்டுப்படுத்த முடியவில்லை. சின்னஞ்சிறு முத்துலட்சுமி ஆசையாக வளர்த்த ஆட்டுக் குட்டி, பீரங்கி ஷெல் அடியில் சிதறியதும் சிங்கள இராணுவ தாக்குதலில் கொல்லப்பட்ட தந்தையை எண்ணி எண்ணி ஏங்கி அழும் இந்த பிஞ்சு நெஞ்சு, அதே விதிக்குத் தன் தாயும் பலியானாள் என்பதை அறியாத அவலம். சீறும் கடல் அலைகளில் தட்டாமாலை சுற்றும் படகில், தமிழக கரை நோக்கிப் பயணம். இவர்களின் வாழ்வு கரை சேருமா...? என்றாவது இருள் விலகுமா...?***

***— என்கிற துயரப் பெரு மூச்சே — வெளிப்பட்டது கதையைப் படித்து முடித்த போது.***

***- வைகோ.***

இரவு மழை மேகங்களின் பிடியில் சிக்கியிருந்தது. காற்றின் முதுகில் ஏறி அமர்ந்து சிரமப்படுத்தியது ஐப்பசி குளிர். உயர மரங்கள் கிளை அசைந்து இலை உரசி பயந்து கிடந்தன.

முத்துலெட்சுமிக்கு திகைப்பாய் இருந்தது. ஆம், திகைப்பாய் இருந்தது. பதின்மூன்று வயது முத்துலெட்சுமிக்கு திகைப்பாய் இருந்தது.

மழை பயமுறுத்தும் இந்த ராத்திரிக்குள் கள்ளத் தோணியில் ஏறி கடல் கடந்து இன்னொரு தேசத்துக்கு ஓடிப் போக வேண்டுமென்றால் பதின்மூன்று வயது சின்னப் பெண்ணுக்கு திகைப்பாய் இருக்காதா.. அப்படித்தான் இருந்தது.

முத்துலட்சுமி காதில் கிடந்த தங்கக் கம்மலை கழற்றிக் கொண்டு அம்மா போயிருக்கிறாள் விற்று பணமாக்குவதற்காக. அந்தப் பணத்தில்தான் கள்ளத்தோணி ஏறி தமிழ்நாட்டுக்குப் போக வேண்டும். மூன்று நாளைக்கு முன்னால் இலங்கை இராணுவம் வீசிய குண்டில் சிதைந்து கிடந்த முத்துலெட்சுமி வீடு, குரங்குக் கையில் சிக்கிய குருவிக்கூடாய் கலைந்து கிடந்தது. பொங்கி வந்த கண்ணீரைத் துடைத்தவள் புளிச்சாதத்தை கிண்டி முடித்திருந்தாள். இன்னும் அடுப்புத்தீ அணையாமல் இருந்தது. ஆங்காங்கே குண்டுகள் விழுந்து வெடித்து சிதறிய நெருப்பும் மீதமாய் இருந்தது.

தலைக்குமேல் விமானம் ஒன்று பறந்து செல்லும் இரைச்சல் காதில் மோதியது. அண்ணாந்து பார்த்தாள் முத்துலட்சுமி.

வானத்தில் விமானம் நகர்வது பளிச்சிடும் வெளிச்சமாய் தெரிந்தது. விமானத்தில் மின்னும் வண்ண விளக்குகளை கண்ட அந்த சிறுமியின் கண்களில் மகிழ்ச்சி பூப்பதற்கு பதிலாய் பயம் விரிந்தது. அந்த விமானம் எந்த நிமிடத்திலும் குண்டு வீசலாம் என்ற பயத்தில் உடல் நடுங்கியது ஒருமுறை.



அடுத்த இமை மூடு பொழுதில் -

அருகில் நின்று கொண்டிருந்த ஆட்டுக் குட்டியை அப்படியே அள்ளி அணைத்துக் கொண்டு மரத்துக்குப் பின்னால் ஓடினாள். திடீர் என்று அந்த செயலுக்கு அர்த்தம் தெரியாத ஆட்டுக்குட்டி பயத்தில் ம்மா... என்று அலறியது.

ஆட்டுக்குட்டியின் அழைப்பு முத்துலெட்சுமிக்கு தன் அம்மாவை ஞாபகப்படுத்தியது.

'வெளிச்சம் இருக்கும்போதே அம்மா புறப்பட்டுப் போய்விட்டாள். இருள் வந்துவிட்டது. இன்னம் அம்மா வரவில்லை. கம்மலை விற்று பணம் வாங்கி வரச் சென்ற அம்மாவை எங்கே காணோம்... அம்மா தன்னந்தனியாய் இருட்டில் எப்படி நடந்து வருவாள்... போர் வந்ததால் மின்சாரம் இல்லாமல் ஊரே இருண்டு கிடக்கிறதே. வயிற்றில் தம்பி பாப்பாவை வைத்துக் கொண்டு நடந்து வருவது கஷ்டமாய் இருக்குமே?'

விமானத்தின் சத்தம் மெல்ல மெல்ல கரைந்து காணாமல் போயிருந்தது. மரத்துக்குப் பின்னாலிருந்த ஆட்டுக்குட்டியுடன் வெளியில் வந்தாள் முத்துலட்சுமி. முகத்திலிருந்த பயம் விலகியிருந்தது.

கையிலிருந்த ஆட்டுக்குட்டியை தரை இறக்கி விட்டாள். சுதந்திரம் கிடைத்த உற்சாகத்தில் துள்ளிக் குதித்தது தரையில் கால் உதைத்தது. அவள் கண்கள் சுழன்று நெருப்பு சுமந்த அடுப்பின் மீது போய் நின்றது. கிளறி வைத்த புளிச்சாதம் காத்திருந்தது கவலையுடன். விழிகளில் கண்ணீர் எட்டிப் பார்த்தது.

'இப்படித்தான்... இப்படித்தான் மூன்று மாதத்துக்கு முன்னால் ஒரு ஞாயிற்றுக்கிழமை முன் இரவில் வந்து

விடுகிறேன் என்று சொல்லிவிட்டுப் போன அப்பா திரும்பி வரவில்லை என்று அம்மா செய்து வைத்த கருவாட்டுக் குழம்பும் பொங்கி வைத்த சோறும்...'

விஸ்ஸ்ஸ்...

வினோத சப்தம் காதில் அறைந்தது.

மின்னல் வேகத்தில் ஓடி மரத்துக்குப் பின்னால் ஒளிந்தாள் முத்துலட்சுமி. அதே விநாடி ஆட்டுக்குட்டியின் நினைவு வந்தது.

ஆட்டுக்குட்டியைத் தூக்க வெளியே வருவதற்குள் - நெருப்புக் கோளமாய் குண்டு விழுந்து சிதறியது நான்கு பக்கமும். குண்டு வீச்சில் தூக்கி வீசப்பட்டது ஆட்டுக்குட்டி. ஓடிப் போனாள் இதயம் உதற.

"எமிலி"

-எமிலி இறந்து போயிருந்தது.

வெடித்து சிதறிய குண்டு ஆட்டுக்குட்டியின் கழுத்தை சிதைத்திருந்தது.

"எமிலி" - ஆட்டுக்குட்டியை மடியில் தூக்கி வைத்து அழுதாள் முத்துலட்சுமி.

கண்ணீர் வழிந்து ஆட்டுக்குட்டியை நனைத்தது. இரத்தம் வழிந்து அவள் ஆடையை நனைத்தது. அதே நேரம்-

யாரோ ஓடி வரும் சத்தம் கேட்டது.

இறந்து போன இலைகள் நொறுங்கும் ஒலி பயமுறுத்திற்று. சட்டென்று எழுந்து ஓடி மரத்துக்குப் பின்னால் பதுங்கினாள். காலடி ஓசைகள் ஓடிவரும் பாதையில் கண்களைத் திருப்பினாள்.



இருட்டில் யாரோ ஓடிவந்தார்கள்.

'யாராயிருக்கும்?'

நெருங்க நெருங்க... ஓடிவந்த உருவம் பெண் என்று தெரிந்தது.

'அம்மாவா'

அருகில் நெருங்கியதும் அந்தப் பெண் அம்மா இல்லை என்பது தெரிந்தது. ஓடி வந்த பெண் மூச்சிரைக்க நின்றாள் பதற்றத்துடன். அவள் கண்களில் விழுந்த காட்சி அதிர்ச்சி தந்திருந்தது. இரத்த வெள்ளத்தில் விழுந்த ஆட்டுக்குட்டி பயமுறுத்தியிருந்தது.

"முத்துலட்சுமி"

-உரத்த குரலில் கத்தினாள் அந்த பெண்.

மரத்துக்குப் பின்னாலிருந்து வெளியே வந்தாள் முத்துலட்சுமி நடுக்கத்துடன். அப்படியே அவளை சேர்த்து அணைத்துக் கொண்டாள் அந்தப் பெண்.

"ம்... வா போகலாம்"

"எங்கே பெரியம்மா...?"

"கடற்கரைக்குத்தான்"

"அம்மா இன்னும் வரலியே..."

"வந்திடுவா. நேரே கடற்கரைக்கு வந்திடுவா"

-முத்துலட்சுமியின் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு நடந்தாள் அந்தப் பெண் அதிவேகமாய். அந்த சின்ன பெண்ணுக்கு திகைப்பாயிருந்தது. கால்களில் மிதிபட்டு

முனகின இறந்துபோன இலைகள். முத்துலட்சுமி தயக்கத்துடன் திரும்பி பார்த்தாள் நடந்து கொண்டே. இரத்தத்தின் மீது கண்கள் திறந்து கிடந்தது எமிலி இறந்து. கிண்டி வைத்த புளிச்சாதம் பாத்திரத்தில் அப்படியே இருந்தது உறைந்துபோய்.

'எமிலி... எமிலி...' என்று இதயம் துடித்தது. அம்மாவின் முகம் கண்முன் வந்தது.

**நூ**தனமாய் இருந்தது அந்த கடற்கரை.

இருளின் இறுக்கமான பிடிக்குள் சிக்கியிருந்தது. எதோ ஒருவித இனம் புரியாத அமைதி அமர்ந்திருந்தது. சற்று பிடிவாதத்துடன். முத்துலெட்சுமியும் அந்த பெண்ணும் கடற்கரைக்கு வந்து சேர்ந்திருந்தார்கள். கடற்கரைக்கு நிறைய பேரை உந்தித்தள்ளியிருந்தது உயிர்ப்பயம். ஐப்பசி மாதத்துக் காற்று குளிரை அள்ளி வீசிக் கொண்டிருந்தது. யார் மீதோ உள்ள கோபத்தால் கரையை அறைந்து கொண்டிருந்தது கடல் அலைகள். திடீரென்று எங்கிருந்தோ அள்ளி வீசியது போல காற்று முகத்தில் மோதியது. தீயின் கருகல் நாற்றமும் கந்தகத்தின் நெடியும் சுவாசத்தை வழிமறித்து தொந்தரவு செய்தது.

கடற்கரையில் கொத்துக் கொத்தாய் ஜனங்கள் சத்தமில்லாமல் அமர்ந்திருப்பது மங்கலாய் தெரிந்தது. முத்து லெட்சுமியின் கண்கள் தவித்தது நான்கு திசைக்கும் ஓடி. கடற்கரை மணலில் அமர்ந்திருந்த இருட்டு இடையூறாய் நின்றது.

"அம்மா எங்கே பெரியம்மா..."

"வந்திடுவா"



-அவசரமாய் கொத்துக் கொத்தாய் இருந்த கூட்டம் எழுந்து நின்றது. கடலில் படகுகள் வந்திருக்க வேண்டும். அதற்குள் இரண்டுபேர் குறுக்கே வந்திருந்தார்கள். இரண்டு பேரையும் சூழ்ந்து கொண்டார்கள் கடற்கரை ஜனங்கள். அந்த இரண்டு பேரில் உயரமாய் இருந்தவன் கைகளில் சுருட்டி வைத்திருந்த காகித பணத்தை திணித்தாள் முத்துலெட்சுமி பெரியம்மா.

"இரண்டு பேரா"

-அவசரமாய் தலையசைத்தாள்.

"அம்மா வரலியா பெரியம்மா"

"வந்திடுவா வந்திடுவா" - அந்தக் குரலில் அழுகை மிதந்தது.

"என் கையில காசு தந்தவங்க படகில போயி ஏறுங்க. மீத இருக்கிறவங்க அமைதியா இருங்க. படகு வரும்."

-முத்து லெட்சுமிக்கு அழுகை அழுகையாய் வந்தது. 'அம்மா... அம்மா...' என்று இதயம் அரற்றியது.

அவள் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு கடலுக்குள் நடந்தாள். முத்துலெட்சுமியின் பெரியம்மா. கடல் அலை மோதியது.

"அம்மா இன்னும் வரல்ல பெரியம்மா"

"அடுத்த படகில வந்திடுவா" - பெரியம்மாவின் கண்களிலிருந்து உப்பு கண்ணீர் வழிந்து கடல் நீரில் விழுந்து - விழுந்த வேகத்தில் காணாமல் போனது.

**இ**ழுத்து நிறுத்தியது போல சட்டென்று நின்று போனது படகு. அதற்குக் காரணம் குறுக்கே நின்று கொண்டிருந்த

இன்னொரு படகு. அந்த படகிலிருந்து ஒரு மனிதர் முத்துலெட்சுமி இருந்த படகுக்கு அவசரமாய் மாற்றப்பட்டார். அடுத்த நிமிடம் தண்ணீர் வழி திறந்தது.

அந்த மனிதர் இருட்டோடு இருட்டாய் இருள்மயமாய் தெரிந்தார். கறுப்புச்சட்டை, கறுப்பு பேண்ட் அணிந்திருந்தார். முகத்திலிருந்து கறுப்பு தாடி இன்னும் இருட்டாக்கியிருந்தது.

"போராளிகள்" -யாரோ கிசுகிசுத்தார்கள் காற்றுக்கு மட்டும் கேட்கும்படி. காற்றுக்கு எதிர்திசையில் நகர்ந்தது படகு. முத்துலெட்சுமிக்கு அம்மாவைப் பார்க்க வேண்டும் போலிருந்தது. இறந்து கிடந்த எமிலியின் கண்கள் கண்களில் வந்தது.

"பெரியம்மா"

"ம்.."

"அம்மா கடற்கரைக்கு வந்திருப்பாளா?"

"ம்."

"அம்மா அடுத்த படகிலே வந்திருவாளா..."

"வந்திடுவா" -கண்ணீர் தெரியாத இருட்டில் கண்ணீருடன் பதில் சொன்ன பெரியம்மா முத்துலெட்சுமியை தன்னோடு சேர்த்தணைத்துக் கொண்டாள். பெரியம்மாவின் கண்ணீர் ஈரம் உணர்ந்தாள். கண்ணீரின் காரணம் அறியாத திகைப்பில் ஆழ்ந்து போனாள் முத்துலெட்சுமி. அதே நேரம்-

கரையில் இறந்துபோன இலைகளுடன் இலையாய் கவிழ்ந்து கிடந்தாள் முத்துலெட்சுமியின் அம்மா உயிரற்ற உடலாய். அவளுக்குள் இருந்த உயிர் கொஞ்சம் கொஞ்சமாய் இறந்து கொண்டிருந்தது. உயிர் காற்றுக்காய் துடித்தது.



காதில் விழுந்த வார்த்தைகள் கலங்க செய்தது முத்துலெட்சுமியை.

"அங்கட இருந்தால் யார் உயிருக்கும் உத்தரவாத மில்லையே... வயிற்றுக்குள்ளேயே எண்ட பிள்ளை மரணிக்க நேர்ந்தாலும் நேரும். ஆர்மிக் காரங்கள் கர்ப்பவதிகள் எண்டால் ஆசையாக சுடுறாங்கள். ஜீவிக்க இயலாமல்தானே தமிழ் நாட்டுக்கு போறோம்" -வார்த்தைகள் நொறுங்க பேசிய பெண்ணின் வயிறு மேடிட்டிருந்தது. கோப அலை வீச்சில் தண்ணீர் துளிகள் துள்ளி படகுக்குள் விழுந்தது. அந்த தாடி இளைஞனின் உதடுகளில் தொங்கிய வார்த்தைகள் காற்றில் விழுந்து கடல் நீர் கண்ணீர் ஈரம் சுமந்து காகிதம் தேடியது.

"குழந்தையாய் தமிழன்
வயிற்றுக்குள் இருந்தாலும்
கொல்லத் துடிக்கிறார்கள்
எமனாய் வந்தவர்கள்.
விடிந்தால்
இன்பத் தீபாவளியாம்.
இங்கும் அங்கும்
ஒன்றுதான் -
வெடிச்சத்தம் மட்டும்
கந்தகத்தின் நெடி
எரிந்த நெருப்பின் கரி...
தீயின் -
கருகல் நாற்றம்...
ஒரே ஒரு வித்தியாசம்
எங்கள் மணல்வெளியில்
மட்டும் - இரத்தவாடை"

- பட கோட்டியின் பேச்சில் கவிதை அறுந்தது.

"தனுஷ்கோடியிலிருந்து தலைமன்னார் வரை பதினெட்டு தீடைகள் உண்டு. அதுல ஒரு தீடையிலதான் இறக்கி விடுவோம். மழை நேரமா இருக்கிறதால மணல் திட்டு எல்லாம் கடல்ல முங்கி போச்சுது"

-கடலுக்குள் கடலோரப் படைக்கும் பயந்து கிடக்கும் மனிதர்களை சுமந்து கொண்டு படகு நகர்ந்தது சற்று வேகமாய் படகோட்டி முகத்தில் கூட மரணபயம் ஒட்டிக் கிடந்தது.

மழை மேகங்கள் விலகி வானத்துக்கு வெளிச்சம் வந்திருந்தது. மஞ்சள் நிலவு மேகத்துக்கு பின்னாலிருந்து எட்டிப் பார்த்தது சற்று பயத்துடன் நட்சத்திரங்கள் கண் இமைத்தன நடுக்கத்துடன்.

படகிலிருந்து எட்டு வயது சிறுவன் தன் கையிலிருந்த பையிலிருந்து நோட்டொன்றை எடுத்து, பென்சிலால் ஏதோ எழுத ஆரம்பித்தான்.

"என்ன எழுதுறே...?"

"எழுதிக் கொண்டு போகலையெண்டால் மிஸ் திட்டுவார்கள். நான் தமிழ்நாட்டுக்குப் போவதை மிஸ்கிட்டக்கூடச் சொல்லயில்ல... அங்கட இருந்தால் ஆர்மிக் காரங்கள் ஷெல் அடிப்பாங்களெண்டு அம்மா இங்கட அழைச்சுக்கொண்டு வந்துட்டாங்கள்..."

-தாடி இளைஞன் கண்களில் கவலை மிதந்தது. உதடுகள் அசைந்தன சத்தங்களின் முத்தம் இல்லாமல்.

"குரங்கு கை சிக்கிய
குருவிக் கூடுகளாய்
பிறந்த வீடு.



வெடிகுண்டு நாற்றம்
மட்டுமே சுவாசத்தில்
அள்ளி வீசிய
சோற்றுருண்டையாய்
பூமியெங்கும்
சிதறிக் கிடக்கிறது
சொந்தம்
தாய்த் தீவை
சுற்றிக் கிடக்கும்
கடல் நீரில்
உப்புடன் உப்பாய்
எங்கள் கண்ணீரும்"

-உதடுகளின் அசைவை கண் இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தாள் முத்துலெட்சுமி. அவள் இமைக்காத பார்வை கவிதையை அறுத்தது. அவள் குறித்து கேள்வி கேட்டான். அவள் காதுகளுக்கு - கேட்காமல் வாழ்வின் அவலத்தை சொன்னாள் முத்துலெட்சுமி பெரியம்மா. நட்சத்திரங்கள் திசையைச் சொன்னது.

மரண பயத்துடன் படகு நகர்ந்தது பயமில்லா கரையை நோக்கி. காற்றின் வீச்சு நடுங்க வைக்கிறது. கடலின் ஆட்டம் அச்சம் தந்தது. அம்மா எங்கோ தொலை தூரத்தில் இருப்பது போல உணர்ந்தாள் பதின்மூன்று வயது சிறுமி முத்துலெட்சுமி. கண்ணுக்குள் கனவு வந்தது. அம்மா கையசைத்து அழைத்தாள் வாவா என்று. படகு பயணித்து கரையை அடைந்திருந்தது.

கடல் அலை மோதும் ஒலியும் பறவைகளின் சப்தமும் கேட்டது. படகிலிருந்தவர்கள் பதற்றமாய் கரை இறங்கினார்கள். இரவு விடியத் தொடங்கியிருந்தது.

கடலையே பார்த்துக் கொண்டு நின்றாள் முத்துலெட்சுமி. தாடி இளைஞன் மனதுக்குள் கவிதை ஓடியது.

'கடல் கடந்து
வந்து நிற்கிறோம்
அகதிகளாய்
தந்தையர் தேசத்தில்
என்று விடியும் எங்களுக்கு..
கண்ணுக்கு முன்னால்
நீண்டுக் கிடக்கிறது
நெடிய இருள் இரவு'

-கடற்கரை மணலில் புதைந்து கொண்டிருந்தது அந்த சிறுவனின் குரல்.

"அங்கட நான் திரும்ப போகும்போது அம்மம்மா அப்பம்மாவெல்லாம் இருப்பாங்கதானே..."

- முத்துலெட்சுமியின் பார்வை கடல் பரப்பின் மீது கவிழ்ந்து கிடந்தது.

"அம்மா வந்திடுவாங்கதானே..."

-தாடி இளைஞன் கண்களுக்கு முத்துலெட்சுமி மீனாய் தெரிந்தாள். கரையில் விழுந்து உயிரின் வலியுடன் பிராண வாயு வேண்டி துடிக்கும் மீனின் துடிப்பு... தாயைத் தேடும் குஞ்சுக்குட்டியின் பரிதவிப்பு... எதிர்த் திசையில் கடற்கரை மணலில் கால் புதைய புதைய நடந்தான், 'விடியும்... விடிய வேண்டும்...' உதடுகள் முணுமுணுத்தன.

# 10

# தீயிடை மொட்டுகள்

(*அமுத சுரபி மாத இதழ் நடத்திய சிறுகதைப் போட்டியில் பரிசு பெற்ற கதை.)

*துடிக்கின்ற எழுத்துக்கும் வெடிக்கின்ற கருத்து களுக்கும் சொந்தக்காரரான மதுரா எழுதிய இந்தக் கதையின் தொடக்கமே எனக்குள் கனலை உற்பத்தி செய்திருந்தது.*

*மதுரா கதை புனையவில்லை.*

*வாழ்வின் நிகழ்வைச் சொல்லி, விடியலை விரும்புகிறார்.*

*தங்கராசுகளும், பூமாரிகளும் எண்ணிக்கையில் பெருகிக் கொண்டிருக்கிறார்களே தவிர குறைந்ததாகத் தெரியவில்லை. பாஸ்பரசில் முக்கப்பட்ட ஆறடி உயர தீக்குச்சிகள் — எரியத் தொடங்கிய தீக்குச்சி தலைகளின் நெருப்பு வளையம் — உடல் எங்கும் தீக்குச்சி மருந்து தடவப்பட்டு முகம் குப்புறத் தள்ளப்பட்ட தங்கராசு — பற்றிக் கொண்ட நெருப்புடன் துடித்துத் துவளும் தங்கராசு—*

*"தம்பீ" – திடுக்கிட்டு கண் விழித்த பூமாரி...*

*ஓ.. இது ஒரு பூமாரி கண்ட கனவா...? இல்லை இல்லை. தீப்பெட்டித் தொழிற்சாலைகளில் அடிக்கடி நிகழும் அவலங்கள்தான்.*

*சமுதாய மாற்றம் நாடும் எழுத்தாளர் மதுரா, சமூக நீதி கேட்கும் போராளி மதுரா... இவர் வரலாற்றை பின்னோக்கி பார்த்து, புனைந்து புது வடிவம் தரும் வரலாற்றுக் கதையாசிரியர் என்று கூறுவதை விட, சமூக அவலத்தை, சமுதாயக் கொடுமையைக் கண்டும் காணாமல் உறங்கும் அரசாங்கத்தை தட்டி எழுப்பும் சமுதாயச் சிறுகதை ஆசிரியர் என்று சொல்வதையே எனது மனம் விரும்புகிறது.*

*கதா பாத்திரங்கள் எல்லாம் இந்தச் சிறுகதையில் ஆசிரியரால் கற்பனையாகப் புனையப்பட்ட பாத்திரங்கள் அல்ல. கொத்தடிமைகளை வைத்து கோபுர சுகம் காண துடிப்பவர்களிடமிருந்து தப்பிச் செல்ல தங்கராசு ஒருவனால் – மட்டும்தான் முடியுமா...?*

*இப்படிப்பட்ட வினாக்களுக்கு விடை காண விரும்பும் மதுரா தனது எழுத்தை நம்புகிறார்.*

*- கவிஞர் சுடர்.*

சுற்றிலும் நெருப்பு எரிந்து கொண்டிருந்தது.

தரதரவென்று தரையில் இழுத்துச் செல்லப்பட்டான் தங்கராசு.

புத்தகப் பையை விடாமல் மார்போடு அணைத்துக் கொண்டிருந்தான்.

"கீழேபோடு... கீழேபோடு" – கத்தினான், தீப்பெட்டி ஆபீஸ் கணக்குப்பிள்ளை. ரூபாய்த் தாள்களைத் தரையில் உதிர்த்துக் கொண்டே நடந்தார் தீப்பெட்டி ஆபீஸ் முதலாளி. குனிந்து நிமிர்ந்து குனிந்து நிமிர்ந்து காற்றில் ஆடி தரை மோதிய ரூபாய் நோட்டுகளைப் பொறுக்கிக் கொண்டே தள்ளாடியபடி, பின்னால் நடந்தார் தந்தை. அழுதுகொண்டே பனங்கம்புக் கதவைப் பிடித்தபடி நின்றாள் தாய், செய்வதறியாமல்.



தீக்குச்சிகள். பாஸ்பரஸில் முக்கப்பட்ட தீக்குச்சிகள் ஆறடி உயரத்தில் கறுப்புத் தலைப்பாகையுடன் நின்று கொண்டிருந்தன. வட்டமாய் நடப்பட்டிருந்தன.

தீக்குச்சிகள் வளையம் போல் இருந்தது பார்வைக்கு.

திடீரென்று தீக்குச்சித் தலைகள் நெருப்பு பற்றிக் கொள்ள, திபு திபுவென்று எரியத் தொடங்கின. மின்னல் வேகத்தில் ஒரு நெருப்பு வளையம் அந்த இடத்தில் உருவாகியிருந்தது. அந்த நெருப்பு வளையத்துக்குள் முகம் குப்புறத் தள்ளப்பட்டான் தங்கராசு. அவன் கதறக் கதற, சேற்றை அள்ளிப் பூசுவது போல தீக்குச்சி மருந்தை உடலெங்கும் தடவினர், தீப்பெட்டி ஆபீஸ் முதலாளியும் கணக்குப் பிள்ளையும் சேர்ந்து கொண்டு.

எங்கிருந்தோ பறந்து வந்தது நெருப்புப் பந்து ஒன்று. குறி வைத்து நெருப்புப் பந்து தங்கராசைத் தாக்கிற்று. நெருப்பு தங்கராசைப் பற்றிக் கொள்ள...

"தம்பீ..."

-திடுக்கிட்டு விழித்துக் கொண்டாள் பத்து வயது பூமாரி.

மேல் சட்டை தெப்பலாய் நனைந்து போயிருந்தது வியர்வையால். கன்னத்தில் கண்ணீரின் பிசுபிசுப்பு உணர்ந்தாள். இதயம் வேகமாயிருந்தது. மண் சுவரில் தொங்கிக் கொண்டிருந்த சிம்னி விளக்கு சிரமமாய் எரிந்து கொண்டிருந்தது. திரும்பிப்

*"தம்பீ" – திடுக்கிட்டு கண் விழித்த பூமாரி...*

*ஓ.. இது ஒரு பூமாரி கண்ட கனவா...? இல்லை இல்லை. தீப்பெட்டித் தொழிற்சாலைகளில் அடிக்கடி நிகழும் அவலங்கள்தான்.*

*சமுதாய மாற்றம் நாடும் எழுத்தாளர் மதுரா, சமூக நீதி கேட்கும் போராளி மதுரா... இவர் வரலாற்றை பின்னோக்கி பார்த்து, புனைந்து புது வடிவம் தரும் வரலாற்றுக் கதையாசிரியர் என்று கூறுவதை விட, சமூக அவலத்தை, சமுதாயக் கொடுமையைக் கண்டும் காணாமல் உறங்கும் அரசாங்கத்தை தட்டி எழுப்பும் சமுதாயச் சிறுகதை ஆசிரியர் என்று சொல்வதையே எனது மனம் விரும்புகிறது.*

*கதா பாத்திரங்கள் எல்லாம் இந்தச் சிறுகதையில் ஆசிரியரால் கற்பனையாகப் புனையப்பட்ட பாத்திரங்கள் அல்ல. கொத்தடிமைகளை வைத்து கோபுர சுகம் காண துடிப்பவர்களிடமிருந்து தப்பிச் செல்ல தங்கராசு ஒருவனால் – மட்டும்தான் முடியுமா...?*

*இப்படிப்பட்ட வினாக்களுக்கு விடை காண விரும்பும் மதுரா தனது எழுத்தை நம்புகிறார்.*

*– கவிஞர் சுடர்.*

சுற்றிலும் நெருப்பு எரிந்து கொண்டிருந்தது.

தரதரவென்று தரையில் இழுத்துச் செல்லப்பட்டான் தங்கராசு.

புத்தகப் பையை விடாமல் மார்போடு அணைத்துக் கொண்டிருந்தான்.

"கீழேபோடு... கீழேபோடு" – கத்தினான், தீப்பெட்டி ஆபீஸ் கணக்குப்பிள்ளை. ரூபாய்த் தாள்களைத் தரையில்



உதிர்த்துக் கொண்டே நடந்தார் தீப்பெட்டி ஆபீஸ் முதலாளி. குனிந்து நிமிர்ந்து குனிந்து நிமிர்ந்து காற்றில் ஆடி தரை மோதிய ரூபாய் நோட்டுகளைப் பொறுக்கிக் கொண்டே தள்ளாடியபடி, பின்னால் நடந்தார் தந்தை. அழுதுகொண்டே பனங்கம்புக் கதவைப் பிடித்தபடி நின்றாள் தாய், செய்வதறியாமல்.

தீக்குச்சிகள். பாஸ்பரஸில் முக்கப்பட்ட தீக்குச்சிகள் ஆறடி உயரத்தில் கறுப்புத் தலைப்பாகையுடன் நின்று கொண்டிருந்தன. வட்டமாய் நடப்பட்டிருந்தன.

தீக்குச்சிகள் வளையம் போல் இருந்தது பார்வைக்கு.

திடீரென்று தீக்குச்சித் தலைகள் நெருப்பு பற்றிக் கொள்ள, திபு திபுவென்று எரியத் தொடங்கின. மின்னல் வேகத்தில் ஒரு நெருப்பு வளையம் அந்த இடத்தில் உருவாகியிருந்தது. அந்த நெருப்பு வளையத்துக்குள் முகம் குப்புறத் தள்ளப்பட்டான் தங்கராசு. அவன் கதறக் கதற, சேற்றை அள்ளிப் பூசுவது போல தீக்குச்சி மருந்தை உடலெங்கும் தடவினர், தீப்பெட்டி ஆபீஸ் முதலாளியும் கணக்குப் பிள்ளையும் சேர்ந்து கொண்டு.

எங்கிருந்தோ பறந்து வந்தது நெருப்புப் பந்து ஒன்று. குறி வைத்து நெருப்புப் பந்து தங்கராசைத் தாக்கிற்று. நெருப்பு தங்கராசைப் பற்றிக் கொள்ள...

"தம்பீ..."

–திடுக்கிட்டு விழித்துக் கொண்டாள் பத்து வயது பூமாரி.

மேல் சட்டை தெப்பலாய் நனைந்து போயிருந்தது வியர்வையால். கன்னத்தில் கண்ணீரின் பிசுபிசுப்பு உணர்ந்தாள். இதயம் வேகமாயிருந்தது. மண் சுவரில் தொங்கிக் கொண்டிருந்த சிம்னி விளக்கு சிரமமாய் எரிந்து கொண்டிருந்தது. திரும்பிப்

பார்த்தாள் பூமாரி. தம்பி தங்கராசு வழக்கமாய்ப் படுத்திருக்கும் இடம் வெறுமையாய் இருந்தது.

‘தம்பி இப்போ என்ன செய்து கொண்டிருப்பான்? தூங்கிக் கொண்டிருப்பானோ... விழித்திருப்பானோ? புது இடத்தில் தூக்கம் வருமா? அம்மா அருகில் படுத்தால்தானே அவனுக்குத் தூக்கம் வரும்? கையெல்லாம் எரியுமே... வலி தாங்குவானா...?’’

புரண்டு படுத்தாள். தாயார் உறங்கிக் கொண்டிருப்பது தெரிந்தது. அவள் தந்தை இன்னும் வந்திருக்கவில்லை.

‘குடித்து விட்டு பிள்ளையார் கோயிலில் விழுந்து கிடந்தாலும் கிடப்பார்...’ கண்களைத் திறந்து மேல்விட்டம் பார்த்தாள். விளக்கு வெளிச்சம் தொடாத பனை ஓலை முகடு பயமுறுத்திற்று.

பனை மரத்துக் கதவிடுக்குகளில் செருகியிருந்த கந்தல் ‘சாக்கு’ துண்டையும் மீறி மார்கழி மாதக் குளிர்காற்று மேனி தொட்டு நடுங்கச் செய்தது.

காற்றில் மெல்ல அசைந்தது ‘அசை’யில் தொங்கிய தாவணி. பூமாரியின் ஒரே தாவணி. தாயின் பழைய சேலையில் அவசரமாய்க் கிழித்துத் தரப்பட்ட தாவணி. பூமாரியின் பூப்புக்கும் முன்னே ஏற்பட்ட நிர்ப்பந்தம். பிஞ்சு முகத்துக்குப் போர்த்தப்பட்ட முக்காடு. தாவணி போட்டதும் வெட்கத்தில் குறுகிப் போவாள். சக குழந்தைகளும் தாவணியில் வர சங்கடம் தெளியும். விடியற்காலை கருக்கலில் வேலைக்குப் போய்விட்டு மாலைப் பொழுதில் அல்லது இரவில் திரும்புவதால் பூமாரி மனது கொஞ்சம் சமாதானமாகும்.

வீடு வந்ததும் தாவணியை உருவி அசையில் வீசி விடுவாள். அடுத்த நாள் விடியற்காலையில் தீப்பெட்டி ஆபீஸ்



வேன் வந்த பின்தான் தாவணியை எடுத்து அருவருப்புடன் சுற்றிக் கொள்வாள். தாவணி மறுத்தால் வேலை மறுக்கப்படும். வருகிற அரசு அதிகாரிகளின் கண்களை பணத்துடன் இறுக்கிக் கட்டுகிற துணியாகத்தான் தாவணி தெரிந்தது. மூச்சைத் திணறடிக்கிற சாதனமாகத்தான் புலப்பட்டது. எப்பொழுது கழற்றி வீசலாம் என்று காத்திருப்பாள்.

சில நாள்களுக்கு முன்பு தீப்பெட்டி ஆபிஸில் தீக்குச்சிகளை அடுக்கி ‘சக்கை’யைத் தட்டிக் கொண்டிருந்தாள் பூமாரி. சற்றும் எதிர்பார்க்காத நேரத்தில் கணக்குப்பிள்ளை, அவள் தாவணி விலக்கி, ‘அணில் கிணில் கடிச்சிரும்னு பயந்து மூடி வைச்சிருக்கியா? என்ன புள்ளை ஒண்ணையும் காணோம்’ என்று கந்தக நாக்கு தீட்டி காமம் கண்களில் வழியச் சிரிக்க, பூமாரி நொறுங்கி உள்ளுக்குள் உதிர்ந்து போனாள். அன்று முழுவதும் அழுதிருக்கிறாள்.

தாயாரிடம் வந்து சொல்ல அவளும் சேர்ந்து அழுதாள்.

மீண்டும் புரண்டு படுத்தாள்.

எங்கிருந்தோ பல்லி ஒன்று கத்தியது. சத்தம் வந்த திசை நோக்கிக் கண்களைத் திருப்பினாள். அசையில் தொங்கிய தாவணியின் நிழல் உருவம் பூதாகாரமாய் மண் சுவரில் விழுந்து கிடந்தது. காற்று தாவணியை அசைக்க, நிழல் அசைந்து மனத்தை மிரட்டிற்று.

‘தம்பி தங்கராசு தன் நிழல் கண்டே பயப்படுவானே... மீசை அசைக்கிற கரப்பான் பூச்சியைக் கண்டே பதுங்குவானே... அங்கே நிறைய எலிகள் கிடக்குமே... விரித்துப் படுக்கத் துணிகூட எடுத்துப் போகவில்லையே தங்கராசு...’

பூமாரிக்கு இருமல் வந்தது.

'இடுப்பொடியக் களை பறிச்சுட்டு வந்து படுத்திருக்கிற அம்மா... இருமினா முழிச்சுக்குவா... பாவம்...' எனவே இருமலைத் தொண்டைக் குழிக்குள்ளேயே அமிழ்த்தினாள்.

'தங்கராசுக்குத் தீக்குச்சி அடுக்கத் தெரியுமா? விரல் முழுதும் 'பொத்து'ப் போகாதா? அப்பா... பொல்லாத அப்பா... துட்டுக்காகத் தம்பியைத் தீப்பெட்டி ஆபீஸ்காரனிடம் பிடிச்சுக் குடுக்க இந்த அம்மாவுக்கு எப்படி மனசு வந்தது? எல்லாம் இந்த அப்பாவாலே வந்ததுதான். குடிச்சுட்டுக் குடிச்சுட்டு பிள்ளையார் கோயில்ல உட்கார்ந்து சீட்டு விளையாடுவார்... தினமும் மீன் குழம்பு வேணும்னு அம்மாவைப் போட்டு அடிப்பார்... நான் பெரிய பிள்ளை ஆனதும் இந்த அப்பாவை விரட்டி விட்டுட்டு...'

மீண்டும் இருமல் வந்தது.

சிரமப்பட்ட இருமலை அடக்கிக் கொண்டு, திரும்பி அம்மாவைப் பார்த்தாள். தாயின் பெரிய கண்கள் திறந்திருந்தன. சிம்னியின் விளக்கொளியில் கன்னத்தில் வழிந்த கண்ணீர் மினுக்கியது. தாயின் கரம் நீண்டு பூமாரியின் தலைக் கேசம் தடவியது. 'தூங்கு' என்றது விரல்களின் ஸ்பரிசம்.

முத்துசாமி கண் சுருக்கித் தேடினான்.

தூரத்தில் வெளிச்சப் பொட்டு மினுக்கியது. உற்சாகத்துடன் நடக்கத் தொடங்கினான். நெருங்க நெருங்க வெளிச்சப் பொட்டு அரிக்கேன் விளக்காகியது. நான்கைந்து பேர் சுற்றி நின்று கொண்டிருந்தார்கள். அவர்கள் விரல் இடுக்கில் மடிக்கப்பட்ட ரூபாய் நோட்டுகள். ம்..ம்... என்று அவசரப்படுத்திக் கொண்டிருந் தார்கள்.

அரிக்கேன் விளக்கருகே பெரிய பிளாஸ்டிக் கேன் ஒன்று இருந்தது. அதைச் சரித்துச் சரித்து கண்ணாடி டம்ளர்களை நிரப்பி நிரப்பிக் கொடுத்துக் கொண்டிருந்தான் ஒரு தடியன். விளக்கொளியில் நகைத்தது கண்ணாடி டம்ளர்களில் ததும்பும் நாட்டுச் சாராயம். கண்களில் ஆசை மினுமினுக்க நின்றான் முத்துசாமி.



கால்களில் தயக்கம் இருந்தது. உதடுகளை ஒருமுறை நாக்கால் ஈரப்படுத்தினான். ஆட்கள் நகரும் வரை பொறுமை யாய்க் காத்திருந்தான் கால் மாற்றி. கூட்டம் கரைந்ததும் நிமிர்ந் தான் சாராய வியாபாரி. பார்வையில் அலட்சியம் தெறித்தது.

"என்ன... முத்துசாமியா... ஒரு தடவை சொன்னா அறிவு கிடையாதா? நேத்தே பாக்கி ஐநூறு தாண்டியாச்சு..."

"வெ... வெயிலான் இன்னிக்கு ஒரு நாள் மட்டும்..."

"இதைத்தான் ஒரு மாசமாச் சொல்றே..."

"நாளைக்குக் கண்டிப்பா மொத்த பாக்கியையும்..."

"நீ பெரிய உத்தமனாக்கும்? நாளைக்கு உன் கூரையைப் பிச்சுக்கிட்டு சாமி வந்து துட்டை வீசுவாராக்கும்? பேசாம வந்த வழியே போய்ச் சேரு..."

"என் மவன் தங்கராசை, தீப்பெட்டி ஆபீசில கொண்டு விட்டுட்டேன். மூவாயிரம் ரூபா நாளைக்குத் தர்றதா மொதலாளி சொல்லியிருக்காரு. முதல் ரூபா உனக்குத்தான்..."

"இதில ஒண்ணும் குறைச்சல் இல்லை..."

-சலிப்புடன் சாராயத்தை ஊற்றிக் கொடுத்தான் அந்த தடியன். கண்ணை இறுக மூடிக்கொண்டு - இரண்டு டம்ளர் சாராயம் குடித்துவிட்டுச் சிரித்தான் முத்துசாமி.

"வெ... வெயிலான்... வர்றேன்"

-வேட்டி நுனியால் சாராய வாயைத் துடைத்தபடி ஊரை நோக்கி நடந்தான்.

உறக்கம் வரவில்லை தங்கராசுக்கு. புரண்டு புரண்டு படுத்தான். பிசுபிசுப்பாய் முதுகில் ஒட்டியது தரை. கந்தக நாற்றம் காற்றில் கலந்திருந்தது. தலைக்கு மேலே மின்விளக்கு ஒன்று எரிந்து கொண்டிருந்தது. சுவரெங்கும் செம்மண் கலந்த கறுப்பாய் நிறம் மாறிக் கிடந்தது.

கை நகங்கள் 'விண்.... விண்' என்று வலியில் தெறித்தன. விரல்கள் 'திபுதிபு'வென்று 'காந்தல்' எடுத்தன. கணக்குப் பிள்ளை முதுகில் அடித்தது இன்னும் வலித்தது.

இந்துமதி டீச்சர் முகம் கண்ணில் தெரிய உதடுகள் புன்னகைக்கு நகர்ந்தன. எழுந்தமர்ந்தான் தங்கராசு.

சுருண்டு படுத்துத் தூங்குகின்ற மகள் பூமாரியைக் கண் இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தாள், லட்சுமி. பார்வையை விழிநீர் மறைத்தது. 'இந்தப் பச்சை மண்ணுக்குத் தாவணி போட்டு அனுப்புகிறேனே... ஆண்டவனே! எங்களுக்கு விடியவே விடியாதா? அண்டா குண்டாவை அடகு வைச்சு, இப்படி வயித்தைக் கழுவுற நிலைக்குத் தள்ளிட்டியே, கரையடி மாரியாத்தா! இந்த மனுஷனுக்கு நல்ல புத்தியைக் கொடு...'

மல்லாந்து படுத்தாள் லட்சுமி.

கண்ணீர் இருபக்கமும் வழிந்து காதுமடல் தொட்டது. 'தங்கராசுக்குத் தூக்கம் வருமா? என் தங்கம், என் ராசாவை மடிக்குள்ளே வைச்சு பொத்திப் பொத்தி வளர்த்தேனே... கிளியை வளர்த்து கடைசியில்...'



சிறிது சிறிதாய் விளக்கு வெளிச்சம் மங்கலாகி... சிம்னி விளக்கு சட்டென்று அணைந்து போயிற்று. குடிசையை இருட்டு பிடித்துக் கொண்டது.

'மண்ணெண்ணெய் தீர்ந்து போயிருக்கும். நாளைக்கு மாடத்தியிடம் கேட்டு ஒரு பாட்டில் வாங்க வேண்டும்... தங்கராசு மரப்பெட்டிகளைத் தூக்கிடுவானா...? கட்டைகளைத் தூக்கி அடிக்க முடியுமா...? கடவுளே...! தன் தாயை நினைச்சு அழுத செவ்வந்திமவனுக்கு, கன்னத்தில சூடு வைச்சு அமிலத் தண்ணியைக் கண்ணில ஊத்திப்புட்டானே அந்தக் கணக்குப் பிள்ளை... இன்னைக்கும் ஒரே கண்ணோட அலையுதே அந்தப் பச்சைப் புள்ளை... மாரியாத்தா என் புள்ளைக்கு என் நினைப்பே வராம பாத்துக்க தாயி!'

-லட்சுமியின் இடுப்பில் வந்து விழுந்தது முத்துசாமியின் கை.

முகத்தருகே வந்திருந்தது முகம். சாராய நெடி நாசி தொட்டது.

"நீயெல்லாம் ஒரு மனுஷன்... தொடாதேய்யா..."

-தாழ்ந்த குரலில் சீறினாள் லட்சுமி.

இடுப்பைத் தடவிய கையைத் தூக்கி வீசினாள் முழு வேகத்தோடு.

அதில் வெறுப்பு தெரிந்தது.

முதன் முதலாக அதிர்ந்தான் முத்துசாமி.

தாயாரின் நினைவு வந்தது தங்கராசுவுக்கு. இந்துமதி டீச்சர் தாயின் முகத்தோடு வந்து புன்னகை சிந்தினாள். தன்னைச்

சுற்றிலும் பார்த்தான். மல்லாந்து, சரிந்து, சுருண்டு பல்வேறு கோணங்களில் குழந்தைத் தொழிலாளர்கள் உறங்கிக் கொண்டிருந்தனர்.

மெல்ல ஓசை வராமல் எழுந்து, தன் தகரப் பெட்டியை நெருங்கித் திறந்தான். கண்களில் ஒருவித உயிர்த் துடிப்பு வந்திருந்தது. ஒரு குழந்தையைத் தூக்குவது போல ஒரு பெரிய மஞ்சள் பையைத் தூக்கினான். 'திருமணப் பட்டுக்கு ஸ்ரீ கூடலிங்கம் ஜவுளிக்கடை' என்று சொல்லாமல் சொன்னது அந்த மஞ்சள் பை. அந்தப் பையைத் தூக்கி மார்போடு அணைத்துக் கொண்டு வாசலை நோக்கி நடந்தான்.

கதவு சத்தமில்லாமல் திறந்து கொண்டது. அகலமான மைதானம். இரண்டு ஆள் உயர காம்பவுண்ட் சுவர். பயத்துடன் இரும்பு கேட்டை நோக்கி நடந்தான். இதயம் வேகமாய்த் துடித்தது. காவலாளியின் இருப்பிடம் வெறுமையாய்க் கிடந்தது.

கேட்டைத் தாண்டி இருட்டுக்குள் வேகமாய் ஓடினான் தங்கராசு.

தீப்பெட்டி ஆபீஸ் வண்டி ஹாரன் சத்தத்தில் திடுக்கிட்டு விழித்துக் கொண்டாள் லட்சுமி. திரும்பிப் பார்த்தாள். பூமாரி உதட்டில் புன்னகையுடன் தூங்கிக் கொண்டிருந்தாள். எழுப்ப மனம் வரவில்லை லட்சுமிக்கு. தயக்கத்துடன் எழுப்பினாள். பூமாரி தூக்கக் கலக்கத்துடன் எழுந்து, முகம் கழுவி, அனிச்சையாய் தாவணி சுற்றி கையில் தூக்குச் சட்டி தூக்கி, தீப்பெட்டி ஆபீஸ் வேன் நிற்கும் இடம் நோக்கி நடந்தாள். பள்ளிக்கூடத்துச் செடிகளுக்குத் தண்ணீர் ஊற்ற வேண்டும் என்பது நினைவுக்கு வர, மண் குடத்தைத் தூக்கிக் கொண்டு நடந்தாள் லட்சுமி எதிர்த் திசையில்.



தீப்பெட்டி ஆபீஸ் வேனை நெருங்கியதும்- பூமாரிக்குச் சேதி சொல்லப்பட்டது.

'உன் தம்பி தங்கராசு ஓடிப் போயிட்டானாம்' அதிர்ச்சியில் உறைந்து போய் நின்றாள் பூமாரி.

குளத்தில் தண்ணீர் எடுத்துக் கொண்டு பள்ளிக் கூடத்தை நோக்கி நடந்தாள் லட்சுமி. மனசு துக்கத்தின் சுமையில் தள்ளாடியது. இந்துமதி டீச்சர் நான்கு நாட்கள் நடையாய் நடந்து வந்து சொல்லியும் தங்கராசுவை, தொடர்ந்து படிக்க வைக்க முத்துசாமி மறுத்தது நினைவில் வந்தது.

தண்ணீர்க் குடத்துடன் பள்ளிக்கூடக் காம்பவுண்டுக்குள் நுழைந்த லட்சுமி அதிர்ந்தாள்.

அவள் பார்வை தொட்ட இடத்தில் சுருண்டு படுத்திருந் தான் தங்கராசு. மார்போடு புத்தகப் பை!

*- அமுதசுரபி, பிப்ரவரி 1997*

# 11

# கானல் மான்!

(*ராணி வார இதழ் நடத்திய சிறுகதைப் போட்டியில் பரிசு பெற்ற கதை.)

*இந்தக் கதையைப் பெண் கல்வியில் ஆர்வம் மிகுந்த இளம் ஆசிரியர் இந்துமதியின் திணறலாகவும் படிக்கலாம். பிறந்த குழந்தையைப் பராமரிப்பதற்காக, வளரும் குழந்தையின் கல்வியைப் பலியிடும் எளிய பனங்காட்டுக் கிராமத்தின் பரிதாபக்குரலாகவும் படிக்கலாம். அனைவருக்கும் கல்வி என்னும் நம் தேச ஆசை நடைமுறையில் எப்படிப்பட்ட இடிபாடுகளிடையே நசுங்கிச் சீரழிகிறது எனக் காட்டும் வாழ்க்கைச் சித்திரமாகவும் பார்க்கலாம். பதனி மணங்கமழும் பனங்காடும், முள் நிறைந்த குரண்டுப் புதரும் மண்டி, அக இருள் அடர்ந்து கிடக்கும் கிராமத்தினுள்ளே, கல்வி என்னும் சிற்றகலை ஏந்தியபடி முன்னேறத் தடுமாறும் இந்துமதியின் தவிப்பு கதையில் தூக்கலாதக வெளிப்படுகிறது. கண் திறக்கத் தொடங்கியிருக்கும் அடித்தளஇ தமிழ்கத்திடம் சென்று சேர வேண்டிய கதை இது. அவர்களுக்கான எளிமையும் தெளிவும் ஈர்ப்பும் இருக்கிறது.*

*– எழுத்தாளர் பொன்னீலன்.*



**பே**ருந்தை விட்டு இறங்கிய இந்துமதிக்கு ஆச்சரியமாய் இருந்தது.

சந்தனமாரியை காணவில்லை.

தினசரி தவறாமல் வந்து நிற்கும் சந்தனமாரியை இன்று காணவில்லை.

சற்றுத் தள்ளியிருந்த பூவரசு மரத்தடியில் இரண்டு சிறுவர்களும், ஒரு சிறுமியும் நின்று கொண்டிருந்தார்கள். அவளைக் கண்டதும் உற்சாகமானார்கள்.

“வணக்கம் டீச்சர்!” என்றனர் கோரசாய்.

“வணக்கம்!” என்றாள் மெலிதான புன்னகையுடன்.

அது அவர்களைப் பெருமைப்படுத்தியிருக்க வேண்டும். முகத்தில் கம்பீரம் வந்திருந்தது. மூவரும் முன்னால் நடந்தார்கள். பின் தொடர்ந்தாள் இந்துமதி.

இரண்டு கிலோ மீட்டர் நடக்க வேண்டும். நீண்டு செல்லும் ஒற்றையடிப் பாதை. பதநீர் மணக்கும் பனங்காட்டையும், தண்ணீரில்லாமல் வெடித்துக் கிடக்கும் ஊருணியையும், ஒரு சுடுகாட்டையும் கடந்து செல்ல வேண்டும். அதன்பிறகுதான் கரையடி இச்சியும், கிழட்டு ஆலமரமும், அந்த ஊரும் தெரியும். ஊரின் தென்கோடியில் தலையில் ஓடு சுமந்த பள்ளிக்கூடத்துக்கு புது ஆசிரியை.

இருபது நாளாய் வந்து கொண்டிருக்கிறாள். கோவில்பட்டியில் பேருந்து ஏறி மஞ்சங்குளத்தில் இறங்கி இரண்டு கிலோ மீட்டர் நடக்கிறாள். அந்த நடைப் பயணத்தின் துணைக்குத்தான் பள்ளிச் சிறுவர்கள். பெற்றோர்களே அனுப்பி வைத்திருக்கிறார்கள். ‘உன்னைப் பெத்தவங்க எங்களை

நம்பித்தான் பிராயத்துப் பெண்ணை அனுப்பி வைச்சிருக்காங்க' இது அவர்கள் வாதம்.

'கிராமத்து மனசு சந்தனந்தான்.

காற்றில் மிதந்து வந்த பதநீர் காய்ச்சும் மணம் நாசியைத் தொட்டது.

கண் தொட்ட இடமெங்கும் 'குறண்டு' பூத்துச் சிரித்தது.

'சந்தனமாரி ஏன் வரவில்லை... உடம்பு சரியில்லையோ... காலில் ஏதாவது சீமை உடைமுள் குத்தி நடக்க முடியாமல் போயிருக்குமோ... பள்ளிக்கூடத்துக்கு வருவாள்' மனதை சமாதானப்படுத்திக் கொண்டாள்.

தனக்கு இரண்டு பக்கமும் வரும் சிறுவர்களைத் திரும்பிப் பார்த்தாள். அவள் ஒரு ராஜாவாகவும் அவர்கள் சேவகர்களாகவும் கண்ணுக்குத் தெரிந்தார்கள். சில நேரம் தன்னைத் திருடியாகவும் சிறுவர்களை போலீசாகவும் கற்பனை செய்வாள். 'பக்'கென்று சிரித்துவிட்டாள்.

"எதுக்கு டீச்சர் சிரிச்சீங்க?"

நாக்கைக் கடித்துக் கொண்டாள் இந்துமதி. "இந்த ஊருணி காய்ந்து கிடக்குதே அதை நினைச்சிதான்."

"அதுவா டீச்சர்... கருப்பசாமி கொடை வந்தா தண்ணி வந்திடும். முத்துலெட்சுமி ஐயா கூட 'வெள்ளாவி' வைச்சி துணி தொவைப்பாரு."

ஊருணியைக் கடந்து கரையேறினார்கள். 'ஆயில்' மோட்டார் சத்தம் காதைப் பிளந்தது. கிணற்றுத் தண்ணீர் அருவியாய் வாய்க்காலில் கொட்டிக் கொண்டிருந்தது.



வழக்கம்போல் தண்ணீர் குடிக்கும் ஆசை வந்தது. பெண்கள் பனை ஓலைப் பெட்டியில் மல்லிகைப்பூ பறித்துக் கொண்டிருந்தார்கள்.

'சந்தனமாரி கணக்கில் மட்டுந்தான் புலி என்று நினைத்திருக்கிறேன். நேற்று தமிழில் புதுக் கவிதை எழுதியிருக்கிறாள். ஒன்பது வயது பெண், கவிதை எழுதுவது சாத்தியமா... எதிர்காலத்தில் பெரிய கவிதாயினியாக வருவாளோ...'

"டீச்சர் புளியங்கா வேணுமா?"

"வீட்டு கணக்கு போட்டுட்டியா?"

பதில் இல்லை.

'சந்தனமாரி ஏன் வரவில்லை'

வரிசையாய் கல்லறைகள் தெரிந்தன. கல்லறைகளுக்கு மத்தியில் சுடுகாட்டு மாடன் சாமி தெரிந்தது.

சாமி முன்னால் மரத்தூணில் நீளமாய் இரும்புச் சங்கிலி தொங்குவது கண்ணில் பட்டது. சங்கிலி நுனியில் கூர்மையான கொக்கி. அந்தக் கொக்கியில் ஆட்டுக்குட்டி கழுத்தைக் குத்தி உயிரோடு தொங்கவிடுவார்களாம்... அவை அப்படியே சாகும் வரை தொங்குமாம்... சந்தனமாரி சொல்லியிருக்கிறாள். இந்துமதிக்கு நினைத்துப் பார்க்கவே பயங்கரமாய் இருந்தது.

பிராணிகள் தன் கண் முன்னால் வதைபட்டுச் செத்துப் போவதை அந்தக் கடவுள் விரும்புகிறாரா... உயிர்கள் சொட்டு சொட்டாய் இரத்தம் சிந்துவது அந்தச் சாமிக்கு ஆனந்தமா... கண் முன் துள்ளித் திரியும் உயிர்களிடம் அன்பு செலுத்தத் தெரியாத இந்த ஜனங்கள் கண்ணுக்குத் தெரியாத கடவுளிடம் எப்படி அன்பு செலுத்துகிறார்கள்... இது கசிந்து வரும் அன்பு அல்ல...

பொங்கி வழியும் பக்தி அல்ல... பயம். கடவுள் பயம்... இரத்தம் கக்க அடித்துக் கொன்றுவிடும் என்று எவனோ மிரட்டிச் சென்ற பயம்... பயமுறுத்தும் சாமியை திசை திருப்பும் தந்திரம்தான் இந்த புலி... கடவுளை தனக்கு வேண்டியவராக்கிக் கொள்ளும் சாணக்கியத்தனம். இது குறித்து நம்ம சந்தனமாரியை கவிதை எழுதச் சொல்ல வேண்டும்.

கரையடி இசக்கியும், கிழட்டு ஆலமரமும் கண்ணில் தெரிந்தன.

குளத்தங்கரையில் நின்று கொண்டிருந்த கணேசன் இந்துமதியைக் கண்டதும் திரும்பி ஓடினான். ஒரு கையில் கால் சட்டையைப் பிடித்துக் கொண்டு.

"டிங்... டிங்... டிங்..."

-சத்தமாய் பள்ளிக்கூட முதல் மணி அடித்தது.

காம்பவுண்டுக்குள் நுழைந்தாள்.

விளையாடிக் கொண்டிருந்த சிறுவர்கள் தற்காலிகமாக விளையாட்டை நிறுத்தி, "வணக்கம் டீச்சர்."

-என்றனர். சந்தனமாரியை காணவில்லை.

சிறிது நேரத்தில் தலைமை ஆசிரியரும், சக ஆசிரியை பத்மாவதியும் வந்துவிட இரண்டாம் மணி அடித்து வகுப்புகள் தொடங்கின.

சிறுவர்களும் சிறுமிகளும் நெருக்கியடித்துக் கொண்டு அமர்ந்திருந்தார்கள்.

இந்துமதி வருகைப் பதிவேடு நோட்டை எடுத்துப் பிரித்தாள்.

"ஆவுடையப்பன்."

"உள்ளேன் அம்மா."



"இசக்கி."

"உள்ளேன் அம்மா."

"சந்தனமாரி."

-பதில் இல்லை. நிமிர்ந்தாள். மழை அடித்தாலும் இடிஇடித்தாலும் ஓடிவருகிற சந்தனமாரிக்கு என்ன ஆயிற்று.. அவள் இடம் வெறுமையாய் இருந்தத.

"சந்தனமாரி ஏன் வரல்ல... யாருக்காவது தெரியுமா...?"

-என்று கேட்டாள் இந்துமதி. மேல்சட்டை இல்லாத சிறுமி ஒருத்தி தயக்கமாய் எழுந்து, பாவாடையை இறுக்கிக் கட்டிக்கொண்டு பதில் சொன்னாள்.

"சந்தனமாரியோட அம்மாவுக்கு பிள்ளை பொறந் திருக்கு."

"அம்மாவுக்கு பிள்ளை பிறந்தா மகளுக்கு லீவா?"

"ஆமா டீச்சர். இனிமே சந்தனமாரி பள்ளிக்கூடத்துக்கு வரமாட்டா..."

"என்ன.. பள்ளிக்கூடத்துக்கு வரமாட்டாளா..."

-அதிர்ச்சி பந்து ஒன்று தாக்கியது இந்துமதியை.

"ஆமா டீச்சர்... இனிமே ஒரு நாளும் பள்ளிக்கூடத்துக்கு வரமாட்டா..."

-அந்த பதிலில் அடுத்த கேள்வி கேட்க முடியாத அளவுக்கு பலவீனப்படுத்தப்பட்டிருந்தாள் இந்துமதி. மெல்ல நாற்காலியில் சரிந்து அமர்ந்து கொண்டாள். எதையோ இழந்துவிட்ட உணர்வு ஏற்பட்டது.

"அம்மாவுக்குக் குழந்தை பிறந்ததுக்கு சந்தனமாரி படிப்பை ஏன் நிறுத்தணும்...?"

-பயந்தவள் போல கேட்டாள் மெல்லிய குரலில். எதிரில் நின்ற சிறுமி படித்துக் கொடுக்கப்படாத பாடத்தில் கேள்வி கேட்பது போல மிரள மிரள விழித்தாள்.

"ஏன்...?"

-மீண்டும் தனக்குள்ளே கேட்பது போல் உரக்க கேட்டாள்.

'பகபக'வென்ற சிரிப்பு சத்தத்தில் திரும்பினாள். ஒரு கையில் பருப்பு, இன்னொரு கையில் எண்ணெயுடன் நின்று கொண்டிருந்தார் சத்தணவு அமைப்பாளர்.

"டீச்சர் நீங்க புதுசு... இந்த ஊரு வழக்கம் உங்களுக்குத் தெரியாது... ஊர்ல புதுசா ஒரு புள்ளை பெறந்தா நம்ம வருகைப் பதிவேட்டில் ஒரு எண்ணிக்கையை குறைச்சுக்கணும்."

-என்று சொல்லிவிட்டு மீண்டும் சிரித்தார்.

"உங்களுக்குச் சிரிப்பா இருக்குதா... நம்ம பள்ளிக் கூடத்துலேயே நல்லா படிக்கிற பொண்ணு அது. அதைப் போய் நிறுத்திட்டாங்களே..."

"இந்த ஊர் பொண்ணுங்க வருசத்துக்கு ஒரு பிள்ளை பெத்து போட்டிருவாங்க. வயித்துபாட்டுக்கு, களை பறிக்க, கடலை புடுங்கன்னு போவாங்க... அந்தநேரம் குழந்தையை யாரு பார்த்துக்குவா... மூத்த பொண்ணு படிப்பை பாதியில் நிறுத்தி வீட்ல வைச்சிடுவாங்க..."

"சந்தனமாரி அம்மாகிட்டே நான் போய் சொல்லிப் பாக்கட்டுமா..."

"நீங்களா... வேற வினையே வேண்டாம். என் சவுரியத் துக்கு குழந்தை பெத்து வெச்சிருக்கனா... உன் சவுரியத்துக்குக்



குழந்தை பெத்து வெச்சிருக்கனான்னு கேட்கும். கல்யாணம் முடிஞ்ச எட்டு வருடத்தில் ஏழு பிள்ளைகளைப் பெத்துருக்குது. நீங்கபாட்டுக்கு வாயை பொத்திக்கிட்டுப் போர்டுல எழுதிப் போடுங்க தாயி... ஆணுக்கிங்கே பெண் இளைப்பில்லை காணென்று கும்மியடி..."

-சிரித்தபடி நகர்ந்தார்.

இந்துமதிக்கு நெஞ்சில் நெருப்பு பற்றிக் கொண்டது போலிருந்தது. 'இனி சந்தனமாரி வரமாட்டாள். அவள் படிப்பு இன்றோடு முடிந்தது. இன்று சின்னப் பெண், நாளை தாயல்லவா. கல்வியறிவில்லா தாயால் ஒரு குடும்பமே கல்வி அறிவை இழக்க நேரிடுமே. சந்தனமாரி சில வருடங்களில் பூப்படையலாம். படிப்பில்லாத பெண்ணுக்கு அவசரமாய் கல்யாணம் நடக்கும். அவசரமாய் பன்றி குட்டிகளைப் போல இடைவெளி இல்லாமல் குழந்தை பெறுவாள். அர்த்தமில்லா ஜனனங்கள் தொடரும்... கடைசியில் நோயுடன் தாய், பிணியுடன் குழந்தை... இதுதானே முடிவு...' சட்டென்று எழுந்து நடந்தாள். கரும்பலகையில் வேகமாய் எழுதினாள்.

**கண்கள் இரண்டினில் ஒன்றைக் - குத்திக்**
**காட்சி கெடுத்திடலாமோ...?**
**பெண்கள் அறிவை வளர்த்தால் - வையம்**
**பேதைமை யற்றிடுங் காணீர்!**

கரும்பலகையில் வெளிச்ச அலைகளாய் வெள்ளை எழுத்துக்கள்.

"எல்லாரும் இருபது முறை எழுதி என்னிடம் காட்டுங்கள்."

-என்று சொல்லிவிட்டு நாற்காலியில் சாய்ந்து அமர்ந்தாள். சன்னல் வழியே பிள்ளையார் கோயிலும், தூணில் சாய்ந்து

வெத்திலை 'சவைக்கும்' கிழவர்களும் தெரிந்தார்கள். எத்தனை நேரம் அப்படி அமர்ந்திருந்தாளோ...

"டீச்சர்..."- என்ற குரலில் கலைந்தாள்.

கையில் நோட்டுடன் முத்துலெட்சுமி நின்று கொண் டிருந்தாள்.

வாங்கிப் பார்த்தாள். தெளிவான குண்டு குண்டான எழுத்துக்கள்.

தங்க வரிகளில் பிழை இல்லை.

வெளியே கார் ஒன்று வந்து நிற்கும் சத்தம் கேட்டது.

அதைத் தொடர்ந்து-

சிறிது நேரத்தில் கார் புறப்பட்டுச் செல்லும் சத்தமும் கேட்டது.

"எதுக்காக சங்கரி கார் வந்துட்டுப் போகுது...?"

"முத்துலெட்சுமியோட அம்மாவுக்கு வலி கண்டும் குழந்தை பிறக்கலன்னு சங்கரன் கோயில் மருத்துவமனைக்குக் கொண்டு போறதுக்கு முள்ளிகுளத்தில இருந்து கார் வந்திச்சி. கார் வந்த நேரம் குழந்தை வீட்டிலேயே பொறந்திடிச்சி... பொட்டைப் பிள்ளை..."

-சத்துணவு அமைப்பாளரின் கேள்வியும், சமையல் பெண்ணின் பதிலும் இந்துமதியைத் திடுக்கிட வைத்தன.

கரும்பலகை பாரதி வரிகள் சிரிப்பது போல் தெரிந்தது.

முத்துலெட்சுமி கையில் பென்சிலுடன் இந்துமதியை கண் அசையாமல் பார்த்துக்கொண்டு நின்றிருந்தாள்.

'நாளை முத்துலெட்சுமியும் வரமாட்டாள்.'

*- ராணி, நவம்பர் 1992*

# 12

# சுமை

(*தினமணி தின இதழ் - நெய்வேலி புத்தகக் கண்காட்சி இணைந்து நடத்திய சிறுகதைப் போட்டியில் பரிசு பெற்ற கதை.)

*சரித்திரக் கதை எழுதுவதில் புகழ் பெற்ற எழுத்தாளர் மதுரா எழுதிய சிறந்த சமூக சிறுகதை 'சுமை' ஆகும்.*

*சரளமான கிராமத்து நடை, இதமான சொற் றொடர்கள், இயற்கைச் சூழலை நம்முன் கொண்டு வரும் வளமான வார்த்தைகள், 'தாமிர பரணி' ஆற்று நீரின் சுவை அத்தனையும் கதைக்கு இனிமை சேர்க்கின்றன.*

*அந்தத் தாய்க்கு நெஞ்சில் கணவனை இழந்த சோகச் சுமை ஒரு பக்கம். மூத்த மகனின் வார்த்தைச் சுமை மறுபக்கம். இளைய மகன் தந்த சாட்டையடி இன்னொரு பக்கம். ஆதரவு தர மறுக்கும் சொந்த அண்ணன் மற்றுமொரு பக்கம். அந்தத் தாய் தனது வாழ்க்கையில் என்ன முடிவு எடுத்தாள்...?*

"பிறந்ததும் நெஞ்சில சுமந்தேன். தோள்ல சுமந்தேன். போங்கல போக்கத்த பயல்களா... என்னை இந்த மண்ணு

*சுமக்கும்ல" – என்று ஒரு தாய் கதறும்போது நம் நெஞ்சம் கவலையை சுமக்கிறது.*

*சுமை – ஒரு சிறுகதை அல்ல, சுமக்க இயலாத சுமை.*

*- பேராசிரியர் நெல்லை கவிநேசன்.*

**தீ**கு திகுவென்று எரிந்து கொண்டிருந்தது வளையமாய்.

நெருப்பு வளையத்துக்குள் சிக்கியிருந்தார் சபாரத்தினம். தீயோ அசுரப் பசியில் இருந்தது. சுழன்றடிக்கிற காற்று நெருப்பை இன்னும் வேகப்படுத்தியது. மல்லாந்து படுத்திருந்த சபாரத்தினத்தின் முகமோ ஆழ்ந்த உறக்கத்திலிருந்தது. ஆணுக்கும் பெண்ணுக்கும் பேதம் தெரியாத நெருப்பு சுழன்று சுழன்று நெருங்கியது.

நெருப்பு அவருடைய சுருள் முடியை... அழகிய கண்களை...

திடுக்கிட்டு விழித்துக் கொண்டாள் பார்வதி.

'கண்டது கனவா? கண்டது கனவுதான்! நடந்ததோ நிஜம். நெருப்பு என்னவரைத் தின்று தீர்த்து விட்டது. என்னவரை நெருப்புக்குத் தின்னக் கொடுத்து பதினாறு நாட்கள் கரைந்து விட்டன. இன்னும் என் வாழ்க்கை மீதமிருக்கிறது.''

கோழி கூவும் சத்தம் தூரத்தில் கேட்டது.

'முப்பத்து நான்கு வருடம் அவருடன் சேர்ந்து வாழ்ந்திருக்கிறேன். நிஜமாய் நிஜமாய்க் கோபம் வந்து நான் பார்க்கவே இல்லையே. ஒரு நாள் கூட நோய் வந்து படுத்தது இல்லை. ராத்திரி எழுந்து நெஞ்சு வலிக்கிறது என்றார். ஓடிப்போய் டாக்டரை அழைத்து வருவதற்குள் இறந்து



போயிருந்தார். முப்பத்து நான்கு வருடம் சேர்ந்து வாழ்ந்தவளிடம் ஒரு வார்த்தை சொல்லாமல் இறந்து போனார்.'

– யாரிடமோ சொல்வது போல் மனதுக்குள் வார்த்தைகள் ஓடியது.

பச்சைத்தண்ணி மயினி கோழி கூவும் சத்தம் கேட்டது.

நார்க் கட்டிலிலிருந்து எழுந்து கொண்டாள் பார்வதி.

இருட்டு வெறும் இருட்டு மட்டுமே அந்த அறையில் இருந்தது.

'விளக்கைப் போடலாமா? வேண்டாம்.'

–குனிந்து நார்க் கட்டிலைத் தடவினாள் ஒருமுறை பாசமாய்.

'என்னவரை எத்தனை ஆண்டுகள் சுமந்திருக்கிறாய்? சுமை கூலி வாங்காமல்.' சபாரத்தினத்தின் குறட்டைச் சத்தம் இல்லாத இரவின் வெறுமை இதயத்தை இறுக்கிற்று. இதயம் சுமையாகி சுவாசிக்கத் திணறுவது போன்ற உணர்வு ஏற்பட்டது.

நிதானமாய் நடந்து கூடத்துக்கு வந்தாள்.

இரண்டு மகன்களும், மனைவி குழந்தைகளுடன் ஆழ்ந்த உறக்கத்திலிருந்தார்கள். தெருவுக்கு வந்தாள்.

மார்கழி மாதத்துக் காற்று குளிர் சுமந்து வந்து கண்களை குளிர்வித்தது. மஞ்சள் நிலவு தொலைந்து போயிருந்தது.

'இன்னும் கொஞ்ச நேரத்தில் விடிந்து விடும். அவருடைய வியர்வையில் நனைந்த பூமியை, பருத்தி வயல்களை ஒருமுறை பார்த்து விட்டு வரலாம்.'

– வண்டி மாடுகளின் கழுத்து மணியோசை சிந்தனையைக் கலைத்தது. திரும்பிப் பார்த்தாள்.

தெருவில் இருட்டு இன்னும் விலகாமல் இருந்தது.

எதிரில் 'ஜக்கடா' வண்டி ஒன்று வந்து கொண்டிருந்தது.

எங்கோ முற்றம் தெளிக்கிற 'சலப் சலப்' சத்தம் கேட்டது.

வயல் வெளியை நோக்கி நடக்க ஆரம்பித்தாள்.

தத்தித் தத்தி ஓடிக் கொண்டிருந்தது தாமிரபரணி ஆறு. வழக்கமான ஒடு பாதையில். ஆற்றின் கரையில் நின்று கொண்டிருந்த பனை மரங்களில் ஊசலாடிக் கொண்டிருந்தன தூக்கணாங் குருவிக் கூடுகள். கரையில் நடந்து கொண்டிருந்த பார்வதியின் மனமும் ஊசலாடிக் கொண்டுதான் இருந்தது. கண்கள் கலங்கியிருந்தன.

'மூத்த மகன் கதிரேசன் பம்பாய்க்கு அழைத்துப் போக விரும்புகிறானாம். இளைய மகன் சுந்தரம் பெங்களூருக்கு அழைத்து போக நினைக்கிறான். நேற்று ராத்திரி அண்ணன் சொன்னார். எங்காவது ஒரு இடத்துக்கு போய்த்தான் ஆக வேண்டுமாம். இந்த மண்ணை விட்டு விட்டு எப்படிப் போவது? அந்திய மொழி பேசும் மண்ணில் உயிர்ப்புடன் வாழ முடியுமா" பிறந்து வளர்ந்த தாமிர பரணிக் கரையை விட்டுவிட்டு எப்படி போக முடியும்? இந்த மண்ணில்தான் என்னவரின் சாம்பலும் கலந்திருக்கிறது!'

– கிழக்கே சூரியன் இரத்தம் கலந்த மஞ்சளாய் எட்டிப் பார்த்தான்.

சூரிய ஒளியில் பழங்காலத்து கோயில் அழகாய் தெரிந்தது.



பறம்பு. ஆதிச்ச நல்லூர்ப் பறம்பு.

பறம்பெங்கும் பரவிக் கிடக்கும் சரளைக்கற்களும் மினுங்கின மஞ்சள் ஒளியில்.

எங்கு பார்த்தாலும் மண் ஓடுகள்.

தரையில் சதுரம் சதுரமாகக் கட்டம் போட்டிருந்தது.

இருபது முப்பது பேர் வேலை செய்து கொண்டிருந்தனர் மண் தோண்டும் பணியில். இருவர் கூம்பு வடிவிலான மண்பாணை ஒன்றைத் துடைத்துக் கொண்டிருந்தனர்.

தொல்லியல் ஆராய்ச்சி நடக்கிறது பறம்பில்.

அங்குலம் அங்குலமாகக் கணக்கிட்டு தாழிகள் சிதையாமல் வெளியே எடுக்கிறார்கள்.

'தாழி தாழியாய் வைத்து புதைத்திருக்கிறார்களே. எந்த ஊரின் இடுகாடு இது? அந்த ஊர் எங்கே போயிற்று? ஊரும் புதைந்து போய் விட்டதா?"

– நடக்கவிடாமல் இழுத்து நிறுத்தியிருந்தது.

தோண்டிய குழிக்குள் இருந்து தாழி ஒன்றை எடுத்து வெளியே வைத்தனர். அந்த மண் பாண்டம் அளவில் மிகச் சிறியதாக இருந்தது. இரண்டு வயது குழந்தையைப் புதைக்க அந்தத் தாழியை பயன்படுத்தியிருக்க வேண்டும்.

பார்வதியின் கண்களில் கண்ணீர் எட்டிப் பார்த்தது.

'ஏன் இந்த அழுகை? யாரோ ஒரு முகம் தெரியாத குழந்தைக்காக நான் ஏன்... நான் ஏன் அழுகிறேன்? அதுவும் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன் இறந்த குழந்தைக்காக.'

- கண்களைத் துடைத்துக் கொண்டு நடந்தாள் வயல் வெளி நோக்கி.

'இந்த மண்ணுக்குச் சுமையாய்த் தெரியவில்லையா? உயிர் இழந்து மூவாயிரம் ஆண்டுகள் கரைந்த பின்பும் சுமையாய் தெரியவில்லையா? எத்தனை தாழிகள்? எத்தனை வருடங்கள்?''

- குறுக்கே வந்தது 'குதிரை உருட்டி' ஓடை.

மணல் மட்டுமே கிடந்தது. தண்ணீர் ஓடியதை ஞாபகப் படுத்துவது போல.

ஓடையைக் கடந்ததும் பருத்தி வயல்கள் தெரிந்தன.

வெள்ளைப் பூக்களாய் சிரித்தன வெடித்த பருத்தி காய்கள்.

'மஞ்சக் குளிச்சி, மாக்குளிச்சி சிரிச்சி நிக்கையில வேண் டாம்னு சொன்னீரே.. புள்ளை பெத்து பொளந்து கெடைக்கையில பறிக்க வந்தீரே.'

- ஆத்தாவை பெத்த பால் பாண்டித் தாத்தா சொன்ன விடுகதை நினைவில் வந்தது. 'குறுஞ் சிரிப்பாணி' உதட்டை அசைத்தது.

அடுத்த நிமிடமே சிரிப்பு உறைந்து போயிற்று.

தண்ணீரில்லாமல் பருத்திப் பாத்திகள் வெடித்துக் கிடப்பது கண்ணில் விழுந்தது. வெடிச்ச பருத்தியை 'மேக்கத்தி காத்து' இழுத்து சென்று கொண்டிருந்தது.

'பதினாறு நாட்கள். அவர் இறந்து பதினாறு நாட்கள் ஆகிவிட்டன. உன்னை கவனிக்க ஆள் இல்லாமல் போயிற்று. நானும் இந்த மண்ணை விட்டு விட்டு போக வேண்டிய திருக்கிறதே. அறுபது வருடம் ஒட்டி உறவாடிய மண். வியர்வை



சிந்த ஓடி ஓடி வேலை செய்த பருத்தி வயல்கள். எல்லாவற்றையும் விட்டு விட்டு போக வேண்டியதிருக்கிறதே. இந்த மண். இந்த மண்.'

- பொங்கிய கண்ணீருடன் பார்வை வருடியது.

பூத்தும் வெடித்தும் சிரிக்கும் பருத்திச் செடிகள்... முருங்கை மரத்துக் கிணறு அந்த, அந்தக் காதல் மரம், குதிரை உருட்டி ஓடை, கல்லறை மேடு, ஒத்தப்பனை சாமி, - கண்களிலிருந்து கண்ணீர் மளமளவென்று வழிந்தது.

சேலைத் தலைப்பால் கண்ணீரைத் துடைத்தபடி திரும்பி வீட்டை நோக்கி நடந்தாள். தொலை தூரம் நடப்பது போல் உணர்ந்தாள். வீட்டைத் தொட்டதும் - முற்றத்தில் நின்ற மாமரத்து நிழலில் அமர்ந்தாள்.

'கல்யாணமான புதிதில் கழுகு மலைச் சந்தைக்கு போய்விட்டுத் திரும்பும் போது அவர் வாங்கி வந்த மாம்பழத்துக் கொட்டை இன்று மரமாய். அவரைத்தான்...'

வீட்டுக்குள் பேசுவது காதில் மோதி சிந்தனையை அறுத்தது.

''எனக்கெதுக்கு அந்த சுமை? என்னால் முடியாது.''

- கொஞ்சம் சத்தமாகவே சொன்னாள் மஞ்சுளா. தன் கணவன் சுந்தரிடம். அவன் பதில் எதுவும் சொல்லவில்லை. பதில் சற்று தள்ளியிருந்த அண்ணன் கதிரேசன் மனைவியிட மிருந்து வந்தது வேக வேகமாய்.

''நாங்க மட்டும் எதுக்காக சுமக்கணும்?''

- அவள் குரலுக்கு மறுப்பேதும் சொல்லவில்லை பார்வதி யின் மூத்த மகன். விரல்கள் சன்னல் கம்பியை இறுக்கி

பிடித்திருந்தன. அடுத்த விநாடி கண்கள் அதிர்ச்சி வாங்கியது. முற்றத்தில் நிற்கும் மாமரத்து நிழலில் அமர்ந்திருக்கும் அம்மாவின் முகத்தைக் கண்கள் தொட்டு விட்டன. மனைவி பேசியது அம்மாவின் காதில் விழுந்திருக்குமோ என்று அவனுக்கு பயமாயிருந்தது.

"என்னங்க? நா பாட்டுக்கு கிறுக்கி மாதிரி புலம்பிக்கிட்டிருக்கேன்... நீங்க என்னடான்னா புடிச்சி வைச்ச பிள்ளையார் மாதிரி உட்கார்ந்து கிட்டிருக்கீங்க."

- மீண்டும் முகம் சிவந்து கோபப்பட்டாள் மஞ்சுளா.

"மாமா வரட்டும். பேசிக்கலாம்."

- என்றான் யோசனையுடன் சுந்தர், அண்ணன் முகம் பார்த்து. அந்த விநாடியே மௌனம் வந்து அமர்ந்து கொண்டது.

அண்ணன் சன்னலுக்கு வெளியே பார்த்துக் கொண்டிருந்தான் பதற்றத்துடன்.

தம்பி திரும்பி சுவர் பார்த்தான் எதுவும் பேசத் தோன்றாமல்.

பத்து நிமிடங்கள் கரைந்தபின் பார்வதியின் அண்ணன் வந்தார் சாவகாசமாய். உடன்குடி வெற்றிலையை மென்று கொண்டிருந்தது வாய்.

"ம்... பொண்டாட்டிங்க வாயை திறக்க கூடாது... ம்.

முதல்ல சின்னவன் சொல்லு."

- என்றார் சுண்ணாம்பை வெற்றிலையில் தடவிக் கொண்டே.

மஞ்சுளா சுந்தரின் இடுப்பில் இடிக்க பதற்றமாய் பேசத் தொடங்கினான்.



"மாமா" நானும் டீச்சர். என் மனைவியும் டீச்சர். நாங்க தங்கியிருக்கிற பெங்களூரிலிருந்து நாப்பது கிலோ மீட்டர் போயிட்டுத் திரும்பி வர வேண்டியதிருக்கு வேலைக்காக. காலையில் வேலைக்கு போனா ராத்திரிதான் வீடு திரும்பி வரவேண்டிய நிலைமை. எங்களால அம்மாவை வைச்சி பத்து நாள் கூடப் பார்த்துக்க முடியாது. அண்ணன் தான்..."

- இடை மறித்தாள் அண்ணன் பெண்டாட்டி.

"நாங்க மட்டும் எப்பிடி பார்க்க முடியும்? பம்பாய்க்குப் பிழைக்க போயி வீட்டோட பலசரக்கு கடை வைச்சிருக்கோம். நாலு பிள்ளைங்க. அதைப் பாக்கிறதுக்கே நேரம் சரியாயிருக்கு. எங்க சுமையையே எங்களால சுமக்க முடியல""

- இன்னொரு வெற்றிலையை கையில் எடுத்துச் சுண்ணாம்பு தடவினார்.

"மாமா!' நானும் தம்பியும் மாசமாசம் உங்களுக்குப் பணம் அனுப்பி வைச்சிடறோம். அம்மாவை நீங்க பாத்துக்குங்க மாமா"

- என்றான் அண்ணன் கதிரேசன் குரலைச் சிறிதாக்கி.

"அம்மா உங்களுக்கு சுமையா தெரியுது. இதுக்கு உங்க அத்தை சம்மதிக்கணுமே. அவளுக்கும் பார்வதி சுமையா தெரிஞ்சிட்டா என்ன செய்றது?"

- காலடி ஓசையில் திரும்பினார்.

வாசலில் -

பார்வதி நின்று கொண்டிருந்தாள் முகத்தில் சலனமின்றி.

அதிர்ச்சியில் கையிலிருந்த வெற்றிலை நழுவித் தரையில் விழுந்தது.

எல்லாருடைய முகத்தையும் மௌனமாய் ஒரு முறை பார்த்து விட்டு வாய் திறந்தாள்.

“பிறக்கிறவன் எல்லாம் சுமக்கிறதுக்குத்தான் பிறக்கிறான். பிறந்தவன் எதையாவது சுமந்துதான் தீரணும். அதுதான் இந்த மண்ணோட எழுதப்படாத விதி. ஏலேய்! நீங்க இரண்டு பேரும் என் வயித்தில கருவா இருக்கும் போது சுமையாத்தான் இருந்தீங்க. பாரமாத்தான் இருந்திச்சி. எதையாவது தின்னு உங்களை கலைச்சிப் போட்டிருக்கலாம். நான் செய்யல. சுமையா இருக்குதுன்னு சுமையை இடையில் இறக்கிப் போடல. பத்து மாதம் முடியும் மட்டும் சுமையை சுகமாய் சுமந்து கிட்டுதான் இருந்தேன். அவதான் மனுஷி. பிறந்ததும் நெஞ்சில சுமந்தேன். தோள்ல சுமந்தேன். போங்கல போக்கத்த பயல்களா. என்னை இந்த மண்ணு சுமக்கும்ல. கடைசி மூச்சு நிக்கும் மட்டும் சுமக்கும்ல “அ” செத்தாலும் சுமக்கும்ல!”

- அந்த் வார்த்தைகளை இருபத்து இரண்டு காதுகள் கேட்டன குழந்தைகள் உட்பட. நிறைவுடன் திரும்பி நடந்தாள் பார்வதி தன் பருத்தி வயல்களை நோக்கி.

13

# ஓட்டு விளையாட்டு பாப்பா

**வன்முறையை எங்களால் கட்டப்படுத்த முடிந்தது. ஆனால் எங்களால் பணப் பிரயோகத்தை - கட்டுப்படுத்த முடியவில்லை. ஆயுதத்தை ஆயுதத்தால் சந்திக்க முடியும். ஆனால் பணத்தை பணத்தால் சந்திக்க முடியாது.**

***- என். கோபால சாமி;***
***முன்னாள் தலைமைத் தேர்தல் ஆணையர்,***
***21. 06. 2009 அன்று சென்னையில் பேசியது.***

*திருநெல்வேலி சீமை எழுத்தாளர் மதுராவின் 'ஓட்டு விளையாட்டு பாப்பா' சிறுகதை பண நாயகமாகிப் போன ஜனநாயக – அவலத்தை படம் பிடித்துக் காட்டுகிறது. முடியரசு மன்னர்கள் ஆண்ட காலத்திலே கூட, குடவோலை முறை மூலம் மக்களின் கருத்தறிந்து ராஜ பரிபாலனம் செய்தவன் பேரரசன் இராஜராஜ சோழன் என்பதையும் இன்று எல்லாரும் இந்நாட்டு மன்னர் ஆனவுடன், மக்களாட்சியில் சாதாரண ஏழை ராஜராஜ சோழன் வாக்குச் சீட்டை விற்கும் நிலை ஏற்பட்டு*

*இருக்கிறது என்பதை தனது கதாபாத்திரங்கள் வாயிலாக பளிச்சென காட்டுகிறார்.*

*மதுரா வித்தியாசமான கதை சொல்லி என்பதை இந்த சிறுகதையில் அடையாளம் காட்டியிருக்கிறார். சிட்டுக் குருவி பேசத் தொடங்கியதிலிருந்து, தங்க வால் குதிரை ஆபிரகாம் வாத்தியாரிடம் பேரம் பேசுவது வரை அதிகமாக்கிக் கொண்டே போகிறார். கொக்கு தங்க மீனை தூக்கிப் போடும் போதுதான் ஆபிரகாம் வாத்தியார் மட்டுமல்ல நாமும் திடுக்கிட்டு போகிறோம். மக்கள் கையிலிருந்து ஜனநாயகம் எவ்வாறு 'இருளாண்டிகள்' கையில் சிக்குண்டு தவிக்கிறது என்பதை அப்படியே நம் கண் முன் நிறுத்தியிருக்கிறார் கதாசிரியர்.*

***- சொற்பொழிவாளர் மு. செந்திலதிபன்.***

குருவி.

குருவிதான்.

சின்னஞ் சிறிய சிட்டுக் குருவி.

மஞ்சள் அலகு, சிவப்பு கண்கள், நீல வால்... அந்தக் குருவியை பார்க்க ஆச்சர்யமாயிருந்தது ஆபிரகாம் வாத்தியாருக்கு.

'இதென்ன நீல வால்... மஞ்சள் அலகு... சிவப்பு கண்கள்...'

அந்த கண்கள் அவர் கையிலிருந்து ஓலை நறுக்கையே உற்றுப் பார்த்தத. கையிலிருந்த ஓலை நறுக்கு நழுவி விடாமல் இறுக்கிப் பிடித்தார். அரசாங்கம் தந்த ஓலை நறுக்கு அது.

அடுத்த விநாடியே அதிர்ந்தார்.

அதிர்ச்சிக்கு காரணம் -

"கா... கா..."



- என்றழைத்தது அந்த சிட்டுக் குருவி.

"அட... சிட்டுக் குருவி காக்காவாய் கத்துகிறதே...'

- பயத்துடன் அந்தக் குருவியை உற்றுப் பார்த்தார்.

அந்தக் குருவியோ ஓலை நறுக்கை உற்றுப் பார்த்தது காமத்துடன்.

"எனக்கு அந்த ஓலை நறுக்கு வேண்டும்"

- பேசியது அந்த சிட்டுக் குருவிதான்.

குரலில் அதிகாரமிருந்தது.

எழுந்து ஓடிவிட முயன்றார் ஆபிரகாம் வாத்தியார்.

குறுக்கே வந்து நின்றது அந்த குருவி.

பயத்துடன் பார்த்துக் கொண்டிருக்கும் போதே...

அந்த சிட்டுக் குருவி பெரிதாகி... பெரிதாகி... ஒரு செம்மறிக்கிடா அளவுக்கு பூதாகாரமாய் நிற்கிறது சிறகு விரித்து.

"இதென்ன குருவியா... குதிலா..."

- வாத்தியாரின் வாய் முணுமுணுத்தது.

அவரை நோக்கி பறந்து வந்தது ராட்சசத்தனமாய். அதன் கண்கள் அவர் கையிலிருந்த ஓலை நறுக்கின் மீது பதிந்து கிடந்தது.

கையிலிருந்த ஓலை நறுக்கை பறிக்கும் நோக்கம் தெரிந்தது.

எழுந்து ஓட ஆரம்பித்தார் ஆபிரகாம் வாத்தியார்.

"கா... கா..."

- அந்த குருவி காக்காவாய் கத்துவது காதில் அறைந்தது பயங்கரமாய்.

திரும்பி பார்க்காமல் ஓடினார்.

ஓடினார்... ஓடினார்... ஓடிக் கொண்டேயிருந்தார்...

ஓடவிடாமல் குறுக்கே வந்து நின்றது நீலமாய்...

குதிரை.

குதிரைதான்.

நீல நிறத்தில் மினுக்குகிற குதிரை.

'நீல நிறத்தில் குதிரை இருக்குமா...?'

குதிரை வால் சுழற்றியது.

வால் தங்க இழைகளாய் வாத்தியாரின் முகத்தில் வீசியது

'இதென்ன குதிரையின் வால் முடி தங்கமாய் இருக்கிறதே...'

"வாத்தியாருக்கு தங்கவால் முடி ஒன்று வேண்டுமா...?"

'குதிரை பேசுமா... இது எந்த தேசத்து குதிரை...'

- மனதை படித்தது போல் அந்த குதிரை மீண்டும் பேசியது.

"நான் தங்கப்புல் தின்னும் அதிசயக் குதிரை. அதுவும் அரசியல் குதிரை... எனக்கு பொய் பேசும் நாக்குதான் மூலதனம்"

- தங்கப்பல் காட்டி கனைத்தது அந்த நீல நிறக் குதிரை.

"உனக்கு என்ன வேண்டும்"

- பயத்துடன் கேள்வி வந்தது ஆபிரகாம் வாத்தியாரிட மிருந்து.

"உன் கையிலிருக்கும் ஓலை நறுக்கு வேண்டும்"

"தர முடியாது"

"ஒரு தங்கப்பல் தருகிறேன்"

- என்றது குதிரை தங்கப்பல் காட்டி.



"மாமன்னர் ராஜராஜசோழ தேவர் உத்தரவு. விடிந்தால் குடவோலைத் தேர்தல். நான் ஊர் சபைக்கு ஒரு நல்லவரை தேர்வு செய்ய வேண்டும். என் வாக்கு ஓலையை குடத்துக்குள் போட்டாக வேண்டும். வாக்கு முக்கியமானது. எந்த சின்னம் என்பதை நான்தான் முடிவு செய்ய வேண்டும். எனக்கு புறாவைத்தான் பிடித்திருக்கிறது"

"முட்டாள்... அவசரமாய் இறந்து போகாதே... ஓலை நறுக்கை தந்து விடு"

- குதிரையின் தலையில் கொம்பு முளைத்திருந்தது. மீண்டும் ஓட ஆரம்பித்தார் ஆபிரகாம் வாத்தியார்.

வயதானதால் ஓட்டம் சிரமப்பட்டது.

திரும்பிப் பார்த்தார்.

துரத்தி வந்து கொண்டிருந்தது ஒரு அசுர கொக்கு.

"வாத்தி... நில்லு வாத்தி... வாக்கு ஓலையை எனக்குத்தா. உனக்கு தங்க மீன் தருகிறேன்"

- பறந்து வந்த கொக்கின் குரல் மிரட்டியது.

தொடர்ந்து நான்கு திசைகளிலிருந்தும் ஓடி வந்தன...

நாய்... முயல்... கழுதை... குரங்கு...

வந்தவை அத்தனையும் தேர்தல் சின்னங்கள்...

கத்தின காட்டுக் கத்தலாய்.

"ஓட்டோலை வேண்டும்... ஓட்டுவோலை வேண்டும்..."

- பிடிவாதமாய் குதித்தது.

கொக்கு தங்க மீனை தூக்கி வாத்தியார் கட்டிலில் வீசியது. தங்க மீன் துடித்தது உயிர் போராட்டமாய்...'

- திடுக்கிட்டு விழித்துக் கொண்டார் ஆபிரகாம் வாத்தியார்.

'இதென்ன கனவு... விசித்திரமாய் இருக்கிறது... ஆயிரம் ஆண்டுகள் பின்னோக்கி போயிருக்கிறது கனவு... தேர்தலில் நிற்கிறவர்கள்தான் நம்மை மிரட்டுவார்கள் ஓட்டு கேட்டு. தேர்தல் சின்னங்கள் மிரட்டுகிறதே இந்த கனவில்... விடிந்தால் தேர்தல். அதனால் வந்த கனவாயிருக்கும்...'

- வியர்வையில் தெப்பலாய் நனைந்து போயிருந்தார்.

சன்னலை திறந்தார்.

காற்று ஓடி வந்து முகத்தில் மோதியது.

இரவு இரவாகவே இருந்தது. விடிந்தால்தான் தேர்தல்.

ஓட்டுக்களை ஒரு மாத காலமாய் தவணை முறையில் விற்று சாராயம் குடித்தவர்களின் சத்தமும் அடங்கிப் போயிருந்தது. இரண்டு மூன்று நாய்கள் எதையோ கண்டு பயந்து போய் ஓடி வந்தது. நாய்களை தொடர்ந்து குட்டி யானையாய் கார் ஒன்று வந்து ராஜராஜ சோழன் வீட்டின் முன்னால் வந்து நின்றது சத்தமில்லாமல். காரிலிருந்து மூன்று பேர் இறங்குவது நிழல் உருவமாய் தெரிந்தது. அடுத்து அந்த நிழல் உருவங்கள் ராஜராஜ சோழன் வீட்டை நோக்கி நடந்தது.

ஆயிரத்தில் உலவிய பெயர் ராஜராஜ சோழன். இரண்டாயிரத்தில் காதில் விழுவது வியப்பாய் இருக்கும். சுதந்திரத்துக்கு முன்னால் பிறந்த வேப்ப மரத்து வீடு முத்துடையார் தன்னை சுந்தரச் சோழ தேவராய் பாவித்துக் கொண்டு, சுதந்திரத்துக்கு பின்னால் பிறந்த தன் மகனுக்கு வைத்த பெயர் ராஜராஜ சோழன். அந்த பெயரை வைத்து விட்டு அதே மாதத்தில் அவசரமாய் இறந்து போனார். காலம் ராஜராஜ சோழனை ஏழையாக்கி இருந்தது.

"தட்... தட்..."



- ராஜராஜ சோழன் வீட்டின் கதவை தட்டும் சத்தம் கேட்டது.

கொஞ்ச நேர மௌனத்துக்கு பின்-

கதவு அரை குறையாய் திறந்து கொண்டது.

எதோ பேச்சுக் குரல் கேட்டது.

அடுத்த சில இமை மூடு பொழுதுகளில் -

மூன்று உருவங்களும் வீட்டுக்குள் நுழைந்திருந்தது.

கதவு பூட்டிக் கொண்டது அவசரமாய்.

'ராஜராஜ சோழன் வீடு அரண்மனையாகி விட்டதா.. எதாவது சதி வேலையா...'

- உதடுகளை புன்னகை அசைத்தது.

நரைத்த தாடியை ஒரு முறை தடவிக் கொண்டார்.

வானம் பார்த்தார்.

மேகங்களின் பிடியில் வானம் இருந்தது.

இருட்டின் பிடியில் நிலவு இருந்தது.

நிலவைக் காணாத வானம் அழலாமா என்று யோசிப்பது போலிருந்தது. மேகத்தின் பிடியில் சிக்காமல் தப்பியிருந்த ஒன்றிரண்டு நட்சத்திரங்களும் கண் இமைத்துக் கொண்டிருந்தன சற்று பயத்துடன்.

ஐந்து நிமிடங்களை தின்று விட்டு கதவு திறந்து கொண்டது.

வீட்டுக்குள் இருந்து ஓர் உருவம் வெளியே ஓடி வந்தது. வேகமாய்.

அதே வேகத்தில் காரை நெருங்கி கிசுகிசுத்தது.

"அஞ்சி"

"எத்தனை..?"

"எலேய் அஞ்சி ஓலை"

"இதென்ன சங்கேத பாசையா..?"

- காருக்குள் இருந்து யாரோ எதையோ எடுத்துக் கொடுத்தார்கள்... அந்த உருவம் அதை வாங்கிக் கொண்டு வீட்டுக்குள் நுழைந்தது. சில நிமிடங்களில் மூன்று நிழல் உருவங்களும் ராஜராஜ சோழன் வீட்டை விட்டு வெளியே வந்தது. அடுத்த நிமிடம் அந்த கார் புறப்பட்டுச் சென்றது.

இருநூறு அடி நகர்ந்து -

குலசேகர பாண்டியன் வீட்டு முன் நின்றது.

அடுத்த சில நிமிடங்களில்...

ஐம்பது அடி நகர்ந்து -

இளஞ்சேரன் வீட்டு முன்னால் போய் நின்றது.

'என்னவாயிருக்கும்..?'

- மீண்டும் கார் நகர்ந்து...

ஆபிரகாம் வாத்தியாருக்கு உறக்கம் வந்தது.

கொஞ்ச நேரத்தில் தூங்கிப் போனார் -

கண்ட கனவை மறந்து.

விழித்து பார்த்தபோது விடிந்து வெகு நேரமாகியிருந்தது.

சன்னலை திறந்து பார்த்தார்.

ராஜராஜ சோழன் வீடு பூட்டிக் கிடந்தது.

'காலையில எழுந்து குடும்பமே பருத்தி எடுக்க வயலுக்கு போய் விட்டதா...'

- அவசரமாய் எழுந்து, பல் துலக்கி, குளித்து சாப்பிடாமல் - வாசலுக்கு வந்தார் ஆபிரகாம் வாத்தியார்.



தெருவில் ராஜராஜ சோழன் வெள்ளை வேஷ்டி வெள்ளைச் சட்டையில் நடந்து வந்து கொண்டிருந்தான். அவனுக்கு பின்னால் மனைவியும், ஓட்டுப் போடும் வயதுக்கு வந்து விட்ட மூன்று மகள்களும் வந்தார்கள்.

"ராஜராஜ சோழன்"

- ஆபிரகாம் வாத்தியார் அழைப்பில் திரும்பினான்.

"இங்கே வா"

- அவன் மட்டும் திரும்பி நடந்து வந்து அவர் முன் நின்றான்.

"ஓட்டு போட்டாச்சா..?"

- ஆட் காட்டி விரலை நீட்டினான்.

விரலை அசிங்கப்படுத்தியிருந்த மை சிரித்தது.

"எழுத்தாளர் ஜோதி ராமனுக்குத்தானே ஓட்டு போட்டாய்..?"

"இல்லை இருளாண்டிக்கு."

"என்னது... இருளாண்டிக்கா..?"

"இருளாண்டிக்குத்தான்"

"ஆறு அப்பாவி பெண்களை குடிசையோட கொளுத்தி கொன்று போட்ட இருளாண்டிக்கா ஓட்டு போட்டாய்..?"

- கேள்வியில் கோபம் மிதந்தது.

"உங்க கோபம் எனக்கு புரியுது. என் நியாயம் உங்களுக்கு புரியும்னு நினைக்கிறேன். நேத்து ராத்திரி இருளாண்டியோட ஆட்கள் வீடு தேடி வந்தாங்க. என் வீட்ல அஞ்சி ஓட்டு. அஞ்சி பனை ஓலை கொழுக்கட்டை தந்தாங்க."

"என்னது... பனை ஓலை கொழுக்கட்டையா..?"

"ம்... பனை ஓலை கொழுக்கட்டைதான். ஓலைக்குள்ள காந்தி சிரிக்கிற ஆயிரம் ரூபாய் நோட்டு தாள்."

"ஓட்டை விலைக்கு வித்திட்டியா...?"

"அப்படியும் வைச்சுக்கலாம்"

"ஓட்டுதான் மக்களோட ஆயுதம்"

ஆயுதத்தை வீசிட்டு நிராயுத பாணியா நிக்கலாம். மானத்தை இழந்துட்டு நிர்வாணமா நிக்க முடியாது. நான் கடன்காரன். கடனை தந்தவன் வேட்டியை உருவிடுவேன்னு மிரட்டுறான். கடனை கை நீட்டி வாங்கினவன் கடனை திருப்பி கொடுத்துதான் ஆகணும். வாங்கின காசுக்காக தந்த காசை கைநீட்டி வாங்கிட்டேன். வாக்குக்காக வாக்கை கொடுத்திட்டேன். நான் குடவோலை தேர்தல் நடத்துன ராஜராஜ சோழன் இல்லை. குடத்தை அடகு வைக்கிற ராஜராஜன்தான். இதெல்லாம் வாத்தியாருக்கு புரியாது"

- பேசி முடித்து விட்டு வீட்டை நோக்கி திரும்பி நடந்தான் அவசரமாய். ஆபிரகாம் வாத்தியார் பதில் எதுவும் பேசாது மௌனமாய் நின்றார். இதயம் பேசியது தன் காதுகளுக்கும் கேட்காமல் -

'ஓட்டை பணம் கொடுத்து வாங்குவதும் பாவம். பணத்துக்கு விற்பதும் மகா பாவம்'.

# 14

# பொய் மான்கள்

(*மும்பை ஜெரிமெரி தமிழ்ச் சங்கம் நடத்திய சிறுகதைப் போட்டியில் முதற் பரிசு பெற்ற கதை.)

*'பொய் மான்கள்' கதைக்குப் பொருத்தமான தலைப்பு. கனவில் கண்ட நினைவுகளுக்கு பாத்திர சதை சேர்த்து காப்பியப் பரப்பை நிறைவு செய்யும் கதை இதுவல்ல. கண் முன் நடைபெறும் - அவலங்களை கேமராப் பதிவு கொண்டு நடப்பை கதையாக புனைந்துள்ளார் மதுரா.*

*தாமிரபரணி மண் வாசனையும், அதற்குரிய பேச்சும் வழக்கும் படிப்பவரை அந்த கிராமத்திற்குள் அழைத்துச் செல்கிறது. பொய் மனிதர்களின் அரசியல் சூழ்ச்சிக்கு பலியான ஒரு கிராமத்தின் நிகழ்வுகளை அழகாக மதுரா காட்சிப்படுத்தியுள்ளார். தவுடன், சொள்ள மாடன், துரை சிங்கம், ஆபிரகாம் வாத்தியார், கானி, வெயிலான், ஆண்டி, ஊசி தாத்தா, கடற்கரையான், காத்த முத்து, மரக் கடைடுத்துப் பாண்டி எனக் கதாபாத்திரங்களை அழகாக அடுக்கியுள்ளார்.*

*தென்றலுக்கும் தெளிந்த நீருக்கும் குறைவில்லாத அந்த அழகிய கிராமத்தில் அரசியல் கொடி பறக்கப் போய் வெள்ளந்தியான நல்ல மனிதர்கள் ஒவ்வொருவரும் வெட்டரிவாள் தூக்க வேண்டிய விபரீதத்தை கதை வரியாகக் காட்டியுள்ளார்.*

*ஆண்டுகள் இருபது உருண்ட போதும் அவர் கதையில்— குறிப்பிட்டுள்ள கரு இன்னும் உருமாறாமல் உள்ளது. எழுத்தாளனின் தூரிகை எளியவர்களின் துன்ப – துயரங்களுக்கு அருமருந்தாக அமையும் என்பதற்கு 'பொய் மான்கள்' முன்னுதாரணம்.*

*சமூக அவலத்தை படம் பிடித்துக் காட்டும் மொழி நடையில் 'மதுரா' என்றும் மதுரமானவரே.*

***- கவிஞர் மணவை. தமிழ் மாணிக்கம்.***

**கோ**வணம் அவுந்தான் குளம்.

இது ஒன்றும் நீங்கள் நினைப்பது போல் கோவணத்தை அவுத்து விட்டு குளிக்கிற குளம் அல்ல. ஒரு நாளைக்கு இரண்டு முறை பஸ் வந்து போகும் சிறிய கிராமம். ஊரின் பெயர் காரணம் தெரியவில்லை. யாராவது மூதாதையர்கள் வைத்து விட்டு அவசரமாய் இறந்து போயிருக்கலாம். வரலாற்றை தோண்டிப் பார்த்தால் பெயர்க் காரணம் கிடைக்கலாம். நாம் அவுத்ததைப் பற்றி கவலைப்படாமல் அந்த கிராமத்துக்குள் போவோம்.

பிள்ளையார் கோயில் தெரு ஏக கலகலப்பாய் இருந்தது உற்சாகம் வந்தது போல். தைப் பொங்கலை ஞாபகப் படுத்துவது போல் தெருவெங்கும் வெள்ளை வேஷ்டி மனிதர்கள். தெருவில் குறுக்கும் நெடுக்குமாய் சிவப்பு மஞ்சள் தோரணங்கள். சிவப்பு மஞ்சள் பெயிண்ட் அடித்த சவுக்கு கம்பு தெருவில் நீளவாக்கில் கிடந்தது. சவுக்கு கம்பை நடுவதற்கு,



அவசர அவசரமாய் குழி தோண்டிக் கொண்டிருந்தான் தவுடன். புத்தம் புது மேல் துண்டு ஒன்றை தோளில் போட்டிருந்த சொள்ள மாடன் கேள்வி ஒன்றை வீசினான் குழிதோண்டும் தவுடனை நோக்கி.

"எம்எல்ஏ ஐயா எத்தனை மணிக்கு வருவார்னு சொன்னே...?"

"உனக்கு எத்தனை தடவை சொல்றது... ஒரு தடவை சொன்னா காதுல விழாதா... கரீக்டா பதினொரு மணிக்கு பிளசர் கார்ல வந்து சல்லுன்னு நிப்பாரு எம்எல்ஏ தொரை சிங்கம். சும்மா மசமசன்னு நிக்காம காரியத்தை ஒழுங்கு மரியாதையா பாரு... நம்ம காளியை விட்டு ஆபிரகாம் வாத்தியார் கிட்ட சொல்லிட்டு நாலு பள்ளிக் கூடத்து பெஞ்சை தூக்கிக் கொண்டு போடு. அப்படியே வெயிலான் வீட்ல வான் கோழி அடிச்சாச்சான்னு பார்த்துட்டு வந்திரு. எம்எல்ஏ துரை சிங்கம் ஐயாவுக்கு காரம் கொஞ்சம் தூக்கலா இருக்கணும். அதையும் சொல்லி புடு... புரிஞ்சுதா..."

– கோயில் மாடாய் தலையாட்டி விட்டு நகர்ந்தான் சொள்ள மாடன். நடந்தவனை இழுத்து நிறுத்தியது தவுடனின் குரல்.

"அண்ணே சரக்கு...?"

"ஆண்டி மகன் நேத்து வடிச்சதில ஆறு பாட்டில் வாங்கி பூவரசு மரத்து மூப்ல போட்டு வைச்சிருக்கேன்"

'சரி சரி நீ போ"

– திண்ணையில் அமர்ந்து பார்த்துக் கொண்டிருந்த ஊசி தாத்தாவுக்கு வியப்பாய் இருந்தது. அவருடைய எண்பது வயது சரித்திரத்தில் இந்த கிராமம் காகித தோரணம் கண்டதில்லை.

வர்ணம் பூசிய கொடிக் கம்பம் பார்த்ததில்லை. தெருவுக்கு ஒன்றிரண்டாய் இருக்கும் ஓடு சுமந்த காரை வீடுகளும் பனை ஓலை சுமந்த குடிசைகளும் தலையில் பச்சையும் சிவப்புமாய்... கறுப்பும் மஞ்சளுமாய்... நீலமும் ஊதாவுமாய்... கட்சிக் கொடி சுமந்ததில்லை. தேர்தல் நேரத்தில் மட்டும் கரிசனையாய் கொடி விலாசத்துடன் கார்டுகள் வரும். வண்ண வண்ண கட்சிக் கொடிகளை இலவசமாய் தந்து விட்டுப் போகும். அவை சூடு பாத்திரம் தூக்கும் அடுப்பங்கரை துணியாகவும்... சில நேரங்களில் சின்னஞ் சிறுசுகளின் கோவணமாகவும் மாறிப் போகும். இந்த ஊர் முருங்கை மரம் கூட தேய்ந்து போன பழைய செருப்புகளையும், கரைந்து போன விளக்குமாறுகளையும் அணிந்து கொள்ளுமே தவிர கட்சிக் கொடி அணிந்ததில்லை.

இன்று வழக்கத்துக்கு மாறாய் கோவணம் அவுத்தான் குளம் பிள்ளையார் கோயில் தெரு குறுக்கும் நெடுக்குமாய் எதோ ஒரு கட்சியின் இரு வண்ண காகித தோரணங்கள். வர்ணம் பூசப்பட்ட சவுக்கு கம்பு. வியர்வை சிந்த குழி தோண்டும் தவுடன். ஊருக்கு என்ன ஆயிற்று...

பிள்ளையார் கோயில் சுற்றுச் சுவரில் எட்டாய் மடித்து வைக்கப்பட்டிருந்த துணி ஊசி தாத்தா கண்ணில் பட்டது. அந்த துணியின் முதுகில் கல் ஒன்று காவல் இருந்தது.

திண்ணையிலிருந்து எழுந்து சுற்றுச் சுவரை நோக்கி நடந்தார். துணியை கையில் எடுத்து மடிப்பைக் கலைத்தார். விரிந்த துணி பாதிச் சிவப்பும் மீதி மஞ்சளுமாய் இருந்தது.

'இது எந்தக் கட்சி கொடி...?'

- குழி தோண்டிக் கொண்டிருந்த தவுடனின் தோள் தொட்டார்.



தாத்தாவை திரும்பிப் பார்த்து அகலமாய் சிரித்தான்.

''என்ன தாத்தா கொடியேத்த வந்தீங்களா... சிறு பயித்துக்கு கிளி விரட்ட போகலியா...''

''என்னை மட்டும் தனியா எங்கே போகச் சொல்றே... ஊரே ஒரு நாளும் இல்லாத அதிசயமாய் திருளா கோலத்தில கிடக்குது... வான் கோழி, சாராயம்... என்ன பேரப்புள்ள சமாச்சாரம்...?''

''வேறொன்னுமில்லை தாத்தா. நம்ம ஊருக்கு கொடி ஏத்த எம்எல்ஏ துரை சிங்கம் ஐயா வரப் போறாரு.''

''என்ன பேரப்புள்ள இது புதுசா...?''

- கண் சுருக்கி கேள்வி கேட்டார்.

''தை அமாவாசைக்கு நடந்ததை மறந்து புட்டிங்களா... முத்தையா வைக்கப் படப்புக்கு தீ வைச்ச தகராறில நாம ஜெயிலுக்கு போகாம தப்பிச்சது மறந்து போச்சா... போலீசை சரிக் கட்டினது யாரு... நம்ம எம்எல்ஏ துரை சிங்கம் ஐயாதானே...''

''அதுக்கும் கொடி ஏத்ததுக்கும் என்னல சம்பந்தம்...?''

- ஆடிக் கொண்டிருந்த ஒற்றை பல் அசைய சிரித்தார்.

''வியாழக்கிழமை நிலக்கடலை விக்க திருநெல்வேலி கமிஷன் கடைக்கு போயிருந்தேன். தெப்பக்குளத்து கரையில வைச்சி கார்ல வந்த எம்எல்ஏ துரை சிங்கம் ஐயா என்னை பார்த்துட்டாரு. என்னை கிட்ட கூப்பிட்டு தவுடா நம்ம ஊர்ல கட்சிக் கொடி பறக்கனும்னு அடிச்சி சொல்லிட்டாரு. சரின்னு ஒத்தை வார்த்தையில சொல்லிட்டு வந்திட்டேன். ஒரு நன்றிக் கடன்தான்''

"வைக்கப்படப்புல தீ வைச்ச சண்டைக்கு போலீசை சரிக் கட்றதுக்குன்னு சொல்லி எம்எல்ஏ எட்டாயிரம் வாங்கினாரே அது என்ன கணக்கு...?"

"தாத்தா கணக்கை கூட்டி கழிச்சி சாவகாசமா பார்த்துக் கலாம். கோயில் வாசல்ல உட்கார்ந்து நடக்கிறதை வேடிக்கை பாருங்க"

- ஊசி தாத்தா கோயில் வாசலை நோக்கி நடந்தார் மௌனமாய்.

"ஏலேய் காத்த முத்து... பாட்டை போட்டு விடுல"

- அடுத்த நிமிடம் காத்த முத்து சவுண்ட் சர்வீஸ் சத்தமாய் எங்கோ இருக்கும் 'தலைவர்' பெருமைகளை பாட ஆரம்பித்தது.

ரவிக்கை போடாத பார்வதி பாட்டியின் கதையைக் கேட்டபடி களை பறித்துக் கொண்டிருந்தனர் ரவிக்கை போடாத இளசுகள். கரையோர வேப்ப மரத்தில் சரிந்து வேலை செய்யும் பெண்களை கண்காணித்துக் கொண்டிருந்த முத்தையாவின் காதில் அந்த பாட்டு மோதியது.

"என்ன பேச்சி... ஊர்ல ரேடியோ சத்தம் கேட்குது. எந்த பிள்ளையாவது சடங்காயிட்டாளா...?

- முத்தையா கேள்வியை வீசினான் களை பறித்துக் கொண்டிருந்த ஒரு பெண்ணிடம்.

"ஊர்ல இருக்கிறவா எல்லாம் எங்கிட்ட கேட்டுதான குத்த வைக்கிறா... மஞ்ச சட்டை மாப்ள கேட்கிற கேள்வியைப் பாரு."

- பதிலுக்கு பதில் சொல்ல வாய் திறந்த முத்தையா கண்களில் கடற்கரையான் பட்டான். வரப்பில் வேகமாய் ஓடி வந்து கொண்டிருந்தான்.



'எதற்காக ஓடி வருகிறான்... யாருக்காவது எதாவது ஆகி விட்டதா...?'

- முத்தையா முன் மூச்சிறைக்க வந்து நின்றான் கடற் கரையான்.

"என்ன மச்சான்... எலி பிடிக்கிற நாய் மாதிரி ஓடி வர்றே..."

"நம்ம வைக்கப் படப்புக்கு தீயும் வைச்சிபுட்டு நம்மையே போலீஸ் கையில அடியும் வாங்க வைச்சானே செறுக்கி மவன்... அவன் இன்னிக்கி நம்ம ஊருக்கு வர்றான் மாப்ள."

"யாரு அந்த எம்எல்ஏ துரை சிங்கமா...?"

"அவனேதான். அவன் இருக்கிற கட்சியோட கொடியை நம்ம ஊர்ல ஏத்தப் போறானாம். அந்த பய சொள்ள மாடனும் அவன் தம்பி தவுடனும் வெள்ளையும் சொள்ளையுமா ஏக தடபுடலா நிக்கிறானுவ"

"அதுக்கு நாம என்ன செய்யணுங்கிறே...?"

"என்ன செய்யனுமா... வைக்கக் படப்புல தீ வைச்ச தக ராறுக்கு அப்புறம் ஊர்காரனுக நம்மை ஏளனமா பாக்கிறானுங்க. நாமும் உடனே எதாவது கட்சி கொடி கட்டியாகனும். எம்எல்ஏ துரை சிங்கத்துக்கு எதிரா வெட்டுக்கு வெட்டு துட்டுக்கு துட்டுன்னு நேரடியா எதுக்கிறது மரக்கடை முத்து பாண்டிதான். அவன் கிட்ட போயி ஒரு சவுக்கு கம்பு, ஒரு பெயிண்ட் டப்பா, ஒரு கட்சிக் கொடி வாங்கிட்டு வா. மீதியை நான் பாத்துக் கிறேன்"

"அந்த கட்சிக் கொடி என்ன கலர் மச்சான்...?

"என்ன கலரா இருந்தா நமக்கென்ன... எம்எல்ஏ துரை சிங்கம் வரும் போது நம்ம தெருவில அவனுக்கு பிடிக்காத

கொடி பறந்தாகனும். மரக்கடை பாண்டி தர்ற கொடியை வாங்கிட்டு வா"

- முத்தையா புறப்பட்டு சென்றான் ஒரு முடிவுக்கு வந்தவனாய்.

**எ**ம்எல்ஏ துரை சிங்கம் கோபமாய் இருந்தார்.

கொடி ஏற்றி, இனிப்பு வழங்கி, வான் கோழி பிரியாணி தின்று, சூடுவடி சாராயம் குடித்தும் கோபம் கொஞ்சமும் தணியவில்லை.

வழக்கமாய் போடுகிற 'கும்பிடு' ஒன்றை போட்டு விட்டு காரில் ஏறியவர் தவுடனை அழைத்தார் விரல் சொடுக்கி.

காரை நெருங்கி எம்எல்ஏ முகத்துக்கு குனிந்தான்.

"என் கொடி உன் ஊர் வானத்தில பறக்கிறதுக்கு முன்னால அந்த கேடு கெட்ட மரக்கடை பாண்டி அனுப்பி வைச்ச கொடி உன் ஊர்ல பறந்திடிச்சி. எனக்கே வெட்கமாயிருக்கு. உனக்கு அது வெட்கமாயில்லையா... ம்... எது... எது வந்தாலும் நான் பார்த்துக்கிறேன்... விடியறதுக்குள்ள மரக்கடை பாண்டி கொடி மண்ணில கிடக்கனும். செய்வியா... ஏலேய் செய்வியா..."

"ஐயா மனசு நாளைக்கு நிச்சயம் சந்தோஷப்படும். துண்டை உதர்ற மாதிரி உதறிட்டு போங்க."

- எம்எல்ஏ துரைசிங்கத்தின் திருப்தியான தலை அசைப்புக்கு கார் நகர்ந்தது சந்தோஷமில்லாமல்.

"**எ**ன்னது கொடி மரத்தை வெட்டிடுவேன்னு தவுடன் சொன்னானா... வானத்தில பறக்கிற நம்ம கொடி மண்ணுல விழுந்தா நாலு எதிரி பிணமா தரையில விழனும்... சொல்லிபுட்டேன். இன்னிக்கி ராத்திரி ஒரு பயலும் தூங்க கூடாது... கொடி அறுக்க எந்த ஆம்பிளை தைரியமாக வர்றான்னு பார்த்திடுவோம்"



- கோபமாய் உறுமினான் கடற்கரையான் சிங்கம் புலியாய்.

"ஒரு ஆம்பிளை நம்ம தெருவுக்குள்ள வந்து கொடி அறுக்கனும்னா பொண்டாட்டி தாலியை அறுத்து வைச்சிட்டுதான் வரனும்"

- என்றான் முத்தையா வார்த்தைகளில் அனல் தெறிக்க.

"தெருவுக்குள்ள மீறி நுழைஞ்சா...?"

"தலையை அறுத்திடுவோம்"

- கடற்கரையான் கோபம் பத்து அருவாட்களாய் உருமாறி அந்த நாள் இரவில் காத்துக் கிடந்தது இரத்தம் பூச.

**வ**ழக்கம் போல் வானம் இரத்தம் பூசி விடிந்தது.

வழக்கத்துக்கு விரோதமாய் கோவணம் அவுத்தான் ஊரிலிருந்து வயதுக்கு வந்த, வயதாகாத ஆண் மக்கள் தொலைந்து போயிருந்தார்கள். நான்கைந்து பேர் 'ஜக்கடா' வண்டியில் அரசு ஆஸ்பத்திரிக்குச் செல்லும் வழியில் இறந்து போயிருந்தார்கள் இரத்தம் சிந்தி.

பெண்கள் சேலைத்தலைப்பால் வாய் பொத்தி நிற்க -

வெள்ளை நிற 'காவல்' வண்டி ஊருக்குள் நுழைந்தது.

எம்எல்ஏ துரை சிங்கம் -

நாய்கள் காவல் இருக்கும் தனது பங்களாவில் -

ஏசியின் இதமான குளிரில் - மெத்தைக் கட்டிலில் -

விடி காலை சுக தூக்கத்தில் இருந்தார்.

15

# முற்றுகையிடப்பட்ட இரவுகளும் உடைந்த நிலாக்களும்

*இந்த சிறுகதையின் ஆரம்ப வரிகளே 'கம்பி வேலியில் அடைக்கப்பட்ட தமிழ் மக்களின் அவல நிலையை' நம் கண் முன்னே கொண்டு வருகிறது. இலங்கையில் தமிழனாய் பிறந்தது மட்டுமல்ல, தமிழன் வீட்டு நாயாய் இருந்தால் கூட பாவம் என்பதை "இந்த நாய்கள் செய்த குற்றம் தமிழன் வீட்டில் பிறந்ததும்... தமிழன் வீட்டில் வளர்ந்ததும்... தமிழன் வீட்டைக் காவல் காத்ததும் தானே..." என சொல்லும் வரிகள் பூனையின் நகங்களைப் போல நமது இதயத்தை பிறாண்டுகிறது.*

*தண்ணீர் தேடிப் போகும் அழகன் பெருமாள் 'ராணுவத்தில் சிக்கினால் தண்ணீர் வராது ரத்தம்தான் வரும்' என நினைக்கும் வரிகளும், 'அழகன் பெருமாளுக்கு தன் காலடிக்கு கீழே கிணறு இருப்பதும் நூறு நூறு உடல்கள் சுமந்த கல்லறையாய் மாறிப் போயிருப்பதும் அறியாமல் மீண்டும் வானம் பார்த்தான்' என்ற வரிகளும் இலங்கை ராணுவத்தினரின் குரூர செயல்களை – சொல்லாமல் சொல்கிறது.*



*இறுதியில் தண்ணீர் கிடைக்காமல் சிறுமி இறந்ததைப் – படிக்கும் போது கண்களில் கண்ணீர் வரவில்லை. இரத்தம்தான் வருகிறது. மொத்தத்தில் இந்த சிறுகதையைப் படித்தால் அதன் பாதிப்பு மனதை விட்டு மறைய பல காலம் ஆகும். ஏனென்றால் இது ஒரு சிறுகதை அல்ல. இதில் உள்ள ஒவ்வொரு வரிகளும் முள்வேலிக்குள் இருக்கும் நமது சகோதர சகோதரிகளின் அவல நிலையை வார்த்தைகளினால் பதிவு செய்து அவற்றை நம் மனக் கண்ணில் காட்டும் உயிர் ஓவியமாய் இருக்கிறது.*

*கண்ணெதிரே பார்த்ததைப் போல் அத்தனை தத்ருபமாக இவரால் எப்படி இப்படி எழுத முடிந்தது என்று மலைப்பாக இருந்தது. ஆனால் உணர்வுபூர்வமாக எழுதும் போது இதுவும் சாத்தியம்தான் என்று புரிந்தது. சாத்திய மாக்கியிருப்பவர் மதுரா.*

***– எழுத்தாளர் செல்வ சுந்தரி.***

ஒன்று..

பத்து.. நூறு..

ஆயிரம்... இலட்சம் முகங்கள்...

புன்னகையை தொலைத்த முகங்கள்.

கண்ணீர் வற்றிப் போன முகங்கள் அழகர் பெருமாளைச் சுற்றியிருந்தன.

நிலவை தொலைத்த வானம் தலைக்கு மேல் இருந்தது. தென் மேற்கு பருவக் காற்று வெடி மருந்தின் கந்தக நாற்றத்தையும், அழுகிப்போன பிணங்களின் துர்நாற்றத்தையும் சுமந்தபடி திரிந்தது வேதனையுடன்.

ஒரு கண்ணை தொலைத்த, ஒரு காலை தொலைத்த ஒரு கையை - தொலைத்தவர்களின் - இல்லை இல்லை பறிக்கப் பட்டவர்களின் முனகல் ஒலி இருட்டை அச்சுறுத்தியது. இருபத்தேழு நாட்களாய் கொஞ்சம் மர நிழலும் கொஞ்சம் சோறும் கொஞ்சம் தண்ணீரும் கிடைத்தது. இன்று அந்த தண்ணீரும் கிடைக்கவில்லை.

சுடுகாடாய் மாறிப் போயிருந்த அந்த மண் மேட்டில் குவித்து வைக்கப் பட்டிருந்த மக்களுக்கு குளிக்கத்தான் தண்ணீர் இல்லை. குண்டி கழுவத்தான் தண்ணீர் இல்லை. ஒரு வாய் தண்ணீர் குடிக்க தண்ணீர் வேண்டாமா... இன்று அந்த ஒரு வாய் தண்ணீரும் கிடைக்கவில்லை.

தாகம் உயிரை இழுத்தது.

அழகர் பெருமாளை சோர்வு தாக்கியிருந்தது.

'ஆண்டவனே... அட கொடூரனே... உன் தாயைக் கொன்றால் என்ன செய்வாய்... உன் மனைவியை மானபங்கம் செய்து கொன்றால் என்ன செய்வாய்... உன் மகளைக் கொன்றால் என்ன செய்வாய்... இத்தனையும் எனக்கு நடந்ததே... இந்த தீவில் என்னைத் தமிழனாய் பிறக்கச் செய்தது நீ செய்த குற்றம்தானே... நாட்டுக்குள் இருந்து காட்டுக்குள் ஓடி இன்று கொட்டடியில்..'

- பெரு மூச்சொன்று மார்பைத் தாலாட்டியது.

யுத்தம் முடிந்து விட்டதாம்.

பசியும், கிளஸ்டர் குண்டுகளும் கொன்றது போக மீதமாய் மக்கள். இறந்தவர்கள் எண்ணிக்கை ஆயிரம்... ஆயிரம்... ம்... இறந்தவர்களுக்குத் தான் தெரியும். உயிரோடு இருக்கிறவர்கள்...

புதை குழிக்கு மேல் நின்று புல்லாங்குழல் வாசிக்கப் போகிறார்களாம்.



ம்... யுத்தம் முடிந்து விட்டதாம்.

காற்று செவிடாகி விட்டது...

காகிதம் குருடாகி விட்டது...

மின் கம்பி வேலி... விலங்குகளாய் மனிதர்கள்.

துப்பாக்கி கண்கள் பார்க்க காலைக் கடன்கள்... ஆண்களும் பெண்களும் குளிக்க வேண்டும்... ஆடை மாற்ற வேண்டும்... கூந்தல் முடிய வேண்டும்... அடர் காடுகள்... சுற்றி முள் வேலி... மின்சாரம்... கூடாரம்... கொத்து கொத்தாய் மக்கள்... வீசும் உணவை ஓடிப் போய் தூக்கி வரும் நாய்களாய்... புத்த மதம் உலவுகிற மண்ணா இது... புன்னகையை தொலைத்து விட்ட யுத்த களமாய் ஏன் மாறிப் போனது. அமைதி... இந்த குட்டித் தீவில் ஏற்பட்டிருப்பது மயான அமைதி. புத்த மதம் கற்றுக் கொடுத்த அமைதி அல்ல இது... துப்பாக்கிகளின் சத்தம் நின்று போயிருந்தது. குண்டு வீச வரும் விமானங்களின் சத்தம் இல்லை.

காதில் விழுந்தது -

அழுகையின் கூக்குரல் - ஒப்பாரிகளின் இரைச்சல் -

மரண விளிம்பின் ஓலங்கள்.

மன இறுக்கம் தொலைக்க நினைத்தான் அழகன் பெருமாள்.

அருகில் கிடந்த பிளாஸ்டிக் பையை கையில் எடுத்தான்.

அவனிடம் மிச்சமாய் இருப்பது -

நான்கைந்து வெள்ளைக் காகிதங்களும், ஒரு பேனாவும் தான்.

அந்த காகிதங்களை எடுத்துப் பார்த்தான்.

காகிதத்தின் வெளிச்சத்தை இருட்டு பறித்திருந்தது.

பேனாவை கையில் எடுத்துக் கொண்டு வானம் பார்த்தான்.

வானத்தின் இருட்டு கொட்டடிக்குள் அடைப்பட்டுக் கிடந்த நட்சத்திரங்கள் கண் இமைத்தன வெளிச்சம் தர இயலமால்.

மண் தரையில் அமர்ந்திருந்த அழகன் பெருமாள் யாரோ தோள் தொட - அவசரமாய் திரும்பினான். முகத்துக்கு எதிரில் நின்று கொண்டிருந்தாள் இந்துமதி. மூன்று வயது குழந்தை.

"என்னம்மா..."

"கதை எழுதப் போறியா...?"

- கேள்வி கேட்டது மழலை மாறாத குரலில்.

"ம்.."

"யாரோட கதை..."

"உன் கதை... என் கதை.. நம்ம கதை..."

"மாமா"

- உறவை தொலைத்த குழந்தையின் அழைப்பு.

எல்லா உறவுகளும் இறந்துபோன அழகன் பெருமாளின் கண்களுக்கு கண்ணீர் வரவழைத்திருந்தது. உதடுகள் துடித்தன அழுகையின் விளிம்பில்.

"மாமா"

"சொல்லும்மா"



"தண்ணி வேணும் மாமா"

"இல்லியேம்மா..."

- என்றான் தாகத்தில் வறண்டு போயிருந்த உடுகளை நாக்கால் வருடியபடி.

வேறு எதுவும் பேசாமல் திரும்பி நடந்தது அந்த குழந்தை. மீண்டும் பெருமூச்சொன்று பிறந்து மார்பைத் தாலாட்டியது. அவசர அவசரமாய் மாட்டு வண்டியில் ஏறி, ஊரை விட்டு விட்டு, வீட்டை விட்டு விட்டு, ஆசை ஆசையாய் வளர்த்த மரங்களை விட்டு விட்டு, கோழிகளை விட்டு விட்டு, ஆடுகளை விட்டு விட்டு இடம் பெயர்ந்தது நினைவில் மோதியது.

'என் அணைப்பில் மரப் பெட்டியும் முத்து மணியும் இருந்தார்கள். நான் சற்றும் எதிர்பார்க்காத தருணத்தில் முத்து மணி வண்டியிலிருந்து குதித்து ஓடிப் போனாள்... நானும் வண்டியை விட்டு இறங்கத் துடித்தேன். இறங்க விடாமல் தடுத்து விட்டார்கள் அருகிலிருந்தவர்கள். அந்த நிமிடத்தில் வான வீதியில் குண்டு வீசும் விமானம் சுற்றி வந்தது. முத்து மணியோ என் வீட்டை சுற்றிச் சுற்றி வந்தாள் வாலை ஆட்டியபடி. எதற்கு பயந்து வண்டி ஏறி ஓடினாமே, அது நடந்து விட்டது அந்த நேரத்தில்... என் கண் எதிரே குண்டு வீச்சில் சிக்கி இறந்து போனாள் முத்து மணி என் மகளைப் போலவே.'

- ஒலி ஒளி ஊடகத்தின் வழியே காதுகளுக்குள்ளும், கண்களுக்குள்ளும் புகுந்து இதயத்தை ஆக்கிரமித்திருந்த வார்த்தைகள் இதயத்தை பிறாண்டியது நாயாய்.

'இந்த நாய்கள் செய்த குற்றம் தமிழன் வீட்டில் பிறந்ததும்... தமிழன் வீட்டில் வளர்ந்ததும்.. தமிழன் வீட்டைக் காவல் காத்ததும் தானே...'

– கண்களில் வெளிச்சம் விழ முகம் திருப்பினான் அழகன் பெருமாள்.

கையில் சிறிய மண் விளக்குடன் நின்று கொண்டிருந்தது இந்துமதி.

“கதை எழுதுறதுக்கு வெளிச்சம்”

– அவன் வாய் திறப்பதற்குள் அந்த விளக்கை தரையில் வைத்து விட்டு ஓடிப் போயிருந்தது அந்த மூன்று வயது குழந்தை.

“இருட்டை விரட்ட வந்த வெளிச்சம்”

– உதடுகள் முணு முணுத்தது மந்திரம் போல.

அந்த காகிதங்களை எடுத்து வெளிச்சத்தில் பார்த்தான்.

வெள்ளைக் காகிதத்தில் சின்னதாய் சிவப்பு வட்டங்கள்.

அந்தச் சிவப்பு – இரத்தச் சிவப்பு.

எவர் இதயத்தையும் நொறுக்கிப் போடும் சிவப்பு.

அழகன் பெருமாளின் செல்ல மகள் – ஒரே மகளின் கடைசி நேர உயிர் பிரிதலில் இரத்தப் புள்ளிகள்... உயிரின் எழுத்துக்கள்.

பேனாவை எடுத்து காகிதம் தொட்டான்.

நீலப் புள்ளி விழுந்தது.

எழுத்துக்கள் மட்டும் நீலமாய்... சிந்தனையோ சிவப்பாய்...

‘நேற்று
அது இருந்தது



இன்று அது இல்லை.
யுத்தம்
என் தாயை தின்றது
யுத்தம்
என் சேயை தின்றது
யுத்தம்
என் நாயை தின்றது
இறுதியில்
என் முகவரியையும்
தின்று விட்டது...’

– பிஞ்சு விரல்கள் தோள் தொட திரும்பினான்.

இந்துமதி.

சட்டையைப் பிடித்து இழுத்தது.

“என்ன வேணும்...?”

– பதில் சொல்லாமல் மீண்டும் இழுத்தது.

எழுந்து நடந்தான் விளக்கை கையில் எடுத்துக் கொண்டு.

நூறு அடி தூரத்தில் அந்தக் கூடாரம் இருந்தது.

கூடாரத்துக்குள் விளக்கொன்று உயிருக்கு போராடிக் கொண்டிருந்தது எண்ணெய் இல்லாமல். முதிர் வயதுப் பெண்கள் இருவர் மண்ணில் அமர்ந்திருந்தனர். கிழிந்த துணி ஒன்றில் ஆறு வயது சிறுமி ஒருத்தி சுருண்டு படுத்திருந்தாள்.

கண்களில் மட்டும் உயிர் இருந்தது. தலையில் கட்டு போடப்பட்டிருந்தது. உதடுகள் முணுமுணுத்துக் கொண் டிருந்தன சத்தமில்லாமல்.

மூன்று வயது குழந்தையுடன் உள்ளே நுழைந்த அழகன் பெருமாள், தரையில் படுத்திருந்த அந்த சிறுமியின் உதட்டருகே காதை கொண்டு சென்றான்.

"தண்ணீர்... தண்ணீர்..."

- காதுக்குள் விழுந்தது மெலிதாய்.

"தம்பி... தண்ணிக்கு எங்கே போறது...?"

- பரிதாபமாய் வந்தது கேள்வி ஒரு முதியவனிடமிருந்து.

மாட்டு வண்டி வந்த பாதையில் கண்ணில் விழுந்த இரண்டு கிணறுகளும் தென்னை மரங்களும் நினைவு காற்றில் ஆடியது.

கம்பி வேலியைத் தாண்டி அல்லவா திருட்டுத்தனமாய் போக வேண்டும். ராணுவத்தின் கண்ணில் சிக்கினால் கண்ணை பிடுங்கி விடுவார்களே... சிக்கினால் தண்ணீர் வராது... இரத்தம்தான் வரும்... இரத்தம்தான் வரும்.

பிஞ்சு விரல்கள் சட்டையைப் பிடித்து இழுத்தது.

திரும்பினான்.

மூன்று வயது குழந்தை இந்துமதி.

அழகன் பெருமாள் கையில் திணித்தது பிளாஸ்டிக் பாட்டில் ஒன்றை.

தரையில் கண் மூடிக்கிடந்த குழந்தையைப் பார்த்தான்.

உதடுகள் தண்ணீர் கேட்டு அசைந்து கொண்டிருந்தன.

ஒரு தீர்மானத்துக்கு வந்தவனாய் -

இருட்டை நோக்கி நடக்க ஆரம்பித்தான் கையில் பாட்டிலுடன்.



குறுக்கே வந்தது -

இரும்பு அகழியாய் குவிந்து கிடந்த கம்பிச் சுருள்கள்.

மின்சாரம் பாய்ச்சப்பட்டிருக்கும் அபாயமும் இருந்தது. இருட்டில் கிடந்த காய்ந்த மரக்கிளை ஒன்றை இழுத்து வந்து அந்த இரும்பு முள் கம்பி சுருள் மீது போட்டு - அந்த இடத்தை கடந்து வெளியேற அழகன் பெருமாளுக்கு பதினேழு நிமிடம் பிடித்தது.

அந்தக் கிணறு இருந்த இடத்தை மனதுக்குள் கொண்டு வந்து அந்த இடத்தை குறி வைத்து ஓடினான் கையில் வெற்று பாட்டிலுடன்.

ஓடினான்... ஓடினான்... ஓடினான்.

தலைமுடி காற்றில் ஆடியது.

குளிர் காற்றிலும் வியர்வை முத்துக்கள் பிறந்திருந்தன.

'விடிவதற்கு இன்னும் வெகு நேரமில்லை'

- வானம் மின்னல் கோடிழுத்து இடி இடித்தது.

மின்னல் வெளிச்சத்தில் அந்த ஒற்றை தென்னை மரம் தெரிந்தது.

கிணற்றை குறி வைத்து ஓடினான்.

ஓட்டத்தின் முடிவில் ஒற்றை தென்னை மரம் வந்திருந்தது.

'தண்ணீர் குடிக்க வேண்டும்' என்றது மூளை.

தென்னை மரம் இருந்தது. அந்த இடத்தில் கிணறு இல்லை. மண் மேடாய் இருந்தது. மண் மேட்டில் ஏறினான். தூரத்தில் கடல் அலைகளின் சத்தம் கேட்டது.

அழகன் பெருமாளுக்கு தன் காலடி மண்ணுக்கு கீழ் கிணறு இருப்பதும் நூறு.. நூறு உடல்கள் சுமந்த கல்லறையாய் மாறிப் போயிருப்பதும் அறியாமல் மீண்டும் வானம் பார்த்தான்.

வவ்வால் ஒன்று காதை உரசிக் கொண்டு பறந்து சென்றது.

மின்மினிப் பூச்சி ஒன்று யாரையோ தேடுவது போல் சுற்றி சுற்றி பறந்தது பின்புற விளக்கை சுமந்து கொண்டு.

'மின்மினி தன் தாயைத் தேடுகிறதா... தங்கையைத் தேடுகிறதா...'

- நினைவுக்குள் இருக்கும் கிணறு தேடி மீண்டும் நடந்தான்.

ஐம்பத்தேழு நிமிடம் கரைவதற்குள் -

கிணறு ஒன்றை கண்டு பிடித்து தண்ணீரை சேகரித் திருந்தான்.

அந்தக் கிணற்று தண்ணீர் உப்பாய் இருந்தது.

கலங்கலாகவும்... கறுப்பாகவும்...

ஓடி ஓடி இரும்பு வேலியை தொட்டிருந்தான்.

ராணுவம் அரைத் தூக்கத்திலிருந்தது.

மூக்கில் மழைத்துளி உணர்ந்தான்.

இரும்பு அகழி தாண்டி கூடாரத்துக்குள் நுழைந்தான் அழகன் பெருமாள். மூன்று வயது குழந்தை விளையாடிக் கொண்டிருந்தது.

கையிலிருந்த தண்ணீர் பாட்டில் நழுவி தரையில் விழுந்து சிதறியது.

அந்தச் சிறுமி இறந்து போயிருந்தாள்.

# 16

# முடி மன்னர்கள்

(*வாசுகி இதழ் நடத்திய சிறுகதைப் போட்டியில் முதற் பரிசு பெற்ற கதை.)

*மழை மேகம்...*

*மஞ்சள் நிலவு...*

*மல்லிகைப்பூ...*

*இந்த வரிசையில் எனக்கு மதுராவின் எழுத்தும் பிடிக்கும்.*

*'முடி மன்னர்கள்' படித்தேன்.*

*கதாநாயகன் பழநியை நினைத்து பெருமையாக இருந்தது.*

*எங்கே தனது வறுமையின் காரணமாய், தீவிரவாதி தந்த ஐநூறு ரூபாயை தாராளமாய் செலவு பண்ணப் போகிறானோ... என நினைத்து படபடப்பாய்... வாசித்தேன்.*

*பழனி தன் மானமிக்கவன் என்பதை நிரூபித்து விட்டான்.*

பழநி மாதிரி... லெட்சுமி மாதிரி... வறுமையோடு போராடிக் கொண்டேயிருக்கும் மனிதர்கள் எல்லா ஊர்களிலும் இருக்கவே செய்கிறார்கள்.

அக்கம் பக்கத்தாரின் கிண்டலுக்கு பயந்து வெறும் தூக்கு வாளியில் தண்ணீரை பிடித்து நிரப்பி கொண்டு வருகிற லெட்சுமி...

எனது இதயத்தை கலங்கடித்து விட்டாள்.

பழநி ஏழைதான்.

அன்றாடம் கஞ்சிக்கே அல்லாடுகிறவன்தான்.

ஆனால்...

அவன் எடுத்த முடிவின் காரணமாய்...

மிகமிக உயர்ந்த மனிதனாய்...

ஒரு முடி மன்னனின் கம்பீரத்தோடு...

மனசுக்குள் வலம் வருகிறான்.

தப்பான வழியில் சம்பாதித்த பணத்தை மூட்டை மூட்டையாய் கட்டி... பதுக்கி வைத்துக் கொண்டு வாழ்கிற மனிதர்கள்... இந்தக் கதையை படித்தால் ஒரு சில கணமாவது அவர்கள் மனசு உறுத்தும் அதுவே இந்தக் கதையின் வெற்றி.

– எழுத்தாளர் மகேஷ்வரன்.

முன்னழகு காட்டியபடி குஷ்பு.

பின்னழகு காட்டியபடி பானுப்ரியா.

கண்ணழகு காட்டியபடி கனகா,



அங்கங்களை அங்கங்கே காட்டியபடி டிஸ்கோ சாந்தி, சில்க் சுமிதா என்று வரிசையாய் சுற்றி அழகு காட்டி நிற்க –

சுழலும் நாற்காலியில் கவலையுடன் அமர்ந்திருந்தான் பழநி.

காலண்டர் மங்கைகள் காற்றில் படபடத்தும் விழி அசையாமல் அமர்ந்திருந்தான்.

அவன் பார்வை தெருவில் இருந்தது.

வெளியே வானம் மழையாய் கொட்டிக் கொண்டிருந்தது.

'இத்தனை தண்ணியை எங்கத்தான் வைச்சிக்கிட்டிருந் திச்சோ...'

கவலையுடன் – கொட்டுகின்ற மழையை, இமைக்க மறந்தவன் போல் பார்த்துக் கொண்டிருந்த பழநி, நான்கு பழநியாய் தெரிந்தான், சுற்றியிருந்த கண்ணாடிகளில்.

நுரை சோப், சீப்பு, கத்தரி, பிளேடு, பவுடர் என்று வரிசையாய் காத்திருந்தன யாருக்காகவோ.

அந்த யாருக்காகவோ பழநியும் காத்திருந்தான்.

யாரும் வரவில்லை.

நேற்றிலிருந்தே யாரும் வரவில்லை.

பழநிக்கு வயிறு பசித்தது.

'நேற்று ராத்திரி வயிறுமுட்ட பிரபு ஓட்டலில் சாப்பிட்டதாய் லெட்சுமியிடம் பொய் சொல்லியிருக்க வேண்டாமோ... இன்று மதியமாவது சாப்பிட முடியுமா... நம் வயித்தை... மட்டும் பார்த்தா போதுமா... லெட்சுமி?'

யாரும் கடைக்கு வருவதாகத் தெரியவில்லை.

ரோடே வெறிச்சோடிக் கிடந்தது.

ஒரு 'ஜக்கடா' வண்டி மட்டும் நிதானமாய் ஆடி ஆடி சென்று கொண்டிருந்தது. அதில் நனைந்து கொண்டே இரண்டு வாழை மரங்கள். நனையாமல் பிளாஸ்டிக் கோணி முக்காட்டுடன் வண்டிக்காரன். காளை மாடுகளின் கண்ணீர் கோடுகளை மறைத்தபடி மழைக் கோடுகள்.

பழநிக்கும் கண்ணீர் வரும்போல் இருந்தது. கொஞ்ச நேரம் அழவேண்டும் என்று மனத்துக்குத் தோன்றியது. 'எதற்கு அழவேண்டும்? மூன்று வேளை பட்டினியாய் இருப்பதற்கா... தாலிகட்டிய மனைவிக்குப் பசி கொடுத்து தவிப்பதற்கா...'

பால்பாண்டி தாத்தா சொன்னது நினைவில் வந்தது.

'ஆம்பிளை அழக் கூடாதுல'

பொக்கை வாய்ச் சிரிப்பு கண்ணில் ஆடியது.

பழநி சிரித்தான்.

சிரிப்புக்கிடையில் எண்ணம் ஓடியது.

'யாராவது முடிவெட்ட வந்தால்தான்... முடிவெட்டினால் சுளையாய் பத்து ரூபாய் கிடைக்கும். அப்படியே லெட்சுமியிடம் கொடுத்தால், கைமணக்கும் கொட்டாரம் சம்பா சோறாகவும், வாய் மணக்கும் நெத்திலிக் கருவாடு குழம்பாகவும் ஆக்கி விடுவாள்...'

அதிகமாய் பசிப்பது போலிருந்தது பழநிக்கு.

'இந்தப் பசிக்கு ரொம்பவும்தான் ஓரவஞ்சனை... இருக்கிறவனிடத்தை விட இல்லாதவனை நோக்கித்தான் வேகமாய் ஓடி வருது'



மழை இன்னும் விடாமல் கொட்டிக் கொண்டிருந்தது. வானத்திலிருந்து வெள்ளிக் கம்பிகளாய் இறங்கியது.

வேகக்காற்று, மழைக் கோடுகளை அறுக்க முயன்று, முயன்று தோற்றுக் கொண்டிருந்தது.

பொண்டாட்டிக்கு ஆத்தமாட்டாதவன் படலையைப் போட்டு அடிச்சானாங்கிற மாதிரி காற்று, 'அப்பாவி' மரங்களை அசைத்தது, ஆட்டியது, அசைத்தது.

மரங்கள், 'ஹோ ஹோ'வென்று பெருங்குரலில் அரற்றியது.

பழநிக்கு வியப்பாய் இருந்தது.

'ம்... மழை நிற்கும்வரை யாரும் சலூனுக்கு வரப் போவதில்லை. நான் யாருக்காகக் கடையைத் திறந்து வைத்திருக்கிறேன்...? யாராவது வந்து காசு தருவார்கள் என்ற நப்பாசையா... இல்லை, பசிக் கொடுமை. நாளைக்கு என்று எதுவும் சேர்த்து வைக்காத மடத்தனம். தினசரி கொஞ்சமாவது சேர்த்து வைத்திருக்கலாம்... இன்றுவரை எதைச் சேர்த்து வைத்திருக்கிறோம்? மயிர்... முகம் நிறைய மயிர்... கடை மூலையில் மயிர்... மழைவிட்டால் அந்த மயிரைக்கூட காசாக்கி விடலாம். அதற்கும் வழியில்லை!'

திடுக்கிட்டு நிமிர்ந்தான்.

தலையில் ஒரு சொட்டுத் தண்ணீர் விழுந்திருந்தது.

வழுக்கைத் தலையைத் தடவிக் கொண்டான்.

'கூரையும் ஒழுக ஆரம்பித்து விட்டதா...?'

ஏன் இந்த மழை நிற்காமல் பெய்கிறது... யாரையாவது பலிவாங்க முடிவு செய்திருக்கிறதா? மழைக்கு யார்மீது கோபம்?

மழை சுகம் என்பார்கள்... மழை அழகு என்பார்கள்... இந்த மழை அழுகிணிச் சிறுமி போல...

மழை சற்று ஓய்ந்திருந்தது. தூவானம் விடவில்லை.

சற்று தூரத்தில் வந்து கொண்டிருந்தாள் லெட்சுமி.

கையில் தூக்குச்சட்டி. பழநியின் முகம் மலர்ந்தது.

'ரைஸ்மில் மணி பொண்டாட்டி கிட்ட அரிசி கடன் வாங்கியிருப்பாளோ...'

அவசரமாய் எழுந்து, அவள் கையிலிருந்த தூக்குச் சட்டியை வாங்கி வேகமாய் திறந்தான். அதிர்ந்தான். தூக்குச் சட்டி நிரம்ப மழைத் தண்ணீர்!

"என்ன லெட்சுமி இது...?"

"பக்கத்து வீட்டுக்காரங்க 'நேரமாயிடிச்சே... உன் புருஷனுக்கு சோறு கொண்டு போகலியா'ன்னு கேட்க ஆரம்பிச்சிட்டாங்க... அவங்களை ஏமாத்துறதுக்காகத் தூக்குச் சட்டியில் மழைத் தண்ணியை ஊத்தி தூக்கிக்கிட்டு, நேரே இங்க வந்திட்டேன். நீங்க..."

பேச முடியாமல் வாய் குழறியது. கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தது.

"என்ன நடந்து போச்சுன்னு அழுறே..."

பொய்யாய் அதட்டினான். கண்ணீரைத் துடைத்தான்.

"யாராவது முடிவெட்ட வந்தாங்களா...?"

உதட்டைப் பிதுக்கினாள்.

இருவர் கரங்களும் ஒன்றை ஒன்று இறுக்கிக் கொண்டன.



வாசலில் -

யாரோ நிற்பதுபோல் தெரிய, விலகினான்.

நான்கு கண்களும் வாசலை நோக்கின பளபளக்கும் வெள்ளை பேண்ட், சிவப்புச் சட்டை ஓர் ஆள் நின்றிருந்தான். தெப்பலாய் நனைந்திருந்தான். நீர் சொட்டிக் கொண்டிருந்தது.

"ஹேர் கட்டிங்கா...?" என்று கேட்டான் பழநி.

பதில் சொல்லாமல் சலூனுக்குள் நுழைந்து சிவப்புச் சட்டையைக் கழற்றி, ஹேங்கரில் போட்டான். உள்ளே கறுப்பு கைக் பனியன்.

"கொஞ்ச நேரம் உடுத்துக்க ஏதாவது..."

"அழுக்கு வேஷ்டிதான் இருக்கு"

"பரவாயில்லை"

வேஷ்டிக்கு மாறி, இருக்கையில் அமர்ந்தான். முகத்தில் பதற்றம்.

"ம்... மொட்டை" என்றான் மெல்லிய குரலில்.

'என்ன... நம்மைக் கிண்டல் செய்கிறானா...'

"என்னது?" என்றான் சந்தேகம் தொனிக்க.

"மொட்டை அடிச்சுடுங்க"

"மொட்டைக்கும் பத்து ரூபாய்தான்"

"ம்... சீக்கிரம்"

அடுத்த ஐந்தாவது நிமிடம் - அவன் மொட்டையாகி இருந்தான். ஆள் முற்றிலும் உருமாறி இருந்தான். சில நிமிடங்கள் முன்னால் பார்த்தவர்கள், நிச்சயம் அடையாளம் கண்டுகொள்ள முடியாது. இருக்கையிலிருந்து எழுந்தான்.

ஐநூறு ரூபாய் தாள் ஒன்றை பழநி கையில் திணித்தான்.

"சில்லறைக்கு எங்க போவேன்?"

"வைச்சுக்க"

பழநியும், லெட்சுமியும் அதிர்ந்தார்கள்.

'ஒரு மொட்டைக்கு ஐநூறு ரூபாயா...'

அவர்களைப் பொருட்படுத்தாமல் தெருவில் இறங்கினான்.

"சார்... பேண்ட், சர்ட்"

பழநிக்கு எந்தவித பதிலும் சொல்லாமல் வேகமாய் நடந்தான்.

இருவரும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

"பேண்ட், சர்ட் ஐநூறு ரூபாய் இருக்குமே..." என்றாள் வியப்புடன் லெட்சுமி. பழநி தன் கையிலிருந்த ஐநூறு ரூபாய் தாளையே இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தான்.

"வாங்க, தொரை நாடார் கடைக்குப் போயி, பத்து கிலோ அரிசி வாங்கிட்டுப் போவோம்"

பேண்ட்டையும், சட்டையையும் கையில் சுருட்டி எடுத்துக் கொண்டு சலூனை மூடினான்.

"பழநி"

குரலில் திரும்பினான்.

ஹோட்டல் ஞானயா, மீசையை தடவியபடி நின்று கொண்டிருந்தார்.

"உனக்கு ஒரு கதை தெரியுமா..."



பதிலை எதிர்பார்க்காமல் சொல்ல ஆரம்பித்தார்.

"கஞ்சா கடத்திட்டு வந்தவனை போலீஸ் மடக்கிப் பிடிச்சாங்களாம். இரண்டு போலீசை சுட்டுக் கொன்னுட்டு தப்பிச்சிட்டானாம். சிவப்பு சட்டை, வெள்ளை பேண்ட் போட்டிருந்தானாம். நீளமா முடி வளர்த்து வைச்சிருந்தானாம்..."

பழநியும், லெட்சுமியும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டனர். கையிலிருந்த துணி கனத்துக் கிடந்தது போலிருந்தது.

"ம்... வா"

வேகமாய் நடந்தான் பழநி. பின்தொடர்ந்தாள் லெட்சுமி.

"என்னங்க... நாடார் கடையில அரிசி வாங்க வேண்டாமா..."

"பேசாம வா"

விடுவிடுவென்று நடந்தான். அவன் நடைக்கு ஈடு கொடுத்து ஓட்டமும், நடையுமாய் பின்னால் சென்றாள்.

'எங்கே இந்த வேகத்தில் போகிறார்' ரோட்டோர கடையொன்றில் புயல் எச்சரிக்கை செய்து கொண்டிருந்தது ரேடியோ. ஆற்றோரக் குடிசைவாசிகளை எச்சரித்துக் கொண்டிருந்தார் நெல்லை கலெக்டர்.

"ஜங்ஷன் பஸ் ஸ்டாண்டுக்குள் தண்ணி புகுந்துடிச்சாம்" யாரோ கத்திக்கொண்டு ஓடினார்கள்.

இருவரும் மவுனமாய் நடந்தனர்.

குறுக்கே வந்தது ஆறு.

தாமிரபரணி ஆறு, நுங்கும் நுரையுமாய் பொங்கிச் சென்று கொண்டிருந்தது.

வெள்ளம் புதிய வரலாறு எழுதிக் கொண்டிருந்தது.

ஆற்றுப் பாலத்தில் முட்டி மோதிச் சென்றது மழைநீர்.

பேராச்சி அம்மன் கோயில், தண்ணீருக்குள் தத்தளித்தது. மண்டபங்கள் நீருக்குள் மூச்சடக்கி இருந்தது.

ஓடுகின்ற நீரில் அலுமினியப் பாத்திரங்கள், மரக் கட்டில்கள், தென்னை ஓலைகள், மரங்கள் மிதந்து சென்றன.

'ஆறு, மொத்த அழுக்கையும் கடலுக்குள் இழுத்துச் செல்கின்றதோ...'

கையிலிருந்த வெள்ளை பேண்ட்டையும், சிவப்புச் சட்டையையும் சுருட்டி, ஓடுகின்ற நீரில் வீசி எறிந்தான். மடக்கி வைத்திருந்த ஐநூறு ரூபாய் தாளை விரித்துப் பார்த்தான்.

அதை நான்காய் மடித்தான். எட்டாய் மடித்தான். கடைசில், காகிதக் கப்பலாய் உருமாறியிருந்தது.

குனிந்து, ஆற்று நீரில் காகிதக் கப்பலை விட்டான்.

அதை வேகமாய் அடித்துச் சென்றது தண்ணீர்.

"என்னங்க..."

"அது பணம் இல்ல லெட்சுமி. அழுகின பிணம். பசிக்குதேன்னு பிணத்தைச் சாப்பிட முடியுமா? அது கடலுக்குப் போய்ச் சேரட்டும். நாம மயிர் வெட்றவங்க தான். மயிரை திங்கிறவங்க இல்லை... ம்... வா, போவோம்"

பசி மயக்கத்துடன் நடந்தனர்.

வானம் மழையாய் கொட்ட ஆரம்பித்தது.

**- வாசுகி, பிப்ரவரி 1993**

# 17

## பால் கூலி

(*இலக்கியப் பீடம் மாத இதழ் நடத்திய சிறுகதைப் போட்டியில் பரிசு பெற்ற கதை.)

*'பால் கூலி' தலைப்பே இதயத்தை இடிக்கிறது. தங்கமான வார்த்தைகள். சேதாரம், தேய்மானம், செய் கூலி... இதென்ன பால் கூலி...? மதுராவின் பால் கூலி சிறுகதையை ஊன்றி படித்தேன். படித்து முடித்ததும் கண்ணீர் மண் தொட்டது. மதுரா இளம் வயதினர். ஆனால் அவர் எழுத்துக்களில் முதிர்ச்சியை, வாழ்க்கையின் அனுபவங்களை புரிந்துகொள்ள முடிகிறது. தாயின் உணர்ச்சி மயமான கடிதத்தை எட்டாய் மடித்து பைக்குள் வைத்துக் கொண்டு குமரகுருபரநாதன் படும் அவஸ்தையை விவரிக்கும் விதம் அருமை.*

*குமரகுருபர நாதனின் மனப் புழுக்கம் தாய்ப் பாசத்தின் வலிமையை நமக்கு உணர்த்துகிறது. தூக்கணாங் குருவி... உரையாடல் அருமை.*

*தாய்பாலுக்கு கூலியை — யாராலும் நிர்ணயிக்க முடியாது என்பதை சொல்லாமல் சொல்லி விட்டது 'பால் கூலி'.*

**- எழுத்தாளர் மன்னார்குடி விசுவநாதன்.**

அந்த நிமிடம் நான் நானாகயில்லை.

ஒரு தாயின் மகனாக - ஒரு மனைவியின் கணவனாக இதயம் அல்லாடிக் கொண்டிருந்தது.

கால்களோ தள்ளாடியது கனம் தாங்காமல்.

காகிதம் கனத்துக் கிடக்குமா...

அதுவும் ஒற்றைக் காகிதம் கனத்துக் கிடக்குமா...

கனத்துக் கிடந்தது.

இரும்புக் குண்டாய் கனத்துக் கிடந்தது.

பாறாங்கல்லைக் கழுத்தில் கட்டி நடக்க சொல்வது போலிருந்தது.

எனக்கு முன்னால் நடந்து போய்க் கொண்டிருந்தான் நந்தகுமார்.

அவன் கையில் என் பெட்டி இருந்தது.

இன்னொரு கை பதின்மூன்று வயது மகனின் தோளில் இருந்தது.

இரண்டு கை வீசி நடந்த எனக்கு அந்தக் காகிதம்தான் கனத்துக் கிடந்தது.

அந்த காகிதம்தான் என்னைச் சென்னையிலிருந்து இரண்டு வருடங்களுக்குப் பின் தாமிரபரணிக் கரைக்கு இழுத்துச் செல்கிறது.

சட்டைப் பைக்குள் இருந்த காகிதத்தை உருவி மெல்ல வெளியே எடுத்தேன். எட்டாய் மடிக்கப்பட்ட காகிதம்.

மெல்லிசான காகிதம் காற்றில் அசைகிறது மயிலிறகாய்.



‘இந்தக் காகிதமா கனத்துக் கிடக்கிறது. இந்த மெல்லிய வெள்ளைக் காகிதமா கனத்துக் கிடக்கிறது.’

- மீண்டும் காகிதத்தைப் பைக்குள் வைத்துக் கொண்டேன்.

‘எழுத்துக்கள்தான் காரணமாயிருக்கும்.’

- முகம் வியர்த்துப் போயிருந்தது.

‘குண்டு குண்டான எழுத்துக்கள். தபாலில் வந்த இந்த எழுத்துக்களை பார்த்ததுமே என் மனைவி சித்ரா பயந்து விட்டாள். ‘உடனே நிறுத்துங்கள்’ கத்தியே விட்டாள். திருநெல்வேலிப் பக்கமே போக வேண்டாம் என்று தடுப்பவள், ‘உடனே ஊருக்குப் போ’ என்று விரட்டியதன் விளைவே இந்தப் பயணம்.

சூரியன் மேற்கே சரிந்திருந்தான் கவலையுடன்.

ஐந்தே காலுக்கு கன்னியாகுமாரி எக்ஸ்பிரஸ்.

ஓடியாடி டிக்கெட் வாங்கி வந்து விட்டான் நந்தகுமார்.

அம்மா, அப்பா, மனைவி, மூன்று குழந்தைகள். குறைந்த வருமானத்தில் எந்த நிமிடமும் புன்னகையுடன் வலம் வரும் நந்தகுமாரைப் பார்க்க உள்ளுக்குள் பொறாமையாய் இருந்தது.

“இதுதான் முதல் வகுப்பு பெட்டி.”

- ரயிலை சுட்டிக்காட்டி தன் மகனிடம் ஏதோ சொல்லிக் கொண்டு வந்தான். எனக்கு என் அம்மாவின் நினைவு வந்தது.

“இதுதான் தூக்கணாங் குருவி கூடு.”

- அண்ணாந்து பார்த்தேன். காவலுக்கு நிற்பது போல குளத்தங்கரையில் வரிசையாய்ப் பனைமரங்கள். பனை

ஓலைகளில் தொங்கிக் கொண்டிருந்தன தூக்கணாங் குருவிக் கூடுகள். வடகிழக்குப் பருவக் காற்றின் வீச்சில் அங்கும் இங்கும் அசைந்து கொண்டிருந்தன. ஓலைகளில் ஊசலாடும் அந்தக் கூடுகளைப் பார்க்க எனக்கு ஆச்சரியமாயிருந்தது. அந்தக் கூடுகள் காற்றில் அங்கும் இங்கும் அசைவதே தனி அழகு.

'ஆறறிவு இல்லாத ஒரு குருவியால், அதுவும் ஒரு சின்னக் குருவியால் இந்த அழகிய கூட்டை எப்படிக் கட்ட முடிந்தது? மழையும் வெயிலும் சீண்ட முடியாத - எத்தனை அழகான வீடு? இந்தக் குருவிக்கு வீட்டை அந்தரத்தில் தொங்க விடுவதற்குச் சொல்லிக் கொடுத்தவன் யார்? நேர்த்தியான அமைப்பு. தேர்ந்த தையல் கலைஞனின் வேலைப்பாடு. அழகிய பின்னல் எவன் கற்றுத் தந்தது?'

"அம்மா அம்மா இந்த கூடு தலைகீழா தொங்குதே. காற்றில் கூடு ஆடும்போது இந்த குருவியோட குஞ்சு குட்டிங்க கீழே விழுந்து விடாதா?"

"அம்மா உன்னை கட்டில்லயிருந்து கீழே விழ விடுவேனா."

"விழ விட மாட்டீங்க."

"அதே மாதிரிதான் அந்தத் தாய்க் குருவியும்" - என் ஆறு வயது மூளை அடுத்த கேள்வி கேட்டது.

"அம்மா ராத்திரியானதும் கூட்டுக்குள்ளேயும் இருட்டு வந்திடும். அந்த குஞ்சு குட்டிங்களுக்கு பயமா இருக்காதா?"

"என் செல்லக்குட்டி நீ பயப்படுவாய் என்று அம்மா நம்ம வீட்ல விடிய விடிய சிம்னி விளக்கை எரிய விடலியா? அது போலத்தான் அந்த தாய்க் குருவியும் செய்யும்."



"சின்ன கூட்டுக்குள்ள விளக்கை வைச்சா கூடு எரிஞ்சு போகாதாம்மா?" - அம்மா என் காதைச் செல்லமாய்த் திருகினாள்.

"குரு! ராத்திரி மினுக் மினுக்னு விளக்கை சுமந்துகிட்டு ஒரு பூச்சி பறந்து கிட்டு திரியுமே நீ பார்த்திருக்கியா."

- என் முகம் உற்சாகத்தில் மலர்ந்தது.

"மினுக்கட்டான் பூச்சியை தூக்கினாங் குருவி பிடிச்சிட்டு போயி, கூட்டோட வாசல்ல ஒரு உருண்டை ஈரக் களிமண்ணை வைச்சி, அந்த களிமண்ல மினுக்கட்டான் பூச்சி தலையை செருகி வைச்சிடுமாம். பின்புறம் இருக்கிற விளக்கு ராத்திரி முழுசும் மினுக் மினுக்குனு எரிஞ்சிகிட்டே இருக்குமாம். குஞ்சு பயமில்லாமத் தூங்குமாம்."

"அம்மா! மினுக்கட்டான் பூச்சி செத்துப் போயிடுமேம்மா" - அம்மாவின் கை வாஞ்சையாய் என் தலையை வருடியது. என் கண்களிலிருந்து கண்ணீர் மளமளவென்று வழிந்தது.

"குரு! அழறியா குரு?"

- முன்னால் நின்று கொண்டிருந்தான் நந்தகுமார்.

"ஒண்ணுமில்லை. ஏதோ பழைய நினைவு."

- கண்களைத் துடைத்துக் கொண்டேன்.

"எஸ் செவன் வந்திடிச்சி. மிடில் பெர்த் ஐம்பதாம் நம்பர்."

- பெட்டியுடன் ரயிலில் ஏறினான் நந்தகுமார் பதின்மூன்று வயது மகன் பின் தொடர்ந்தான். நானும். பெட்டியை வைத்து விட்டுத் திரும்பிக் கேள்வி கேட்டான் நந்தகுமார்.

"இதுதான் முடிவா?"

- என்னால் பதில் சொல்ல முடியவில்லை. அதுவும் அவன் கண்களை நேருக்கு நேர் பார்த்து என்னால் பதில் சொல்ல முடியவில்லை. மீண்டும் அந்தக் கேள்வியைக் கேட்டு என்னைச் சங்கடப்படுத்தவில்லை.

"நான் தந்ததாய் அம்மாகிட்ட கொடுத்துவிடு."

- இனிப்பும் பொட்டலம் ஒன்றைக் கையில் திணித்தான். அந்த நிமிடம்தான் எனக்கு நினைவு வந்தது நான் எதுவும் வாங்கவில்லையென்பது. எனக்குச் சிரமம் தராமல் ரயில் புறப்பட்டது நெல்லையை நோக்கி. நந்தகுமாரும், அவன் மகனும் கையசைத்து விடை கொடுத்தார்கள்.

நந்தகுமார் கண்கள் கலங்கியிருந்தன.

இருக்கையில் வந்து அமர்ந்தேன் ஆயாசத்துடன்.

எதிரில்...!

எட்டு வயதுச் சிறுமி.

பதினெட்டு வயதுச் சின்னப் பெண்...

முப்பத்தெட்டு வயது நடுத்தரப் பெண்...

ஐம்பத்தெட்டு வயது முதுமையைத் தொட்டவள்.

நான்கு பேரும் என் அம்மாவாய் தெரிந்தார்கள்.

அதே சிரிப்பு. குளத்தை போல்.

சட்டைப் பையிலிருந்த காகிதம் நினைவுக்கு வந்தது. ரயில் வேகமெடுத்து ஓடத்தொடங்கியிருந்தது.

மடிக்கப்பட்ட காகிதத்தை வெளியில் எடுத்தேன்.

காகிதத்தின் உறக்கம் கலைத்தேன்.



நீலப் பறவையாய் எழுத்துக்கள்.

அம்மாவின் குண்டு குண்டான கையெழுத்து.

'அன்பு மகன் குமரகுருபர நாதனுக்கு -

அம்மா நாக சுந்தரி எழுதுவது -

அம்மா நல்லலயிருக்கேன்.

நீ எப்படி குரு இருக்கே?

சித்ரா எப்பிடி இருக்கா. நாகு எப்படி இருக்கா.

நீ அனுப்பி வைச்ச நாகுவோட போட்டோ கிடைச்சுது.

சின்ன புள்ளையில நான் இருந்த மாதிரியே -

நாகு இருக்கிறதா பச்சைச் தண்ணிப் பாட்டி சொல்றா.

எனக்கு நாகுவைப் பாக்க ஆசையா இருக்குது குரு.

உன் முகத்தை தினமும் பாக்கணும் போல இருக்குது குரு.

இல்லைன்னா கொஞ்ச நாள்ல செத்துப் போயிடுவேன் குரு.

அம்மா உன் மடியில செத்துப் போகணும் குரு.

பூங்குளத்தா பேரனுக்கு உன் வீடு தெரியுமாம்.

வெள்ளிக்கிழமை அந்திக்கு புறப்பட்டு - சனி விடிய கருக்கல்ல வந்துடுவேன் உன் முகம் பார்க்க - அம்மா.'

- எழுத்துக்கள் அழிந்திருந்தன. கண்ணீராய் இருக்கும்! ரயில் ஓடிக்கொண்டிருந்தது எந்த விதக் கவலையுமின்றி. எனக்கும் சித்ராவுக்கும் கல்யாணமான புதிதில் அம்மா எங்களோடுதான் இருந்தாள். ஏனோ அம்மாவையும், அம்மா இருமலையும் சித்ராவுக்குப் பிடிக்காமல் போயிற்று.

மனைவியின் சொல் கேட்டு அம்மாவைச் சொந்த கிராமத்தில் கொண்டு விட்டு விட்டு வந்து விட்டேன். மாதாமாதம் பணம் அனுப்புகிறேன் கடமைக்காக. சித்ராவுக்கு அம்மாவின் பெயரைக் கூடப் பிடிக்கவில்லை. குழந்தைக்கு 'நாகு' என்று பெயர் வைத்தேன். அவளோ 'த்ரிஷா' என்று கூப்பிடுகிறாள்.

இரண்டு வருடம் கிணற்றில் போட்ட கல்லாய்க் கிடந்தது வாழ்க்கை.

சூறாவளியாய் வந்தது அம்மாவின் கடிதம்.

வானத்துக்கும் பூமிக்குமாய்க் குதித்தாள் சித்ரா.

அம்மா சென்னை வராமல் தடுக்க என்னை நெல்லைக்கு அனுப்பி வைத்திருக்கிறாள். அம்மாவை, பத்து மாதம் சுமந்து பெற்ற அம்மாவை - என் வீட்டுக்கு வர வேண்டாம் என்று சொல்ல, முலைப்பால் குடித்த மகன் போகிறேன், வெட்க மில்லாமல்.

என் அருகிலிருந்தவர்கள் சாப்பிட்டார்கள் அவசர அவசரமாய். எனக்குச் சாப்பிட மனமில்லை.

காத்திருந்தேன் உறக்கம் வராமல், உறங்குவதற்கு.

ஐம்பத்தெட்டு வயது பேசிக் கொண்டேயிருந்தது. வாய் மூடாமல்.

மகன் மருமகள் மீது புகார்ப் பட்டியல் வாசிப்பது போல் இருந்தது.

முப்பத்தெட்டோ சாப்பாட்டிலே குறியாய்! பதினெட்டு நாவலில்! பெட்டியிலுள்ளவர்கள் சற்று நேரத்தில் படுப்பதற்குத் தயாராக, நானும் பெர்த்தில் ஏறிப் படுத்துக் கொண்டேன்.

'நாகு என்னைத் தேடுவாளே.'



அம்மாவின் முகம் நினைவில் வநத்து.

மனதுக்குள் கவிதை ஓடிற்று.

**'மலம் துடைத்து**
**கக்கியது ஏந்தி**
**சிறுநீரில் நனைந்து**
**சிணுங்கல்களுக்குக்**
**கண்விழித்து...**
**உணவாய் -**
**உதிரம் தந்தவளுக்கு**
**என் செய்வேன்...?**
**அம்மா...?**

- தடக்கென்று உதறி தடதடத்து ஓடியது. ரயில் பாலம் ஒன்றைக் கடந்து.

நாகு நான் இல்லாமல் தூங்குவாளா?

அம்மா நீ எப்படித் தனியாய் தூங்குகிறாய்?... 'அம்மா', 'அம்மா' கண்களிலிருந்து கண்ணீர் வழிய தூங்கிப் போனேன்.

'என் மீது கதகதப்பாய் எதோ போர்த்தப் பட்டிருந்தது. தொட்டுப் பார்த்தேன். சிறகுகள். தடவிப் பார்த்தேன் என் முகமும் குருவியின் முகமாய்! யாரோ உரசத் திரும்பி பார்த்தேன். தூக்கணாங் குருவி ஒன்று என் மீது உரசிக் கொண்டு நின்றது. அதன் முகம் சித்ராவின் முகமாய்த் தெரிந்தது. மினுக் மினுக்கென்ற வெளிச்சத்தில் தெளிவாய்த் தெரியவில்லை. இருவருக்குமிடையில் பயக் குஞ்சாய் நாகு! நாங்கள் இருக்கிற இடம் வீடு மாதிரி தெரியவில்லை. பெரிய கூடு மாதிரி தெரிகிறது. வெளிச்சம் எங்கேயிருந்து வருகிறது...? நிமிர்ந்து பார்க்கிறேன். களிமண்ணில் தலை மட்டும் புதைக்கப்பட்ட மின்மினிப் பூச்சி ஒன்று துடித்துக் கொண்டிருக்கிறது. இறக்கைகள் உதற. கால்கள்

கடைச் அசைவுகளில். பின்னாலிருந்து வெளிச்சம் கசிந்து - கொண்டிருக்கின்றது மினுக் மினுக்கென்று. அந்த மின்மினிப் பூச்சியை உற்றுப் - பார்க்கிறேன். துடிக்கும் கால்கள் என் அம்மாவின் கால்களாய்...'

- திடுக்கிட்டு விழித்துக் கொண்டேன். இது என்ன கனவு?

ஆஷ் துரை கொல்லப்பட்ட இடத்தை கடந்திருந்தது ரயில். யாருக்காகவோ - யாரிடமோ - ஐம்பத்தெட்டு - அனலாய் கொட்டிய வார்த்தைகள் இதயம் சுட்டது. காதில் அறைந்தது.

"கண்மூடிக் குடிச்ச முலைப் பாலுக்கு எவன் தர முடியும் கணக்கு? பத்து மாசம் சுமந்த சுமைக்கு எவன் தர முடியும் கூலி?"

- அபாய சங்கிலியை இழுத்தது போல் மனம் நின்றது. அறுபது நிமிடங்கள் கரைந்தபின் -

தொட்டில் பூமியில் கால் வைத்ததும் இயக்கம் ஆரம்பித்தது.

வரவேற்றன தூக்கணாங்குருவிக் கூடுகள்.

சூரியனின் மஞ்சள் ஒளியில் நனைந்து கிடந்தது தெரு.

ஒற்றைக் கால் ஊன்றி நின்ற ஜக்கடா வண்டியில் -

இரண்டு கால் ஊன்றி 'கொக்கரக்கோ' சொன்னது கோழி ஒன்று.

எங்கிருந்தோ ஓடிவந்து அணைத்துக் கொண்டாள் அம்மா.

"அம்மா! இன்னைக்கே நாகுவை பாக்கப் போறோம். இனி நீ நாகுவோடதான் இருக்கப் போறே."

- நான்கு கண்களிலிருந்தும் கண்ணீர் வழிந்தது.

இதயமும், காகிதமும் மயிலிறகாய்...

# 18

# சஞ்சீவிச் சிறகுகள்!

(*தினமலர் - வாரமலர் நடத்திய அமரர் டிவிஆர் நினைவுச் சிறுகதைப் போட்டியில் பரிசு பெற்ற கதை.)

*மதுரா — பெயருக்கு ஏற்ற தமிழ்ப் படைப்பாளி.*

*ம — மரியாதை தெரிந்த அசல் நெல்லைக்காரர்.*

*து — துரிதமாகச் செயல்படும் படைப்பாளி! போராளி!!*

*ரா — ரா பகலாக சிந்திக்கும் எழுத்தாளர்! பண்பாளர்!!*

*தன்னம்பிக்கையை இந்த தம்பி பறை சாற்ற எழுதிய சிறுகதை சஞ்சீவிச் சிறகுகள். குறுஞ் சிரிப்பாணி, சுள்ளை, மேக்கத்தி, தூத்தல், பொத்தை... இது போன்ற நெல்லை சொற்களைப் படிக்கும் போது செப்பை சிவந்து போகிறது.*

*செப்பை என்றால் கன்னம்.*

*மதுரா என்கிற பன்முகங்கள் கொண்ட எழுத்தாளரின் நித்திய தரிசனங்களில் இக்கதையும் ஒன்று.*

*வாழ்க மதுரா.*

*- பத்திரிகையாளர் கிழாம்பூர்.*

வானம் மழையாய்க் கொட்டி விடுவேன் என்று 'கும்மாளி' போட்டு பயமுறுத்திக் கொண்டிருந்தது. மழை மேகங்கள் அங்கும் இங்கும் நகர்ந்து 'கண்ணாமூச்சி' காட்டியது. மழை வரப்போவது நிஜமா, வானத்தின் 'பம்மாத்து' வேலையா என்று தெரியவில்லை.

காலையிலேயே கணேசனுக்கு முகம் காட்டி ஏமாற்றியிருந்தது சூரியன். குறு மணலையும், களிமண்ணையும் கலந்து 'சமுட்டி'க் கொண்டிருந்தான். மொழங்காலுக்குக் கீழ் மண் அப்பிக் கொண்டிருந்தது.

ஒவ்வொரு மிதிக்கும் அவன் உடல் அதிர்வின்றி அசைந்தது. அந்த அசைவு தேர்ந்த கலைஞனின் நடன அசைவு போல் இருந்தது. உடம்பிலிருந்து வழிந்த வியர்வை சொட்டு சொட்டாய் வழிந்து மிதிபட்டுக் கொண்டிருக்கும் மண்ணில் கலந்தது.

அவன் முகத்தில் எந்த நேரமும் இருக்கும் 'குறுஞ் சிரிப்பாணி'யை காணவில்லை. எங்கோ ஓடி ஒளிந்து கொண்டிருந்தது.

சற்றுத் தள்ளி நின்று கணேசனையே கண் இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தாள் சரசுவதி. அவள் முகத்தில் கவலை களிமண் போல அப்பிக் கொண்டிருந்தது.

அவர்கள் குடிசைக்கு நேர் எதிரில் -

நம்பியாறு சிணுங்கியபடி ஓடிக் கொண்டிருந்தது. ஆற்றுக் கரையில் யவன காவல் வீரர்கள் போல கறுப்புப் பனை மரங்கள்.

மண்ணை மிதித்துக் கொண்டே கணேசன் வானத்தை அண்ணாந்து பார்த்தான். தலைக்கு மேல் நின்று மழை மேகங்கள் விகாரமாய் சிரித்தது போலிருந்தது அவனுக்கு.



"சரசு... மழை வந்திடுமா...?" - என்று கேட்டான் கவலையுடன்.

பெருமூச்சு ஒன்று பதிலாக வந்தது சரசுவதியிடமிருந்து.

"ம்... கொஞ்சம் தண்ணி கொண்டு வா!" என்றான் உணர்ச்சியில்லாத குரலில்.

மண் குடம் ஒன்றை இடுப்பில் தூக்கி வைத்துக் கொண்டு ஆற்றை நோக்கி நடந்தாள். இடுப்பில் குடத்துடன் அவள் அசைந்து அசைந்து செல்வதைப் பார்க்கும்பொழுது சித்தூர் தெங்கரை மகாராஜா தேர் அசைந்து செல்வது போல் இருந்தது கணேசனுக்கு. 'நாவல் பழமே அடி குட்டி நான் பூசும் சந்தனமே, ஏலம் கிராம்பே குட்டி உன்னை என்ன சொல்லிக் கூப்பிடட்டும்' என்று பாடி கேலி செய்தது நினைவில் வந்து மோதியது.

இடுப்பில் கட்டியிருந்த துண்டை அவிழ்த்து தன் மொட்டைத் தலையைத் துடைத்துக் கொண்டான். ஏரல் சேர்மன் கோயிலுக்குச் சென்று மொட்டை போட்டுவிட்ட வந்திருந்தான். காதல் நேர்ச்சை. தன் மனதுக்குப் பிடித்த சரசுவதி, தன் மனைவியாக வரவேண்டும் என்று சாமியை வேண்டியிருந்தான். சொந்த மாமன் மகளாயிருந்தாலும் குடும்பப் பகை குறுக்கே நின்றது.

சுற்றம் எதிர்க்க, நட்பு கைகொடுக்க உவரி சுயம்பு லிங்க சாமி கோயிலில், கடல் அலைகள் முழங்க, திசையன் விளை சாமி பண்டாரம் ராத்திரியோட ராத்திரியா கட்டிக் கொடுத்த மாலையுடன் திருமணம் நடந்து, மூன்று முழுநிலா பார்த்தாயிற்று.

கணேசன் பி.ஏ. பட்டதாரி. படித்தது அரசாங்க வேலைக் கென்று நினைக்காமல் சுயதொழில் செய்பவன். செய்யும் தொழிலே தெய்வம் என்று நினைப்பவன். முப்பாட்டான் காலத்திலிருந்தே செய்து வரும் தொழிலான மண் பாத்திரங்கள்

செய்வதையே தன் தொழிலாக்கிக் கொண்டவன். தனியார் வங்கி ஒன்றில் கடன் உதவி பெற்று தொழில் ஆரம்பித்திருக்கிறான்.

ஜப்பான் நிறுவனம் ஒன்றிடம் தொடர்பு கொண்டு அழகிய வேலைப்பாடு உடைய இரண்டாயிரம் ஜாடிக்கு ஆர்டர் வாங்கியிருந்தான். இருபதாம் தேதிக்குள் ஜாடிகளை ஒப்படைக்க வேண்டும் என்று ஒப்பந்தம். இன்னும் ஏழு நாட்கள்தான் இருக்கிறது. ஆயிரம் ஜாடி 'சுள்ளை'யில் ஏத்தி வீட்டுக்குள் அடுக்கியாயிற்று. ஐநூறு ஜாடி உலர வைத்திருக்கிறது. இன்று சுள்ளையில் ஏற்ற வேண்டும். மழை வந்து நனைத்து விட்டால் ஐநூறு ஜாடியும் நாசம். பச்சை மண்.

வானமோ பயமுறுத்திக் கொண்டிருக்கிறது.

மண்ணைக் கொஞ்சம் வேகமாய் 'சமுட்ட' ஆரம்பித்தான்.

'இன்று மட்டும் மழை வராவிட்டால் தப்பித்து விடலாம்' முகத்தில் சுடு தண்ணி வீசியதுபோல் அதிர்ந்தான். மூக்கருகே சின்னதாய் மழைத்துளி உணர்ந்தான். அண்ணாந்து பார்த்தான். வானம் 'கமுக்கமாய்' இருந்தது.

'மழைத் தண்ணியாய் இருக்காதோ...'

அடுத்த இமை மூடு பொழுது மழைத்துளி ஒன்று கையில் விழுந்தது.

'மழைதான். மழை வரப்போகிறது.' - பயம் அடி வயிற்றைத் தாக்கியது.

'மேக்கத்தி' காற்று பலமாய் வீசத் தொடங்கி இருந்தது.

'எங்கோ மழை விழுந்திருக்க வேண்டும்.'

மண் வாசனை மூக்கைத்தொட்டது.



இரண்டு பனை ஓலைகளை எடுத்து வந்து மிதித்த மண்ணை மூடி வைத்து, அதன் மேல் இரண்டு 'பொத்தை' கல்லைத் தூக்கி வைத்தான்.

அதற்குள் தண்ணீர் குடத்துடன் சரசுவதி வந்தாள்.

"சுருக்கா வா புள்ள... காய வைச்ச ஜாடி எல்லாத்தையும் பெறக்கி உள்ள 'அட்டி' போட்டுடுவோம். வெயிலடிச்சா பொறவு பார்த்துக்கலாம்."

-தண்ணீர் குடத்தை வைத்துவிட்டு வருவதற்குள் மழை 'பொட்டு பொட்டாய்' விழத் தொடங்கியிருந்தது.

இருவரும் வேக வேகமாய் காய வைத்த ஜாடிகளை எடுத்து தனியே கட்டியிருந்த குடிசையில் அடுக்கினார்கள்.

அடுக்கி முடித்து திரும்புவதற்கும் - மழை தூறலாய் ஆரம்பிப்பதற்கும் சரியாய் இருந்தது.

இருவரும் ஓடி தங்கள் வீட்டுக்குள் நுழைந்து கொண்டார்கள்.

அங்கே சுள்ளையில் நெருப்பு வைத்து எடுக்கப்பட்டு தயாரான ஆயிரம் ஜாடிகளும் 'முக்கால் வாசி' இடத்தை ஆக்கிரமித்திருந்தது. 'மிச்சம் மிஞ்சாடி' இடத்தில் பனை நார் கட்டில் ஒன்று கிடந்தது.

"இன்னிக்கி தூத்தல் நிக்காது போலிருக்கே."

"இந்த சார மழை வந்தாலே இந்த எழவுதான்."

சோர்வாய் நார் கட்டிலில் அமர்ந்தான் கணேசன்.

வெளியே மழை விடாமல் சிணுங்கிக் கொண்டிருந்தது.

குடிசைத் தலையில் சுமந்திருந்த பனை ஓலையில் இருந்து சொட்டு சொட்டாய் இறங்கும் மழை நீரையே பார்த்துக் கொண்டிருந்தான்.

'இன்னும் ஏழே நாள்தான் இருக்குது... சார மழை இப்படியே புடிச்சிக்கிட்டா... தெங்கரை மகாராசா... நீதான் காப்பாத்தணும்...'

'கருப்பட்டி' காபி மணம் நாசி தொட திரும்பினான்.

சரசுவதி ஒரு சொம்பில் காபியையும், ஒரு 'கிண்ணி' பெட்டியில் அவித்த 'முண்டகண்ணு' பயிரையும் அவன் முன்னால் வைத்தாள்.

மழை கொஞ்சம் வெறித்திருந்தது.

துண்டை தலையில் கட்டிக்கொண்டு வெளியே வந்தான்.

சித்தூர் ரோட்டில் ரத்தின பாண்டி நாடார் 'ஜக்கடா' வண்டி போய்க் கொண்டிருந்தது.

இரு கை தட்டி ஓசை எழுப்பினான். மாடுகள் இழுத்து நிறுத்தப்பட்டது. வேகமாய் ஓடினான் வண்டியை நோக்கி.

"என்ன... வேளார் மொவன இந்த ஓட்டம்... முயல் புடிக்கிற நாள் மாதிரி... இந்த வருஷம் மூணாம் தேதி வேட்டைக்கு தெக்கு காடு வர்றீரா...?"

"இரண்டு வண்டி குறுமண்ணுக்குத்தான் இந்த ஓட்டம்."

"சார மழை அடிக்கிற அடிக்கி, குறு மண்ணை நம்பியாத்தில் கரைக்கவா..."

"முழிப்பேங்கிற நம்பிக்கையிலதான் மனுஷப்பய ராத்திரி கட்டையை சாய்க்கான். நம்பியாத்தை நம்பிதான் அதில ஒக்காந்திருக்கேன். நீரு வேற..."



"வே... வெள்ளன விடியக்கருக்கல்ல வண்டி உம்ம வீட்ல முன்னால நிக்கும்."

- கயிற்றை சுண்ட மாடுகள் வண்டியை இழுக்க ஆரம்பித்தன.

குடிசைக்குள் வந்து சேர்வதற்குள் மீண்டும் மழை ஆரம் பித்திருந்தது. ஜாடி ஒன்றுக்கு 'வர்ணம்' பூசிக் கொண்டிருந்தாள் சரசுவதி.

கணேசனும் அவளுடன் அமர்ந்து வர்ணம் பூசத் தொடங்கினான்.

சூரியன் மேகத்துக்குப் பின்னால் பதுங்கியபடியே மேற்கு தொடர்ச்சி மலைக்குச் சென்றிருந்தான். வானம் இருட்டின் பிடியில் சிக்கியிருந்தது.

நிலவு அன்று தூரதேசம் போயிருந்தது. ஒன்றிரண்டு நட்சத்திர மினுக்கல்கள்.

மின்னல் வெட்டி, இடிஇடித்தது வானம்; மழை நூலை காற்று அறுத்தது.

கணேசன் மனதில் கவலை மேகங்கள்.

இருவரும் 'பேருக்கு' சாப்பிட்டு விட்டு படுத்துக் கொண்டார்கள்.

வெளியே வானம் சிணுங்கிக் கொண்டுதான் இருந்தது.

சிறிது நேரத்தில் சரசுவதி தூங்கி விட்டாள். கணேசனுக்கு உறக்கம் வரவில்லை. புரண்டு புரண்டு படுத்தான். இமைகள் இழுத்துக் கொண்டன. கொஞ்சம் தூக்கமும்... விழிப்புமாய்...

கடல் அலை ஓங்கி ஓங்கி கோபமாய் பாறையில் மோதுகிறது.

கரையோரமாய் - கடல் நீரில் 'ரோதை' நனைய 'ஜக்கடா' வண்டி ஒன்று செல்கிறது. வண்டி நிறைய மண் பானைகள்.

வண்டி 'இரும்பு கம்பில்' கணேசனும் சரசுவதியும்.

பத்து இருபது பேர் ஜக்கடா வண்டியை அப்படியே - மண்பானைகள், கணேசன் சரசுவதியுடன் அலேக்காக தூக்கி ஒரு பெரிய தோணியில் ஏற்றுகிறார்கள்.

கடலுக்குள் போகிறது தோணி. தூரமாய்... தூரமாய்...

திடீரென்று கடல் கொந்தளிக்கிறது. காற்று பலமாய் வீசுகிறது. தோணியில் இருப்பவர்கள் ஏதோ உரக்க பேசுகிறார்கள்.

கணேசனும் சரசுவதியும் கைகளை ஆட்டி ஆட்டி மறுக்கிறார்கள். கண்களில் கண்ணீர்... கண்ணீர்... தோணிக்காரர்கள் மண்பானைகளைத் தூக்கி கடலுக்குள் வீசுகிறார்கள் ஒவ்வொன்றாய்... ஒவ்வொன்றாய்...

விழித்துக் கொண்டான் இடிச்சத்தத்தில்.

வெளியே காற்று 'ஹோ ஹோ'வென்று இரைந்து கொண்டிருந்தது. பெருஞ் சத்தத்துடன் மழை பெய்து கொண்டிருப்பதை உணர முடிந்தது.

நம்பியாற்றின் இரைச்சல் காதில் மோதியது.

உலகத்தையே அழித்துவிட வேண்டும் என்ற கோபத்தில் காற்றும், மழையும் தலைவிரித்து ஆடுவது போலிருந்தது.

குடிசை இடிந்து தலையில் விழுந்து விடுமோ என்று பயமாயிருந்தது. கட்டிலிலிருந்து எழுந்து கொண்டான் கணேசன்.

"வேண்டாங்க... வெளியில காத்து பலமா இருக்குது..." - சரசுவதியும் விழித்துதான் இருந்திருக்கிறாள்.

'மடமட'வென்று ஏதோ சரிந்து விழும் சத்தம் கேட்டது.



'ஐயோ...' என்று மனம் அலறியது.

வேகமாய் எழுந்து பனங்கம்புக் கதவைத் திறந்தான்.

'சுள்ளை'யில் ஏற்றாத பச்சை மண் ஜாடிகள் அடுக்கி வைத்திருந்த குடிசை சரிந்து விழுந்து கிடந்தது. கதவு மல்லாந்திருந்தது.

"எல்லாம் போச்சி..." - வாய் முணுமுணுத்தது.

அப்படியே தலையில் கை வைத்தபடி திண்ணையில் அமர்ந்து விட்டான்.

எதிரில் நின்ற பூவரசு மரம் காற்றின் கோப திசைக்கெல்லாம் தலையை அசைத்து அசைத்து ஆடிக்கொண்டிருந்தது. பேய் பிடித்த பெண்ணாய்.

சரசுவதி, வாசலில் நின்று கொண்டிருந்தாள், சுட்ட களிமண் சிலையாய்.

நிமிடங்கள் ஆற்றோர மண்ணாய் கரைந்தன. காற்று தன் கோபம் குறைத்து தென்றலாய் வீசத் தொடங்கியிருந்தது.

வேக மழை குறுகி, தூறலாய் சிறுத்து, பொசுங்கலாகி நின்று போயிருந்தது. கிழக்கே வானம் வெளுக்கத் தொடங்கியிருந்தது.

நிமிர்ந்து மேற்கே பார்த்தான். இரண்டு பனை ஓலைகளும், 'பொத்தை' கல்லும் அசையாமல் இருந்தன. அதன் கீழே இருந்த மண் காணாமல் போயிருந்தது.

"சரசுவதி... இன்னும் ஆறு நாள்தான். சுள்ளையில் வைக்காத ஐநூறு ஜாடியும் போச்சி... ஆறு நாள்ல ஆயிரம் ஜாடி வேணும்... முடியாது... இனி ஒண்ணும் செய்ய முடியாது..." - என்றான் புலம்பலாய்.

"முடியும். உங்களால் முடியும். புதுசா ஜாடி செய்வோம்..." - என்றாள் உறுதியான குரலில்.

"குறு மண்ணு 'துப்பரவா' கெடையாது புதுசா குழைக்கிறதுக்கு. இந்த மழைக்கு யாரு வண்டி வரும்... முடியாது சரசுவதி - இனிமே முடியாது... கடவுள் எனக்கு ரெண்டே ரெண்டு கையைத்தான் குடுத்திருக்காரு." இரண்டு கைகளையும் தூக்கிக் காட்டினான் சோகமாய். கண்கள் கலங்கி போயிருந்தன.

"நீங்கள் எனக்குச் சொல்லித் தந்ததை நீங்களே மறந் திட்டீங்களா..?" என்று கேட்டாள் அவன் கண்களைப் பார்த்து.

"என்ன சொல்லித் தந்தேன்...?" என்று கேட்டான் வியப்பாய்.

" 'இரு கை மனிதரால் முடியாதது, மூன்று கை மனிதரால் முடியும். அவர்களுக்கு வானமும் வசப்படும். கடலும் தனது கதவு திறந்து முத்தெடுத்துக் கொடுக்கும், முத்தமும் கொடுக்கும்'னு சொல்லியிருக்கீங்க," என்றாள் மனதை வருடும் குரலில்.

"மூன்றாவது கை எது சரசு...?" என்று கேட்டான் முகம் மலர.

"தன்னம்பிக்கை."

"எனக்கு மூன்றாவது கை மட்டும் இல்லை... சிறகும் சேர்ந்து முளைச்சாச்சு..." என்றான் குறுஞ் சிரிப்புடன்.

உற்சாகமாய் எழுந்தான் கணேசன்.

காற்றுக்கும், மழைக்கும் உதிர்க்காத பூவொன்றை அவன் தலையில் சொரிந்தது பூவரசு.

குறு மணலுடன் வந்து நின்றது 'ஜக்கடா' வண்டி.

கிழக்கே 'சுள்'ளென்று உதித்தது சூரியன்.

*- தினமலர் வாரமலர், அக்டோபர் 1993*

# 19

# காகித நிலவு

(*பாக்யா வார இதழ் நடத்திய சிறுகதைப் போட்டியில் பரிசு பெற்ற கதை.)

*தனது ஒவ்வொரு சிறுகதைக்கும் வித்தியாசமான தலைப்பு வைத்து, அதன் வாயிலாக உடனடியாக உள்ளத்தை ஈர்த்து – அடுத்த கணம், அதிரடியான ஆவலு டன் படைப்பை வாசிக்கத் தூண்டும் வசியம் கற்றிருக்கும் எழுத்து வித்தகர் மதுரா.*

*பொறுப்பற்ற ஓர் ஆண் தனது உடல் சுகத்துக்காக – ஒரு அப்பாவிப் பெண்ணை மணம் முடித்து – அவளை கர்ப்பிணியாக்கி அம்போவென தவிக்க விட்டு – ஓடிப் போகிறான். பெண் சிசு ஷன்மதி பிறந்து, வளர்ந்து – அவளுக்கு எட்டு வயசு ஆகும் சமயத்தில் அந்த அபலைத் தாயும் மாண்டு போகிறாள். இந்த இடத்தில்தான் 'காகித நிலவு' கண்முன் வருகிறது. அந்த சிறுமியின் மன வேதனையை 'கையில் போட்டோவையும் வயிற்றில் என்னையும் தந்துவிட்டு அப்பா ஓடிப் போனதும்' எனும் வரி வலிமையான தாக்கத்தை பதிவு செய்கிறது. இக்கதை மாந்தர்கள் ஒவ்வொருவரின் பின்னணியிலும் ஒரு துயரம்*

*புதைந்திருப்பதை சுருக்கமான சொற்களால் — உருக்கமாக தெரிவிக்கிறார் மதுரா.*

*சர்க்கஸ் கம்பெனி மேனேஜரின் நஞ்சேறிய மிரட்டலுக்கு அஞ்சிய போதும், அக்கா எனும் தற்காலிக உரிமையில் சோனா கெஞ்சிய போதும் ஷன்மதி அங்கிருந்து தப்பிப்பதற்காக வெளியேற முயற்சித்ததும் 'அப்பாடா...! இனி ஷன்மதிக்கு நிரந்தர விடுதலை!' என நாம் நிம்மதிப் பெருமூச்சு விடும் போது — எதிர்பாராத திருப்பமாக — மூன்று வயது சின்னஞ் சிறு நிம்மி அவளது பாதம் தொட்டு புன்னகைக்க — அடுத்த நொடியில் உள்ளம் இளகி — இதுவரை சந்தித்த — இனி சந்திக்கப் போகிற அத்தனை சிரமங்களையும் தூக்கியெறிந்து விட்டு — பழையபடி 'பார் விளையாட்டு'க்குச் செல்வது நெஞ்சத்தை நெகிழச் செய்கிறது. 'கன்னத்தில் குழி விழுந்த சிரிப்பு' என்பதால் மீண்டும் தாயின் உருவத்தில் நிம்மியைக் கண்டு ஷன்மதி மனம் மாறுவதை உயிரோட்டமாக சித்திரித்து நம்மை சிலிர்க்க வைத்து, கதையை முடிக்கிறார் படைப்பாளி.*

*- எழுத்தாளர் மாலா உத்தண்டராமன்.*

ஆட்டம் துவங்கிவிட்டது. வாத்தியங்கள் முழங்கின. வண்ண விளக்குகள் கண் சிமிட்ட ஆரம்பித்திருந்தன. ஜனங்களின் உற்சாகக் குரல் காதில் மோதியது. ஷன்மதிக்கு எழுந்திருக்க முடியவில்லை.

உடம்பு அனலாகக் கொதித்தது. எலும்பெல்லாம் வலித்தது போலிருந்தது. 'இப்பொழுது பத்தொன்பது குதிரைகளும், அரங்கத்தில் ஓடிக் கொண்டிருக்கும்... வருன் அங்கேதான் நின்று கொண்டிருப்பான். என்னைத் தேடுவானா... அவன் எதற்கு என்னைத் தேட வேண்டும். நான் என்ன அவன் தங்கையா!'



மனதுக்குள் வலித்தது. போர்வையை இழுத்து மூடிக் கொண்டாள். உடம்பு குளிரில் நடுங்கியது. யாராவது நெற்றியைத் தடவி முத்தம் ஒன்று தரமாட்டார்களா என்றிருந்தது. அம்மாவின் முகம் கண்முன் வந்தது. 'இருமி, இருமி நெஞ்சு வலியில் செத்துப் போன அம்மா... அன்பு அம்மா... என் ஆசை அம்மா... என் அருகே வந்து கொஞ்ச நேரம் உட்கார்ந்திரேன் அம்மா... உன் மடியில் தலை வைத்துக் கொஞ்ச நேரம் தூங்குகிறேன். என் கன்னத்தில் முத்தம் ஒன்று தாயேன். நீ வரமாட்டாய்... கடவுள் உன்னை அங்கேயிருந்து இங்கே வர விடமாட்டார். உன் முத்தம் வேண்டும் என்றால் நான்தான் அங்கே வர வேண்டும்' கண்களிலிருந்து கண்ணீர் வழிந்து காது தொட்டது.

'எத்தனை இரவு அம்மாவின் நெஞ்சைத் தடவிக் கொண்டே தூங்கிப் போயிருக்கிறேன். 'போம்மா மதி... போய் படு... அம்மாவுக்கு தினமும் வர்ற இருமல்தானே...' கேட்க மாட்டேன்.

என் கை ஓயும் வரை அம்மாவின் நெஞ்சை தடவி யிருக்கிறேன். ஒருநாள் அம்மாவின் நெஞ்சை தடவிக் கொண்டே மடியில் தூங்கிப் போனேன். விடிந்து பார்த்தால் அம்மா இறந்து போயிருந்தாள். ரொம்ப நேரம் அழுதேன். அழுத கண்ணீர் துடைக்க ஆள் இல்லை. என் கண்ணீரை நானே துடைத்துக் கொண்டு எழுந்த போதுதான் தெரிந்தது. அம்மாவின் சொத்தாய் நசுங்கிப் போன தகரப் பெட்டியும், கழுகுமலை முருகன் ஸ்டுடியோவில் எடுத்த அம்மா அப்பா போட்டோவும் தான் இருந்தது. கடைசியாய் அப்பாவின் ஞாபகம் வந்தது. அம்மாவை விட்டு விட்டு ஓடிப் போனவர். ஒரு வார்த்தை சொல்லாமல் அவரால் எப்படி ஓடிப் போக முடிந்தது. அம்மாவை அப்பாவுக்குப் பிடிக்கவில்லையோ... அம்மாவை எப்படி பிடிக்காமல் போகும். அம்மா எத்தனை அழகாய் இருப்பாள்...

சிரிக்கும் போது கன்னத்தில் அழகாய் குழி விழுமே. ஏன் அப்பாவுக்கு அம்மாவைப் பிடிக்காமல் போயிற்று... அம்மா இருமல்தான் அப்பாவை துரத்தி விட்டதோ... கையில் போட்டோவையும், வயிற்றில் என்னையும் தந்துவிட்டு அப்பா ஓடிப் போனதும் அம்மா என்ன செய்திருப்பாள்... அழுதிருப்பாளோ...? என்ன செய்தாளோ... எட்டு வருடங்கள் கழித்து இவளும் அப்பாவைப் போல என்னைத் தவிக்க விட்டுவிட்டு செத்துப் போய் விட்டாள். நான் எங்கே போவேன்... சொன்னதைக் கேட்காமல் வயிறு பசிக்குமே... சோற்றுக்கு என்ன செய்வேன்... மீசை தாத்தா வீட்டுத் திண்ணையில் படுத்திருக்கும் முத்துக் கோட்டி போல பிச்சை எடுக்கலாமா? என்று எண்ணம் வந்தது. அதற்குள் திருநெல்வேலி மாமா வந்து சேர்ந்தார். அதற்கு முன் அவரை நான் பார்த்ததே இல்லை. சரியான உம்மணாம் மூஞ்சி... பசிக்கும் முன்னே தோசை வாங்கித் தந்தார். கேட்காமலே மிட்டாய் வாங்கித் தந்தார். கடகடத்து ஓடும் ரயிலில் அழைத்துப் போனார். எனக்கு சந்தோஷமாய் இருந்தது. 'நல்ல மாமா' என்று கை தட்ட வேண்டும் போலிருந்தது.

சிவப்பு பச்சையாய் விளக்குகள், குள்ளமாய் உயரமாய் கோமாளிகள், யானைகள், நாய்கள், குதிரைகள். எனக்கு இறக்கைக் கட்டிக் கொண்டு பறப்பது போல் இருந்தது.

"இங்கேயே... இங்கேயே இருந்து கொள்கிறாயா?" - என்று கேட்டார் மாமா, மெல்லிய குரலில்.

"இங்கேயே என்றால் எங்கே மாமா?"

-திகைப்புடன் கேட்டேன்.

"சர்க்கஸ்காரர்களுடன்"

-என்றார் அமைதியாய்.



'இந்த குரங்குகள், பஞ்சு உருண்டை நாய்கள், இந்த கோமாளிகளுடன் தான்... எத்தனை சந்தோஷமாய் விளையாடலாம். சம்மதம் என்பதற்கு அடையாளமாய் தலையாட்டினேன். சர்க்கஸ் முடிந்ததும் கறுப்பாய், உயரமாய், பூதம் மாதிரி இருந்த ஒரு மனிதரிடம் மாமா அழைத்துச் சென்றார். இருவரும் நீண்ட நேரம் பேசினார்கள். நான் பளபளப்பாய் உடை அணிந்த பெண்களையே கண் இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தேன். கடைசியாய், மாமா பத்து ரூபாய் தாள் ஒன்றை என் கையில் தந்துவிட்டு, சென்று விட்டார்... அந்த பத்து ரூபாய் இன்னும் என்னிடம் பத்திரமாய் இருக்கிறது... அந்த நாளுக்குப் பின் திருநெல்வேலி மாமாவை நான் பார்க்கவே இல்லை... ஆறு வருடங்கள் முழுசாய் கரைந்து விட்டது. எத்தனை நகரம். எத்தனை விதமான மக்கள்... எத்தனை மொழி, சந்திப்பு தொடர்ந்து கொண்டே இருக்கிறது. போன வருடம் பாளையங்கோட்டைக்கு எங்கள் சர்க்கஸ் சென்றது. திருநெல்வேலி மாமா வருவார் என்று எதிர்பார்த்து முப்பத்தெட்டு நாளும், அவர் வரவேயில்லை... இறந்து போயிருப்பாரோ... யார் அவர். எனக்கு எப்படி மாமா முறை. அவர் முகம் மங்கிப் போன ஓவியம் மாதிரி இதயத்தின் மூலையில் இருக்கிறது. ஆறு மாதமாய் மேனேஜர் என்னை ஒரு மாதிரியாகப் பார்க்கிறாரே ஏன்...?

ஷன்மதி... ஷன்மதி என்று என்னையே ஏன் சுற்றி வருகிறார்...

"மேனேஜர் பார்வை சரியில்லை. கவனமாய் நடந்து கொள்... சின்ன பாப்பா!" என்று சோனி அக்கா சொன்னார்களே... எதற்காக அப்படிச் சொன்னார்கள்... எழுந்து அமர்ந்தாள் ஷன்மதி...

"பதினான்கு வயதுக்குள் எத்தனை லட்சம் மக்களைப் பார்த்து விட்டேன். அவர்களுக்கு எத்தனை சந்தோஷம்.

எவ்வளவு உற்சாகம்... உலகத்தில் எல்லாரும் சந்தோஷமாய் இருக்கிறார்கள். நான் மட்டும், நான் மட்டும்தான் துக்கத்தில் இருக்கிறேன். எனக்கு மட்டும் ஏன் துக்கம். எனக்கு மட்டும் ஏன் அப்பா இல்லை... என்னைத் தனியே விட்டுவிட்டு அம்மா ஏன் செத்துப் போனாள்... அப்பா ஏன் நான் பிறக்கும் முன்னே ஓடிப் போனார். என் முகத்தில் விழிக்க இஷ்டமில்லையா... என் முகம் பார்த்திருந்தால், ஓடிப் போயிருக்க மாட்டாய் அப்பா... நீ இப்பொழுது எங்கேயிருக்கிறாய் அப்பா... உன் மகள் ஒரு சாண் வயிற்றுக்காய் அரை அங்குல கயிற்றில் உயிரை கையில் பிடித்துக் கொண்டு அந்தரத்தில் நடப்பது உனக்குத் தெரியுமா அப்பா... அண்ணாந்து பார்க்கும் உயரத்தில், நான் அந்தரத்தில் கை வீசி நடப்பதை பரவசமாய்ப் பார்த்து கை தட்டும் ஜனங்கள். தங்கள் குழந்தைகள் நாற்காலியில் ஏறி நின்றாலே பதறிப் போய் விடுவார்கள்... மனம் துடித்து தங்கள் குழந்தையை மடியில் தூக்கி வைத்துக் கொள்கிறார்கள்... எனக்காய்... எனக்காய்; மனம் பதற யார் இருக்கிறார்கள்... எனக்காய் யார் மனம் துடிக்கும். எனக்கு தீயாய் ஜுரம் அடிக்கிறதே. யார் என் அருகே அமர்ந்து நெற்றி தடவுவார்கள்... எனக்காய் கண் விழித்திருக்க இந்த மண்ணில் யார் இருக்கிறார்கள்..." வெளியே கை தட்டும் சத்தம் கேட்டது.

"பார் விளையாட்டு முடிந்து விட்டதோ..."

சோமன்னன் கோமாளி வேஷத்தில் சோகமாய் தளர்வான நடையில் அரங்கத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்தார்.

"போன வருடம் திருவனந்தபுரத்தில் சர்க்கஸ் நடந்தது. பார் விளையாடும் போது தவறி விழுந்து சோமன்னனின் ஒரே மகள் விஜி இறந்து போய் விட்டாள்... அன்றே அவருடைய சிரிப்பு தொலைந்து போய் விட்டது. மனதுக்குள் அழுது கொண்டே வந்திருக்கும் கூட்டத்தை சிரிக்க வைக்கப் போகிறார்.



வேகமாய் நடந்து வந்தார் மேனேஜர். 'கோபம் வந்தால் நடையில் வேகம் வந்துவிடும்' ஷன்மதி முன்னால் வந்து அசையாமல் நின்றார்.

"என்ன... கல்லுப் பிள்ளையார் மாதிரி வந்து நிக்கறேன்னு பாக்கிறியா...? ஆட்டம் தொடங்கி அரை மணி நேரம் ஆச்சு... நீ குஷாலா படுத்துக் கிடக்கிறே. உன்னைத் தவிர வேற ஒரு பொண்ணா இருந்தா நடக்கறதே வேற. சேலையை அவுத்துப் போட்டுட்டு கவுனை மாட்டு."

–குரலில் கடுமை தெரிந்தது.

"சார் எனக்கு ஜுரம்" – என்றாள் மெல்லிய குரலில்.

"ஜுரம் எப்போவாவதுதான் வரும். சமாளிச்சுக்கலாம். பசி அப்படி இல்லை... ஒரு நாளைக்கு மூணு தடவை வரும். ஆடி முடிச்சாத்தான் சோறு... எப்படியாவது கவுனை மாட்டிக்கிட்டு வந்து சேரு" – என்றார் அலட்சியமாய்.

"சார்" – பரிதாபமான குரலில் இழுத்தாள்...

"எனக்கு கெட்ட கோவம் வரும். எந்த சாக்கு போக்கும் சொல்லாதே... நீ செய்யப் போகும் ஐட்டம் இந்த ஊருக்கு புதுசு... உனக்கு ஜோடியா சின்னப் பெண் வேறு கிடைத்திருக்கிறாள். உன் ஆட்டத்துக்கு கிடைக்கும் கைத்தட்டல்தான்... சனி, ஞாயிறு கூட்டத்தை அள்ளிக் கொண்டு வர வேண்டும். பத்து நிமிடத்தில் மேக்கப் போட்டுட்டு வந்து சேர்."

–என்றார் கோபத்தை அடக்கிக் கொண்டு.

"சார் என்னால் நிற்கக் கூட இயலவில்லை" என்றாள் கெஞ்சும் குரலில்.

"எச்சில் இலை பொறுக்கித் திங்கற நாய்களைப் புடிச்சிட்டு வந்து மூணு வேளை சோறு போட்டா கொழுத்துத்தான் போகும்."
– கோபப் பார்வையுடன் முணுமுணுத்தபடி நடந்தார் மேனேஜர்.

அவர் நடந்து செல்வதையே பார்த்துக் கொண்டிருந்தாள். கண்களிலிருந்து வழிந்து தரை தொட்டது கண்ணீர்.

'அம்மா பார்த்தாயா... உன் மகள் எச்சில் இலை பொறுக்கித் திங்கிற நாயாம். கோபம் வந்தால் நாய் கடிக்கத்தானே செய்யும்... வேண்டாம்... யாரையும் கடிக்கவும் வேண்டாம். கடிபடவும் வேண்டாம். போய் விடுவோம். எங்கே... எங்காவது, கண் காணாத தொலை தூரமாய் போய் விடுவோம்!'

கை ஊன்றி எழுந்தாள்... கால்கள் தள்ளாடியது. அப்படியே அமர்ந்தாள். சர்க்கஸ் கூடார விளக்கு சுழன்றது. மீண்டும் எழுந்தாள்... பின் பக்க வாசலை நோக்கி நடந்தாள்.

வழியை அடைத்தது கரம் ஒன்று. நிமிர்ந்து பார்த்தாள். சோனி அக்கா நின்று கொண்டிருந்தாள்.

"எங்கே போறே...?"- பதில் சொல்லாமல் மௌனமாய் நின்றாள்.

"அப்பா அம்மா இல்லாத அனாதையா போயிட்டோமேன்னு நீ பட்ற வேதனை எனக்குத் தெரியும்... ர்க்கஸுக்கு புதுசா வந்திருக்கிற மூன்று வயசு குழந்தையை உன்னோட ஆடப் போற ஆட்டத்துக்காகத்தான் சேர்த்திருக்காரு. நீ ஓடிப் போயிட்டா... அந்தக் குழந்தை அனாதையா மட்டும் இல்லை, ஆதரவு இல்லாமலும் போயிடும்... பிரயோசனமில்லாம யாருக்கும் ஒரு வாய் சோறு கூட போடமாட்டாரு, நம்ம மேனேஜர்னு உனக்குத் தெரியும். யாருமேயில்லாத அந்தச் சின்னக் குழந்தைக்கு நீ ஏன் அக்காவா இருக்கக் கூடாது?"- சோனி அக்காவின் பேச்சுக்கு எந்தவித பதிலும் சொல்லாமல் அமைதியாய் தலைகுனிந்து நின்றாள் ஷன்மதி.

"ஷன்மதி... பல்லைக் கடிச்சிக்கிட்டு? ஆடி முடி... ம்... தாவணியை அவுத்துட்டு கவுனை மாட்டிக்க." - நிதானமாய் தாவணியைக் களைந்து விட்டு, கவுனுக்கு மாறினாள்... 'பளிச்'சென்று வெண்மையாய் தெரிந்தன தொடைகள்... ஷன்மதிக்கு நிரம்ப கூச்சமாயும், அவமானமாயும் இருந்தது.



"ம்... பத்து நிமிஷத்தில் முகத்தைக் கழுவி மேக்கப் போட்டுட்டு வந்து சேரு." என்று சொல்லிவிட்டு, சோனி அக்கா கவுன் பளபளக்க அரங்கத்தை நோக்கி ஓடினாள் அதிராமல்.

ஷன்மதி முகத்தைக் கழுவி, பான் கேக் ஒன்றில், லிப்ஸ்டிக் தடவி, ரோஸ் பவுடர் பூசி, முழு உருவத்தையும் கண்ணாடியில் பார்த்தாள். மொத்த அழகும் அருவருப்பாய் மாறி இருப்பது போலிருந்தது. 'இதென்ன வேஷம்... உதட்டுச் சாயம் பூசி, மார்பை முன்னிலைப்படுத்தி, ஜட்டி மினு மினுங்க... தொடை காட்டி இதென்ன கூத்து. வேண்டாம் சோனி அக்கா. எனக்கு வேண்டாம். நான் என் அம்மாவிடம் போய் விடுகிறேன். யாருக்கும் நான் அக்காவாய் இருக்க விரும்பவில்லை... என் அம்மாவின் மடியில் மகளாய் இருக்கப் போகிறேன்...'

தாவணியை எடுத்துச் சுற்றிக் கொண்டு பின்பக்க வாசலை நோக்கி நடந்தாள். உடம்பு நெருப்பாய் சுட்டது. கால்கள் தள்ளாடியது. சிரமமாய் நடந்தாள்... வலது காலை ஏதோ இழுத்துப் பிடித்து நிறுத்தியது போலிருந்தது. குனிந்து பார்த்தாள்... காலை இறுகப் பிடித்தபடி மூன்று வயது நிம்மி... கன்னத்தில் குழி விழுந்த சிரிப்பு...

அடுத்த ஐந்தாவது நிமிடம்-

ஆரவாரிக்கும் கூட்டத்தை நோக்கி கையசைத்துக் கொண்டிருந்தாள், நிம்மி, ஷன்மதியின் தோளில் நின்றபடி. நிதானமாய் கயிற்றின் மீது நடந்து கொண்டிருந்தாள் ஷன்மதி, அந்தரத்தில்.

*- பாக்யா வார இதழ்*

## 20

# பாருக்குள்ளே நல்ல நாடு

(*ராணி வார இதழ் நடத்திய அமரர் ஆதித்தனார் நினைவு சிறுகதைப் போட்டியில் முதற் பரிசு பெற்ற கதை.)

*என்ன நினைத்து இப்படியொரு தலைப்பு வைத்தாரோ தெரியவில்லை. அதற்கு இன்னொரு அர்த்தம் கொள்ளும் – விதமாகவே கதையைத் தொடங்கி, ஆங்காங்கே கிராமத்து அவலங்களை – ஆதங்கங்களை எதார்த்தமாக – வெளிப்படுத்தியிருக்கிறார் மதுரா.*

*மதுவும், அறியாமையும் எப்படியெல்லாம் பாமரர்களை பந்தாடுகின்றன? அதிகாரமும், அரசியலும் எப்படியெல் லாம் அவர்களை பகடைக்காய் ஆக்குகின்றன? என்பதை – சொல்லாமல் சொல்கிறது கதை.*

*சாதாரண தற்கொலைகள் கூட இன்றும் கிராமத்தில் – பூதாகரத்தை ஏற்படுத்துகின்றன என்ற புதிரை – புதிய கோணத்தில் படம் பிடித்திருப்பது கதையில் கூடுதல் அழுத்தம். நெல் விற்ற பணமும், கடன் வாங்கி வைத் திருக்கும் பணமும், கல்யாணத்துக்கு காத்திருக்கும்*



*பணமும், கைமாறுவது அபலைகளின் அன்றாட துயரம். ஏமாறுகிற ஜனங்கள் எல்லாம் ஏமாற்று மனிதர்களின் மத்தளங்கள் என்பதை உணர்த்துகிற அருமையான முடிவு.*

*ஒரே கதையில் பல பார்வைகள் – பரிமாணங்கள். அதற்கு கிடைத்திருப்பது பரிசு அல்ல.... மகுடம்.*

***– பத்திரிகையாளர் வணங்கா முடி.***

அமாவாசை இருட்டில், அரிக்கேன் விளக்கு வெளிச்சத்தில் உட்கார்ந்திருந்தது, அந்தச் சாராயக் கடை, "குடி குடியைக் கெடுக்கும்" என்ற விளம்பரப் பலகையுடன். மெலிதாக தூறிக் கொண்டிருந்த மேகம், நட்சத்திரங்களை மறைத்து இன்னும் இருட்டடித்தது.

"எனக்கு ஒரு நூறு ஊத்துங்கய்யா. நீ இனிம போடாதே. தாக்குப்புடிக்காது, சொல்லிப்புட்டேன்."

"யாருக்கு? இந்த முத்தையாவுக்கா? ஒரு பாட்டில் போட்டாலும் அசையாம நிப்பான், இந்த முத்தையா. நீங்க ஊத்துங்கய்யா நூறு... தொட்டுக்க ஊறுகாய் குடுங்க."

எழுந்திருக்க முத்தையா சிரமப்படுவது தெரிந்தது. கடைக்காரர் மெல்லச் சிரித்துக் கொண்டார்.

"வெயிலான், முத்தையாவை வீடு கொண்டு சேத்துரு. கந்தனைக் கண்டா நா தேடினதா சொல்லு."

"சரி மொதலாளி."

"போயிட்டு வா... ரோம் மொதல் ஆ...ளி."

அந்த நான்கு கால்களும், சிறுமூளையின் கட்டுப்பாட்டை மீறி, தள்ளாடித் தள்ளாடி தூரத்து வெளிச்சப் புள்ளிகளை நோக்கி நடந்தன.

"முத்தையா மச்சான் உக்காந்துட்டுப் போவுமா?"

"உனக்..கு நதக்க முதியலியா...?"

இருவரும் மெல்ல அமர்ந்தார்கள்.

எதிரே "குதிரை உருட்டி" ஓடையில் தண்ணீர் சலசலத்துக் கொண்டிருந்தது.

உள்ளே போயிருந்த சாராயம், முத்தையாவுக்கு பழசையெல்லாம் வெளியே கொண்டு வந்தது.

"அந்த பய சொள்ளமாடன் குடும்பத்தை நாசமாக்கினா தான் என் மனசு ஆறும். என் தங்கச்சியை பிள்ளை அழிச்சவான்னு சொல்லி கண்ணாலத்தை நிறுத்திட்டான்ல... அன்னிக்கே தலையை எடுத்துறுக்கணும்."

"என்ன மச்சான், போவுமா?"

"உன்னை மாதிரி சொந்தக்காரன் எனக்கு இருக்கிறது னாலதான் அவன் இப்படி நெஞ்சை நிமித்திட்டு அலையுறான்."

"என்ன செய்யணுங்கிற? வெட்டிடுவமா?"

"இந்த ஆவணி மாசக் கொடைக்கு எதாவது மூச்சு விடட்டும். அப்ப சொல்றேன்."

சமீபத்தில் யாரோ ஓடி வரும் காலடிச் சத்தம் கேட்டத.

இருவரும் கண்களைக் கூர்மையாக்க, ஓடி வரும் கருப்பு உருவம் தெரிந்தது.

ஓடை தண்ணீர் துள்ளிச் சிதற, ஓடி வந்த உருவம், நிறையக் காற்றுக்காக வாய் திறந்து சுவாசித்தது. அதன் ஊடே–

"ஐயா உங்களை உடனே கூப்பிட்டுட்டு வரச் சொன்னாரு."



"அப்படி என்னல அவசரம்... காளி மவன்தான் நீ?"

"ஆமா, சின்னய்யா. சொள்ளமாடன் தம்பி தவுடன் மருந்து குடிச்சிட்டு செத்துக் கிடக்கான்."

"எங்கல செத்துக் கிடக்கான்?"

"முருங்கை மரத்து கிணத்தில கிடக்கானாம். அவனை தூக்க சொள்ள மாடனும், சுப்பையாவும் போயிருக்கானுக."

முத்தையா சிறிது நேரம் யோசனையில் இருந்தான்.

"வெயிலான், வீட்ல எவ்வளவு ரூபா இருக்குது?"

"நெல் வித்த பணம் ஐநூறு சொச்சம் இருக்கு."

"சரி, எழும்பு."

மூவரும் அமைதியாய் ஊரை நோக்கி நடந்தார்கள்.

"மண்ணெண்ணெயையும், விறவையும் வண்டியில அனுப்பி வைச்சுட்டன்."

"கோடரி போயிருக்குதா?"

"அதையும் போட்டு விட்டிருக்கேன்."

"சங்கரனும், நீயும்..."

–மூன்றாவது கம்ப வெளிச்சத்தில் சீறிக் கொண்டு வந்து நின்றது ஜீப் ஒன்று.

அதிலிருந்து முதலில் குதித்தான், முத்தையா.

சில காக்கிச் சட்டைகளும் உதிர்ந்தன. ஜீப்பின் வருகை தெருவில் நிசப்தத்தை ஏற்படுத்தியிருந்தது.

பேசிக் கொண்டிருந்த சொள்ளமாடன் தன்னோட நின்றவனை இழுத்துக் கொண்டு சந்துக்குள் மறைந்தான்.

"காரியம் கெட்டுப் போச்சி... கொஞ்சம் நில்லு வாரேன்."

போன வேகத்தில் கையில் ஒரு பொட்டலத்துடன் திரும்பி வந்தான்.

"எலே... நீ உடனே போயி எம்.எல்.ஏ. ஐயாகிட்ட விஷயத்தை சொல்லு. சொள்ளமாடன் சொன்னான். இந்த நேரந்தான் ஐயா உதவி செய்யணுமான்னு சொல்லு. இதில ஆயிரம் ரூபா இருக்கு. அதை அவர் கையில குடுத்து, கையோட கூட்டிட்டு, சுருக்கா வந்து சேரு... என்ன...? புரிஞ்சுதா?"

**அ**ம்மன் கோயில் இருட்டிலிருந்து வெறித்தனமான சிரிப்பு வந்து கொண்டிருந்தது. அந்த இருட்டில் பற்கள் மட்டுமே மின்னலடித்தன.

"இனிம என்னல செய்வான்? போலீஸ் எப்பிடி சல்லுன்னு வந்து நின்னுச்சி பாத்தியா? பொணத்தை எரிச்சிடலாம்னு பாத்தான். விட்டுருவனா...? அவன் தம்பியை நான்குனேரியில் கொண்டு வவுத்தை கிழிச்சி..."

"சின்னய்யா..."

"என்னல இருட்டில நின்னுகிட்டு? பக்கத்துல வா."

"போலீஸ் வந்தது தெரிஞ்சதும் சொள்ளமாடன் எம்.எல்.ஏ.யை கூப்பிட்ட வர சுப்பையாவை அனுப்பி இருக்கான்."

சிரிப்பு இருந்த இடம் தெரியாமல் மறைந்தது. சிறிது நேர அமைதிக்குப் பின் முத்தையா பேசினான்.



"எம்.எல்.ஏ. வந்தா கதையை கெடுத்துடுவானே... அதுக்கு நம்மளும் ஆள் பிடிச்சாதான் லாயக்கு படும். பேரின்பம், இன்னிக்கு ஒரு ஐநூறு சவரிமுத்துகிட்ட வாங்கிட்டு வந்திருந்தேயில்ல?"

"காயில் தீஞ்சி போச்சுதண்ணே... அந்தப் பணத்தை வைச்சுதான் காயில் போட்டு மோட்டரை ஓட விடணும்."

"அதை நாளைக்குப் பாத்துக்கலாம். ரூபாயை எடுத்துட்டு வா."

"மச்சான், என்ன செய்யப் போறே?"

"நம்ம எம்.எல்.ஏ.க்கு சரியான எதிர்ப்பு எதிர்க் கட்சிக் காரங்கதான். அவுங்களை அள்ளிப் போட்டுக்கிட்டு அஞ்சு நிமிஷத்தில வாரேன்."

**க**ரிய இருட்டை "பெட்ரோமாக்ஸ்" விளக்கு விரட்டியது. வானம் மெலிதாகத் தூறத் தொடங்கியது. ஊர் மொத்தமும் வீதியை நிரப்பியிருந்தது. இடுப்புகளில் கைக்குழந்தைகள் விழித்திருந்தன. நாற்காலிகளில் எம்.எல்.ஏ.யும் எதிர்க் கட்சிப் பிரமுகரும் அமர்ந்திருக்க, சப்-இன்ஸ்பெக்டரின் கோபமான பேச்சு காற்றைக் கிழித்தது.

"இன்னா பாருங்கா... நான் ஒண்ணும் இதுக்கு முன்னால இருந்த சட்டிவாயன் இல்ல, அஞ்சு பத்துக்கோ, மிரட்டலுக்கோ பணியிறதுக்கு. பிணத்தைப் பரிசோதிப்பதை யார் தடுத்தாலும் நான் பொல்லாதவனாயிடுவேன். கடைசியா ஒண்ணு சொல்லிடுறேன். சடலத்தை எடுத்துட்டுப் போகத்தான் போறேன். அதை யாராவது தடுக்கணும்னு நினைச்சிங்கன்னா..."

"நாங்கள் இருக்கோம், எசமான்."

சப்-இன்ஸ்பெக்டரின் முறைப்பில் முத்தையா தலை குனிந்தான்.

"யாராவது தடுக்கணும்னு நினைச்சிங்கன்னா, அதிகமா அஞ்சாறு சடலத்தை எடுத்துட்டுப் போக வேண்டியிருக்கும். அவ்வளவுதான்."

"வாங்க, அமைச்சருக்குப் போன் பண்ணலாம்!"

எம்.எல்.ஏ. ஆத்திரத்துடன் எழுந்து கொள்ள, சொள்ள மாடன் பின் சென்றான்.

"என் தம்பி உடம்பில சின்னக் கீறல் கூட விழாமப் பாத்துக்கங்கய்யா."

"இதை இப்பவே சமாளிக்கணும்னா இரண்டாயிரம் ரூபா யாவது வேணும். இல்லன்னா போலீசையும் எதிர்க்கட்சிக்கார னையும் திருப்பி அனுப்புறது ரொம்ப கஷ்டம்."

"........"

"என்ன பேச்சையே காணோம்."

"அக்கா மவ கல்யாணத்துக்கு வச்சிருக்கிற பணம்தான் ஆயிரத்தி ஐநூறு இருக்கு."

"எந்த நேரத்தில, என்ன பேசிக்கிட்டிருக்கே... முதல்ல பணத்தை எடுத்துட்டு வா."

"ஏய் முத்தையா, இங்கே வா."

"என்னங்க எசமான்?"

"இன்னா பாரு, வேற யாராவது இதில ஈடிபட்டிருந்தா தூக்கி உள்ள போட்டிருப்பேன். நீனா இருக்கிறதினால தான்..."



"என்ன சொல்றீங்க?"

"நீ, உன் அண்ணன் தம்பி எல்லாம் தவுடனைப் பிடிச்சி, அடிச்சி வாயில விஷத்தை ஊத்தி கொன்னுட்டதா சொள்ள மாடன் சொல்றான். கொலைக் குற்றம். முன்னமே உங்களுக் குள்ள சண்டை இருக்குது. உன்னைத் தூக்குல போட்டிரு வாங்க."

"அங்..."

"நான்தான், விஷயத்தை இத்தோட விடுங்க. பெரிசுபடுத்த வேண்டாம். சடலத்தை எரிச்சிடுங்கன்னு சொல்லிட்டேன்."

சப்-இன்ஸ்பெக்டர் சொல்லிவிட்டு ஜீப்பில் ஏறி விட்டார். முத்தையாவுக்கு ஒன்றுமே புரியவில்லை. வேகமாய் எதிர்க்கட்சிப் பிரமுகரிடம் சென்றான்.

"என்னப்பா முத்தையா, தற்கொலைன்னு சொல்லி கூப்பிட்டுட்டு வந்தே... இங்க வந்தா நீதான் கொலை செய்த மாதிரி பேசிக்கிறாங்க."

"எனக்கு ஒண்ணுமே புரியலங்க."

"பிணத்தை எரிச்சிட்டா உன் தலை தப்பும். அதனால எரிக்கச் சொல்லிட்டோம். நாங்க வரட்டுமா...?"

முத்தையா பேசத் தோன்றாது நின்றான்.

வீதியில் நின்றவர்களுக்கும் ஒன்றுமே புரியவில்லை.

இரண்டு கார்களும், போலீஸ் ஜீப்பும் ஒன்றன்பின் ஒன்றாக உற்சாகமாச் சென்றன.

*- ராணி, பிப்ரவரி 1987*

# 21

# இந்நாட்டு மன்னர்கள்

(*குமுதம் வார இதழ் நடத்திய நெல்லை மாவட்ட சிறுகதைப் போட்டியில் முதற் பரிசு பெற்ற கதை.)

*ஒரு சில பக்கங்களுக்குள் அடங்கும் ஒரு சிறுகதையில், பெரிதாக என்ன சொல்லிவிட முடியும்...? ஒரு சிறு நிகழ்வின் நேர்த்தியான விவரிப்பாக, ஒரு சிறு மனப்பாதிப்பின் வெளிப்பாடாக... இப்படி ஒரு சிறுகதையின் எல்லை மிகச் சுருக்கமாகவே அமையும். ஆனால், 'அன்று நிலவுக்கு விடுமுறை..' என்ற அசத்தலான வரியுடன் தொடங்கும் ஒரு சிறுகதைக்குள், மூன்று தலைமுறை வாழ்க்கை, நவீனம் எட்டிப் பார்க்காத ஒரு சின்னஞ் சிறு கிராமத்தின் அடிப்படை வசதியில்லாத அவலம், இல்லாமையிலும் வெண்ணையாய் உருகி வழியும் மனித சிநேகிதம், அசைக்கவே முடியாத கடவுள் நம்பிக்கை, அரசியல் வாதியின் மாய வாக்குறுதிகள், சொலவடைகள், பள்ளிக்கூட வாத்தியாருக்கு பள்ளியை விட சொந்த ஊரை நோக்கி ஓடும் பாசம், குடியால் வந்த சோகம், ஒற்றைப் புடவைக்கு மாற்றுப் புடவை இல்லாத நிலையிலும் வாழ்க்கை மீது கொண்ட நம்பிக்கை... என்று*



*ஒரு கிராமத்தின் ஒட்டு மொத்த வாழ்க்கையை, இயக்கத்தை ஒரு வார்த்தை கூட பிசிறு தட்டாமல் தேர்ந்தெடுத்த வார்த்தைகளால் அழகான சித்திரமாய் தீட்டிக் காட்ட முடியும் என்பதை மெய்ப்பித்துக் காட்டியிருக்கிறார் மதுரா.*

*- எழுத்தாளர் உத்தம சோழன்.*

**அ**ன்று நிலவுக்கு விடுமுறை.

வானம் மழையை நிறுத்த மறந்தது போல் கொட்டிக் கொண்டிருந்தது.

நுங்கும் நுரையுமாய் துள்ளல் நடையுடன் ஓடிக் கொண்டிருந்தது தாமிரபரணி ஆறு. குளிருக்குப் பயந்தது போல் கண்மூடிக் கிடந்தன அந்தக் கிராமத்துத் தெரு விளக்குகள்.

அந்தத் தெருவில் 'சுடுகுஞ்சி' இல்லை.

ஒரே ஒரு 'ஜக்கடா' வண்டி மட்டும் ஒற்றைக் கால் ஊன்றித் தவம் செய்து கொண்டிருந்தது.

தெருவின் கோடியிலிருந்த பனை ஓலை தலையில் சுமந்த குடிசையில் இருந்து மழைநீர் சொட்டு சொட்டாகத் தரை தொடுவது போல, குடிசைக்குள் படுத்திருந்து முத்துமாரியின் கண்களில் இருந்தும் கண்ணீர் வழிந்து மண் தரையை நனைத்துக் கொண்டிருந்தது. அவளை ஒட்டியபடி நார்க் கட்டிலில் விரித்திருந்த கிழிந்த துணியில் கிடத்தப்பட்டிருந்த ஆண் குழந்தையிடமிருந்து 'அக்... அக்' என்று சத்தம் வந்து கொண்டிருந்தது.

குழந்தையின் உடல் நெருப்பாய்ச் சுட்டது. வெக்கை தாங்க முடியவில்லை. குழந்தைக்கு இரண்டு நாளாய் ஜுரம். விட்ட பாடில்லை. 'கரையடி ஆத்தா, நீதான் இந்தக் குழந்தையைக்

காப்பாத்தனும். என் வீட்ல வெள்ளித் தொட்டில் கட்றேம்மா' கரையடி இசக்கி அம்மனுக்கும் வேண்டுதல் செய்துவிட்டாள். ஒத்தப்பனை சாமிக்கும் நேர்ந்து கொண்டாள். இன்னும் காய்ச்சல் விட்டபாடில்லை.

முத்துமாரிக்குச் செத்துப் போன புருஷன் மீது கோபம் வந்தது. போன வருஷம் பொரட்டாசி மாசம் குளிக்கப் போறேன்னு கரிசக்காட்டுப் பத்துக் காட்டுக்கு போன மனுஷனை ஜக்கடா வண்டியில போட்டுத்தான் தூக்கிட்டு வந்தாங்க. பிட்டி நவுண்டு போச்சி... கழுவூர் வைத்தியரு பார்த்துட்டுக் கையை விரிச்சிட்டாரு. பாளையங்கோட்டைக்கு எடுத்துட்டுப் போனா பிழைச்சுக்குவான்னு பரப்பாடி பருத்தியாவாரி தங்கப்பெருமா நாடாரு சொன்னாரு. துட்டுக்கு எங்க போறது? உங்கம்மா பாம்படத்தைக் குடு. எம்புட்டு துட்டும் தாரேன்னு சாத்தான்குளம் ஆசாரி சொன்னாரு. பாம்படமும் போச்சி. அந்தப் பாவி மனுஷன் உயிரும் போச்சி. ஒதவிக்கு நாதியில்லாமப் போனேன்.

"அக்... அக்..." என்றது முனகல் ஒலி வந்தது குழந்தையிட மிருந்து.

ஒரு கண்ணைத் திறந்து மூடியது.

"அட பாவி மனுஷா, செவுரு நாடாரு தோப்புக் கள்ளைக் குடிச்சிட்டுக் கிணத்தில வுழுந்து என் வாழ்க்கையைத் தொலைச்சுட்டியே! பாவி மட்டை. நான் என்ன செய்வேன்? என் புள்ளைக்கு என்ன செய்தோ தெரியலியே."

முணுமுணுவென்று பேசி, தலையில் அடித்துக் கொண்டாள்.

குழந்தையைத் தூக்கிக் கொண்டு ஆஸ்பத்திரிக்குப் போக வேண்டுமென்றால் சங்கரன் கோயில்தான் போக வேண்டும்.



அந்தக் கிராமத்துக்குப் பஸ் போக்குவரத்து கிடையாது. டவுன் பஸ் பக்கத்திலிருக்கிற பாரபட்டிக்கு வந்து போகும். மழை இல்லாத கோடைக் காலத்தில் காய்ந்து கிடக்கிற அய்யனார் குளம்தான் டவுன் பஸ்ஸுக்கு ரோடு. ஐப்பசி மாச மழையில் அய்யனார் குளம் நிரம்பிப் போக பஸ் சந்தோஷமாய் நின்று போனது.

வேறு வழியில் சங்கரன் கோயில் ஆஸ்பத்திரிக்குப் போகவேண்டுமென்றால், ஐந்து கிலோமீட்டர் நடந்து முள்ளி குளத்துக்கோ, ஆறு கிலோமீட்டர் நடந்து வீரறுப்புக்கோத்தான் போய் பஸ் ஏற வேண்டும். அதற்கு வழியில்லாமல் கொல்லி ஆறும், தலைவன் கோட்டை குதிரை உருட்டி ஓடையும் கரை புரண்டு ஓடிக் கொண்டிருந்தன. இனி என்ன செய்ய?

"அக்... அக்..." மீண்டும் குழந்தையிடமிருந்து முனகல் வந்தது.

"ஏம்ல, எதுக்குல பயப்படுத. அம்ம நான் பக்கத்தில இருக்கும் போது உனக்கு என்னல பயம்? ஒத்தபனை சாமி காப்பாத்துவாருல."

குழந்தைக்குச் சொல்வது போல தனக்கே சொல்லிக் கொண்டாள். குளிர், பனங்கதவுக்கு இடையில் செருகியிருந்த சாக்கையும் மீறி உள்ளே வந்து தொந்தரவு செய்தது. சேலையை இழுத்து மூடினாள்.

"பர்..." சேலை கிழிந்திருந்தது.

'ம்... ஒத்தச் சேலை எத்னை நாளைக்குத்தான் தாங்கும்? கல்யாணம் ஆன புதுசு. முனைஞ்சிபட்டி சந்தைக்கு வெங்காயம் கொண்டு போனவரு. அவுக ஐயாவுக்குத் தெரியாம சேலை வாங்கிட்டு வந்தாரு. பச்சையில கட்டம் போட்ட சேலை. கிழிஞ்ச

துண்டை இன்னும் பெரம்புப் பெட்டிக்குள் பூதம் காக்கிற பொதையல் மாதிரி வைச்சிருக்கேன். ம்... அப்ப நாங்குநேரிக்கு நடந்தே போயி படம் பார்த்துட்டு வருவோம். எம்சாரு படம்னா ஒத்தக் கால்ல நிப்பேன். அட பாவி மனுஷா, என்னை ஒத்தைப் பனை மரமா வுட்டுட்டுப் போயிட்டியே... கரையடி மாரியாத்தா, என் புள்ளையைக் காப்பாத்து தாயே... புருஷனைச் சாவக் குடுத்துட்டு இந்தப் புள்ளையை நம்பித்தான் இந்த உயிரை முடிஞ்சி போட்டிருக்கேன். எல்லாரையும் காப்பாத்துற மாரியாத்தா எனக்கு மடிப்பிசிச்சை தா.'

கண்களிலிருந்து கண்ணீர் வழிந்து காய்ந்து போயிருந்தது.

"மாரி... மாரி..."

வெளியே யாரோ அழைத்தார்கள். விளக்காய் - உரு மாறியிருந்த மருந்து பாட்டிலைக் கையில் எடுத்துக் கொண்டு வாசலுக்கு வந்தாள்.

தலையில் 'சொளவு'டன் பார்வதிப் பாட்டி நின்று கொண்டிருந்தாள்.

மழை விடாமல் தூறிக் கொண்டிருந்தது.

"பாட்டி, பிச்சை முத்து டாக்டரை எங்க பாட்டி?"

பதற்றமாய்க் கேட்டாள் முத்துமாரி.

"'அஞ்சி பொண்டாட்டி இருந்தாலும் அறுக்கப் பொண்டாட்டி இல்லை. பத்து பொண்டாட்டி இருந்தாலும் படுக்கப் பொண்டாட்டி இல்லை'ன்னு எங்க ஆத்தா சொலவடை சொல்லுவா. அந்தக் கணக்கில் ஒன்னுக்கு நாலு வைத்தியன் இருந்தும் இன்னிக்குப் பார்த்து ஒருத்தனும் இல்லை ஊர்ல. தீபாவளிக்கு மகளையும் மருமகனையும் கூப்பிட்டு வர



திசையன்விளை போயிட்டாராம். கொல்லி ஆறும், குதுரை உருட்டி ஓடையும் வெடைக் கோழி கணக்காக ஓடுது. நம்மூரு குளமும் மருகால் விழுந்து ஊரைச் சுத்தி ஓடுது, மாலை போட்ட மாதிரி. ம்... ஒருத்தரும் ஊரை விட்ட வெளியேயும் போக முடியாது. உள்ளேயும் வரமுடியாது. ஆடு மாடு வயித்துக் கில்லாம அசை போடாம கிடக்குது. திடீர்னு கிழடு கட்டை மண்டையைப் போட்டா சுடுகாட்டுக்குக் கூடக் கொண்டுட்டுப் போக முடியாது இந்தச் சனியன் புடிச்ச ஊர்ல...

'காவோலையில் நாய் மோண்ட மாதிரி' வாய் மூடாமல் பேசிக் கொண்டிருந்தார் பார்வதி பாட்டி. முத்துமாரிக்கோ உடம்பு 'வெடவெட'ன்னு நடுங்க ஆரம்பித்தது.

"பாட்டி... எனக்குப் பயமாயிருக்கு பாட்டி."

பருவப் பனையின் பாளை பதநீர் சொட்டுவது போல, அவள் கண்களிலிருந்து கண்ணீர் மளமளவென்று வழிந்தது.

"ஏம்புள்ள, இப்படிப் பயந்து சாவுத. உன் மொவனுக்கு ஒண்ணும் ஆவாது. கரையடி ஆத்தா நல்லாக்கி வைப்பா. நீ உன் மொவனைத் தூக்கிட்டுத் திண்ணையில வந்து ஒக்காரு."

தலையிலிருந்த சொளவைச் சுவரில் சரித்து வைத்து விட்டு ஒட்டுத் திண்ணையில் அமர்ந்தாள் பார்வதி பாட்டி.

கையிலிருந்த பாட்டில் விளக்கைக் கதவருகில் வைத்து விட்டு-

நார்க்கட்டிலில் கிடத்தியிருந்த குழந்தையைத் தூக்கிக் கொண்டு பாட்டியின் அருகில் வந்து அமர்ந்தாள்.

"ஏம் புள்ள... இந்த பாழாப்போன ஊர்ல கெடந்து சாவுற? உந்தாய்ப்புள்ள இருக்க இடமா போவ வேண்டியது தானே?

இந்தக் கடையநல்லூரு வாத்தியாருக்குக் கெடகெடப்பு கெடயாது. இரண்டு நாளு பள்ளிக்கூடம் மூடுனாலும் ஊரைப் பார்த்து ஓடிருவாரு. மழை பார்த்த பார்வை பள்ளிக் கூடத்தில் துண்டை விரிச்சிட்டாரு. நா பாவாடை சட்டை போட்டிருக்கும் போது மழை பெஞ்சா, 'ஐசக்கை ஐ அரைப்படி நெய், வெள்ளைக்காரன் தொப்பியில விளக்கு பொருத்தி வை'ன்னு பாட்டு படிச்சிக்கிட்டே தெரு வழியா ஓடுவோம். இப்பவும் 'திரைச்சி' கட்டிக்கிட்டு ஓட ஆசையாத்தான் இருக்கு. சிரிப்பாணியாப் போயிடும் சிரிப்பாணியா..."

வாய் மூடாமல் பேசிக் கொண்டிருந்தாள் பார்வதி பாட்டி... முத்துமாரி பனை ஓலையிலிருந்து சொட்டு சொட்டாய் விழுந்து கொண்டிருந்த மழை நீரையே கண் இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தாள். மனது திரும்பத் திரும்ப 'மாரியாத்தா, என் குழந்தையைக் காப்பாற்று, மாரியாத்தா, என் குழந்தையைக் காப்பாற்று' என்று ஓலமிட்டுக் கொண்டிருந்தது.

சற்று தூரத்தில்-

இரண்டு பேர் கையில் அரிக்கேன் விளக்குடன் வந்து கொண்டிருப்பது தெரிந்தது. ஒருவர் கையில் டார்ச் லைட்டும் மினுக்கியது. தலையில் பிளாஸ்டிக் சாக்குகள்.

திடீரென்று-

டார்ச் லைட் ஒளி வட்டம் பார்வதி பாட்டி முகத்தைத் தாக்கி, கண்களைக் கூச வைத்தது.

"லே... அதாருலே, லைட்டை மூஞ்சிக்கு நேரா அடிக்கிறது? லைட்டை அமத்துல, கசவாளிப் பயலே."

லைட் அவசரமாய் அணைய, இருவரும் தெரிந்தார்கள்.



"எலே, நீ மாங்குளத்தா பேரன்தான? இந்த நேரத்தில எங்கல கிளம்பிட்டிய? வெள்ளெலி பிடிக்கிறதுக்கா?"

"கிழவிக்கு வெள்ளெலி மேல ஆசை வந்திடிச்சோ? நாலாம் வருஷம் மாதிரி குளம் உடைச்சிடக் கூடாதுன்னு காவலுக்குப் போறோம். சங்கரன்கோயில், கருப்பட்டி மிட்டாயும், வாசுதேவநல்லூர் நெய் முறுக்கும் தர்றாங்க. குளத்துக் காவலுக்கு வர்றியா கிழவி..." என்று அழைத்தான் ஒருவன்.

"ஏங்கிழவி, வெரயல்ல சாவாம உயிரோட அலைறான்னு பாக்கிறியா?"

சிரித்துவிட்டுச் சென்றார்கள்.

பார்வதி பாட்டி குழந்தையைத் தொட்டுப் பார்த்தாள்.

நெருப்பாய்ச் சுட்டது.

"ம்... நெருப்பாய் வெக்கை அடிக்குது. அந்தக் கரையடி ஆத்தாதான் நல்லாக்கி வைக்கணும். ராத்திரி மழை வெறிச்சிடும். குதுரை உருட்டி ஓடையில மொழங்காலுக்குத்தான் தண்ணி ஓடும். தாண்டி முள்ளிக்குளம் போயி பஸ் புடிச்சி சங்கரன் கோயில் ஆஸ்பத்திரிக்குப் போயிட்டு வந்திரு. உன் மொவன் ராசா மாதிரி துள்ளி வெளையாடுவான். தாத்தா தேடுவாரு. ஆளைக் காணலன்னா சட்டி பெட்டிய ஒடைச்சிப் புடுவாரு."

சொளவைத் தூக்கித் தலையில் வைத்தபடி நடந்தாள் பார்வதி பாட்டி. அவள் செல்வதையே சற்று நேரம் பார்த்துக் கொண்டிருந்தாள். 'வயித்தில ஊத்திட்டு படுக்கிறதுக்கு அன்னப்பால் தண்ணி கூட இல்லை.' பெருமூச்சுடன் எழுந்து பனங்கம்பால் ஆன கதவை இழுத்துச் சாத்தினாள்.

குழந்தையைக் கட்டிலில் கிடத்திவிட்டு அருகில் படுத்தாள்.

வாடிய தாமரையாய்க் குழந்தை கண் மூடிக் கிடந்தது.

தன்னோடு இழுத்து அணைத்துக் கொண்டாள்.

'என் மகனைப் போகவிட மாட்டேன்.'

கண்களில் உறக்கம் எட்டிப் பார்க்க மறுத்தது.

உதடுகள் 'மாரியாத்தா, மாரியாத்தா என்று முணுமுணுத்தது.

கொஞ்சம் கொஞ்சமாய் உறக்கம் நெருங்கியது.

முத்துக்கோட்டி 'தை தக்கா தை' என்று ஓடி வந்தான்.

நாச்சியார் பாட்டி வந்து குழந்தையைக் கேட்டாள். சாக்குருவி வந்து கூரையில் இருந்தது. ஓடி ஓடி விரட்டினாள். 'நாவல் பழமே அடி குட்டி நான் பூசும் சந்தனமே, ஏலக் கிராம்பே குட்டி உன்னை என்ன சொல்லிக் கூப்பிடட்டும்.' தலைப்பா கட்டிய வடிவேலு பாட்டு படித்தான்... உறக்கமும் விழிப்புமாய்.

**வி**டிந்து விட்டது.

பனங்கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்தாள்.

மழை வெறித்திருந்தது.

வானத்தில் மழை மேகங்கள் இன்னும் கூட்டமாய்...

பிள்ளையார் கோயில் சுவரில், 'ரோடு போடுகிறேன்' என்று சொல்லி ஓட்டு வாங்கிச் சென்ற எம்.எல்.ஏ.வின் பெயர் மழையில் பாதி அழிந்தும் மீதி அழியாமலும் இருந்தது.

கட்சிக் கொடிகள் மழையில் நனைந்து சாயம் இழந்து - அரசியல்வாதியின் வாக்குறுதியை நம்பி ஓட்டு சேகரித்த தொண்டனின் தலைபோல தரை நோக்கிக் குனிந்திருந்தன.



'ஆஸ்பத்திரிக்குப் போயிடலாம்.'

வேகமாய்க் குடிசைக்குள் நுழைந்தாள்.

நெல் கட்டும் செவல் ராமர்பாண்டியன் கோயிலுக்கு வைத்திருந்த மண் உண்டியலை வாசநடையில மோதி உடைத்தாள். சிதறிய காசுகளை அள்ளி சுருக்குப் பையில் நிரப்பி இடுப்பில் செருகினாள்.

"அக்... அக்" என்று வினோதமாய் முனகியது குழந்தை.

இடதுகால் அசைந்தது.

ஒரு கண்ணைத் திறந்து மூடிக் கொண்டது.

"மாரியாத்தா... என் புள்ளையை காப்பாத்து."

குழந்தையை வாரிச் சுருட்டிக் கொண்டு நடக்க ஆரம்பித்தாள்.

'வெரசலாப் போவணும். மழை வர்ற மாதிரி இருக்குது."

**ஊ**ருக்கு மேற்கே-

அரியூர் பெரிய குளத்தின் மூன்று மதகுகளையும் திறந்து விட்டிருந்தார்கள்.

நீர், காட்டாற்று வெள்ளமாய்ச் சென்றது.

"மாரியாத்தா."

தைரியமாய்க் குழந்தையுடன் இறங்கினாள்.

முழங்காலைத் தாண்டித் தண்ணீர் ஓடியது. அவளை இழுத்தது. மெல்ல மெல்ல நடந்து கரையேறினாள். நனைந்த சேலை முழங்காலோடு ஒட்டிக் கொண்டது.

முள்ளிக்குளம் நோக்கி வேகமாய் நடந்தாள்.

மழைத் தூறல் விழத் தொடங்கியது.

இன்னும் வேகமாய் நடந்தாள்.

குறுக்கே வந்தது குதிரை உருட்டி ஓடை.

நீரின் வேகம் ஒரு முரட்டுக் குதிரைக்குச் சமமாயிருந்தது.

ஆழம் இடுப்பு அளவு இருக்கும்.

'மாரியாத்தா, என் குழந்தையைக் காப்பாத்து.'

தைரியத்தை வரவழைத்துக் கொண்டு உள்ளே இறங்கினாள்.

"ஏய் நில்லு!"

அதட்டியது ஒரு குரல்.

திரும்பினாள். நனைந்த பனை நிறத்தில் ஒருவர் நின்று கொண்டிருந்தார். கிரீடமாய் நரை.

"தாயும் புள்ளையும் சாவுறதுன்னு நெனைச்சிட்டிங்களா?"

"ஐயா... எனக்கு அரியூரு. புள்ளைக்குச் சொவமில்ல. சங்கரன் கோயில் ஆஸ்பத்திரி போவணும்."

"நம்ம தாயம்மா புள்ளைதானா நீ. குழந்தையை என் கையில் குடு."

கறுப்பு மனிதர் குழந்தையை வாங்கிக் கொண்டார்.

"என் இடுப்புத் துண்டைப் பிடிச்சிக்கிட்டு பின்னால வா."

மெல்ல மெல்ல நகர்ந்து கரையேறினார்கள்.



"இந்தா, குழந்தையைப் புடி."

கண்களால் நன்றி சொல்லிவிட்டு மீண்டும் வேகமாய் நடக்கத் தொடங்கினாள்.

வேகம்... வேகம்... வேகம்.

மழை தூறத் தொடங்கியது. இடுப்பு வரை நனைந்திருந்த ஆடை வேகத்துக்குத் தடையாய் நின்றது.

வேகத்தை அதிகப்படுத்தினாள்.

தூரத்தில்–

ரோட்டில் செல்லும் லாரிகளும், கார்களும், 'ஜக்கடா' வண்டிகளும் தெரிந்தன.

இன்னும் வேகமானாள்.

சங்கரன் கோயில் பஸ் தெரிய – கிட்டதட்ட ஓடத் தொடங்கினாள்.

நின்று புறப்பட்ட பஸ்ஸில் ஓடிப் போய் ஏற–

"ஏம்மா... சாவுறதுக்கு எங்க வண்டிதான் கிடைச்சுதா? எங்கம்மா போவணும்... எடு காசை."

எரிச்சலில் கத்தினார் கண்டக்டர். சுருக்குப் பையில் காசு எடுக்கக் குனிந்தவள், அதிர்ந்தாள் – குழந்தை இறந்து போயிருந்தது.

***– குமுதம் 20.8.1992***

**22**

# பொன்வேலி

(*இலக்கியச் சிந்தனை பரிசு பெற்ற கதை.)

*சுகன்யா – பிரசவங்கள் பார்த்துக் குழந்தைகள் பலவற்றை இந்த பூமிக்கு அழைத்து வருகிற பவித்திரமான பணியைச் செய்கிறவள். அவளுக்கும் கரு உண்டாகிறது. வளர்கிறது. அதைக் கலைத்து விடச் சொல்கிறான் அவளுடைய கணவன் பாஸ்கர். சுகன்யாவுக்கு அதில் சம்மதமில்லை. கருவை கலைத்து விடச் சொல்வது, குழந்தை வேண்டாம் என்பதற்கு மறுப்பாய் சுகன்யாய் வேண்டும் எனும்போது அவன் மீது அமிலத்தைக் கொட்டியது போல அவளைச் சந்தேகிப்பது அவளுக்குள் இன்னும் அதிகமான எரிச்சலை அவன் மீது ஏற்படுத்து கிறது. கணவன் மனைவிக்குள் நடக்கும் போராட்டமே இச் சிறுகதை. சுகன்யாவின் மீது கனிவும், பாஸ்கர் மீது கோபமும் ஏற்படுத்துகிறது கதையின் போக்கு. பாத்திர படைப்பில் வெற்றி பெறும் போதுதான் கதை சொல்கிற வர்கள் வெற்றி பெறுகிறார்கள்.*

*மதுரா இதில் வெற்றி பெற்றுள்ளார்.*

*தமிழுக்கு ஒரு நல்ல சிறுகதை கிடைத்துள்ளது.*

***– கவிஞர் ஏர்வாடி எஸ். இராதா கிருஷ்ணன்.***



அந்தச் சின்னப் பெண்ணை ஆபரேஷன் தியேட்டரை விட்டு அனுப்பிய பிறகுதான் சுகன்யாவுக்கு நிம்மதிப் பெருமூச்சு வந்தது. கழுத்தில் வழிந்த வியர்வையைத் துடைத்துக் கொண்டாள்.

கைக் கடிகாரத்தைப் பார்த்தாள். 5:12 என்றது.

'ஐயோ... அவர் வந்து காத்திருப்பாரே... ம்... இது நான்காவது பிரசவக் கேஸ்...'

ஆபரேஷன் தியேட்டர் மூலையிலேயே சுருண்டு படுத்து விடலாம் போலிருந்தது சுகன்யாவுக்கு. மயக்கம் வரும் போலிருந்தது. ஒரு நாற்காலியை இழுத்துப் போட்டு அமர்ந்தாள். வயிறு மெலிதாக மேடிட்டு இருப்பதுபோல் உணர்ந்தாள்.

விரல்கள் வயிற்றில் கோலமிட்டன தடவிக் கொடுப்பது போல.

'எப்படி... எப்படி உங்களுக்கு மனம் வந்தது? அப்படி ஒரு வார்த்தையை உங்களால் எப்படி என்னிடம் பேச முடிந்தது? என் மனசு என்ன பாடுபட்டிருக்கும்?'

– வெற்றிலை குதப்பியபடி ஆயா உள்ளே வந்தாள். முகம் திருப்பி சுகன்யாவைப் பார்த்தவள் எதுவும் பேசாமல் மௌனமாய் மார்பிள் தரையைத் துடைக்க முற்பட்டாள்.

''ம்... நேரமாகி விட்டது... வந்ததும் அவருக்குக் காப்பி வேண்டும்.'

எழுந்து ஆபரேஷன் கத்தி, கத்தரி எல்லாவற்றையும் வெந்நீரில் போட்டுக் கொதிக்க வைத்து பஞ்சால் துடைத்து வைத்துவிட்டு, தியேட்டரை விட்டு வெளியே வரும்போது மணி ஐந்தரை. டவுன் பஸ் பிடித்து நசுங்கி, குலுங்கி வீட்டுக்குப் போய்ச்

சேரும்போது ஆறே கால் ஆகிவிடும். எட்டு நிமிடக் காத்திருப்புக்குப் பின் அவளுக்குரிய பஸ் வந்தது.

பஸ்ஸில் நின்று கொண்டுதான் பயணம் செய்ய வேண்டியதிருந்தது.

பஸ்ஸின் குலுக்கலில் அந்தப் பதினான்கு வயதுச் சிறுமியின் நினைவு நெஞ்சில் மோதியது. 'அவள் பெயர் என்ன... வசந்தாவா... எத்தனை கொடுமை! நான்கு பேர் சேர்ந்து அந்தச் சின்னப் பூவைக் கசக்கி எறிந்திருக்கிறார்கள்... துரத்தித் துரத்தி, கெடுத்திருக்கிறார்கள்... கொடுமையாக வன்முறை காட்டியிருக் கிறார்கள். நனைந்த துணியாய் இன்று ஆஸ்பத்திரி படுக்கையில் கிடக்கிறாள். ஒரு சின்னப் பெண்ணுக்கு நான்கு ஆண்கள் துணிகரமாய்ச் செய்துவிட்ட அவமானம். இந்த அவமானத்தை அந்தச் சின்னப் பெண் வாழ்நாள் முழுவதும் மறக்க முடியாது. இந்த பூமி அவளுக்கு நேர்ந்த அவமானத்தை மறக்க விடாது. அவமானம் தந்தவர்களைத் தண்டிக்க வேண்டாமா? அவர்களை விரட்டிப் பிடித்து உதைத்து, ஜெயிலில் அடைக்க வேண்டாமா? வேண்டாம் என்கிறார்கள். அந்தப் பெண்ணைப் பெற்றவர்கள் வேண்டவே வேண்டாம் என்கிறார்கள். படத்தோடு நியூஸ் பேப்பரில் பெயர் வருமாம். கதறக் கதறக் கற்பழிப்பு என்று செய்தி வருமாம். சாதி சனம் சிரிக்குமாம். இத்தனைச் சிரிப்புக்குக் காரணமானவர்களை நாலு பேர் பார்த்துச் சிரிக்க வைக்க வேண்டாமா? ஆண் என்னும் ஆணவத்தை, காலில் போட்டு மிதிக்க வேண்டாமா? எந்தப் பெண்ணும் கைநீட்டி அடையாளம் காட்டாததால்தான் திமிர் இன்னும் இருந்து கொண்டே இருக்கிறது. ஆண்களால் கற்பிழக்கும் பெண்ணுக்கு இரண்டு தண்டனை. தவறு செய்த ஆணுக்கு? அவன் குற்றவாளி என்று முன் வந்து சுட்டிக் காட்டவே பாதிக்கப்பட்ட எந்தப் பெண்ணும் தயார் இல்லையே!



அதனால்தான் இந்த மண்ணில் ஆணின் ஆணவக் கொடி பறந்து கொண்டேயிருக்கிறது?'

பஸ் ப்ரேக்கிட்டு நின்றது. சிந்தனையை அறுத்துக்கெண்டு அவசரமாய் இறங்கினாள்.

வீட்டை நெருங்கும்போதே வாசல் திறந்து கிடப்பது தெரிந்தது.

மணி ஆறரையாகியிருந்தது.

ஹாலின் நடுநாயகமாய்க் கிடந்த சோபாவில் மல்லாந் திருந்தான் பாஸ்கரன்.

உதட்டோரத்தில் தொங்கிக் கொண்டிருந்தது சிகரெட்.

சுகன்யாவுக்கு ஓடிப்போய் படுக்கையில் விழுந்து விடலாம் போலிருந்தது.

டிவி. திரையில் ஸ்ரீதேவி உதடு சுளித்து "சுப்ரமணி குட்டி..." - என்று சிணுங்கிக் கொண்டிருந்தார்.

சுகன்யா வாசலில் கால் வைத்ததும் நிமிர்ந்து பார்த்த பாஸ்கரன் -

"தலை வலிக்கிறது" - என்றான். அதற்கு, காபி வேண்டும் என்று அர்த்தம்.

சுகன்யாவுக்கு தலை வலிப்பது போலிருந்தது.

ஹேண்ட் பேக்கை படுக்கையில் வீசிவிட்டு சமைய லறைக்குள் நுழைந்தாள்.

காலையில் போட்டுவிட்டுச் சென்றது அங்கங்கே அப்படியே அப்படியே போட்டபடியே கிடந்தன.

அவசரமாய்க் காபி கலந்து பாஸ்கரிடம் கொண்டு போய்க் கொடுத்தாள்.

"ம்... சுகன்யா! அரை மணி நேரத்தில் குளித்துப் புறப்படு... ஏழரை மணிக்கு மியூஸிக் அகாடமியில் மல்லிகா சாராபாய் நடன நிகழ்ச்சி. இரண்டு டிக்கெட் இருக்கு."

"நடனம் உங்களுக்குப் பிடிக்காதே."

"என்ன செய்றது? நம்ம கடையில மோட்டார் வாங்கிறவன். இரண்டு டிக்கெட்டை என் தலையில கட்டிட்டான். வீணாப் போயிடக் கூடாதே. ம்... புறப்படு."

"உடம்பெல்லாம் வலிக்குது. வேண்டாமே."

"எனக்குப் போயாகணும். புறப்படு."

- சுட்டளையிட்டது குரல். அரை மணி நேரத்துக்குள் புறப்பட்டிருந்தாள்.

வயிறு 'பசி பசி' என்றது. மௌனமாய் மோட்டார் சைக்கிளின் பின்னால் ஏறிக் கொண்டாள்.

மூக்கிலிருந்து நழுவும் கண்ணாடியை விரலால் மேலேற்றிக் கொண்டே மீண்டும் அந்தக் கேள்வியைக் கேட்டான் பாஸ்கரன். முகத்தில் எந்தவித உணர்ச்சியும் இல்லை.

"வெள்ளிக்கிழமை போகலாமா?"

"குழந்தையைக் கருவிலேயே கொல்ல எனக்கு விருப்பமில்லை."

- என்றாள் சுகன்யா. குரல் நடுங்கியது.

மேடையில் சுழன்று சுழன்று ஆடிக் கொண்டிருந்தாள் மல்லிகா சாராபாய். பாஸ்கரன் மௌனமாய் நொறுக்குத் தீனி சாப்பிடுவதிலேயே குறியாய் இருந்தான். சுகன்யா இருந்த பக்கம் திரும்பவேயில்லை. சுகன்யாவும் அது குறித்துக் கவலைப்படவில்லை.



- மேடையில் மல்லிகா சாராபாய் இராமாயணத்து சீதையாகவே உருமாறியிருந்தாள். கண்களில் கோப நெருப்பு. வார்த்தைகளில் விசிறும் அக்கினி.

சுகன்யாவின் பார்வை மேடையில் இருந்தாலும், இதயம் தன் உடம்புக்குள் வளரும் உயிரின் மீதே இருந்தது. விரல்கள் ஆதரவாய் அடிவயிற்றைத் தொட்டுக் கொண்டிருந்தன.

'உனக்கு பயமாய் இருக்கிறதா கண்ணே! உள்ளே இருட்டாய் இருக்கிறதா? உன் உயிரைச் சிதைக்க வேண்டும் என்கிறாரே. உனக்கு வலிக்காதா கண்ணே?'

- ஒரு வழியாய் நடனம் முடிந்து வீட்டுக்குத் திரும்பி வந்து சேரும்வரை இருவரும் ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை. வீட்டுக்கு வந்ததும் சமையலறைக்குள் போய் நுழைந்து கொண்டாள் சுகன்யா.

அவசர அவசரமாய் சப்பாத்தி செய்து - குருமா தயாரித்துப் பரிமாறும்போது இரவு மணி ஒன்பதே முக்கால். மௌனமாய் சாப்பிட்டான் பாஸ்கர். அவள் கேட்ட ஒவ்வொரு கேள்விக்கும் சைகையிலே பதில் சொன்னான். தட்டில் கை கழுவிவிட்டு எழுந்தவன் அவள் எதிரில் வந்து நின்றான்.

"வெள்ளிக்கிழமை அபார்ஷன்."

"முடியாது."

- கோபத்தில் முகம் சிவக்கப் படுக்கையறையை நோக்கி நடந்தான் மறு வார்த்தை பேசாமல். கண் ஓரத்தில் எட்டிப் பார்த்த கண்ணீரைத் துடைத்தபடி டைனிங் டேபிளில் அமர்ந்தாள். இரண்டு சப்பாத்தியை தட்டில் எடுத்து வைத்து சாப்பிட முயன்றாள். ஒரு வாய் கூட விழுங்க முடியவில்லை. சிரமப்பட்டு விழுங்க முயன்றாள். வாந்தி வரும் போலிருந்தது. இரண்டு டம்ளர் தண்ணீரை மட்டும் குடித்துவிட்டு சமையலறைக்குச்

சென்று பாத்திரங்கள் தேய்த்து கழுவி, சமையலறையைக் கழுவி, சுத்தம் செய்து, படுக்கையறைக்கு வந்தபோது மணி பதினொன்றைத் தாண்டியிருந்தது. நீல விளக்கு மட்டும் எரிந்து கொண்டிருந்தது. முதுகைக் காட்டியபடி படுத்திருந்தான் பாஸ்கர்.

சுகன்யா, அவன் தூக்கத்துக்கு இடைஞ்சல் ஏற்படக்கூடாது என்பதில் கவனமாய் இருந்தாள். படுக்கை அசையாமல், சத்தம் செய்யாமல் அருகில் படுத்தாள் சுகன்யா.

'அப்பாடா' என்றது இதயம். ஓய்வு கிடைத்த சந்தோஷத்தில் நிமிர்ந்தது மேனி. காலை ஐந்து மணிக்கு விழித்து இரவு பதினொரு மணி வரை ஓடிய களைப்பு, கண்களை அவசரமாய் மூடச் செய்தது. காதுகளையும் மூடிக் கொள்ள வேண்டும் போலிருந்தது.

புரண்டு படுத்தாள். அதே நேரம் பாஸ்கரின் கை சுகன்யாவின் இடுப்பைச் சுற்றி வளைத்தது. 'ஐயோ' என்றது சுகன்யாவின் மனம். பசியோடு படுத்துக் கிடக்கும் கிழட்டு மலைப்பாம்பு இரை அருகில் வந்ததும் வளைத்துப் பிடித்துக் கொள்வது போலிருந்தது அவளுக்கு. அந்த நிமிடங்களில் பாஸ்கருக்கு அவள் தேவையாயிருந்தாள்.

"சுகன்யா!"

– பதில் பேசாமல் மௌனமாய்க் கிடந்தாள். அவனுக்கு அந்த நேரத்தில் அவள் பதில் தேவையாய் இருக்கவில்லை. சில நிமிடங்களில் தேவை கரைந்ததும் சுகன்யாவை விட்டு விட்டுப் புரண்டு படுத்தான்.

உடம்பெங்கும் வியர்வையின் கசகசப்புடன் அருவருப்பாய் உணர்ந்தாள்.

"சுகன்யா!"

"ம்."



"வெள்ளிக்கிழமை?"

"குழந்தையைக் கொல்ல என்னால் முடியாது."

"இது கொலையில்ல. அபார்ஷன்."

"கொலைதான். என் குழந்தையைக் கொல்ல நான் அனுமதிக்க முடியாது."

"பெண் குழந்தை."

"உங்கம்மாவும் பெண்தான். உங்களோடு படுத்துக் கொள்கிற நானும் பெண்தான்."

"முடிவாய் என்ன சொல்கிறாய்?"

"முடிவான முடிவு முடியாதுதான்."

"எனக்கு சந்தேகமாய் இருக்கிறது."

"......"

"நான் தந்ததென்றால் சம்மதித்திருப்பாய். சிவகாசி மருத்துவ முகாமுக்குச் சென்றிருந்த போது டாக்டர் கதிரேசன் தந்ததாயிருக்கும். அதுதான் காரணம்... அதுதான்."

– யாரோ மலத்தின் மீது தள்ளி விட்டது போல் அதிர்ந்தாள்.

அவனோ அடுத்த நிமிடமே தூங்கிப் போனான்.

அவளுக்கோ தூக்கம் வரவில்லை. புரண்டு புரண்டு படுத்தாள். இதயமும் புரண்டு புரண்டு தவித்தது. உள்ளுக்குள் இரத்தம் கசிந்தது. வலி உணர்ந்தாள். கண்ணீர் தலையணையை நனைக்க, தூங்கிப் போனாள்.

"ஏ இராமா! நான் தீயில் இறங்குகிறேன். என் கற்பை நிரூபிப்பதற்காக இல்லை. நீ எவ்வளவு அற்பமானவன் என்பதைத் தெளிவுபடுத்த இராமா! இந்த நெருப்பு என்னை அழிக்கவில்லை. ஆனால் கணவன் மனைவிக்கிடையே இருக்கும் நம்பிக்கை எனும் இழையை எரித்துவிட்டது..."

- வார்த்தைகள் அக்கினியாய் வந்து விழுந்தன.

சீதை சுழன்று சுழன்று ஆடினாள்.

கண்களில் நெருப்பு.

அது வளையமாய்ப் புறப்பட்டு...

திடுக்கிட்டு விழித்துக் கொண்டாள் சுகன்யா.

'சே... கனவு... முன் இரவு மியூஸிக் அகாடமியில் பார்த்த மல்லிகா சாராபாயின் நடனம் ஏற்படுத்திய பாதிப்பு கனவாய் வந்திருக்கிறது. அந்த மேடைச் சீதையாய் நான் பேச முடியுமா?

- மெலிதான குறட்டைச் சத்தம் காதில் விழுந்தது.

திரும்பிப் பார்த்தாள் சுகன்யா.

மல்லாந்து படுத்திருந்தான் பாஸ்கர்.

கண்ணாடி அணியாத முகம் வேற்று ஆடவன் முகம் போலத் தெரிந்தது.

வாய் சற்று பிளந்த தூக்கம். பெரிய பற்கள் நிகோடின் கறையுடன் அருவருப்பாய்.

படுக்கையில் எழுந்து அமர்ந்தாள்.

வலக்கை அடிவயிற்றைத் தடவியது ஆதரவாய்.

'என்னுள் நீ. உன்னைத் தொட அனுமதிக்க மாட்டேன்.'

- முடிவுக்கு வந்தவளாய் எழுந்தாள்.

அடுத்த முப்பத்தேழாவது நிமிடம் பெட்டியுடன் வாசல் தொட்டவள் திரும்பிப் பார்த்தாள். இன்னும் தூங்கிக் கொண்டிருக்கிறான் பாஸ்கர்.